
மணிமேகலைப் பிரசுரம்

# தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு






க. தங்கேஸ்வரி B.A. Hons

# தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு

(ஓர் ஆய்வு நோக்கு)

ஆசிரியை :
**செல்வி க. தங்கேஸ்வரி** பி.ஏ., (தொல்) சிறப்பு
(மட்டகளப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர்)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
Web Site : www.manimekalaiprasuram.com

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ★ | தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு |
| ஆசிரியர் | ★ | க. தங்கேஸ்வரி, பி.ஏ., |
| மொழி | ★ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ★ | 2005 |
| பதிப்பு விவரம் | ★ | முதல் பதிப்பு |
| உரிமை | ★ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ★ | 16 கி.கி. |
| நூலின் அளவு | ★ | டெம்மி (14½ x 21½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ★ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ★ | xxiv + 216 = 240 |
| அட்டைப்படம் | ★ | ஐஸ் கிரர்ஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | ★ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ★ | ஸ்ரீ முருகன் ஆப்ஸெட், சென்னை - 4 |
| நூல் கட்டுமானம் | ★ | தையல் |
| வெளியிட்டோர் | ★ | மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17. |

**விலை : ரூ. 90.00**




## பொருளடக்கம்


ஆசியுரை ........ ix
பதிப்புரை ........ xi
முன்னுரை ........ xv
சில விளக்கக் குறிப்புகள் ........ xx
நன்றிக்குரியவர்கள் ........ xxii
இரண்டாவது பதிப்பின் பதிப்புரை ........ xxiv

I. மாகோன் அறிமுகம்

1. முன்னுரை ........ 1
2. உண்மைக்கு மாறான தகவல்கள் ........ 2
3. ஆய்வாளர்களின் பணி ........ 3
4. நீண்டகால ஆட்சி ........ 4
5. உபராஜர்கள் ........ 5
6. மாகோனது ஆட்சிப் பிரதேசம் ........ 6
7. மாசுபட்ட வரலாறு ........ 7
8. மாகோன் வரலாறு கூறும் நூல்கள் ........ 8

II. மாகோன் பற்றிய வரலாறுகள்

1. சூளவம்சம் கூறுவது ........ 11
2. பூஜாவலிய கூறுவது ........ 11
3. நிக்காய சங்கிரஹய கூறுவது ........ 12
4. ராஜாவலிய கூறுவது ........ 12
5. மட்டக்களப்பு மான்மியம் கூறுவது ........ 13
6. யாழ்ப்பாண வைபவமாலை கூறுவது ........ 13
7. கைலாயமாலை கூறுவது ........ 13
8. ஹத்தவங்கல்ல விகாரவம்ச கூறுவது ........ 14
9. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் கூறுவது ........ 15
10. திருக்கோளுர் சாசனம் கூறுவது ........ 15
11. 'வையாபாடல்' கூறுவது ........ 15
12. ராஜதரங்கணி கூறுவது ........ 16
13. உபாசக ஜனலங்கார கூறுவது ........ 16
14. ராஜரட்னாகாரய, சத்தர்ம ரத்னாகாரய ........ 17
15. வரலாறும், கர்ணபரம்பரைக் கதைகளும் ........ 17
16. வரலாற்றுத் தெளிவு ........ 18

**III. கலிங்கமும் ஈழமும்**

1. கலிங்க நாடு ........ 21
2. கலிங்கமும் குப்தரும் ........ 22
3. கலிங்க ஈழத் தொடர்பு கொண்ட மன்னர்கள் சிலர் 23
4. கலிங்க - ஈழத் தொடர்புகள் ........ 26

**IV. மாகோன் வருகை**

1. மாகோனின் பூர்வீகம் ........ 30
2. மாகோனின் ஈழப் படையெடுப்பு ........ 31
3. சிங்கள பௌத்த வரலாற்று நூல்கள் கூறுவது ...... 33
4. மாகோனுக்கு எதிரான நடவடிக்கைகள் ........ 35
5. தம்பதேனிய வம்சம் ........ 37
6. சிங்கள மன்னர்களின் கூட்டுமுயற்சி ........ 39

**V. ஈழத்தில் மாகோனின் ஆட்சி**

1. வட இலங்கை ........ 43
2. ராஜரட்டை ........ 44
3. திருகோணமலை ........ 46
4. திருகோணமலைக் கிராமங்கள் ........ 47
5. மாயரட்டை ........ 48
6. உறுகுணையில் மாகோன் ஆட்சி ........ 49
7. கிழக்கிலங்கையில் மாகோன் ........ 50
8. மண்முனை ........ 50
9. திருக்கோயில் ........ 52
10. கொக்கொட்டிச்சோலை ........ 53
11. கோயில் போரதீவு ........ 53
12. மட்டக்களப்பில் மேலும் சில இடங்கள் ........ 54

**VI. மாகோனின் துணைவர்கள்**

1. ஜயபாகு ........ 56
2. ஜயபாகுவின் தனித்துவம் ........ 58
3. ஜயபாகு என்னும் பெயர்கொண்ட மூன்று மன்னர்கள் 59
4. ரங்கொத் விகாரைக் கல்வெட்டு ........ 61
5. சோழகங்கதேவன் பற்றி ஒரு குறிப்பு ........ 62
6. மூன்று மூக்கிய சோழகங்கதேவர்கள் ........ 63
7. மானாபரணன் ........ 64
8. மகிந்தாவும் ஜயபாகுவும் ........ 66





9. வன்னிமைகள் ........ 67
10. ஆட்சிக் கட்டமைப்பு ........ 69

**VII. மாகோன் வகுத்த வன்னிமை**

1. கட்டுக்கோப்பான ஆட்சிமுறை ........ 71
2. இலங்கை - இந்தியத் தொடர்புகள் ........ 72
3. வன்னிமை ஆட்சியும் நிர்வாகமும் ........ 73
4. சாதியியல், ஆலயவியல் ........ 74
5. கொக்கட்டிச் சோலையில் மாகோன் வகுத்த வன்னிமை 76
6. முற்குகர் வன்னிமை ........ 79
7. ஏட்டுப் பிரதித் தகவல்கள் ........ 81
8. சில வன்னிமைகள் பற்றிய விவரம் ........ 82
9. குடிமுறை நிர்வாகம் ........ 83
10. தற்கால நடைமுறை ........ 84
11. முன்னேஸ்வர வன்னிமை ........ 85

**VIII. பண்பாட்டுக் கோலங்கள்**

1. சமயம் ........ 89
2. ஆலயங்கள் ........ 90
3. வீரசைவம் ........ 94
4. வீரசைவம் பற்றிய தவறான கருத்துகளும் விளக்கமும் ........ 95
5. நிவந்தங்கள் ........ 96
6. கோயில் குளம் ........ 97
7. இலுப்படிச்சேனை ........ 99
8. வெட்டயச்சேனை ........ 99
9. புளியடிமடு ........ 100
10. கலிங்கநகர் ........ 100

**IX. மாகோன் காலத்தில் ஈழத்தில் இடம்பெற்ற பாண்டியர் படையெடுப்புகள்**

1. மாகோனின் இறுதிக்காலம் ........ 102
2. ஆறு கல்வெட்டுகள், நான்கு படையெடுப்புகள் ........ 103
3. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ........ 105
4. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ........ 106
5. இரண்டாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் ........ 107
6. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ........ 108
7. முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் ........ 109

8. இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் ............ 109
9. சில வரலாற்றுக் குழப்பங்கள் ............................... 111
10. மாகோன் நிலைமை ............................................ 113

X. மாகோனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

1. கேள்விகள் பல ..................................................... 116
2. பாண்டியர் கல்வெட்டுகளின் பயன்பாடு ................. 117
3. குடுமியான்மலைக் கல்வெட்டு.............................. 118
4. 'வீழ்ழப் பொருத' இரு மன்னர்கள் ........................ 119
5. 'சரணம திகழ்ந்தினிது நோக்கிய' மந்திரி ................ 120
6. பாண்டியர் படையெடுப்புக்கான காரணங்கள்......... 121
7. 'ஏனை வேந்தனை ஆனைதிறை கொண்டு' ......... 122
8. சந்திரபானு ஈழத்து மன்னனா? ............................ 123
9. மாகோனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் ...................... 125

XI. மாகோனும் வட இலங்கையும்

1. வட இலங்கை ஆதரவு ......................................... 129
2. விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி................................ 130
3. கூழங்கை அல்ல காலிங்கை ................................ 133
4. மாகோனின் வடபகுதி ஆட்சி ............................... 135
5. ஆதாரச் சான்றுகள் ............................................... 136
6. யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் ............... 138
7. குலசேகர சிங்கையாரியன் .................................... 139
8. குலசேகர சிங்கையாரியன் சூட்டிய பெயர் நல்லூர் 142
9. சில தெளிவுகள்...................................................... 143
10. மாகோனே யாழ்ப்பாணத்தின் முதலாவது சக்கரவர்த்தி 145

XII. முற்றுப்பெறாத காவியம்

1. நிறைவு பெறாத நிறைவு...................................... 149
2. பாரபட்சமற்ற தொல்லியல் ஆய்வு தேவை ............ 151
3. பாண்டியமழவன்... ஆரியச் சக்கரவர்த்தி ............... 152
4. ஆய்வறிஞர் சேதுராமன் கூற்று ............................ 154
5. மாகோன் பற்றிய சில தகவல்கள் ......................... 156
6. மாகோனுக்குப் பின் பொலன்னறுவை.................... 157
7. நிறைவு ................................................................ 159



அனுபந்தங்கள்

I. மாகனது ஆட்சியில் சில முக்கிய ஆண்டுகள் ........................ 163
II. விஜயபாகு 1 முதல் இலங்கை மன்னர் பரம்பரை ................ 165
III. பொலன்னறுவை அரசவம்சம் ............................................. 166
IV. தம்பதேனிய அரசவம்சம் .................................................. 167
V. யாழ்ப்பாண ராச்சிய மன்னர் பட்டியல் ................................ 168
VI. இலங்கை நகரங்களின் பழைய பெயர்களும் புதிய பெயர்களும் 169
VIII. பிற்காலப் பாண்டியர் ஆட்சியாண்டுப் பட்டியல் ................ 170
IX. மாகோன் காலத்து ஈழப் படையெடுப்பு தொடர்பான பாண்டியர் கல்வெட்டுக்கள் ............ 172
X. மாகனுடன் தொடர்புறும் சில ஈழத்துக் கல்வெட்டுகள் ............ 184
XI. மாகோன் வகுத்த வன்னிமை (கல்வெட்டுப் பாடல்கள்).......... 188
XII. உசாத்துணை நூல்கள் ...................................................... 191
XIII. சொற்சுட்டி ..................................................................... 194

புகைப்படங்கள்

i. திருக்கோயில் கோபுரம் ....................................................... 201
ii. கொத்தியாபுலை நாகசிற்பம் ................................................ 202
iii. திருக்கேதீஸ்வர ஆலயம்.................................................... 203
iv. திருக்கேதீஸ்வர ஆலயத்தில் உள்ள பெரிய சிவலிங்கம் ........ 203
iii. கோவில் குளத்தில் கண்டெடுக்கப்பட்ட படிகலிங்கமும் புடைப்புச் சிற்பமும் ............ 204
iv. கோயில்குளம் சிவலிங்கம் ................................................... 204
v. திருக்கோணஸ்வர ஆலயம் .................................................. 205
vi. திருக்கோணமலை பிரடரிக் கோட்டை சமஸ்கிருதக் கல்வெட்டு 205
vii. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ............... 206
viii. யாப்பஹூவ மலை அரண் .................................................. 207
ix. யாப்பஹூவக் கோட்டையின் படிக்கட்டு ............................... 207
x. திருக்கோயில் தூண் கல்வெட்டு ........................................... 208
xi. திருக்கோயில் துண்டுக் கல்வெட்டு...................................... 209
xii. பொலன்னறுவை ரங்கோத் விகாரைக் கல்வெட்டு................ 210
xiii. எருதுமுத்திரை கொண்ட கலிங்க முத்திரை ........................ 211

வரிப்படங்கள்

i. மாகன் காலத்து இந்தியா ...................................................... 212
ii. மாகன் காலத்து ஈழம்.......................................................... 213
iii. மாகோன் படைத்தளங்கள் இருந்த இடங்கள் ........................ 214
iv. மாகன் காலத்து வன்னிமை இருந்த இடங்கள் ...................... 215
v. மாகன் காலத்து கிழக்கிலங்கை............................................ 216




## சமர்ப்பணம்

உள்ளத்து அன்பெல்லாம் சேர்த்து
ஒரு குழந்தைக்கே அர்ப்பணித்தாய்
உலகமே அந்த ஒரு குழந்தைதான்
என்று உயிர் வாழ்ந்தாய்!

**உன் மறைவுக்கு என் கண்ணீர்ப்பூக்கள்**
**உன் நினைவுக்கு இந்தக் காகிதப்பூக்கள்.**

**4-8-94ல் அமரரான**
**என் அருமைத் தந்தை**
**திரு. சீனித்தம்பி கதிராமன் அவர்களுக்கு**
**இந்நூல்**
**எனது அன்புக் காணிக்கை.**



# ஆசியுரை



ஒரு சமூகம் தனது நிகழ்கால இருப்பின் நியாயங்களை நிறுவுவதற்கும், எதிர்கால இருப்புக்கான வழிமுறைகளை வகுத்துக் கொள்வதற்கும், தனது கடந்தகால வரலாற்று அம்சங்களைக் கண்டு கொள்வது அவசியமாகும். இவ்வகையில் ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

*பரந்த அளவில்* பலரும் ஈடுபடமுடியாத துறையாக, விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே ஈடுபட்டிருப்பது தொல்லியல் ஆய்வுத்துறையில் உள்ள கடினத்தையும், சிரமத்தையும் புலப்படுத்துவதாகும். ஏனெனில் இது ஒரு நுட்பமான ஆய்வுக்கலை, வரலாற்றுண்மைகளைத் துருவித் துருவித் தேடி ஆய்வு செய்வதற்கு நுண்மாண் நுழைபுலமும், நீடித்த பொறுமையும் தேவை. உண்மைகளை உள்ளவாறு கண்டுகொள்ளப் பக்கஞ்சாரா நடுநிலைமையும் வேண்டும். ஆனால் நமது நாட்டைப் பொறுத்த அளவில் பல மட்டங்களிலும் ஊடுருவியுள்ள இனவாதம் தொல்லியல் ஆய்வையும் விட்டு வைக்கவில்லை. கடந்த காலங்களில் இத்துறையில் குறுகிய இனவாத நோக்கோடு ஈடுபட்ட சிலர் உண்மைகளைத் திரித்தும், மாற்றியும், மறுத்தும் வந்துள்ளமை துரதிர்ஷ்டவசமானது. அண்மைக்கால ஆய்வுகள் இவற்றை இனங்காட்டுவதோடு நிராகரித்தும் வருகின்றன.

'தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு' என்னும் இந்நூலின் ஆசிரியையான செல்வி க. தங்கேஸ்வரி அவர்கள் கிழக்கிலங்கையின் வரலாறு சார்ந்த பல விடயங்களில் ஆய்வுகள் செய்தவர். பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர். 'விபுலானந்தர் தொல்லியல் ஆய்வு', 'குளக்கோட்டன் தரிசனம்' போன்ற நூல்களின் ஆசிரியை. இவரது ஆய்வு முயற்சிகள் பல அறிஞர்களால் பாராட்டப்பட்டதோடு, அவதானிக்கப்பட்டும் வருகின்றன. களனிப் பல்கலைக்கழகத் தொல்லியல் சிறப்புப் பட்டதாரியான இவரது மற்றுமொரு முயற்சி 'தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு' என்னும் நூலாகும்.

இலங்கையின் வரலாற்றில் புகழ்பெற்ற அரசர்களுள் ஒருவனாக விளங்கிய மாகோன் நீண்டகாலம் இலங்கையில் ஆட்சி

செய்த மன்னர்களுள் ஒருவன். கிழக்கிலங்கையின் வரலாற்றோடு மாகோனுக்கு அதிகத் தொடர்புகள் உண்டு. ஆயினும் மாகோனின் வரலாறு, வரலாற்று ஆவணங்களில் போதுமான அளவு இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இவனது சமகாலத்தவனான குளக்கோட்ட மன்னனது பெயர் கற்பனைக் கதைகள் கலந்ததாயினும் மக்கள் மத்தியில் பேசப்படும் அளவுக்கு மாகோன் அறியப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன?

செல்வி க. தங்கேஸ்வரி அவர்கள் பல வரலாற்று ஆதாரங்களை ஆராய்ந்து, உண்மைகளைத் தேடிச் சில முடிவுகளைக் கூறியுள்ளார்; பல விவரங்களை வெளியிட்டுள்ளார். இவரின் ஆய்வு முறைகள் தர்க்கரீதியாகவும், ஒப்பு நோக்கியும், கிடைத்த தரவுகளின் அடிப்படையில் நியாயமான அனுமானங்களாகவும் காணப்படுகின்றன.

இலங்கையில் தமிழினம் தனது வாழ்வின் இருப்பையும், தனது பாரம்பரிய வரலாற்றுச் சிறப்பையும் உறுதிப்படுத்த முனைகின்ற காலகட்டத்தில், இலங்கையின் பெரும்பகுதியை ஒரு காலத்தில் ஆட்சிபுரிந்த மாகோனின் வரலாற்றை அறிந்து கொள்வது சாலப் பொருத்தமானது. இம்மண்ணில் வேரோடிப்போயுள்ள நமது சமூகத்தின் ஆழமான இருப்பையும் - சிறப்பையும் உணர்வுபூர்வமாக விளங்கி ஏற்றுக்கொள்ள இத்தகைய ஆய்வுகள் உறுதுணையாகும்.

அனைவருக்கும் விளங்கக்கூடிய எளிய நடையில், ஒரு வரலாற்றுக் கதையைப் படிப்பது போன்ற சுவையுடன் நூல் எழுதப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சிறிய பந்திகள், ஆங்காங்கே உபதலைப்புகள், விடயத்தின் கடினத்தைக் குறைத்து விளக்கத்தை அதிகப்படுத்துகின்றன. கிழக்குப் பகுதியில் தொல்லியல் ஆய்வு முயற்சிகள் அருகிக் காணப்படும் நிலையில் இத்துறையில் ஆர்வமும், ஈடுபாடும், ஆய்வுத்திறனும் கொண்டு பங்காற்ற முனைந்துள்ள செல்வி க. தங்கேஸ்வரி அவர்களைப் பாராட்டுகிறேன். இவர் மேலும் இத்துறையில் ஆழமாக ஈடுபட்டு அரிய சாதனைகள் பல புரியவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**

திருமலை - மட்டுநகர்

மறைமாவட்ட ஆயர்.

ஆயர் இல்லம்,

மட்டக்களப்பு.



# பதிப்புரை

ஆய்வு நூல்கள் பல்துறை சார்ந்தவை. இலக்கியம், வரலாறு, சமூகம் முதலிய பல்வேறு துறைகளில் அவ்வப்போது ஆய்வு நூல்கள் வெளிவருகின்றன. இவற்றுள் பல நூல்களில் 'ஆய்வு' குறைவாகவும், 'மேய்வு' அதிகமாகவும் இருக்கும். வரலாற்று ஆய்வு நூல்களில் இவ்வாறு செய்யமுடியாது. அப்படிச் செய்தால், ஆசிரியரின் குட்டு வெளிப்பட்டுவிடும்.

இலங்கையில் அநேக வரலாற்று ஆய்வு நூல்கள் (தமிழ்) வெளிவந்துள்ளன. இவற்றை எழுதியவர்களில் தொல்லியல் துறை சார்ந்தவர்கள் ஒரு சிலரே. தொல்லியல், வரலாறு ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்கள் எழுதும் வரலாற்று ஆய்வு நூல்களுக்கும், ஏனையோர் எழுதும் வரலாற்று ஆய்வு நூல்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன.

செல்வி க. தங்கேஸ்வரி, ஒரு தொல்லியல் பட்டதாரி. எனவே இவர் எழுதும் வரலாற்று ஆய்வு நூல்கள் தொல்லியல் ஆய்வு நுட்பங்களுடன் எழுதப்படுகின்றன. அவர் எழுதிய "குளக்கோட்டன் தரிசனம்" இதற்கு ஒரு சான்று. அடுத்ததாக "மாகோன்" பற்றிய இந்நூல் வெளிவருகிறது.

மாகோன் இலங்கை வரலாற்றில் நீண்டகாலம் ஆட்சி செய்த ஒரு மன்னன். ஆனால் இவனுடைய வரலாறு முறையாக எழுதப்படவில்லை. இப்படி எத்தனையோ மகாபுருஷர்களின் வரலாறுகள், மறைந்தோ, மறைக்கப்பட்டோ காலச்சேற்றில் புதைந்து போயுள்ளன. இந்த வரலாறுகள் எல்லாமே முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. என்றாலும் மாகோன் வரலாறு, தமிழ் மக்கள் அறியவேண்டிய ஒன்று; இந்த மகத்தான பணியைத் தொல்லியல் பட்டதாரியான செல்வி க. தங்கேஸ்வரி செய்திருக்கிறார்.

இந்த நூல் எழுதப்பட்டுள்ள முறை; வரலாற்றுச் சான்றுகளின் தொகுப்பு, வகுப்பு, ஆய்வு, வாதப்பிரதிவாதங்கள், தர்க்கரீதியான முடிவுகள் என்பன பற்றி தொல்லியல் துறையைச் சார்ந்தவர்கள் அறிவார்கள். வாசகர்கள் இதனால் பெறும் பயன் முக்கியமானது.

இவ்வரலாறு கிழக்கிலங்கையோடு தொடர்புபட்டது. கிழக்கிலங்கை தொடர்பான வரலாற்று நூல்கள் மிகவும் குறைவு. யாழ்ப்பாணத்து வரலாறு தொடர்பாக, "Ancient Jaffna" (முதலியார் ராசநாயகம்) "Kingdom of Jaffna" (பேராசிரியர் எஸ். பத்மநாதன்), யாழ்ப்பாணம் ராச்சியம் (சி.க. சிற்றம்பலம்), யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு (சி.க. சிற்றம்பலம்) முதலிய நூல்கள் வெளிவந்திருப்பதை வாசகர்கள் அறிவார்கள். ஆனால் அதுபோன்ற வரலாற்று நூல்கள், கிழக்கிலங்கை பற்றி வெளிவரவில்லை.

கிழக்கிலங்கையில், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, அம்பாரை மாவட்டங்கள் தொடர்பாகவும் அத்தகைய நூல்கள் வெளிவருதல் அவசியம். தொல்லியல் நோக்கில் அவ்வரலாறுகளை எழுதவேண்டும் என்ற ஆர்வத்தை, அல்லது தாபத்தை இந்நூல் ஏற்படுத்தினால், அதையே இந்நூலின் ஒரு பெரும் பயனாகக் கொள்ளலாம். அவ்வாறு ஏற்பட்டால், தொல்லியல் கற்கைநெறி (தமிழ்) பல்கலைக் கழகங்களில் இடம்பெற வேண்டும் என்ற எண்ணமும் கூடவே ஏற்படலாம். இவையெல்லாம் இந்நூல் மூலம் ஏற்படக்கூடிய தொலைதூரப் பயன்கள்.

செல்வி க. தங்கேஸ்வரி அவர்கள் "கடமையைச் செய்; பயனைப் பகவானுக்கு அர்ப்பணித்துவிடு" என்ற கீதவாசகத்துக்கேற்பச் செயற்படுபவர். அவரது இந்நூல், ஏற்கனவே அவர் எழுதிய 'குளக்கோட்டன்' நூல்போல, தர்க்கரீதியான வாதப் பிரதிவாதங்களுடன், வகுப்பறைப் பாடம் போன்ற விளக்கத்துடன் அமைந்திருப்பதை வாசகர்கள் உணர்வார்கள்.

இவ்விடத்தில் வரலாறாச்சிரியர்கள் செய்யும் குளறுபடிகள் பற்றி வாசகர்களை எச்சரிக்க வேண்டியது அவசியமாகிறது.



(i) புகழ்பெற்ற சோடகங்கதேவ என்பவன் கி.பி. 1223-ல் மாகோனின் உபராஜனாக இலங்கைக்கு வந்தவன் என்பது பல்வேறு சான்றாதாரங்கள் மூலம் "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் நிறுவப்பட்டது. அப்படியிருந்தும் புகழ்பெற்ற ஒரு வரலாற்றுப் பேராசிரியர் இக்கூற்றை மறுத்து, ஒன்பது மாதங்கள் மட்டுமே ஆட்சியில் பொம்மையாக இருந்து தனது தளபதியினால் கொலையுண்ட சோழகங்கதேவன் (1196) - நிசங்கமல்லனின் மருமகன் - மேற்படி சோடகங்கதேவனாதல் வேண்டும் என்ற ஊகம் தெரிவித்தார் (வீரகேசரி கட்டுரை 14-02-94, 20-02-94).

(ii) திருக்கோணேஸ்வரத் திருப்பணி செய்து கோயில் திருப்பணிகளுக்காகக் கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் - மகாவம்சம் குறிப்பிடுவதுபோல மகாசேனன் (கி.மு. 274-301) அல்ல. அவன் மூன்று சைவக் கோயில்களை இடித்து பௌத்த விகாரைகள் அமைத்தவன் என்பதை மகாவம்சமே குறிப்பிடுகிறது எனத் தகுந்த சான்றாதாரங்கள் மூலம் "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் நிறுவப்பட்டது. அப்படியிருந்தும் அதை மறுத்து மகாவம்சக் கருத்தையே மீண்டும் "மட். மான்மிய ஆராய்ச்சி" நூலாசிரியை எழுதியிருந்தார்.

இந்தப் பின்னணியில் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பதற்கமைய, காய்தல் உவத்தல் இன்றி "குளக்கோட்டன் தரிசனம்" நூலைப் படித்த பலர் நூலாசிரியையான தங்கேஸ்வரிக்குப் புகழாரம் சூட்டினர். இவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியவர், புகழ்பெற்ற ஆய்வறிஞரான கும்பகோணம் என். சேதுராமன் அவர்கள். அவ்வப்போது அனைத்திந்திய தொல்லியல் / வரலாற்றுக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும் இவர், செல்வி தங்கேஸ்வரிக்கு, ஈழத்தில் பாண்டியர் மேற்கொண்ட படையெடுப்பு தொடர்பான பல தகவல்களை அனுப்பி உதவினார்.

நம் நாட்டில் வரலாற்று ஆய்வுத்துறை எதிர்நோக்கும் மிகப்பெரிய ஆபத்து இதுதான். அதாவது :-

(i) ஆய்வுத்துறையில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் எதைச் சொன்னாலும் அது அப்படியே வேதவாக்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(ii) சர்வ கலாசாலையைச் சேர்ந்தவர்கள் கூறுவதை அவருடைய மாணவர்களாக இருந்தவர்கள் / இருப்பவர்கள் மறுதலிப்பதற்குத் துணிவதில்லை.

இந்த நிலையில் செல்வி தங்கேஸ்வரி துணிந்து தனது ஆய்வுக் கருத்துகளை வெளியிட்டு வருகிறார். அதற்குரிய தகைமையும் அவருக்கிருக்கிறது; எனவே உண்மைகளைத் தரிசித்தல் வாசகர் கடனாகும்.

இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

"பார்வதி ஆகம்"
ஆரையம்பதி,
10.06.95.



# முன்னுரை

'குளக்கோட்டன் தரிசனம்' என்ற எனது நூலுக்கு வரலாற்றுத் துறையில் ஆர்வமுள்ள பல வாசகர்களும் விமர்சகர்களும் அளித்த வரவேற்பு ஆறுதல் தருவதாகவும், சில சமயம் உற்சாகமூட்டுவதாகவும் அமைந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், டாக்டர் மிராண்டோ என்பவர் 'ஐலண்ட்' (14-1-94) பத்திரிகையில் கோணேஸ்வர ஆலயம் தொடர்பாக எழுதிய தவறான வரலாற்றுத் தகவல்களை மறுதலிப்பதற்கும் இந்நூல் பயன்பட்டது. மேலும் ஆர்வலர்கள் இதே அடிப்படையில் வெருகல், கந்தளாய், தம்பலகாமம் வரலாறுகளை எழுதவேண்டும் என்றும் கேட்டனர்.

இந்த ஆர்வம், ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது. அதாவது, காலம் காலமாக நிலவிவந்த கர்ண பரம்பரைத் தகவல்களிலிருந்து விடுபட்டு, வரலாற்று ரீதியான உண்மைகளை அறிவதற்கு மக்கள் தாகம் கொண்டிருக்கிறார்கள் என்பதும் இந்தப் பின்னணியில் 'குளக்கோட்டன் தரிசனம்' என்ற நூல் மழைக்காக ஏங்கும் சாதகப்பட்சியின் வாயில் ஒரு மழைத்துளி விழுந்த திருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதும்தான் அந்த உண்மை.

'குளக்கோட்டன் தரிசனம்' நூலில் குளக்கோட்டனுக்கும் மாகனுக்கும் உள்ள நெருக்கமான தொடர்புபற்றி ஒரு முழு அத்தியாயமே இடம் பெற்றுள்ளது. உண்மையில் குளக்கோட்டனைவிட மாகோனே முக்கியமானவன் என்பதையும், மாகோன் புகழ் இலங்கை வரலாற்றில் மறைக்கப்பட்டதற்கான காரணிகளையும் அந்நூலில் கோடி காட்டியிருந்தேன். அதுமட்டுமல்லாது மாகோனுடன் உபராஜனாக வந்தவனே குளக்கோட்டன் என்பதையும் அதில் சுட்டியிருந்தேன். எனவே குளக்கோட்டன் வரலாற்றைவிட மாகோன் வரலாறு மிக நீண்டது. விரிவானது, புகழ்மிக்கது என்பதை வாசகர்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

உண்மையில் இந்த மாகோன் வரலாறு பற்றி ஏராளமான வரலாற்றுத் தகவல்கள் உள்ளன. இலங்கையின் எல்லா முக்கிய வரலாற்று ஆவணங்களும் இவனைப்பற்றிப் பேசுகின்றன. டாக்டர் எஸ். பரணவிதான முதல், அமரதாச லியனகமகே வரை பல வரலாற்று ஆசிரியர்கள், இவன் வரலாறு பற்றி ஆய்வு செய்துள்ளனர். மகாவம்சம், சூளவம்சம் போன்ற வரலாற்று நூல்கள் மட்டுமல்லாது ராஜவலிய, பூஜாவலிய, நிகாயகங்கிராஹய, எமு அத்தனகலவம்ச, வம்சத்தீபிகாசினி போன்ற ஆவணங்களும் அவனது ஆட்சி பற்றிக் குறிப்பிடுகின்றன.

இவனது ஆட்சிக்காலம், 21/40/44 வருடங்கள் என வெவ்வேறு ஆவணங்கள் குறிப்பிடுவது. இவனது நீண்ட ஆட்சிக் காலத்தை மறைக்க எடுத்த முயற்சிகளின் தோல்வியைக் காட்டுகிறது எனலாம். அவ்வாறே இவன் புத்த சமயத்துக்கு எதிராகச் செயற்பட்டான் என்றும், புத்தவிகாரைகளை இடித்தான் என்றும், புத்தபிக்குகளைக் கொன்றான் என்றும் இடம்பெறும் குறிப்புகள், மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களாகவே தென்படுகின்றன. இவன் 24000 போர் வீரர்களைக் கொண்ட படைகளை வைத்திருந்தான் என்பதும், இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் இவனது காவல் படைகள் நிலை கொண்டிருந்தன என்பதும் இவனது போர்த்திறமைக்குச் சான்றுகளாகின்றன.

இவனை முறியடிப்பதற்கு, சிங்கள மன்னர்கள் பலர் ஒன்று சேர்ந்து பலமுறை முயன்றார்கள் என்பதும் இவனது ஆட்சியில் அவர்கள் திணறினார்கள் என்பதும் இவனுடைய சாணக்கியத்துக்குச் சான்றுகளாகின்றன. இத்தகைய ஒரு மன்னனின் பூரண வரலாறு தமிழர்களுக்குக் கிடைக்காமற்போனது துரதிர்ஷ்டமே. ஆனால் ஆங்கிலத்தில் ஆய்வு செய்தவர்கள் இவனது வரலாறு பற்றி நிறையக் கூறியிருக்கிறார்கள்.

சிங்கள மன்னர்களின் வரலாற்றை ஆய்வு செய்யப் புகுந்த வரலாற்றாசிரியர்கள், தவிர்க்கமுடியாத நிலையில், இவனது வரலாற்றுப் புகழையும் பதிவு செய்ய வேண்டியதாகிவிட்டது.

இரண்டாம் பராக்கிரம பாகுவின் காலத்தில் மாகன் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு, ராஜரட்டையை ஆட்சி செய்தான். பகைவர்கள் நெருங்க முடியாதபடி பலத்த பாதுகாப்பு அரண் செய்திருந்தான். இவ்விவரங்கள் எல்லாம் தம்பதேனியு வம்சம் பற்றிய வரலாற்றில் வெளிப்படுகின்றன.



இவ்வரலாறு பற்றிப் பல நூல்களில் குறிப்பிட்டிருந்தபோதும் டாக்டர் எஸ். பரணவிதான, திரு. அமரதாச லியனகமகே ஆகியோர் தம்பதேனிய வம்சம் (Dambadeniya Dynasty) பற்றிய எழுதிய ஆய்வுக் குறிப்புகளில் இவ்வரலாறு விவரமாக வெளிவந்துள்ளது.

பௌத்த வரலாற்று ஆவணங்களில் மறைக்கப்பட்ட சில விவரங்கள், தென்னிந்திய கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலியவற்றின் மூலம் தெரியவந்துள்ளன. உதாரணமாகப் பாண்டியர் படையெடுப்புப் பற்றிய விவரங்களைக் குறிப்பிடலாம்.

சிங்கள வரலாற்று நூல்களில், மாகன் வரலாறு உரிய முக்கியத்துவம் பெறவில்லை என்பதும், மகாவம்சம், சூளவம்சம் முதலிய ஆவணங்களைத் தொகுத்தவர்கள் பௌத்த பிக்குகள் என்பதால் அந்த ஆவணங்களில் அவன் புகழை மறைக்கும் வகையிலேயே பல செய்திகள் பதிவாகியுள்ளன என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

அதிர்ஷ்டவசமாக வரலாற்று ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் போது, அகச்சான்றுகள், புறச்சான்றுகள் மூலம், மறைக்கப்பட்ட செய்திகள் வெளிவருவதும் பதிவு செய்யப்பட்ட செய்திகள் திருத்தப்படுவதும் இயல்பு. அவ்வகையில் இந்த மாகோன் வரலாறு எமக்குக் கிடைத்த பல்வேறு ஆய்வுக் குறிப்புகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது.

ஆய்வுத்துறையின் தன்மை பற்றி ஏற்கனவே எனது 'குளக்கோட்டன் தரிசனம்' நூலுக்கான முன்னுரையில் விவரமாகக் கூறியுள்ளேன். இத்துறையில் எதையும் முடிந்த முடிபாகக் கொள்வதில்லை. பிற்காலத்தில் கிடைக்கக்கூடிய வலுவான சான்றுகள் ஏற்கனவே நிறுவப்பட்ட முடிவுகளைத் திருத்தவும், மாற்றவும் நிராகரிக்கவும் வழிவகுக்கலாம். இதையும் வாசகர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மாகோனின் பூர்வீகம் பற்றிய தகவல்கள் ஆதார பூர்வமாகக் கிடைக்குமாறில்லை. எனவே அதுபற்றித் திட்டவட்டமாக வரையறுக்க முடியவில்லை. அவ்வாறே அவன் இறுதிக் காலத்தில், யாழ்ப்பாண

ராச்சியத்தின் முதல் மன்னன் ஆனது பற்றியும் மாறுபட்ட கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. முடிந்தவரை இவற்றின் மத்தியில் உண்மை நிலையைத் தெளிவுபடுத்த முயற்சி செய்துள்ளேன்.

மாகோன் வரலாற்றை எழுதவேண்டும் என்ற மன உந்துதல் எனக்கு ஏற்பட்டதற்கு முக்கிய காரணம், அவனுடைய புகழ் வரலாற்றில் மறைக்கப்பட்டிருந்ததுதான். அவனுடன் உபராஜனாக வந்த குளக்கோட்டன் பற்றி தமிழ் மக்கள் அதிகம் அறிந்திருந்தார்கள். அவனைப்பற்றி நிறையச் செய்திகள் (கர்ணபரம்பரைக் கதைகளாக இருந்தாலும்) வெளிவந்திருந்தன. ஆனால் மாகோன் பற்றி அவ்வாறான ஒரு நிலைப்பாடு இல்லை. இது தவிர வேறு சில காரணிகளும் இந்நூலை எழுதுவதற்குத் தூண்டுதலாக இருந்தன. அவையாவன:-

(i) இலங்கை வரலாற்றில் கிழக்கிலங்கையோடு தொடர்புறும் வரலாற்றுத் தகவல்களைப் பதிவு செய்தல்.

(ii) உமியுடன் கலந்திருக்கும் நெல்மணிகள் போல கதைகளுடன் கலந்திருக்கும் வரலாற்றுச் செய்திகளை இனம் கண்டு வெளிப்படுத்தல்.

(iii) தொல்லியல் ஆய்வு அடிப்படையில் நூல்களை வெளியிடுதல். அந்த எண்ணக்கருவை ஆர்வலர்கள் இதயத்தில் விதைத்தல்.

இந்நோக்கங்கள் எந்த அளவுக்கு நிறைவேறும் என்பதை இப்போது கூறமுடியாது. காலம்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

ஆனால் இத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஒரு செய்தியை இதன் மூலம் வெளிப்படுத்த விரும்புகிறேன். அதாவது 1970-ல் களனிப் பல்கலைக்கழகத்தில் 'தொல்லியல் துறை' (தமிழ்) (Archeology) ஒரு கற்கைநெறியாக இருந்து பின் மூடப்பட்டது. அதன் பின் இலங்கையில் எந்தப் பல்கலைக் கழகத்திலும் அது இடம்பெறவில்லை. தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட கதி அதற்கும் ஏற்பட்டுவிட்டது. மீண்டும் இத்துறை புத்துயிர் பெறவேண்டும். தொல்லியல் பற்றிய உரத்த சிந்தனை இத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஏற்படவேண்டும்.



அதன் மூலம் பல்கலைக் கழகங்களில் இக்கற்கைநெறி இடம்பெற வேண்டும்.

இந்தச் சிந்தனைக்கும் இந்த நூலுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஆழநோக்கினால் அது புலப்படும்.

இந்தப் பாரிய பணியில் 50 சதவிகிதத்தை மட்டுமே நாங்கள் எல்லோரும் சேர்ந்து செய்திருக்கிறோம். மீதி 50 சதவிகிதப் பங்களிப்பைச் செய்பவர்கள் யார்? சந்தேகமென்ன? வாசகர்களாகிய நீங்களேதான்!

உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள்.
கருத்தை எழுதுங்கள்.

**க. தங்கேஸ்வரி**
கன்னன்குடா,
மட்டக்களப்பு.

18, நல்லையா வீதி,
மட்டக்களப்பு
10.6.95.

## மாகோன் வரலாறு

# சில விளக்கக் குறிப்புகள்

இந்நூலில் இடம்பெறும் ஆய்வுத் தகவல்களினூடே வாசகர்கள் நூலின் பிரதான கருத்திலிருந்து நழுவிவிடாமல் செல்வதற்கு உதவுமுகமாக இக்குறிப்புகள் தரப்படுகின்றன.

1. மாகோன் என்பவன் கலிங்க நாட்டிலிருந்து கி.பி.1215-ல் இலங்கைக்குப் படையெடுத்துவந்த ஒரு மன்னன். இலங்கையிலுள்ள கலிங்க வம்ச மக்களுக்கெதிராகச் சிங்களவரும், சோழரும் சேர்ந்து செய்த அநீதிகளைப் பொறுக்கமாட்டாமல், அவர்களுக்கு உதவுமுகமாகத் தனது 24000 படைவீரர்களைக் கொண்டு போர் தொடுத்தான் மாகன். இந்தப் போராட்டத்தில், பௌத்த பிக்குகளுக்கெதிராகவும் அவன் செயற்பட வேண்டியிருந்தது. அதனால் சிங்கள - பௌத்த வரலாற்று ஆவணங்கள், மாகோனை அட்டூழியங்கள் செய்த ஒரு கொடுங்கோலனாகச் சித்தரித்துள்ளன.

2. தமிழ் மன்னர்களைப்பற்றியோ அவர்களது சாதனைகளைப் பற்றியோ 'மகாவம்சம்', 'சூளவம்சம்' போன்ற பௌத்த நூல்களில் உண்மைத் தகவல்கள் பல இடம் பெறவில்லை. இடம் பெற்றிருக்கவும் முடியாது. அவ்வாறான தகவல்களைப் பிற சான்றுகள் மூலம் பெற வேண்டியுள்ளது.

3. மாகோன் என்பவன் இணையற்ற வீரனாக விளங்கினான் என்பதற்கான சில குறிப்புகளை மேற்படி சிங்கள, பாலி நூல்களிலிருந்து அகச்சான்றுகளாக நாம் பெறமுடிகிறது. அவன் இலங்கையின் கரையோரப் பகுதிகள் எங்கும் தன் படைகளை நிலைகொள்ளச் செய்திருந்தான் என்பதும், 40 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்பதும் அவ்வாறு கிடைக்கும் அகச்சான்றுகளாகும். இவை ஒரு மன்னனின் ஆட்சிச் சிறப்புக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

4. மாகோனுக்குப் பக்கபலமாகப் பல உபராஜர்கள் இருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவன் கி.பி. 1223-ல் இலங்கைக்கு வந்து சேர்ந்த சோழகங்கன் என்பனவாகும். இவனே கிழக்கிலங்கை வரலாற்றில் குளக்கோட்டன் எனப் பெயர் பெற்றவன். திருக்கோணேஸ்வர ஆலயத்துக்குத் திருப்பணி செய்து புகழ்பெற்றவன். (இது பற்றிய ஆய்வுத் தகவல்கள் எனது 'குளக்கோட்டன் தரிசனம்' என்னும் நூலில் உள்ளன).



5. மாகோனும், குளக்கோட்டனும் இணைந்து செயற்பட்டார்கள் என்பதற்கும், ஆலயத் திருப்பணிகள், வன்னிமை வகுத்தல், விவசாய விருத்தி, நீர்ப்பாசனம் முதலிய பணிகள் அவர்களால் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கும் ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. அவை எல்லாம் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

6. மாகோனுக்கும், குளக்கோட்டனாகிய சோழகங்கனுக்கும் வேறு பல பெயர்களும் இருந்தன. அவற்றுள் முறையே விஜயபாகு, ஜயபாகு என்னும் பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. இதுபற்றி 'தம்பதேனிய வம்சம்' என்னும் நூலில் லியனகமகே என்ற சிங்கள ஆய்வாளர் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். எஸ். பரணவிதானவும் இதுபற்றிக் கூறியுள்ளார். அவையும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

7. மாகோனின் இறுதிக்காலத்தில், மலேசியாவிலிருந்து வந்த சந்திரபானு படையெடுப்பு, தமிழகத்திலிருந்து வந்த பாண்டியர் படையெடுப்புகளுக்கு மாகோன் முகம் கொடுக்க வேண்டி இருந்தது.

8. மாகோன் காலத்தில் ஈழத்தில் நான்கு பாண்டியப் படையெடுப்புகள் நிகழ்கின்றன. சாவகனான சந்திரபானுவின் படையெடுப்பு இருமுறை நிகழ்கிறது. (1247, 1256).

9. ஈற்றில், 1256-ல் நிகழ்ந்த பாண்டியப் படையெடுப்பில் சந்திரபானு கொல்லப்படுகிறான். மாகோன் பொலன்னறுவையை விட்டு வட இலங்கை செல்கிறான்.

10. யாழ்ப்பாணத்தில் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் மாகோன் யாழ்ப்பாணத்தின் முதலாவது சக்கரவர்த்தி ஆகிறான். அவனுக்குப் பின் குலசேகர சிங்கை ஆரியன் ஆட்சியுடன் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி ஆரம்பமாகிறது. மாகோன் வரலாற்றில் இருந்து மறைந்துபோகிறான்.

# நன்றிக்குரியவர்கள்



1. இந்நூல் ஆக்கத்தில் உடனிருந்து உதவிய இலக்கிய நெஞ்சர் திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) ஐயா அவர்கள்.

2. அரிய பல வரலாற்று ஆய்வுகள் அடங்கிய நூல்களையும், ஆய்வுக்கட்டுரை நறுக்குகளையும் இந்தியாவிலிருந்து மனமுவந்து அனுப்பி வைத்த ஆய்வறிஞர், கும்பகோணம் என். சேதுராமன் அவர்கள்.

3. ஆசியுரை வழங்கிய அதிவண. ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள்.

4. 'யாழ்ப்பாண ராச்சியம்', 'யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு', 'பண்டையத் தமிழகம்' முதலிய தனது நூல்களை அன்பளித்த, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர், கலாநிதி சி.க. சிற்றம்பலம் அவர்கள்.

5. வித்தியாலங்காரப் பல்கலைக்கழக, வரலாற்றுப் பேராசிரியர் திரு. அமரதாச லியனகமகே அவர்களின் ஆய்வு நூலை அன்பளித்த வடக்கு – கிழக்கு மாகாண, பிரதம செயலாளர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

6. ஏட்டுப்பிரதிகள் பலவற்றை வழங்கிய கன்னங்குடா திரு. மா. வேலாப்போடி அவர்கள்.



7. முதலியார் செ. இராசநாயகம் அவர்களின் 'யாழ்ப்பாணச் சரித்திரம்' நூலை அன்பளித்த கலாசூரி, மகாவித்துவான் F.X.C. நடராசா ஐயா அவர்கள்.

8. எமது ஆய்வு முயற்சிகளை எப்போதும் ஊக்குவிக்கும் சுவாமி ஜீவனானந்தாஜீ மகராஜ், சுவாமி அஜராத்மானந்தஜீ, விஸ்வப்பிரம்ம ஸ்ரீ காந்தன் குருக்கள், திருகோணமலை இளைஞர் அருள்நெறி மன்றத் தலைவர், தொண்டர் ஐயா, திருக்கோணேஸ்வரர் ஆலய அறங்காவலர் திரு. மு.கோ. செல்வராசா, மாமாங்கேஸ்வரர் இந்து மகளிர் மன்றத் தலைவி திருமதி க. வீரலட்சுமி ஆகியோர்.

9. இம்முயற்சிகளில் எமக்கு ஆதரவு நல்கும், கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பி.வி. ராமகிருஷ்ணன், கலைப் பீடாதிபதி, கலாநிதி சி. மௌனகுரு ஆகியோர்.

10. மட்டக்களப்பு நூல்நிலையப் பொறுப்பாளர் திரு. வித்தியாசாகரும் அவரது உதவியாளர்களும்

11. வாசகர்களாகிய நீங்கள்.

# இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

வரலாறென்பது வருங்கால சமுதாயம் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கருவூலமாகும். அதை காய்த்தல் உவத்தலின்றி, வெறும் நாள்காட்டும் செய்தியாக அல்லாமல் நயம்பட உரைப்பது சுவைப்போருக்கு இனிமை பயக்கும். அவ்வகையில் 'தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு' எனும் இந்நூல் படிப்போரை ஈர்க்கும் தன்மை படைத்துள்ளது.

இலங்கையை நீண்டகாலம் ஆண்ட மன்னர்களுள் புகழ்பெற்று விளங்கிய தமிழ்மன்னன் மாகோன் ஆவான். இவன் இலங்கையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் நாற்பது வருடங்களுக்குமேல் நிலையான கட்டுக்கோப்பான முறையில் ஆட்சி புரிந்தவன். மாகோனைத் தோற்கடிப்பதற்கு இலங்கை மன்னர்கள் பாண்டிய மன்னர்களின் உதவியை நாடிப்பெற்றனர் என்பதும், பாண்டியரின் ஈழப் படையெடுப்புகள் பற்றிய கல்வெட்டு குறிப்புகளும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

இவனின் வரலாறை தொல்லியல் துறையில் ஆழ்ந்து நோக்கி பல தகவல்களைச் சேகரித்து தமிழ்கூறும் நல்லுலகுக்குப் படைத்துள்ளார் க. தங்கேஸ்வரி. இவர் கிழக்கிலங்கை வரலாறு பற்றி பல ஆய்வுகள் செய்து பல ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்துள்ளார். களனி பல்கலைக்கழகத் தொல்லியல் சிறப்புப்பட்டம் பெற்ற இவர் 'விபுலானந்தர் தொல்லியல் ஆய்வு;' 'குளக்கோட்டன் தரிசனம்' போன்ற நூல்கள் எழுதியுள்ளார். ஆய்வு மாணவர்கள் மட்டுமின்றி அனைவருக்கும் பயன்தரும் இந்நூல் இரண்டாம் பதிப்பாக உலகத்தமிழ் மக்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கிறோம்.

– **மணிமேகலைப் பிரசுரம்**



# தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு

(ஓர் ஆய்வு நோக்கு)

## I மாகோன் அறிமுகம்

### 1. முன்னுரை

இலங்கை வரலாற்றில் மிக நீண்டகாலம் ஆட்சி செய்த ஒரு மன்னன் கலிங்கமாகன் என்னும் தமிழ் மன்னன். இவன் மிகுந்த படைபலம் கொண்டு சக்கரவர்த்தி என்ற பெருமையோடும் திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற விருதோடும் பெரும்புகழ் பெற்றிருந்தான். அதனால் எதிரிகளுக்குச் சிம்மசொப்பனமாக அவன் விளங்கினான்.

பொலன்னறுவை இவன் தலைநகராக இருந்தபோதும், வடக்கே யாழ்ப்பாணம் முதல் தெற்கே திருக்கோயில் வரை தற்போதைய வடக்குக் கிழக்கு மாகாணங்களையும் வடமத்திய மாகாணத்தையும் உள்ளடக்கியதாக அவன் ஆட்சிப்பரப்பு விரிந்து பரந்திருந்தது. வடக்கு, கிழக்குக் கரையோரங்களில் இவன் படைகள் நிலைபெற்றிருந்ததால் எதிரிகள் இவனுடைய ராஜ்யத்துக்குள் ஊடுருவமுடியாதபடி எல்லைப் பாதுகாப்பு பலம் பெற்றிருந்தது.

இவனுடைய ஆட்சிக்காலம் பற்றி பௌத்த வரலாற்று நூல்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளன:

(i) சூளவம்சம் – இவனுடைய ஆட்சிக்காலம் 21 வருடங்கள் எனக் குறிப்பிடுகின்றது.[1] (கி.பி. 1215-1236).

| | | |
|---|---|---|
| (ii) | பூஜாவலிய | - இவனுடைய ஆட்சிக்காலம் 40 வருடங்கள் எனக் குறிப்பிடுகின்றது.[2] (கி.பி. 1215 - 1255). |
| (iii) | ஆய்வாளர் லியனகமகே | - இவனுடைய ஆட்சிக்காலம் 44 வருடங்கள் எனக் குறிப்பிடுகிறார்.[3] (கி.பி. 1215 - 1259). |

21, 40, 44 ஆண்டுகள் என்பது ஒரு மன்னனின் ஆட்சிக் காலத்தில் மிக நீண்ட காலமாகும். இத்தகைய நீண்ட ஆட்சிக் காலத்தைக் கொண்ட மாகோனின் வரலாற்றுத் தகவல்கள் மிகக்குறைந்த அளவிலேதான் சிங்கள, பௌத்த வரலாற்று நூல்களில் காணப்படுகின்றன. அது மட்டுமல்ல, இந்த நூல்களில் இவன் மிகக் கொடூரமானவனாகவே சித்தரிக்கப்படுகிறான்.

இந்த நூல்களில் இடம்பெறும் தகவல்களைத் துருவி ஆராயும்போது, அவற்றினூடே மாகோனின் சிறப்புகள் ஓரளவு புலப்படுகின்றன. அகச்சான்றுகள், புறச்சான்றுகள் மூலம் இவை மேலும் உறுதியாகின்றன.

## 2. உண்மைக்கு மாறான தகவல்கள்

பௌத்த வரலாற்று நூல்கள் மாகோனைப் பற்றிப் பலவாறு கூறுகின்றன: ராஜவலிய, சூளவம்சம், நிகாயசங்கிரஹய, பூஜாவலிய ஆகியவற்றில் இக்குறிப்புகள் காணப்படுகின்றன.[4] அவை பின்வருமாறு அமைகின்றன.

மாகோன் பெரும்படையுடன் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்து, நகரத்தைச் சூறையாடினான். விகாரைகளை இடித்துத் தரைமட்டமாக்கினான். பௌத்த பிக்குகளைத் துன்புறுத்தினான். பௌத்தப் பள்ளிகளை அழித்து அவற்றைப் படைத்தளங்களாக மாற்றினான். ஒவ்வொரு கிராமத்திலும் தமிழர்களைக் குடியமர்த்தினான். செல்வந்தர்களிடமிருந்த செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்து, தனது படை வீரர்களுக்குக் கொடுத்தான்.

இவ்வாறு மாகோன் ஒரு கொடுங்கோலன் என்பது போல் இந்த வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால் பின்னால் வந்த ஆய்வாளர்கள் - டாக்டர் எஸ். பரணவிதான, லியனகமகே போன்றவர்கள் - மேற்படி கூற்றுக்களை



ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மையில் அவன் ஒரு கொடுங்கோலனாக இருந்தால், நீண்டகாலம் ஆட்சியில் இருந்திருக்க முடியாது என்பதை நாமும் உய்த்துணரலாம்.

உண்மை என்னவென்றால் இலங்கையிலிருந்த சோழவம்சத்தைச் சேர்ந்த சில பிரதானிகள் சிங்களவருடன் சேர்ந்து கொண்டு, கலிங்க வம்சத்தைச் சேர்ந்த மக்களைத் துன்புறுத்தி வந்தனர். அவர்களை இத்துன்புறுத்தல்களிலிருந்து விடுவிக்கு முகமாகவே மாகோன் பெரும்படையுடன் (24,000 போர் வீரர்கள் கொண்ட படை) கலிங்கத்திலிருந்து புறப்பட்டு இலங்கைக்கு வந்தான்.

இந்தப் போராட்டத்தில் சில அழிவுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் போராட்டத்தின் பின் மாகோன் பாதுகாப்பான ஓர் ஆட்சியை நிறுவி 40/44 ஆண்டுகளாக மக்களுக்குச் செய்த பணிகள் பௌத்த வரலாற்று நூல்களில் பதிவாகவில்லை.

## 3. ஆய்வாளர்களின் பணி

மாகோனது வரலாறு பற்றிப் பிரபல ஆய்வாளர்களான டாக்டர் எஸ். பரணவிதான, கலாநிதி லியனகமகே, கலாநிதி இந்திரபாலா, கலாநிதி பத்மநாதன், கலாநிதி சி.க. சிற்றம்பலம் முதலியோர் விரிவான ஆய்வுகளைச் செய்து, பௌத்த வரலாற்று நூல்களில் இடம்பெறாத பல புதிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இவர்களது ஆய்வுகள், மறைந்து கிடந்த மாகோனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன. இந்த ஆய்வுகள்தான் மாகோனைப் பற்றி மேலும் ஆய்வதற்கான வாசல்களைத் திறந்துவிட்டன எனலாம். அந்த வாசல் வழியே செல்லும்போது மாகோனைப் பற்றிய தரிசனம் விரிவடைவதைக் காண முடிகிறது.

மாகோனின் பரந்துபட்ட பணிகள், அவற்றை நிறைவேற்றுவதற்கான, அமைதியான ஆட்சிக்குச் சான்று பகர்கின்றன. அந்தப் பின்னணியில் பார்க்கும் போது மாகோன் ஒரு மகானாகத் தோற்றுகிறான். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வளித்தவனாக அந்த மக்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றியவனாக அவன் காட்சியளிக்கிறான்; அவனுடைய பணிகள் பின்வருமாறு அமைகின்றன;

(i) முறையான ஆட்சி அமைப்பு.
(ii) அதற்குத் துணையாக அமைந்த உபராஜர்கள்.
(iii) நெல்விளைச்சல், நீர்ப்பாசனம்.
(iv) கோயில் திருப்பணிகள்.
(v) கோயிலுக்கான நிவந்தங்கள்.
(vi) கட்டுக்கோப்பான படைகள்.
(vii) நிர்வாகப் பரவலாக்கள்
(viii) கிராமப்புற வாழ்க்கை வளம்.
(ix) சமதர்ம நோக்கு.
(x) மக்கள் நலன்பேணல்.
(xi) போர்த் தந்திரம்
(xii) வன்னிமை வகுத்தல்.

## 4. நீண்டகால ஆட்சி

மாகோனுடைய ஆட்சிச் சிறப்புக்கு அவனுடைய நீண்டகால ஆட்சியே தக்க சான்றாகின்றது எனக் கூறினோம்; இது ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய ஒரு கருத்து. மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் ஒரு மன்னன்னுடைய ஆட்சி நிலைக்கவோ, நீடிக்கவோ முடியாது என்பது வரலாறு. கட்டுக்கோப்பான நிர்வாகமும், படைபலமும் இல்லாவிட்டால் பரந்துபட்ட ஒரு இராசதானியை நீண்டகாலம் ஆட்சி செய்ய முடியாது என்பதும் வரலாறு. ஒரு கொடுங்கோலனால் - சர்வாதிகாரியால் இந்த இரண்டு சாதனைகளையும் நிலைநாட்ட முடியாது.

பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு, வட இலங்கை முதல் தென்னிலங்கைவரை மாகோன் ஆட்சி செய்த இந்த நீண்டகாலப் பகுதியில், சிங்கள மன்னர்கள் தமது ராசதானியை தம்பதேனியாவில் அமைத்துக்கொண்டு ஆட்சி செய்தனர். மாகோனை எதிர்ப்பதற்காக இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்பதை 'தம்பதேனிய வம்சம்' என்ற கட்டுரையில் டாக்டர் எஸ். பரணவிதான குறிப்பிட்டிருக்கிறார்.[5]

மாகோனின் படைபலமும், படைப்பயிற்சியும்கூட அவனது நீண்டகால ஆட்சிக்கு உறுதுணையாக அமைந்தன எனலாம். இவனுடைய படைகள் வடக்கே ஊர்காவற்துறை, காங்கேசன் துறை, யாழ்ப்பாணம், இலுப்பைக்கடவை முதலிய இடங்களிலும்; கிழக்கே, கொட்டியாரம், திருகோணமலை, கந்தளாய் முதலிய இடங்களிலும்;



மேற்கே பெரியகுளம், மன்னார், மாந்தை, மகாலன்நுவர (கொழும்பு) முதலிய இடங்களிலும்; மத்தியில் பொலன்னறுவை, பதவியா முதலிய இடங்களிலும் நிலைபெற்றிருந்தன. மேலும் உறுகுணை ராஜ்ஜியத்தைக் கைப்பற்றி மகாகம (திசமாறாமை) என்ற இடத்தை அவன் பலப்படுத்தினான். அதன்பின் யாழ்ப்பாணத்தைப் பலப்படுத்தினான்.[6] இவ்வாறு நாட்டின் எல்லாப் பகுதிகளும் அவன் கட்டுப்பாட்டில் இருந்தன.

## 5. உபராஜர்கள்

மாகோனுக்குத் துணையாகப் பல உபராஜர்கள் அவனுடைய நிலையான ஆட்சிக்குப் பக்கபலமாக நின்று உதவியுள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவன், சோடகங்கதேவ என வரலாற்றில் புகழ்பெற்ற சோழகங்கன் ஆவான். இவனே திருக்கோணேஸ்வரத்தில் திருப்பணி செய்த குளக்கோட்டன்.

மாகோனும், குளக்கோட்டனும் இணைந்து மேற்கொண்ட பல நற்பணிகள் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. (மேலும் விவரங்களை எனது 'குளக்கோட்டன் தரிசனம்' நூலில் காணலாம்).

இவர்கள் இருவரும் இந்தியாவிலிருந்து வன்னியரைப் பெருந்தொகையாகக் கொண்டு வந்து இலங்கையில் குடியேற்றினர். அவர்கள் மூலம் பல நற்பணிகளை மேற்கொண்டனர். இதுபற்றி கலாநிதி பத்மநாதன் தனது 'வன்னியர்' என்னும் நூலில் விவரமாகக் கூறியுள்ளார்.[7] இவர் 'சூளவம்சத்'தை ஆதாரமாகக் கொண்டு மாகோனுடன் வந்த உபராஜனே குளக்கோட்டன் என்ற கருத்தையும் தெரிவித்துள்ளார்.[8]

மாகோனுக்கும், குளக்கோட்டனுக்கும் முறையே விஜயபாகு, ஜயபாகு என்ற பெயர்களுமுண்டு. இவர்கள் சிங்கள - பௌத்த மக்களுக்கு எதிராகச் செயற்பட்டிருந்தால் இப்பெயர்களைச் சூட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

மாகோனும், ஜயபாகுவும் பொலன்னறுவையில் தொடர்ந்து ஆட்சி செய்தனர். 'எழு அத்தனகளுவம்ச' என்னும் நூல் பொலன்னறுவையில் இருந்த மாகோன் படைகள் பற்றிக் குறிப்பிடும்போது அவை நூறாயிரக்கணக்கான சோழ, பாண்டிய வீரர்களைக் கொண்டிருந்தன என்றும், அவர்களுக்கு அரசனும்

உபராஜனும் இருந்தனர் என்றும் குறிப்பிடுகின்றது.[9] எனவே மாகோனின் படைகள், கட்டுக்கோப்பாக அமைந்திருந்தன என்பது பெறப்படுகின்றது. இதே நூலில் மாகோனின் பெயர் விஜயபாகு எனவும் குறிப்பிடப்படுகிறது. மாகோனின் உபராஜர்களே, மாகோனின் பிரதிநிதிகளாக, தூரப் பிரதேசங்களில் நிர்வாகம் சீர்குலையாமல் கண்காணித்து வந்தனர் எனலாம்.

## 6. மாகோனது ஆட்சிப் பிரதேசம்

இலங்கையின் பண்டைக்கால மூன்று ஆட்சிப் பிரிவுகளுள் ஒன்றான ராஜரட்டை மாகோனது ஆட்சியில் இருந்ததாக 'சூளவம்சம்' மூலம் அறியமுடிகிறது. புலத்திநகர் என்ற பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு, ராஜரட்டை முழுவதையும் மாகன் ஆட்சி செய்தான் என இந்நூல் கூறுகிறது.[10]

பின்னால் மாகன் உறுகுணைரட்டையையும் கைப்பற்றி ஆட்சி செய்தான் எனத் தெரிய வருகிறது. ஆகவே இலங்கையின் மூன்றில் இரண்டு பகுதி இவன் ஆட்சியில் இருந்தது என்பது பெறப்படுகின்றது.

புலத்திபுர, புலத்திநகரம், தோப்பாவை என்பதெல்லாம் பொலன்னறுவையைக் குறிக்கும் பெயர்கள். ராஜரட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த குருண்டி (Kurundi), குருந்தன்குளம், மானாமத்த (Manamatha), மாந்தை (Mantai), புலச்சேரி முதலிய இடங்களிலும் மற்றும் கெட்டியாரம் (Kothsara), திருகோணமலை (Gonaratta), கந்தளாய் (Gangtalawa), கட்டுக்குளம் (Kattukulam), பதவியா (Padiratta) முதலிய இடங்களில் மாகோனின் படைகள் இருந்தன என்பதை சூளவம்சம் குறிப்பிடுகிறது.[11]

இவை தவிர மாயரட்டையிலும் இவன் ஆட்சி விரிந்திருந்தது. மாயரட்டையில் உள்ள கொத்மலை, தம்பதேனியா, வத்தளை, களனி, அத்தனகலை ஆகிய இடங்களில் இவன் ஆட்சி இருந்தது என்பதைப் பின்வரும் சூளவம்சக் குறிப்பில் இருந்து அறியமுடிகிறது.

"…. அப்போது ஆட்சியிலிருந்த 3ம் விஜயபாகு மாகோனுக்குப் பயந்து அவ்விடங்களில் ஒளித்து வைத்திருந்த புத்த தந்தத்தையும் பிட்சா பாத்திரத்தையும் மீட்டு, பெலிகலையில் கோயில் அமைத்தான்."[12]



இக்குறிப்பிலிருந்து தெரிவது என்ன?

மேற்குறித்த இடங்களில் மாகோன் ஆட்சி இருந்தது. (அல்லது அவ்விடங்களில் அவன் ஆட்சி பரவும் சூழ்நிலை இருந்தது). அதனால், விஜயபாகு-III அவ்விடங்களிலிருந்து, புத்தரின் புனித சின்னங்களை அப்புறப்படுத்தி, பெலிகலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறான் என்பதே.

## 7. மாசுபட்ட வரலாறு

பௌத்த வரலாற்று நூல்களில் மாகோன் வரலாறு திரித்துக் கூறப்பட்டமைக்குரிய காரணங்களை நாம் ஒருவாறு ஊகிக்கலாம்.

பெரும் படையுடன் மாகோன் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்த நோக்கத்தை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இலங்கையில் சோழவம்சத்தவரும் சிங்களவரும் சேர்ந்து கலிங்க வம்சத்து மக்களைத் துன்புறுத்தினர். அவர்களை இத்துன்பத்திலிருந்து விடுவிப்பதே மாகோனின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இந்தப் போராட்டத்தின் போது மாகோன் சிங்கள பௌத்தர்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டியிருந்தது. இந்தக் கலவரத்தில், பௌத்த பிக்குகளும், பௌத்த வணக்கத்தலங்களும்கூட பாதிக்கப்பட்டிருக்கலாம். இதனால் பௌத்தர்கள் மாகோனைத் தமது எதிரியாகவே கருதியிருக்க வேண்டும். எனவே பௌத்தர்களால் எழுதப்பட்ட வரலாற்று நூலில் மாகோனின் நல்ல பணிகள் மறைக்கப்பட்டு, அவனுடைய ஆரம்ப கால நடவடிக்கைகள் சற்று மிகையாகவே பதிவாகியுள்ளதில் ஆச்சரியம் இல்லை.

மேலும், பொலன்னறுவையில் நீண்டகாலம் நிலைத்திருந்த சிங்கள மன்னர்களின் ஆட்சியைக் கவிழ்த்து அவர்களைத் தம்பதேனியாவுக்கு இடம்பெயரச் செய்தமையும் பௌத்த வரலாற்றாசிரியர்களுக்கு மாகோன் மீது குரோதத்தை வளர்த்திருக்கலாம்.

அதுமட்டுமல்ல, நாற்பது வருடங்களுக்கு மேலாக ராஜரட்டை, உறுகுணைரட்டை பிரதேசங்களை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்புக்கு அதிபதியாகி, சிங்கள மன்னர்கள் எவராலும்

எதிர்க்கமுடியாத அளவு வலிமை பெற்றிருந்த ஒரு தமிழ் மன்னனாக அவன் விளங்கியதும், பௌத்த வரலாற்றாசிரியர்களுக்கு ஆத்திரமூட்டியிருக்கலாம்.

இன்னோரன்ன காரணங்களால், இலங்கை வரலாற்று ஏடுகளில் மாகோன் வரலாறு மாசுபடுத்தப்பட்டிருந்த போதும், ஏராளமான அகச்சான்றுகள், புறச்சான்றுகள் மூலம் அந்த மாசு துடைக்கப்பட்டிருப்பதை இன்று நாம் பார்க்கிறோம்.

## 8. மாகோன் வரலாறு கூறும் நூல்கள்

40 அல்லது 44 வருடங்கள் ஆட்சி செய்த ஒரு மன்னனின் வரலாற்றுச் சுவடுகளை யார்தான் மறைக்கமுடியும்? அப்படியான வரலாற்றுச் சுவடுகளை எடுத்துக்காட்டும் நூல்களில், பின்வருபவை முக்கிய இடம் பெறுகின்றன.

(அ) சூளவம்சம் - கைசர் (Geiger) மொழிபெயர்ப்பு.

(ஆ) பூஜாவலிய - A.V. சுரவீர பதிப்பு.

(இ) நிகாய சங்கிரகய - D.M.de Z. விக்கிரமசிங்க பதிப்பு.

(ஈ) மட்டக்களப்பு மான்மியம் - F.X.C. நடராசா பதிப்பு.

(உ) திருக்கோயில் கல்வெட்டுகள் - Dr. ஆ. வேலுப்பிள்ளை.

(ஊ) ராஜவலிய - B. குணசேகரா பதிப்பு.

(எ) யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர்.

(ஏ) வையாபாடல் - வையாபுரி ஐயர் (க.செ. நடராசா பதிப்பு)

(ஐ) வம்சத் தீபிகாசினி - G.P. மலலசேகரா பதிப்பு.

(ஒ) கைலாயமாலை - முத்துக்கவிராசர் (ஜம்புலிங்கம்பிள்ளை பதிப்பு).

(ஓ) எழு ஹத்தவங்கல விகாரவம்ச - G.E. கொடக்கும்புர.

(ஔ) ராஜதரங்கணி - ஏ.எம். ஸ்ரெயின் மொழிபெயர்ப்பு.

(க) உபாசன ஜனலங்கற - மொறத்தோட்ட தம்மகந்ததேர பதிப்பு.



(கா) ராஜரட்னாகாரய - சத்தர்மரட்னாகாரய - கலுபாலுப தம்மகீர்த்தி ஸ்ரீ சுகுணசார தேவாநந்ததேர பதிப்பு.

இவை தவிர அண்மைக்காலம்வரை பல பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் எழுதிய பின்வரும் நூல்களிலும் மாகோன் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

(அ) யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - சுவாமி ஞானப்பிரகாசர்

(ஆ) History of Ceylon - Dr. S. Paranavithana.

(இ) Ceylon and Malaysia - Dr. S. Paranavithana.

(ஈ) Ancient Jaffna - Mudaliyar Rasanayagam.

(உ) The Kingdom of Jaffna - Dr. S. Pathmanathan

(ஊ) வன்னியர் - கலாநிதி எஸ். பத்மநாதன்.

(எ) The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniya - Dr. S. Liyanagamage.

(ஏ) குளக்கோட்டன் தரிசனம் - க. தங்கேஸ்வரி.

(ஐ) இலங்கைச் சரித்திர சூசனம் - ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை

(ஒ) The Tamils in Early Ceylon - C. Sivaratnam.

(ஓ) South Indian Inscriptions -

(ஔ) யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - Dr. சி.க. சிற்றம்பலம்.

(க) யாழ்ப்பாண ராச்சியம் - Dr. சி.க. சிற்றம்பலம் தொகுப்பு.

## அடிக்குறிப்புகள்


1. Culavamsa Translated by Wilhelm Geiger 1930, Ceylon. Part II, Ch. LXXX, PP. 132-134, Notes 79, 54-78.

2. Pujavaliya, Ed. by A.V. Suravera. 1959, Ceylon, PP. 105, 114, 116.

3. The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniya - 1960. Colombo, PP. 146. (Dr. A. Liyanagamage)

4. (a) Culavamsa - translated by wWilhelm Geiger. 1930, Ceylon. Part II,

Ch. LXXX, Notes 58, 70.
Ch. LXXXI Notes 3, 14.
Ch. LXXXII Notes 6, 23.
Ch. LXXXVII Notes 25.

(b) Pujavaliya - Ed. by A.V. Suravera. 1961, Ceylon. PP. 105, 114, 116.

(c) Nikaya Sangrahaya - Ed. by D.M. de Z. Wickramasinghe - 1890. Colombo, translated by C.M. Fernando. Revised Edition D. F. Gunawardhane. Colombo - 1908. PP. 87-88.

(5) History of Ceylon. Vol. I, Part I. 1968 Celyon. Edited by W.J.F. Lebrooy, "The Dambadeniya Dynasty" - Dr. S. Paranavithana, PP. 613 - 621.

(6) Culavamsa - translated by Wilhelm Gaiger. 1930, Ceylon. Part II.

Ch. LXXX Notes 71-73
Ch. XXXVIII Notes 38-40.
Ch. LVII Notes 10-17, 33-37.

(7) வன்னியர் - சி. பத்மநாதன், 1970, பேராதனை. பக். 39, 41, 44.

(8) மேற்படி - பக். 41.

(9) Culavamsa - translated by Wilhelm Geiger. 1930. Colombo. Ch. XXXIII, PP. 149, Notes 15.

(10) Ibid Ch. LXXXIII, PP. 12-22.

(11) Ibid Ch. XXXIII, PP. 149. Notes 15, 16, 17, 18, 19.

(12) Ibid Ch. LXXXI, PP. 140, 141, Notes 58-63.




# II மாகோன் பற்றிய வரலாறுகள்

மாகோன் வரலாறு பற்றிப் பல நூல்கள் கூறுகின்றன. அவற்றின் சுருக்கம் வருமாறு.

### 1. 'சூளவம்சம்' கூறுவது

கி.பி. 1215-ல், காலிங்க விஜயபாகு அல்லது காலிங்கமாகன் என்பவன், 24000 போர் வீரர்களுடன் இலங்கை மேல் படை எடுத்து வந்து பொலன்னறுவையைப் பாழாக்கி அங்கிருந்து ஆட்சி செய்த பாண்டிய குலத்தரசனைக் கொன்று பௌத்த ஆலயங்களை இடித்து, அங்கிருந்த புத்தபிக்குகளைத் துரத்தி மற்றும் கொடுந்தொழில்களைப் புரிந்து, பழிபாவத்துக்கஞ்சாதவனாக கி.பி. 1236 வரை ஆட்சி செய்தான்.

இவ்வாறு சூளவம்சம் கூறுகிறது.[1]

### 2. 'பூஜாவலிய' கூறுவது

மாகோனும் ஜயபாகுவும் பொலன்னறுவையைக் கைப்பற்றி கி.பி. 1215-ல் ஆட்சிக்கு வந்தனர். பராக்கிரமபாகு (II) ஆட்சிக்கு வரும்வரை இவர்கள் ஆட்சி நீடித்தது. கொட்டியாரம், கவுதுலு, பதவியா, குருந்தன்குளம், மானாமட்ட மாந்தை, மன்னார், புலச்சேரி, ஊராந்தோட்ட முதலிய இடங்களில் இவர்களது படைகள் நிலைபெற்றிருந்தன. படை எடுப்பின் போது இவர்களிடம் 24,000 படைவீரர்கள் மட்டும் இருந்தனர். ஆனால் காலக்கிரமத்தில் மாகனுக்கு 44,000 படை வீரர்களும், ஜயபாகுவுக்கு 40,000 படைவீரர்களும் இருந்தனர். இவர்கள் காலத்தில் பெருங்குடி மக்களும் சாதாரண பொது மக்களும் மதமாற்றம் செய்யப்பட்டனர். மாகன், ஜெயபாகு ஆகிய இந்த இரு தமிழ் அரசர்களும் நாற்பது வருடங்கள் ஆட்சி செய்தனர். இவ்வாறு பூஜாவலிய கூறுகிறது.[2] இதிலிருந்து ஜயபாகுவும் மாகோனைப்போலவே தனித்துவம் பெற்றிருந்தான் என்பதையும் அறியலாம்.

### 3. 'நிக்காய சங்கிரஹய' கூறுவது

முதலாம் பராக்கிரமபாகுவுக்குப் பின் பதினைந்து மன்னர்கள் ஆண்டனர். அவர்களின்பின் காலிங்க விஜயபாகு (காலிங்கமாகன்) பராக்கிரம பாண்டியனைச் சிறைப்பிடித்து, அவனைக் குருடாக்கி, அதன்பின் நாட்டில் தோன்றிய எதிர்ப்பை கடுமையான முறைகளில் அடக்கினான். அவனுடைய போர் வீரர்கள், மாகோன் ஆட்சியில் அமர்ந்த பின்பும் தமது கொடுமைகளைத் தொடர்ந்து செய்தனர். தனிப்பட்டோரின் உடைமைகள் பறிக்கப்பட்டன. பௌத்த மக்கள் மதமாற்றம் செய்யப்பட்டனர். கடுமையான தண்டனைகளாலும் சித்திரவதைகளாலும் குடிமக்கள் பெரிதும் வருந்தினர். பொலன்னறுவை, புலச்சேரி, கொட்டியாரம், கந்தளாய், கந்தப்புலு, குருந்து, பதவியா, மாட்டுக்கொனா தமிழ்ப் பட்டினம், ஊராந்தோட்டை, கொமுது, ஸ்ரீபாதொட்ட மண்டலி, மன்னார் என்னுமிடங்களில் இவனது படைகள் இருந்தன.[3] மேலும் மாகனின் ஆட்சியில் முற்பகுதியிலே அட்டூழியங்கள் நிகழ்ந்தன. பின்னர் இல்லை எனவும் நிகாய சங்கிரஹய குறிப்பிலிருந்து அறியமுடிகிறது.

### 4. 'ராஜாவலிய' கூறுவது

இந்தியாவிலிருந்து 24000 கேரள, தமிழ் போர் வீரர்களுடன் இலங்கைக்கு வந்த மாகன், பொலன்னறுவையைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தினான். வடக்கிலே, ஊரான்தோட்டை, வலிகாமம், தெமளபட்டினம், இலுப்பைக்கடவை; கிழக்கிலே கொட்டியாரம், திருகோணமலை, கந்தளாய்; மேற்கிலே, குருந்தன்குளம், மன்னார், மாந்தை; மத்தியில் பொலன்னறுவை, பதவிய, கொலன்னுவர முதலிய இடங்களில் இவனது படைகள் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் மாகன் தமிழரைக் குடியேற்றினான். மேலும் இவன் மக்களை, தவறான சமயத்திற்கு மாறும்படி கட்டாயப்படுத்தினான். புத்த குருமார் வதிவிடங்களைக் கொள்ளையடித்தும், சங்க உறுப்பினர்களை வதைத்தும், செல்வந்தர்களைக் கொடுமைப் படுத்தியும், அமைதியின்மையை ஏற்படுத்தினான். சுதந்திர ருஹுணு ராஜ்ஜியத்தைக் கட்டுப்படுத்தி மகாகம (திஸமகாறாம) என்னும் இடத்தில் ஒரு படைத்தளத்தை அமைத்தான். யாழ்ப்பாணத்திலும் படைத்தளம் அமைத்தான். ஒவ்வொரு கிராமத்திலும் தமிழர்களைக் குடியமர்த்தினான் - இவ்வாறு 'ராஜாவலிய' கூறுகிறது.[4]



### 5. 'மட்டக்களப்பு மான்மியம்' கூறுவது

சுகதிரன் என்பவன் ஆட்சியின்போது, கலிங்க மன்னனின் மூன்றாவது புத்திரன் மாகோன், மணிபுரத்தில் (யாழ்ப்பாணம்) இறங்கி சிங்கன் குலத்தவரை எதிர்த்து வெற்றி கொண்டு தோப்பாவையைக் (பொலன்னறுவையை) கைப்பற்றி அணிகங்களை வாளுக்கிரையாக்கி பௌத்த ஆலயங்களை இடித்துத்தள்ளி, கதிர்காமத்திலும், விஜய துவீபத்திலும் சிவாலய முந்நீரும் பெற்று, வட இலங்கையென இராமேஸ்வரத்தை இலங்கையோடு சேர்த்து தோப்பாவையை ஆண்டான். மேலும் புலியமாறன் மந்திரியாயிருந்த ஊரில் ஒரு சிறிய கோட்டை செங்கல்லாலியற்றிச் சுகதிரனுக்கு இராஜதானியாக்கிக் கொடுத்து தோப்பாவையிலிருந்து ஆண்டான். சுகதிரன் ஆண்ட இடம் மண்முனை எனப்பட்டது. இலங்கை முற்றுக்கும் தோப்பாளவையை இராஜதானியாக்கி காலிங்க குலத்தவருக்கு தேசராச குலமென விருதுகளுயர்த்தி ஆண்டான் எனக் கூறும்.[5]

### 6. 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுவது

கி.பி. 1215-ல் காலிங்க விஜயபாகு அல்லது, காலிங்கமாகன் என்னும் அரசன் இலங்கைமேல் படை எடுத்து, பெலன்னறுவையைப் பாழாக்கி, அங்கிருந்து அரசாண்ட பாண்டிய குலத்தரசனைக் கொன்று கி.பி. 1236 வரையும், பொலன்னறுவையில் அரசாண்டிருந்தான். இவனே சிங்கைநகர் ஆரிய அரசர்களுள் முதலாவதாக சக்கரவர்த்திப் பட்டமும் கீர்த்திப் பிரதாபமும் பெற்றவனானபடியால், விஜயகாலிங்க சக்கரவர்த்தி எனவும், பாண்டி மழவனால், மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்ட சோழ அரசகுமாரனெனவும் அழைக்கப்பட்டான். இவன் நல்லூரில் முடிசூட்டப்பெற்றான். இவ்வரசனுக்கு ஒரு கை மூளியாக (கூளங்கை) இருந்தமையினால் கூளங்கையாரியன் என்றும், விஜய கூளங்கைச் சக்கரவர்த்தி எனவும் விஜயகாலிங்கை சக்கரவர்த்தி எனவும் அழைக்கப்பட்டான்[6].

### 7. 'கைலாய மாலை' கூறுவது

யாழ்ப்பாணத்தில் முதல் மன்னனான சிங்கை ஆரியன் என்பவன், பாண்டிய மழவனால், மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்ட சோழ அரசகுமாரன் எனவும், அவன் நல்லூரில் முடிசூட்டப் பெற்றவன் எனவும் 'கைலாய மாலை' (பக். 5) கூறும். இந்நூலில்,

*"தென்னவன் நிகரான செகராசன் தென்னிலங்கை*
*மன்னவனாகுஞ் சிங்கை ஆரியமால்"*

எனக் கூறப்படுகிறது[7].

சிங்கை ஆரியன் எனப்படும் இம்மன்னன், கைலைநாதர் ஆலயம், கைலையம்மன் ஆலயம் அமைத்தது, நல்லூரில் நெடுங்காலம் ஆண்டது, தனது மகனாகிய குலசேகர சிங்கையானுக்கு முடிசூடியது. பின் சிவபதம் அடைந்தது முதலிய விவரங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இதில் மன்னன் பெயர் 'காலிங்க மாகன்' எனக் குறிப்பிடப்படாவிட்டாலும் இவ்விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, 'யாழ்ப்பாண வைபவமாலை' எழுதிய மயில்வாகனப் புலவர் 'விஜய காலிங்க' என்பதை 'விஜய கூளங்கை' ஆக்கிவிட்டார் என 'யாழ்ப்பாண வைபவமாலை விமர்சனம்' எழுதிய சுவாமி ஞானப்பிரகாசர் முதலியோர் கூறியுள்ளனர். 'கைலாய மாலை'யில் சிங்கை ஆரியமால் எனப் புகழ்ந்து கூறப்படுபவனும் கலிங்க மாகனே என்பது இவர்கள் கருத்து. இவ்வுண்மை இந்நூலின் பிற்பகுதியில் இடம்பெறும் ஆய்வுகளிலிருந்தும் பெறப்படுகிறது.

### 8. 'ஹத்தவங்கல்ல விகாரவம்ச' கூறுவது

இலங்கைக்கு ஆபரணமாக விளங்கிய பல அரசர்கள் பௌத்தம், சங்கம் ஆகியவற்றில் ஈடுபாடுடையவர்கள். அவர்கள் எத்தனையோ அற்புத சக்திகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் மரணித்துவிட்டனர். பின்னர் வேறு அரசர்களும், நீதி நெறியிலிருந்து வழுவியவர்களும் பாரம்பரிய அரச வம்சத்தில் ஊறித் திளைக்காதவர்களும், பாக்கியசாலிகளாக வந்த பலவீனர்களும், இவர்களை ஒத்த அமைச்சர்களும் ஆட்சி பீடங்களில் அமர்ந்து பகைமை கொண்டிருந்த காலத்தில் கடந்த காலத்தில் ஈழத்தவர்களால் புரியப்பட்ட ஒரு கொடூர பாதகச் செயலின் விளைவாக பௌத்த நெறியை அறவே அறிந்திராத, பல்வேறு பிரதேசத்தில் இருந்து வந்த பகைவரின் படைகள், தவறான மார்க்கம் என்ற புதரில் சிக்குண்டவர்கள், ஜம்புத் தீவிலிருந்து இங்கு வந்து இறங்கி ஈழம் முழுவதும் குழப்பமும் ஆபத்தும் நிறைந்த நிலைக்கு உள்ளாக்கினர்.[8]

இவ்வாறு மாகோன் வருகைபற்றி இந்நூல் குறிப்பிடுகிறது.



### 9. 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' கூறுவது

காலிங்க மாகன், ஜயபாகு என்னும் இரு தமிழரசர்கள் காலிங்க தேசத்தினின்றும் பெரும்படையோடு வந்து வட இலங்கையை ஆண்டனர். ஜயபாகு யாழ்ப்பாண நாட்டை அரசாள, மாகன் 1215ம் ஆண்டு தொடக்கம் புலத்தி நகரில் வீற்றிருந்து தென்னிலங்கை முழுவதையும் தனிக் குடைகீழ் அடக்கிச் செங்கோலோச்சினான்.

1242 அளவில் காலிங்க மாகன் வடதிசை நோக்கிச் செல்ல நேரிட்டது. காலிங்க ஆரியச் சக்கரவர்த்தி புலத்தி நகரை விட்டு யாழ்ப்பாணம் சென்று ஜயபாகு இறந்துவிட்டமையினால் யாழ்ப்பாண அரசினை நிலைநாட்டினான். ஜயபாகு எனப்படும் உக்கிரசிங்கன் இராஜாதானியாக்கி இருந்த சிங்கை நகரை மாகனெனும் காலிங்கச் சக்கரவர்த்தி திருத்தினான் எனவும் கொள்ளவேண்டும்.[9]

### 10. 'திருக்கோளூர் சாசனம்' கூறுவது

மாகன் பொலன்னறுவையில் ஆளும் காலத்தில் பரராசசேகரன் என்பவன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 'தஞ்சையு முறந்தையுஞ் செந்தழல் கொளுத்தி'ய காலமாகிய கி.பி. 1224-ல் சோழனுக்குதவியாகச் சென்று 'தலைபிடுங்கப்பட்டான் என்கிறது தென்னிந்திய திருக்கோளூர் சாசனம்'[10].

மேலும் கி.பி. 1231-ல், சேந்தமங்கலத்தில், சோழ சிற்றரசனாயிருந்த கோப்பெருஞ்சிங்கன், சக்கரவர்த்தியாகிய 3-ம் ராஜராஜனைப் பிடித்துச் சிறைப்படுத்தியபொழுது, ஹொய்சால வல்லாளன் அரசனாகிய 2ம் நரசிங்கன் படை எடுத்துவந்து, கோப்பெருஞ்சிங்கனையும், அவனுக்கு உதவியாக வந்த அக்காலத்து இலங்கை அரசனாகிய பராக்கிரம பாகுவையும் கொன்று 3ம் ராஜராஜனை, மீண்டும் சோழ சிங்காசனத்திலிருத்தினான் என, திருவாண்டிபுரச் சாசனம் கூறும்.

மேற்படி பரராசசேகரனும் பராக்கிரமபாகுவும், விஜயகாலிங்கனுக்குக் கீழ் சிங்கை நகரிலிருந்த சிற்றரசர்களே என முதலியார் இராசநாயகம் (யாழ்ப்பாணச் சரித்திரம்) கருதுகிறார்.[10]

### 11. 'வையாபாடல்' கூறுவது

'கோளுறு கரத்துக் குரிசிலின்' (கூளங்கைச் சக்கரவர்த்தி) மாமனான உக்கிரசோழனது மக்கள் சிங்ககேதென்பவனும்

மாருதப்பிரவை என்பவளும் இலங்கை சேர்ந்தனர். மாருதப்பிரவை, கீரிமலை தீர்த்தமாடி குதிரைமுகம் நீங்கி கதிரையம்பதி சென்று 'அரன் மகவினை' வணங்கி வருங்கால் உக்கிரசிங்கசேனனை மணந்து வாவெட்டி மலையில் மண்டபமியற்றி அங்கிருந்து அரசாட்சி செய்தனர். அப்போது அவர்களுக்கு சிங்கமன்னன் பிறந்தான். இவன் தன் மாமனான சிங்ககேதுவிடம் பெண் கேட்டனுப்ப அவனும் சமதுதி எனும் தன் மகளை அறுபது வன்னியர் புடைசூழ அனுப்பி வைத்தான். இக்கதையில் வரும் கூழங்கைச் சக்கரவர்த்தியை சுவாமி ஞானப்பிரகாசர், ஆரியச் சக்கரவர்த்திகளின் முதல்வனாகிய கூளங்கைச் சக்கரவர்த்தி என்று கூறுகிறார். ஆனால் காலிங்க மாகன் என்று கூறவில்லை[11].

## 12. ராஜதரங்கணி

பாளி நூலான ராஜதரங்கணி, மாகனைப்பற்றிப் பின் வருமாறு கூறுகிறது : மாகனின் மதவெறி இந்துமதத்தின் சகிப்புத்தன்மைக்கு மாறானது. அவன், ஆலயங்களின் செல்வங்களைப் படைவீரர்களைக் கொண்டு கொள்ளையடிக்கச் செய்தது, இந்தியாவில் ஹர்ஷ மன்னன் செய்த அட்டூழியங்கள் போன்றது. ஹர்ஷன் தெய்வ விக்கிரகங்களை உடைத்தான். தெய்வச் சிலைகள் மீது மலசலம் ஊற்றச் செய்தான். ஹர்ஷனின் மனிதாபிமானமற்ற செயல்கள் போன்றே மாகனுடைய செயல்களும். ஹர்ஷனைப் போலவே மாகனும், பிராமணர்களைக் கொண்டு வேலை வாங்கினான். பெண்களையும், கலைஞர்களையும் கொண்டு வேலை வாங்கினான். ஹர்ஷன் செய்தது போன்று கொலைகள் செய்து, கொல்லப்பட்டவர்களின் தலைகளை முன்வாயில் தோரணங்களில் தொங்கவிட்டான். அதனால் எப்போதும் நரிகளின் கூச்சலும், சத்தமும் கேட்டுக் கொண்டேயிருந்தது. மாகனும், ஹர்ஷனும் செய்த சமயக் கொடுமைகள் ஒரே மாதிரியானவை. இவ்வாறாக 'ராஜதரங்கணி'யில் மாகனை மிகவும் கொடுமைக்காரனாக, மிகைப்படுத்தி வர்ணிக்கப்பட்டுள்ளது[12].

## 13. உபாசக ஜனலங்கார

காலிங்க மாகனது காலத்தில் பௌத்த சங்கத்தவர்களில் பலர், நாட்டைவிட்டோடித் தமிழகம் சென்றனர். அங்கு பாண்டிய மன்னனின் சாமந்தனான (மெய்க்காப்பாளன் அல்லது துணைவன்) ஒரு சோழகங்க தேவனைச் சரணடைந்தனர் என இப்பாளி நூல் கூறுகிறது. (Upasakajanalankara By Bhandata Anarda) இக்கூற்று



தலதா சிறித (Dalada Siritha) என்ற பாளி ஆவணத்திலும் இடம்பெறுகிறது.

இக்குறிப்பு, பௌத்த சிங்களவருக்கும் பாண்டியருக்கும் இருந்த நெருக்கத்தைக் காட்டுகிறது. மாகனுக்கு சோழர் சார்பும் சிங்களவர்களுக்கு பாண்டியர் சார்பும் அக்காலத்தில் இருந்தன என்னும் சூளவம்சக் கூற்றும் இதனால் உறுதியாகிறது.[13]

## 14. ராஜரட்னாகாரய, சத்தர்மரட்னாகாரய

இந்நூல்கள் மாகனுடைய ஆட்சியின் முதற்கட்டங்கள், கொடுமைகளும், குழப்பங்களும் மிகுந்து காணப்பட்டன எனக் கூறுகின்றன. தென்னிந்தியாவிலிருந்து எவ்வித உதவிகளும் பெறாமலே இவனுடைய ஆட்சி நீண்ட காலம் நிலவியது எனக் கூறுகிறது. பிற்காலத்தில் இவன் மேற்கொண்ட நற்பணிகள் பற்றி இந்நூல்கள் எதுவும் கூறவில்லை. அதற்குக் காரணம், ஆரம்பத்தில் இவனுடைய நடவடிக்கைகளால் மக்கள் மனதில் ஏற்பட்ட கசப்புணர்வே.

ராஜரட்டைப் பகுதியில் பெரும்பான்மையினராக இருந்த தமிழர்கள், தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்துவரும் தமிழ் மன்னர்களுக்கு அவ்வப்போது தமது ஆதரவை நல்கினர். அவ்வகையில் மாகனும் அவர்களது ஆதரவைப் பெற்றுத் தனது ஆட்சியை நீடிக்க முடிந்தது[14]. (Sadharma Ratnakaraya - Edited By Kalupaluvana Dharmakirti Sri Sugunasara Devendra Thero, 2nd Ed. Col. 1955, pp. 36 37.

## 15. வரலாறும் கர்ண பரம்பரைக் கதைகளும்

மேற்படி நூல்களைப் படிக்கும்போது, வரலாறும், கதைகளும் கலந்து வருவதை எவரும் அவதானிக்கலாம். இவற்றுள் பௌத்த நூல்களான 'சூளவம்சம்', 'பூஜாவலிய', 'நிக்காய சங்கிரஹய', 'ஹத்தவங்கல்ல விஹாரவங்ஸ' முதலியவை காலத்தால் முற்பட்டவையாக இருப்பதாலும் பின்னால் வந்த ஆய்வாளர்களான பரணவிதான, லியனகமகே போன்ற வரலாற்றாசிரியர்கள் இவற்றைத் துருவி ஆராய்ந்து சில தகவல்களை ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளதாலும் இந்நூல்களில் 'கதைகள்' குறைவாகவும் வரலாறு அதிகமாகவும் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

அதேவேளை, 'மட்டக்களப்பு மான்மியம்', 'யாழ்ப்பாண வைபவமாலை', 'கைலாயமாலை', 'வையாபாடல்' போன்ற நூல்கள் மிகவும் பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருப்பதாலும், இவற்றை எழுதிய புலவர்கள் பெரும்பாலும் 'கேள்விச் செவியர்'களாக இருப்பதாலும், இவற்றில் வரலாறு குறைவாகவும், 'கதை' அதிகமாகவும் இருப்பதை மறுக்க முடியாது.

மேற்படி நூல்களில் ஒரே மாதிரியான சம்பவங்கள் வெவ்வேறு இடங்களில் நடைபெற்றுள்ளதாக வருவது, இந்நூலாசிரியர்கள் கேள்விச் செவியர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதை 'யாழ்ப்பாண வைபவமாலை'யிலும், குளக்கோட்டன், ஆடக சௌந்தரி கதை மட்டக்களப்பு மான்மியத்திலும் வருகின்றன. 'கீரிமலைத் தீர்த்தம்', 'யாழ் வைபவமாலை'யிலும், மாமங்கை தீர்த்தம், 'மட்டக்களப்பு மான்மியத்'திலும் இடம்பெறுகின்றன. இவ்வாறே உக்கிரசிங்கனை, வரசிங்கராயனென கைலாயமாலையும், வீரவராயசிங்கன் என, வையாபாடலும் கூறுகின்றன.

இவற்றைச் சரியாகக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளாத சிலர், மேற்படி நூல்களை வேதவாக்காகக் கொண்டு, அதில் உள்ள தகவல்களை வரலாற்று உண்மைகளாக எண்ணிக் கட்டுரைகள் வரைவதை நாம் பார்க்கிறோம்.

## 16. வரலாற்றுத் தெளிவு

மேற்படி வரலாறுகள், கதைகளிலிருந்து மாகோனைப் பற்றிய பின்வரும் உண்மைகள் நிறுவப்படுகின்றன.

(i) மாகோன் என்பவன் கலிங்கத்திலிருந்து கி.பி. 1215-ல் 24,000 படைவீரர்களுடன் இலங்கைமேல் படை எடுத்து வந்தான். எதிரிகளை முறியடித்து பொலன்னறுவையைக் கைப்பற்றி அங்கிருந்து இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தை உள்ளடக்கிய பெரும் நிலப் பகுதியை ஆட்சி செய்தான்.

(ii) இந்தப் போரில் மாகோன் சிங்கள பௌத்தர்களுக்கு எதிராகச் செயற்பட்டதாலும் அவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாலும் அவர்களால் இவன் ஒரு கொடுமைக்காரனாகச் சித்தரிக்கப்பட்டான். ஆனால்



உண்மையில் அவன் நல்ல பல பணிகளை நாட்டுக்குச் செய்துள்ளான்.

(iii) இவனுடைய ஆட்சி 40 வருடங்களுக்கு மேல் நீடித்தது. ராஜரட்டை, உறுகுணைரட்டை ஆகிய பிரதேசங்களில் இவன் ஆட்சி செலுத்தினான். இலங்கையின் வடக்கு, கிழக்கு, மத்திய மேற்கு முதலிய பிரதேசங்களில், பல்வேறு இடங்களில் பெரும் படைகளை நிறுவியிருந்தான்.

(iv) இவனுடைய உபராஜன் ஜயபாகு என்பவன் இவனது வலது கரமாக விளங்கினான். இவனது பிரதிநிதியாகச் செயற்பட்டான்.

(v) பிற்காலத்தில் இவன் நல்லூரில் முடிசூட்டப் பெற்று யாழ்ப்பாணத்தில் சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தினான்.

(vi) சிங்கள பௌத்த வரலாற்று நூல்கள் இவன் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு இலங்கையில் நீண்ட காலம் ஆட்சி செய்தமையைக் கூறும் அதே வேளை, தமிழ் நூல்கள் இவன் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்தமையைக் கூறுகின்றன.

(vii) விஜய காலிங்கன், காலிங்க விஜயபாகு முதலிய பெயர்களாலும் இவன் அழைக்கப்பட்டான். படைபலம் மிகுந்த சக்கரவர்த்தியாகவும், திரிபுவனச் சக்கரவர்த்தியாகவும் இவன் விளங்கினான்.



## அடிக்குறிப்பு


1. Culavamsa - translated by withelm Gaiger. 1930.
   Ceylon. Ch. 81 - notes 3, 14, 25.
   Ch. 83 - notes 12, 14, 20, 24
   Ch. 88 - notes 61, 70, 71.
2. Pujavaliya - Ed. by A.V. Suravera. 1961. Colombo. notes 49, 106, 116
3. Nikaya Sangrahaya - Ed. by D.M. de Z. Wikramasinghe. 1890. Colombo. translated by C.M. Fernando. revised edition.

   D.F. Gunawardene. 1908. Colombo. pp 87-88.
4. Rajavaliya - translated by B. Gunasekara. 1945. Colombo. 44, 45.
5. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பாசிரியர் F.X.C. நடராசா. 1952 கொழும்பு. பக். 52-55.
6. யாழ்ப்பாண வைபவ மாலை - பதிப்பாசிரியர் குல. சபாநாதன். 1953. யாழ்ப்பாணம். பக். 31.
7. கைலாயமாலை - முத்துராஜ கவிராயர் இயற்றியது. C.V. ஜம்புலிங்கம் பதிப்பாசிரியர். 1939. மட்ராஸ். பக். 5.
8. Hattavangalla Viharavamsa - Ed. by C.E.B. Godakumbura. P.T.S. London. 1956. pp. 32.
9. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - சுவாமி ஞானப்பிரகாசர். பக். 64, 65, 69.
10. யாழ்ப்பாண சரித்திரம் - முதலியார் செ. இராசநாயகம். 1933. யாழ்ப்பாணம். பக். 48, 50.
11. வையாபாடல் - பதிப்பாசிரியர் செ. நடராசா, கொழும்பு. 1980 பக். 12, 24. பாடல் 14-20.
12. Rajatharangani Vol. (I) Translated by A.M. Stein. Westminster. 1900. Ch. VII. pp. 1087, 1088, 1089, 1092-1098, 1230-1233, 1256.
13. Upasakajanalankaraa - Ed. by Moratota Dhammkkhanda Thera. Revised by Kosgoda Pannasekhara Thera. Valigama. 1914.
14. Saddharma Ratnakaraya - Ed. by Kalupaluvave Dhamakirthi Sri Sugunasara Devananda Thera. Second Edition. Colombo. 1955. pp. 36-37.




# III கலிங்கமும் ஈழமும்

### 1. கலிங்க நாடு

கலிங்கம் என்பது தென்னிந்தியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரிஸா பிரதேசம் என்பது நாம் அறிந்ததே. இது மேற்குக் கலிங்கம் (ஒரிஸா), கிழக்குக் கலிங்கம் (மைசூர்) என அமைந்துள்ளது. ரென்னத் (Tennet) என்பாரது கூற்றுப்படி கலிங்கம் என்பது தொண்டை மண்டலத்தில் அமைந்திருந்தது என்று கொள்ளப்படுகிறது. இது சோழ மண்டலத்தையும் உள்ளடக்கியிருந்தது. இப்பொழுது தெற்குக் கலிங்கம் பெரும்பகுதி தெலுங்குப் பிரதேசமாகவும், வட கலிங்கம் பெரும்பகுதி தமிழ்ப் பிரதேசமாகவும் அமைந்துள்ளது[1].

பிளைனி (Pliny) என்பவர் கூற்றுப்படி கலிங்கத்தின் தலைநகர் பாடலி (Pertalis) என்பதாகும். இதன் பொருள் (Per-talai பெரும் தலை - அதாவது தலைநகர் என்பதாகும்[2]. இது ஒரு தமிழ்ப் பிரதேசமாகும்.

நீலகண்ட சாஸ்திரி கூற்றுப்படி கலிங்க நாடு முழுவதும் கிழக்குக் கலிங்கத்தின் ஆட்சியில் இருந்தது என்று கொள்ளப்படுகிறது. ஆனால், மேற்குக் கலிங்கம் மைசூர் என்கிறார். கிழக்குக் கலிங்கத்தின் முதலாவது மன்னன் வஜ்ரஹஸ்த (vajrahasta I - 1038) என்பது இவரது கூற்று[3]. இவ்வாறு ஆரம்பித்த கலிங்கர் ஆட்சி கி.பி. 1432 வரை தொடர்கிறது. பிற்காலத்தில் கலிங்க வம்சத்தில் சோழ வம்சமும் கலந்தது. சோழ மன்னனான இராஜராஜன் III (1198) என்பவன் கலிங்க மன்னனான அனந்தவர்மன் சோடகங்கனுடைய பேரனாகும். இதில் சோழ+கங்கன் என்ற பதங்கள் கவனத்துக்குரியன. கலிங்கர் என்பவர் கங்க வம்ச கலப்புடையவர் என்பதை இது கோடிகாட்டுகிறது. அதற்கு ஒரு காரணம் உண்டு.

கலிங்கநாடு கீழைக் கங்கர்களின் ஆட்சியில் ஒரு காலத்தில் இருந்தது. இவர்கள் ஒரிசாவின் தென்பகுதியில் இருந்தார்கள். ஆந்திர பிரதேசத்தின் வடக்கு எல்லை ஓரமாக இப்பிரதேசம் இருந்ததால், எல்லைப் போர்கள் ஏற்பட்டன.

எல்லைப்போர் காரணமாகக் கிழக்குக் கலிங்க தேசத்தை ஆந்திரரும் கங்கரும் மாறி மாறி ஆட்சி செய்தனர். கங்க வம்சத்தவர்கள் மூலம் தெலுங்கரும் சோழ சாம்ராஜ்ஜியத்தில் திருமணக் கலப்புப் பெற்றனர். இக்கலப்பின் மூலம் வந்தவர்களே சோழகங்கர். இவர்களது பரம்பரையினரே பின்னால் ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்டனர். இராமேஸ்வர சேதுபதி, பிராமணர்களுடன் கலப்புற்று, அதன்மூலம் தோன்றிய வம்சத்தைச் சேர்ந்தவர்களே இந்த ஆரியச் சக்கரவர்த்திகள்.

## 2. கலிங்கமும் குப்தரும்

குப்தர் காலத்தில் ஒரிஸாவை ஆட்சி செய்தவர்கள் யார் என்பது தெரியவில்லை. ஒரிஸாவில் கள்ளிக்கோடு என்னுமிடத்தில் (கி.பி. 569-70) கண்டெடுக்கப்பட்ட ஒரு பட்டயத்தின்படி பிருத்வீ விக்கிரகர் என்பவர் ஆட்சி செய்தார் எனவும், அவருக்குக் கீழ் மகராசா தர்மராசா என்பவர், பத்மகோஸி என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார் எனவும் அறிய முடிகிறது[4].

குப்தர் வீழ்ச்சி அடைந்தபோது ஒரிஸா குப்தருக்குக் கட்டுப்பட்ட ஒரு அரசாகவே இருந்தது. ஆனால் மேற்படி பிருத்வீ விக்கிரகா என்பவரைப்பற்றி எதுவும் அறிய முடியவில்லை.

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், வடக்கு தெற்கு மாநிலங்களை, மாணா, சைலோற்பவ என்னும் இரு குடும்பத்தவர் ஆட்சி செய்தனர் என அறியமுடிகிறது. ஹஸானியா மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பட்டயம் ஒன்றின் மூலம், மானா குலத்தவர் தோற்றம் பற்றி ஓரளவு அறிய முடிகிறது.

### (i) மானா குடும்பத்தவர் ஆட்சி :

உதயமானா, ஸ்ரீ கௌதமானா, அஜீதமானா என்னும் மூன்று சகோதரர்கள் அயோத்தியிலிருந்து தாமிரலிப்திக்கு வணிகத் தொடர்பின் பொருட்டுச் சென்றனர். (தாமிரலிப்தி என்பது இலங்கையின் பண்டைய பெயர்களுள் ஒன்று).

அவர்கள் அங்கிருந்து பெரும் பொருள் ஈட்டிக்கொண்டு வரும் வழியில் மகத அரசன் ஆதிசிம்மனின் அன்பைப் பெற்று மூன்று கிராமங்களுக்கு ஆட்சியாளனாக நியமிக்கப்பட்டனர். இவ்வாறு ஒரு சிறிய அரசு கயாவிற்கும் மிட்னாபூருக்கும் இடையில் உருவாகியது.



சம்புயாஸாஸ் என்பவர் கி.பி. 580-603 வரை பாலசோரிலிருந்து பூரி மாவட்டம் வரை ஒரிசா முழுவதும் ஆட்சி செலுத்தினார்[5]. ஆனால் இவர் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவில்லை.

### (ii) சைலேற்பவ குடும்பத்தவர் ஆட்சி :

மானா வம்சத்தவர், ஒரிசாவின் பெரும்பகுதியினை ஆட்சி செய்தபோது சைலேற்பவர்கள் கஞ்சம் மாவட்டத்தில் மகேந்திரபுரி மலையிலிருந்து சிங்க ஏரிவரை இருந்த கொங்கோடாய் பகுதியை ஆட்சி செய்தனர். இரணவீடா அல்லது அரணவீடா என்பவர் குப்த பேரரசின் வீழ்ச்சியைப் பயன்படுத்தி இவ்வாட்சியை உருவாக்கினார். இவரைத் தொடர்ந்து, சைன்யபீடா I, மாதவராசா, அபாகோடா, சைன்யபீடா II, மாதவராசா II என்போர் ஆட்சி செய்தனர். மாதவராசா, கி.பி. 619-ல் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர்களுக்கும் மானா வம்சத்தவருக்கும் எத்தகைய தொடர்பு இருந்தது என்பதும் தெரியவில்லை.

இவ்விரு அரசுக்கும் இடையில், சசாங்கன் (கௌடா அரசன்) என்பவன் ஆட்சியின் கீழ் சிறிது காலம் இருந்து, அவன் மறைவிற்குப் பின் கலிங்கம் சுதந்திர அரசாயிற்று. இதனால் சைலேற்பவர்கள் சுதந்திர ஆட்சி செலுத்தியதுடன், அருகிருந்த பிரதேசத்திலும் தமது ஆட்சியைச் செலுத்தினர். பின்னர் ஹர்ஷவர்த்தனன் கி.பி. 643-ல் இவ்விரு அரசினையும் ஆதிக்கப்படுத்தினான்[6].

இவ்வாறு தொடரப்பட்ட கலிங்க அரசு பின்னர் ஒரிசா பிரதேசத்தில் நிலைபெற்று கிழக்குக் கலிங்கம், மேற்குக் கலிங்கம் எனப் பெயர்பெற்றது.

## 3. கலிங்க–ஈழத் தொடர்பு கொண்ட மன்னர்கள் சிலர்

கலிங்கமாகன் இலங்கைக்கு வந்ததும், ஆட்சி செய்ததும் கி.பி. 13-ம் நூற்றாண்டு ஆகும். ஆனால் விஜயன் (கி.மு. 543) காலத்திலிருந்தே காலிங்க மன்னர்கள் பலர் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்களுள் முக்கியமான சிலரது விவரங்கள் வருமாறு:

### (i) விஜயன் (கி.மு. 543) :

விஜயன் என்பவன், தனது எழுநூறு தோழர்களுடன் சேர்ந்து குடிமக்களைத் துன்புறுத்தியதால் அவனது தந்தையால் நாடு கடத்தப்பட்டவன். விஜயனும் அவனது தோழர்கள் எழுநூற்றுவரும் படகுகளில் வந்து இலங்கையைச் சேர்ந்த கதை யாவரும் அறிந்ததே.

விஜயன் சைவ மதத்தைச் சேர்ந்தவன். (கலிங்கர்கள் சைவ மதத்தைச் சேர்ந்தவர்கள்). விஜயன் இலங்கையில் ஐந்து சைவாலயங்களை (ஈச்சரங்கள்) திருத்தி அமைத்ததாகச் சொல்லப்படுகிறது. அவை, திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், தண்டேஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம் என்பனவாம்[7]. இவ்விவரம் மகாவம்சத்தில் காணப்படுகிறது.

**(ii) உக்கிரசிங்கன் (கி.பி. 795) :**

சாலிவாஹன சகாப்தம் 717-ல் (கி.பி. 795) விஜயனின் சகோதரன் மரபில் பிறந்த உக்கிரசிங்கன் பெரும் சேனையுடன் வந்து இலங்கையைக் கைப்பற்றி கதிரமலையிலிருந்து (கந்தரோடை) ஆட்சி செய்தான் என யாழ்ப்பாண வைபவ மாலை கூறுகிறது[8].

மகாவம்சத்தில் விஜயன் கதை எவ்வாறு கூறப்படுகிறதோ, அவ்வாறே இந்தக் கதையும் கூறப்படுகிறது. விஜயன் கதை மூலம் அக்காலத்து தென் இலங்கையில் ஏற்பட்ட குடியேற்றம் பற்றி அறிய முடிகிறது. அதேபோன்று உக்கிரசிங்கன் - மாருதப் புரவல்லி கதை மூலமும் இலங்கையின் வடபகுதி நிலை பற்றி அறிய முடிகிறது. கீரிமலை, மாவிட்டபுரம், கதிரமலை போன்ற நகர்களின் விவரங்களும் தெரியவருகின்றன[9].

**(iii) மகிந்தன் IV (கி.பி. 956 – 972) :**

இவன் கலிங்கருடன் திருமணத் தொடர்பு கொண்ட இலங்கை மன்னனாவான். இவன் இரண்டாம் பராந்தக சோழனின் சமகாலத்தவன். கலிங்க இளவரசியைத் தனது பட்டமகிஷியாக்கினான் என மகாவம்ச மூலம் அறியமுடிகிறது[10]. இவளது பெயர் சம்கா என்பதாகும்.

**(iv) விஜயபாகு I (கி.பி. 1055 – 1110) :**

இவன் சோழர்களுடன் போராடி நாட்டை மீட்டவன். இவனது இரண்டாவது பட்ட மகிஷி திரிலோகசுந்தரி என்னும் கலிங்க இளவரசி ஆவாள் (முதலாவது மனைவி சோழரால் கைது செய்யப்பட்ட, அயோத்தி ஜகத்பாலனுடைய மகள் லீலாவது என்பவள்). இவளது பாட்டியும் ஒரு கலிங்க இளவரசி என்றே அறியப்படுகிறது. இக்கலிங்கத் தொடர்பு, பின்னர் கலிங்கர் பொலன்னறுவையில் தொடர்ந்து ஆட்சி செய்ய வழிவகுத்தது[11].

**(v) விக்கிரமபாகு (கி.பி. 1116–1137) :**

மேற்படி முதலாம் விஜயபாகுவின் மகனான விக்கிரம பாகு சுந்தரி என்னும் கலிங்க இளவரசியை மணம் செய்தவன்.



விஜயபாகுவின் இரண்டாவது பட்டத்து இராணியாகிய கலிங்கத்து இளவரசிக்குப் பிறந்தவன். இந்துவாக விளங்கிய இவன் முறைப்படி சிங்கள அரசர்களுக்கு நடைபெறும் பட்டாபிஷேகம்கூட நடைபெறாமலே ஆட்சி செய்தான்[12].

**(vi) விஜயபாகு II (கி.பி. 1186–1187) :**

இவன் முதலாம் பராக்கிரம பாகுவின் மருமகன். இவன் கலிங்கத்தில் வளர்ந்தவன். மகா பராக்கிரம பாகுவினால் குறிக்கப்பட்ட வாரிசாக இருந்தபோதும் நாட்டில் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. இவன் ஓராண்டு ஆட்சி முடிவதற்குள், புரட்சிச்சதியில் கொல்லப்பட்டான்[13]. 5-வது மகிந்தனே இவனைக் கொன்றான்.

**(vii) நிசங்கமல்லன் (கி.பி. 1187–1196) :**

விஜயபாகு II 5ம் மகிந்தனால் கொல்லப்பட்டபோது, உபராஜாவான நிசங்கமல்லன் மகிந்தனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். கலிங்க மன்னர்களுள் மிகவும் புகழ் வாய்ந்தவனும், 9 ஆண்டுகள் ஆட்சி செய்த வரலாற்றில் முக்கிய இடம் பெற்றவனுமான இவன் கல்வெட்டுகள் பலவற்றைப் பொறித்தான். இவன் கலிங்கத்திலுள்ள சிங்கபுரத்திலே பிறந்தான்[14]. கலிங்க மன்னன் ஸ்ரீ ஜயகோப மகாராசா, பார்வதி மகாதேவி ஆகியோரே தனது பெற்றோர் எனத் தனது கல்வெட்டுகளில் இவன் குறிப்பிட்டுள்ளான்.

**(viii) விக்கிரமபாகு II (கி.பி. 1196) :**

இவன் நிசங்கமல்லனது தம்பி ஆவான். மூன்று மாத ஆட்சியின்பின் கொல்லப்பட்டான்[15] நிசங்கமல்லனின் சகோதரியின் மகன் சோடகங்க என்பவன் இவனைக் கொலை செய்து தான் மன்னானானான்.

**(ix) சாகசமல்லன் (கி.பி. 1200–1202) :**

இவன் நிசங்கமல்லனது சகோதரன் கலிங்கத்திலிருந்து வந்து இரண்டு ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செய்தவன். தொடர்ந்து பல போட்டிகளும், ஆட்சியாளர்களில் மாற்றங்களும் ஏற்பட்டன. கல்யாணவதி, அணிகங்கன் ஆகியோரின் ஆட்சிக்குப்பின் லீலாவதி மீண்டும் ஆட்சிக்கு வந்தாள். யோகேஸ்வரன் என்ற கலிங்கன் லீலாவதியை ஆட்சியிலிருந்து நீக்கினான். லீலாவதி மீண்டும் ஆட்சி பெற்றபோது பராக்கிரம பாண்டியன் என்பவன் படை எடுத்து வந்து

லீலாவதியைத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். இந்தக் கட்டத்தில்தான் கலிங்கமாகனது பெரும் படையெடுப்பு நிகழ்ந்தது[16]. பராக்கிரம பாண்டியன் மாகோன் படையெடுப்பின்போது கொல்லப்பட்டான்.

## 4. கலிங்க – ஈழத் தொடர்புகள் வலுப்பெற்றதற்கான காரணங்கள்

இவ்வாறு விஜயன் (கி.மு. 543) காலம் முதல் கலிங்கமாகன் காலம்வரை ஏற்பட்ட படை எடுப்புகளினாலும், கலிங்கமாகன் ஆட்சியின்போது வந்து சேர்ந்த பெரும்படைகளினாலும் கலிங்கர் நிரந்தரமாகவே இலங்கையில் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டதை நாம் பார்க்கிறோம். இவர்கள் இலங்கை மக்களுடன் இரண்டறக் கலந்துவிட்டதால், இலங்கையர்களாகவே ஆகிவிட்டனர் எனலாம். பலர் பௌத்தர்களாகவும் மாறியிருக்கலாம். திருமண பந்தங்களினால் ஏற்படும் உறவுகள் இவ்வாறான நிலையை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததே.

தற்போது சிங்கள பௌத்தர்கள் மத்தியில் நிலவும் பெயர்களான நிசங்க, விஜய, மகிந்த, விக்கிரம, திரிலோகசுந்தரி, லீலாவதி, சுந்தரி, கல்யாணவதி என்னும் பெயர்களைப் பார்க்கும்போது மேற்படி கூற்று சரியானதே என்பதை உணரலாம். கலிங்கர்களைப் போலவே, பாண்டியர்களும், சோழர்களும், இலங்கையுடனான படையெடுப்புகள் மூலமும், படை உதவிகள் மூலமும், திருமணங்கள் மூலமும் தொடர்பு கொண்டிருந்தபோதும் மேற்கண்டவாறு இரண்டறக் கலக்கும் நிலை ஏற்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

24,000 படைவீரர்களுடன் வந்த மாகன் 40 வருடங்களுக்கு மேல் நிலையான ஆட்சி செய்துள்ளமையும் இவ்வாறான நிலை தோன்றுவதற்குக் காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும் இலங்கை ஆட்சிபீடத்திலும், குடிகள் மத்தியிலும் இந்த கலிங்கர் செல்வாக்கு மேலோங்கியிருந்ததை நாம் காணமுடிகிறது.

மேற்கூறிய காரணங்களைவிட மேலும் சில சிறப்பான காரணங்கள் கலிங்க, ஈழத் தொடர்பை வலுவடையச் செய்கின்றன. அவை வருமாறு:-

### (i) பௌத்த சமயத் தொடர்புகள் :

கலிங்க நாட்டின் தந்தபுரத்தில் இருந்து புத்தரின் தந்தம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது என்பர். மட்டக்களப்பு மான்மியத்திலும் மேற்படி புத்த தந்தம் கலிங்கத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது பற்றிக் குறிப்பிடப்படுகிறது -



"கலிங்க ஒரிசா தேசத்தை ஆட்சிபுரியும் குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதம புத்தருடைய தந்தத்தை எடுத்துத் தனது கூந்தலுக்குள் மறைத்து வைத்துக்கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் இலங்கை வந்து மணிபுரத்தில் இறங்கி மேகவர்ணனைக் கண்டு கொடுத்தாள். அவன் அவர்களை மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் மண்முனைப் பகுதியில் குடியேறி வாழ்ந்தனர்[17].

- (மட். மான்மியம் - பக்.43)

இஃது மகாவம்சத்தில் இடம்பெறும் ஒரு சம்பவத்தைத் தழுவியது போலுள்ளது. எவ்வாறாயினும் கலிங்கத்துக்கும் இலங்கைக்குமிடையே பௌத்தத் தொடர்புகள் இருந்தன என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

மகாவம்சத்தில் சங்கமித்தை பௌத்த சின்னங்களை இலங்கைக்குக் கொண்டு வந்தாள் என்ற தகவல் இடம்பெறுகிறது[18]. மேலும் அசோகச் சக்கரவர்த்தி கலிங்கத்தை வெற்றி கொண்டபின் பௌத்தத்தைத் தழுவினான். அதைத் தொடர்ந்து பௌத்தபிக்குகள் இலங்கைக்கு வந்தனர் என்ற கதைகளும் ஏற்கனவே நாம் அறிந்தவையே.

### (ii) திருமணத் தொடர்புகள் :

மகா பராக்கிரமபாகுவின் மறைவைத் தொடர்ந்து கலிங்க இலங்கைத் தொடர்புகள் அதிகரிப்பதை நாம் பார்க்கிறோம். திருமணத் தொடர்புகள் இவற்றுள் முக்கியமானவை. மகிந்தன் IV என்பவனே (கி.பி. 956-972) முதன்முதல் கலிங்க நாட்டில் திருமணத் தொடர்பு கொண்டவன். இவனது மனைவி ஒரு கலிங்க இளவரசி. பெயர் சம்கா என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

இதன் பின்னர் விஜயபாகு I (கி.பி. 1055-1110) திருலோக சுந்தரி என்னும் கலிங்க இளவரசியைத் திருமணம் செய்தான்.

இவனுடைய மகன் விக்கிரமபாகு சுந்தரி என்னும் கலிங்க இளவரசியைத் திருமணம் செய்தான்.

### (iii) பிற தொடர்புகள் :

படை எடுப்பு காரணமாகவோ படை உதவி காரணமாகவோ இலங்கைக்கு வந்தவர்களும் இங்கு நிலைபெற்று ஆட்சி செலுத்தினர். அவ்வகையில் நிசங்கமல்லன் (கி.பி. 1187-1196) மிகவும் புகழ்பெற்றவன்.

9 ஆண்டுகள் இவன் ஆட்சி நீடித்தது. இவனது சகோதரனான சாகசமல்லன் (கி.பி. 1200-1202) இரண்டு வருடங்கள் ஆட்சி செய்தாலும் நிலையான ஒரு பெயரைப் பெற்று, பின்னால் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தில் மறைந்தான். கல்யாணவதி (கி.பி. 1202-1208) என்ற பெண்ணரசி ஆறு ஆண்டுகள் ஆட்சி செலுத்தியுள்ளாள். இவ்வாறே, வீரபாகு (நிசங்கமல்லனின் மகன் - 1196), விக்கிரமபாகு II (நிசங்கமல்லனின் சகோதரன் 1196), சோடகங்கள் (நிசங்கமல்லனின் மருமகன் - 1196-1197) குறுகிய காலப்பகுதியில் இலங்கையில் ஆட்சி செலுத்தியுள்ளனர்.

இத்தகைய கலிங்க - இலங்கைத் தொடர்புகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

(i) கி.மு. 543 முதல் கி.பி. 1255 வரை இலங்கையில் கலிங்கத் தொடர்புகள் நீடித்துள்ளன்.

(ii) திருமணத் தொடர்புகள், பௌத்தத் தொடர்புகள், போர்த் தொடர்புகள் மூலம் மேற்படி தொடர்பு வலுப்பெற்றிருந்தது.

(iii) பின்வரும் கலிங்க மன்னர்கள் இலங்கையில் ஆட்சி புரிந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| விஜயன் | - | கி.மு. 543 |
| உக்கிரசிங்கன் | - | கி.பி. 795 |
| IIம் விஜயபாகு | - | கி.பி. 1186-1187 |
| நிஸ்ஸங்கமல்லன் | - | கி.பி. 1187-1196 |
| வீரபாகு (மகன்) | - | கி.பி. 1196 |
| விக்கிரமபாகு II (சகோதரன்) | - | கி.பி. 1196 |
| சோடகங்கன் (மருமகன்) | - | கி.பி. 1196-1197 |
| சாகசமல்லன் (சகோதரன்) | - | கி.பி.1200-1202 |
| கல்யாணவதி | - | கி.பி. 1202-1208 |
| தர்மாசோக | - | கி.பி. 1208 |
| அணிகங்கன் | - | கி.பி. 1209 |
| கலிங்க மாகன் | - | கி.பி. 1215-1255. |

கலிங்கமாகன் பற்றிய விவரங்களை அடுத்த அத்தியாயத்தில் விரிவாகப் பார்க்கலாம்.



## அடிக்குறிப்புகள்


1. Cambridge History of India - Sir J.E. Tennet. pp. 418, 545.
2. History of South India - K.A. Neelakanda Sastri, 1955. Madras pp. 15.
3. Ibid.
4. "ஹர்ஷர்காலத்து வட இந்தியா" - நு.க. மங்கள முருகேசன், சென்னை (1977). pp.78, 79, 80.
5. Ibid.
6. Ibid.
7. (i) Nagadeepa and Buddhist Remains in Jaffna - JRAS. CB. XXVI. No. 70.
   (ii) யாழ்ப்பாண வைபவமாலை - குல. சபாநாதன் பதிப்பு. 1953. பக். 6-7.
8. யாழ்ப்பாண வைபவமாலை - குல. சபாநாதன் பதிப்பு. 1953. கொழும்பு. பக். 13.
9. Ancient Jaffna - Madaliyar S. Rasanayagam. Ch. 7.
10. Mahavamsa - Translation W. Giger. Ch. LIV. pp. 179. Notes 10.
11. Culavamsa - Tranlsation W. Giger. 1953. Colombo. Ch. LIX. pp. 200. Notes 23-32.
12. Ibid - Ch. LXXX. pp. 125-126. Notes 1-14.
13. Culavamsa - Translation W. Giger. 1953. Colombo. Ch. LXXX. pp. 125.
14. Ibid - pp. 129. Notes 19-26.
15. Ibid - pp. 129. Notes 28-29.
16. Ibid - pp. 129. Notes 32-33.
17. "மட். மான்மியம்" - பதிப்பு F.X.C. நடராசா. 1952. பக்.43.
18. Mahavamsa - Translation W. Giger. Colombo. 1950. XVIII. 123, (13-16).

# IV மாகோன் வருகை

## 1. மாகோனின் பூர்வீகம்

காலிங்க தேசத்தைச் சேர்ந்த காலிங்க விஜயபாகு என்பவன் 24000 வீரர்களைக் கொண்ட பெரும்படையுடன் இலங்கை மீது படை எடுத்து வந்ததாக 'பூஜாவலிய' கூறுகிறது. இலங்கை வரலாறு கூறும் நூலாகிய சூளவம்சத்திலே காலிங்க மாகன் படையெடுப்புப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்றே நிக்காய சங்கிரஹய, ராஜாவலிய போன்ற ஏனைய சிங்கள வரலாற்று நூல்களிலும், தமிழ் நூல்களிலும், மாகோன் படையெடுப்புப் பற்றிக் கூறப்படுகிறது. "மட்டக்களப்பு மான்மியம்"த்திலும் சில குறிப்புகள் உள்ளன.[1]

ஆனால் எந்த நூலிலுமே இவனது பெற்றோர் யார், இவனது பூர்வீகம் என்ன என்பன போன்ற தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் "மட்டக்களப்பு மான்மிய"த்தில் மட்டும், இவன் கலிங்க மன்னன் மனுவரதனின் மூன்றாவது புத்திரன் எனக் கூறப்பட்டுள்ளது.

"மட்டக்களப்பு மான்மியத்"திலே, மனுவரதனின் சகோதரி மதிசுந்தரி எனவும், இவளது மகள் அதிமதியை கலிங்கமாகனுக்கு மணம் செய்து வைத்தனர் எனவும் கூறப்படுகிறது. அதிமதி வயிற்றிலே நான்கு புத்திரர் பிறந்தனர். அவர்கள் வரதகுணன், பரதசுந்தரன், இராசசந்திரன், மாருதசேனன் என அழைக்கப்பட்டனர். மாருதசேனன் தோப்பாவையை ஆட்சி செய்தான். அவன் மகனே எதிர்மன்ன சிங்கன் எனவும் "மட்டக்களப்பு மான்மியத்"திலே கூறப்படுகிறது (பக். 54-57). இதற்கு வேறு வரலாற்று ஆதாரங்கள் எதுவுமில்லை.

டாக்டர் பரணவிதான, மாகோன் இந்தியாவில் உள்ள கலிங்க நாட்டிலிருந்து வரவில்லை. மலேசியாவிலுள்ள ஸ்ரீ விஜயத்தில் இருந்து வந்தவன் எனக் குறிப்பிடுகிறார். தனது இறுதிக்காலத்தில் வீர பாண்டியனால் கொல்லப்பட்டவன் மாகோனே எனவும் இவனுடைய



மகனே சாவகமைந்தன் என அழைக்கப்பட்ட சந்திரபானு எனவும் குறிப்பிடுகிறார்.[2] இது முழுக்க முழுக்கத் தவறான கருத்தாகும்.

மாகன் கலிங்க நாட்டிலிருந்து வந்தவன் என்பது சந்தேகத்துக்கிடமின்றி நிறுவப்பட்டுள்ளது. இவன் வீரசைவத்தைச் சேர்ந்தவன். மாகனது (இலங்கை) ஆட்சிக்காலத்தில் கிழக்கிலங்கையில் வீரசைவம் செழித்தோங்கி இருந்தது. அது இன்றுவரை தொடர்ந்து நிலைத்துள்ளது. சைவக்கோயில்களாக இன்றும் காணப்படும் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், தான்தோன்றீஸ்வரம் போன்ற ஆலயங்கள் மாகோனால் திருப்பணி செய்யப்பட்ட திருத்தலங்களாகும்.

மாகோனின் சமயம் பற்றிக் குறிப்பிடும்போது பூஜாவலிய, மாகோன் போலிச் சமயத்தை (சைவசமயத்தை) ஏற்றுக்கொள்ள வைத்தான் எனக்கூறும்.[3] மேலும் அவன் நான்கு சாதியினரைக் குழப்பினான் (பிரம்ம, க்ஷத்திரிய, வைஷிய, சூத்திர). சாதிக் கட்டுப்பாட்டைத் தகர்த்தான் எனவும் அந்நூல் குறிப்பிடுகிறது. மாகோன் சைவ சமயத்தவன் என்பதற்கு ஆதாரமாக மாகோனும், அவனது உபராஜனாகிய குளக்கோட்டனும் திருப்பணி செய்த கோயில்களில் இன்றும் வீரசைவத்தைச் சேர்ந்த சங்கமர்களே பூசை செய்கின்றனர். இவர்கள் லிங்கதாரிகள். அதாவது தமது கழுத்து மாலையில் லிங்கத்தை பதக்கமாகக் கொண்டவர்கள்.

இக்காலப்பகுதியில், இந்தியாவில் கலிங்கப் பிரதேசங்களில் வீரசைவம் செழிப்புற்றிருந்தது. எனவே மாகன் கலிங்க நாட்டிலிருந்து வந்தவன்; வீரசைவ சமயத்தைச் சேர்ந்தவன் என்பது புலனாகின்றது.

ஆனால் மாகனது படைகளில், கேரள, பாண்டிய, தமிழ் வீரர்கள் இருந்தார்கள் என்பதை மகாவம்சம் முதலிய சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. எனவே மாகோன் இனவெறி கொண்டவன் அல்ல என்பதை இது காட்டுகிறது எனலாம்.

## 2. மாகோனின் ஈழப் படையெடுப்பு

கலிங்க மாகன் ஈழத்தின் மீது 24,000 வீரர்களுடன் படையெடுக்க வேண்டிய காரணம் என்ன என்பது தெளிவாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஏற்கனவே நாம் கூறியது போல் இலங்கையில் உள்ள கலிங்க வம்சத்து மக்களை சோழர்களும்

சிங்களவர்களும் சேர்ந்து துன்புறுத்தினார்கள் என்றும் அவர்களை அடக்கவே மாகன் அவ்வாறு படையெடுத்தான் என்றும் அறியமுடிகிறது. இதற்கு ஆதாரமாக மாகன் மேற்படி படையெடுப்புக்குப் பின் இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அமைகின்றன.

சோழர்களால் கலிங்கர்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தலைக் கோடிகாட்டும் வகையில், மட்டக்களப்பு மான்மியத்தில் இடம்பெறும் ஒரு குறிப்பு அமைகிறது. அதாவது மட்டக்களப்பில் ஆட்சி செய்த மன்னன் சுகதிரன், சோழர்களால் தனக்கு ஏற்படும் துன்பங்களைக் குறித்து உதவி கோரி, கலிங்க மன்னனுக்குத் தூது அனுப்ப, அவன் தனது மூன்றாவது புத்திரனான மாகோனைப் பெரும்படையுடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தான் என்பது அக்குறிப்பு. (மட்.மான். பக்:54)[4] அவ்விவரம் வருமாறு:-

"மட்டக்களப்பில் கலிங்க மன்னனான சுகதிரன் ஆட்சி செய்த போது தினசிங்கன் என்பவன் கலிங்க, வங்க ஆலயங்களை இடித்து அழித்துவந்தான். சுகதிரன் கலிங்க மன்னன் மனுவரதனுக்குச் செய்தியனுப்பினான். மனுவரதன் தனது மூன்றாவது புத்திரனான மாகனை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். மாகோன் 2000 படைவீரர்களுடன் மணிபுரத்தில் (யாழ்ப்பாணம்) இறங்கி, நாகர்குல அரசனைக் கண்டு விவரம் அறிந்து, மட்டக்களப்புக்கு வந்து பகைவரை ஒழித்து சுகதிரனுக்குப் பட்டம் சூட்டினான். தோப்பாவையை (பொலன்னறுவை) கைப்பற்றி அணிகங்களை வாளுக்கிரையாக்கி, தோப்பாவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான்.

மட். மான்மியத்தின் குறிப்பையும் மாகோன் படையெடுப்புக்குப் பின் நடைபெற்ற சம்பவங்களையும் இணைத்துப் பார்க்கும்போது, ஒரு உண்மை புலனாகின்றது. அதாவது இலங்கையில் உள்ள கலிங்க மக்கள் மிக நீண்டகாலமாகவே சோழர்களாலும், சிங்களவர்களாலும் துன்புறுத்தப்பட்டிருக்க வேண்டும். மட்டக்களப்பு மன்னன் சுகதிரன் விடுத்த வேண்டுகோளைப் போல வேறு கோரிக்கைகளும் கலிங்க நாட்டுக்குச் சென்றிருக்கவேண்டும். எனவே இலங்கையில் பரவலாகவும் குறிப்பாகப் பொலன்னறுவையில், செறிந்தும் வாழ்ந்த கலிங்கர்களுக்கு உதவும் பொருட்டு மாகோன் பலமான ஆயத்தங்களுடன், கலிங்கத்திலிருந்து படையெடுத்து வந்திருக்கலாம்.



சிங்கள வரலாற்று நூல்களான சூளவம்சம், ராஜாவலிய, பூஜாவலிய, நிகாயசங்கிரஹய முதலியவற்றில் மாகோனின் படைபலம் பற்றியும் அவனது படையெடுப்பின் போது நடந்த அட்டூழியங்கள் பற்றியும் விஸ்தாரமாகக் கூறப்படுகின்றன.

இவற்றைத் துருவி ஆராய்ந்த, டாக்டர் பரணவிதான, லியனகமகே, வில்லியம் கெய்கர், C.W. நிக்கலஸ் போன்றவர்கள் தமது விமர்சனக் குறிப்புகளையும் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விமர்சனங்களில் மாகோனின் படைவீரர்கள் செய்ததாகச் சொல்லப்படும் அட்டூழியங்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன என்ற கருத்துத் தொனிக்கிறது.

அமரதாச லியனகமகே என்பவர் இவ்விடயம் பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார். அவரது ஆய்வுக்குறிப்புகள் "பொலன்னறுவையின் வீழ்ச்சியும் தம்பதேனியாவின் எழுச்சியும்" என்ற அவரது நூலில் விவரமாக இடம்பெற்றுள்ளன[5] டாக்டர் பரணவிதானவின் ஆய்வுக்குறிப்புகள் அவரது "இலங்கைச் சரித்திரம்" என்ற நூலில் "தம்பதேனிய வம்சம்" என்ற அத்தியாயத்தில் இடம்பெறுகின்றன[6].

## 3. சிங்கள, பௌத்த வரலாற்று நூல்கள் கூறுவது

நாம் குறிப்பிட்ட சிங்கள, பௌத்த நூல்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே மாகோன் படைகளின் அட்டூழியங்கள் பற்றிக் கூறுகின்றன. எனவே அவற்றுள் ஒன்றான சூளவம்சம் தரும் கருத்துகளை சுருக்கமாகப் பார்ப்போம்.

### (1) சூளவம்சம் கூறுவது :

கலிங்க நாட்டிலிருந்து மாகன் 24000 படை வீரர்களுடன் படை எடுத்து வந்தான். இவனது படையில் கேரள, தமிழ் வீரர்கள் இருந்தனர். மாகனும் அவனுடைய தோழனான ஜயபாகுவும் ராஜரட்டையில் பல இடங்களில் படைகளை நிறுவியிருந்தனர்.[7] (இவ்விடங்கள் ஏற்கனவே எம்மால் குறிப்பிடப்பட்டுள்ளன).

மாகன் யாழ்ப்பாணத்தில் படைகளுடன் வந்திறங்கி தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டதும் பொலன்னறுவையைத் தனது தலைநகராக்கினான். மாகனது படைவீரர்கள் அப்போது பொலன்னறுவையில் ஆட்சிபுரிந்த பராக்கிரம பாண்டியனைச்

சிறைபிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி அவனது செல்வங்களைக் கொள்ளையடித்தனர் என்று சொல்லப்படுகிறது. (இவை மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகவும் இருக்கலாம்).

சூளவம்சம் மேலும் கூறுவது, மாகனுடன் வந்த படைத்தலைவர்கள், மானாபரணின் தலைமையில், மாகோனை இலங்கையின் மன்னனாக முடிசூட்டினர்.[8] (சூளவம்சம் LXXX 61-73) இந்த மானாபரணன் பற்றி இதற்குப் பின் வேறு இடங்களில் குறிப்பிடப்படவில்லை. (இது பற்றிப் பின்னர் ஆராயப்படும்).

இவனைவிட மற்றொரு தமிழ் அரசன் ஜயபாகு என்பவன் மாகனுடன் இணைந்து ஆட்சி செய்ததாக, சூளவம்சம் குறிப்பிடுகிறது. ஆனால் மாகோனின் படையெடுப்பு பற்றிய குறிப்புகளில் இவனது பெயர் காணப்படவில்லை.

ஆனால் இவ்விருவரும், இணைந்து விகாரைகளை இடித்தும் பௌத்தர்களைக் கொடுமை செய்தும் துன்புறுத்தியதாக சூளவம்சம் மேலும் கூறுகிறது. இவற்றை மாகனின் படைவீரர்கள் செய்ததாக அந்நூல் குறிப்பிடுகிறது.

மாகோனின் படைவீரர்கள் செய்த கொடுமைகளைச் சூளவம்சம் பின்வருமாறு குறிப்பிடுகிறது[9] (சூளவம்சம் LXXX 61-69).

"பொய்யான சமயத்தை உடைய ஒருவன் (மாகன்) இலங்கையில் வந்திறங்கினான். இவன் காட்டுத்தீ பற்றைகளை அழிப்பதுபோல் நல்லவற்றை அழித்தான். எரிதழல் போன்ற மாகனின் தீக்கங்குகளான படைவீரர்கள் பல அட்டூழியங்களைப் புரிந்தனர். "நாங்கள் கேரள வீரர்கள்" என்று கூறிக்கொண்டு மக்களின் ஆடை ஆபரணங்களைப் பறித்தனர். மக்களின் கை, கால்களை வெட்டினர். குடும்பங்கள் காலம் காலமாகக் கட்டிக் காத்து வந்த நல்லொழுக்கத்தைக் கெடுத்தனர், வீடுவாசல்களை அழித்தனர்; ஆடுமாடுகளைக் கவர்ந்து சென்றனர். செல்வர்களைச் சித்திரவதை செய்து அவர்களது செல்வங்களைக் கொள்ளையடித்தனர், பல சைத்தியங்களையும் விகாரைகளையும் அழித்தனர்; பிக்குகளைத் துன்புறுத்தினர், நூல்களைக் கிழித்தெறிந்தனர், ரத்னாவளி சைத்திய போன்ற புகழ்பெற்ற சைத்தியங்களை அழித்தனர். இதனால் பல பிக்குகள் இந்தியாவுக்கு ஓடினர்."



இவ்வாறு இன்னும் பல கொடுமைகள் சூளவம்சத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. இவற்றை மொழி பெயர்த்த கெய்கர். இவை மிகைப்படுத்தப்பட்ட கற்பனையாக, கவிதை அணியாக (அலங்காரம்) இருக்கலாம் எனக் கருதுகிறார். (சூளவம்சம் மொழிபெயர்ப்பு அத்தி. II; பக்:132)

அவ்வாறே இதுபற்றிய விரிவான ஆராய்ச்சி செய்து எழுதி அமரதாச லியனகமகே "இவற்றை நம்புவதென்றால் இவை பெரும் கொடுமைகள்தான்" எனச் சந்தேகம் தெரிவிக்கிறார். (பொலன்னறுவை வீழ்ச்சியும், தம்பதேனிய எழுச்சியும்; பக். 113, 115, 116).[10]

செல்வந்தர்களையும், செல்வாக்குள்ளவர்களையும்தான் மாகன் இம்சித்தான் என டாக்டர் பரணவிதான கூறுகிறார். லியனகமகே இக்கூற்றை முற்றாக ஏற்றுக் கொள்ளவில்லை.

எவ்வாறாயினும் ஒரு படையெடுப்பின்போது ஏற்படக் கூடிய அழிவுகள் எல்லாக் காலத்திலும், எல்லா நாடுகளிலும் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம். ஆனால் அதன்பின் ஏற்படக்கூடிய அமைதியான ஆட்சியைக்கொண்டு, உண்மை நிலையினை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

### 4. மாகோனுக்கெதிரான நடவடிக்கைகள்

மாகோன் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு ஈழமெங்கும் தன் படைகளை நிறுவி, தனது ஆட்சியைப் பலப்படுத்தியதனால் சிங்கள மன்னர்கள் தம்பதேனியாவுக்கு இடம்பெயர நேர்ந்தது. பல வருடங்களுக்குப் பின்னர் அவர்கள் மாகோனை எதிர்க்கத் துணிந்தனர்.

மாகோனுக்கு எதிராகச் சிங்கள மன்னர்கள் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் பற்றி டாக்டர் பரணவிதான பின்வருமாறு கூறுகிறார்:-

"இராஜரட்டை ராஜ்யம் மாகோனதும், அவனது மலையாள வீரர்களதும் கோரப்பிடியில் சிக்கித் தவித்தபோது, ரோஹனரட்டை, மாயரட்டையைச் சேர்ந்த சில சிங்களத் தலைவர்கள் அவனது தாக்கம் ஏற்படாத வகையில் ஒருவாறு தாக்குப் பிடித்துக் கொண்டிருந்தனர். ரோஹன இளவரசன் புவனேகபாகு 'கோவிந்தமலை'யிலிருந்து மாகோனின் ஊடுருவலைத் தடுத்தான். எனவே மணிமேகலா

(மினிப்பே) பிரதேசத்தைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் மாகனின் கொடூரங்களிலிருந்து தப்பிப்பிழைத்தன. இதற்குக் காரணம் "சம்கா" என்று அழைக்கப்பட்ட தளபதியின் வீரபராக்கிரமமே ஆகும். (சூளவம்சம் கூற்று) இவனே மினிப்பே கல்வெட்டில் குறிப்பிடப்படும் "பாமா" எனத் தோன்றுகிறது."[11]

"இத்தளபதி தனது தலைமைப் பீடத்தை "கங்காதோணி" (கம்தெனி - தம்பதெனி) என்னும் இடத்தில் வைத்திருந்தான். தற்போது "யாப்பாகுவ" என்றழைக்கப்படும் மலைப் பிரதேசம் மற்றொரு தலைவனான "சுபா" என்பவனது பாதுகாப்பரணாகும். இவன் "வெசவனா" (குவேரா) என்ற பெயருடன் அங்கு ஆட்சி செய்தான்; இவன் தென்பக்கத்தினூடாக மாகனின் தாக்குதல்கள் ஏற்படாதவாறு கண்காணித்தான்" (History of Ceylon, Chapter I, pp. 613)[12].

இக்கூற்றுகளில் இருந்து தெரிவதென்ன?

மலைப்பகுதிகளில் தஞ்சம் புகுந்த இத்தலைவர்கள், மாகோனின் தாக்குதல்கள் ஏற்படாதவாறு தத்தம் பகுதிகளைக் காப்பாற்றவே பெரும் பிரயத்தனம் மேற்கொண்டிருந்தனர். மாகோன் மீது படை எடுக்க எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. இக்காலகட்டத்தில் ரோஹணரட்டை, மாயரட்டை ராச்சியங்களின் தலைவர்கள் பலம் குன்றியிருந்தனர். அவர்களிடையே ஒற்றுமையும் குலைந்திருந்தது எனலாம்.

இத்தொடர்பில், டாக்டர் பரணவிதான மேலும் கூறுவது கவனத்துக்குரியது. அவர் கூறுகிறார்:-[13]

"இத்தலைவர்கள் தமது பொதுப் பகைவனான மாகோனுக்கு எதிராக ஒரு போர் அணியை உருவாக்கவில்லை. அவனைத் துரத்துவதற்கு ஒன்றிணைந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. எந்த ஒரு தலைவரும் இவனுக்கெதிரான எதிர்ப்பு இயக்கங்களைத் தோற்றுவித்ததாகவும் தெரியவில்லை. ஆனால் தம்பதேனியாவில் நிலைகொண்ட விஜயபாகு - III என்னும் இளவரசன் மாகோனை எதிர்ப்பதில் ஓரளவு வெற்றி கண்டான். ஆனால் பொலன்னறுவையில் இவனுக்கு எவ்வித உரிமையும் இருக்கவில்லை. எனவே இவன் தனது சாதனைகள் மூலமே ஒரு மதிப்பைப் பெறவேண்டியிருந்தது."

"இவன் ஒரு வன்னித் தலைவனாக வாழ்க்கையை ஆரம்பித்து, நீண்டகாலம் தலைமறைவாகவே வாழ்ந்து வந்துள்ளான். தன்னோடொத்த மலைப்பகுதித் தலைவர்களைத் தன்னோடு சேர்த்தும், தன் அதிகாரத்தை ஏற்காதவர்களை, வீழ்த்தியும், காலக்கிரமத்தில் ஓரளவு சிங்கள வீரர்களைத் திரட்டியும் மாகனைத் தாக்கினான். மாயரட்டை ராச்சியத்தில் முக்கியமான கேந்திர நிலையங்களில் மட்டுமல்லாது, பொலன்னறுவைவரை அவன் தாக்குதல் விரிந்தது. இறுதியாக மாயரட்டையை எதிரியான மாகோனின் பிடியிலிருந்து விடுவிப்பதில் அவன் வெற்றி கண்டான். அதன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தான் இறப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்புவரை ஆட்சி செலுத்தினான்."



"விஜயபாகுவின் இரு புதல்வர்களில் மூத்தவனான பராக்கிரமபாகு-II அவனுக்குப் பின் அரசு கட்டில் ஏறினான். இளையவனான புவனேகபாகு இளவரசுப் பட்டம் கட்டப்பட்டு குருநாகலையில் ஆட்சி செய்தான். பராக்கிரமபாகு-II கி.பி.1236-ல் ஆட்சிப்பீடம் ஏறினான். தந்தையான விஜயபாகு III விட்ட இடத்திலிருந்து அவனது மகனான பராக்கிரமபாகு II மாகோனுக்கெதிரான போராட்டத்தைத் தொடர்ந்தான்." (History of Ceylon பக்: 615-616).

இச்சம்பவங்கள் பின்னால் விரிவாக இடம்பெறுகின்றன.

இக்குறிப்புகளிலிருந்து மாகோன், தன்னேரில்லாத் தலைவனாக பெரும் சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தினான் என்பதும், அவனுக்கெதிராக சிங்களத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட உதிரியான நடவடிக்கைகள் பிசுபிசுத்துப் போயின என்பதும் தெரிய வருகிறது.

## 5. தம்பதேனிய வம்சம்

மாகோன் பெரும்படையுடன் பொலன்னறுவைக்கு வந்தபோது எவருமே அவனுடைய தாக்குதல்களுக்கு எதிர் நிற்க முடியவில்லை என்பது புலனாகின்றது. அவனுடைய படைகளின் முன்னேற்றம் தடைப்பட்டதாக எந்த ஒரு குறிப்பும் சிங்கள வரலாற்று ஆவணங்களில் இல்லை. எனவே மாகோன் மிகச் சுலபமாகப் பொலன்னறுவையைக் கைப்பற்றினான் என்பது தெளிவு.

அப்போது பொலன்னறுவையில் ஆட்சியிலிருந்த பராக்கிரம பாண்டியனை மிகச் சுலபமாக வீழ்த்தி, பொலன்னறுவையைத் தனது இராசதானியாக்கினான் என்பதும் வெளிப்படை. இதை

வலியுறுத்துவதை போல், மாகோனின் படைகள் பராக்கிரம பாண்டியனைச் சிறைப்பிடித்து அவன் கண்களைத் தோண்டின என சூளவம்சம் கூறுகின்றது.

மாகோன் பொலன்னறுவையில் தனது ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொண்டபின், ஏனைய சிங்களப் பிரதேசங்களுக்கும் தன் ஆட்சியை விரிவடையச் செய்திருக்கவேண்டும். அதன் காரணமாகவே, சிங்கள அரசர்கள் தம்பதேனியாவுக்கு இடம் பெயர்ந்திருக்க வேண்டும்.

மாகன் பொலன்னறுவைக்கு வந்த ஆண்டு கி.பி. 1215. ஆனால் கி.பி. 1236 வரை வலுவான எதிர்ப்பு எதுவும் அவனுக்கு இருக்கவில்லை. ஆக இந்த 21 ஆண்டுகள், தம்பதேனியாவின் சிற்றரசர்கள், செயலிழந்த நிலையில் இருந்திருக்கின்றனர். விஜயபாகு IIIவின் தோற்றத்துக்குப் பின்புதான் மாகனுக்கெதிரான எதிர்ப்புத் துளிர்விடுகிறது.

விஜயபாகு IIIவுக்குப்பின் அவனது புதல்வர்களான பராக்கிரமபாகு-II, புவனேகபாகு ஆகியோரது காலத்திலேயே இந்த எதிர்ப்பு வலுவடைகின்றது. இவர்கள் இருவரும் மேற்கொண்ட முயற்சிகள் பற்றிச் சிறிது பார்ப்போம்.

தம்பதேனிய வம்சத்தில் இரண்டாம் பராக்கிரமபாகுவின் ஆட்சி குறிப்பிடத்தக்கது. இவன் தன் இளமைக் காலத்தில் பிக்குகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தான் எனவும், சங்கரக்கித்த "மகாசாமி" தலைமையில் இப்பிக்குகளின் சங்கம் இருந்தது எனவும் சூளவம்சம் குறிப்பிடுகிறது.

இவரிடமே புத்ததந்தமும், பிட்சாபாத்திரம் முதலியன ஒப்படைக்கப்பட்டிருந்தன. இளவரசரான பராக்கிரமபாகு-IIவின் ஆன்மீகப் பயிற்சிக்கும் இவரே பொறுப்பாக இருந்தார். பிற்காலத்தில் புத்ததந்தம், பிட்சாபாத்திரம் முதலிய புனித சின்னங்கள் இவன் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன. இவனது புலமை காரணமாக சிங்கள பௌத்த வரலாற்று ஆவணங்கள் இவனை "பண்டித பராக்கிரமபாகு" என வர்ணிக்கின்றன. இன்னும் மிகைப்படுத்தப்பட்ட பல பட்டங்களும் இவனுக்குண்டு (சூளவம்சம் LXXXII :3)[14].

தனது தந்தையான IIIம் விஜயபாகுவின் மரணத்தின்பின் IIம் பராக்கிரமபாகு ஆட்சிபீடம் ஏறினான். (கி.பி. 1236) தம்பதேனிய



இராசதானியில் இவனுக்கு முடிசூட்டப்பட்டது. இவன் முடிசூடியபோது ராஜரட்டை தொடர்ந்து மாகோன் பிடியிலேயே இருந்தது. அது மாகோனின் 21-வது ஆட்சியாண்டு ஆகும். (இதனாலேயே 40 வருடத்துக்கு மேற்பட்ட மாகனின் ஆட்சியை சூளவம்சம் 21 வருட ஆட்சி எனத் தவறாகக் குறிப்பிடுகிறது என்கிறார் லியனகமகே.)

எனவே IIம் பராக்கிரமபாகுவின் முதல் கடமை மாகோனைப் பொலன்னறுவையில் இருந்து துரத்துவதாக இருந்தது. அப்போது மாகனிடமிருந்த படைபலத்தின் காரணமாக இது அவ்வளவு சுலபமான வேலையாக இருக்கவில்லை. இதற்குப் பரந்த அளவில் போருக்குரிய திட்டமிட்ட முன் ஆயத்தங்கள் செய்ய வேண்டியிருந்தது.

எனவே IIம் பராக்கிரமபாகு தனது மகனான IVம் விஜயபாகுவுக்கு இளவரசுப் பட்டம் கட்டி அவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தான். அவன் மாகோனை எதிர்ப்பதற்கான முஸ்தீபுகளில் இறங்கினான்.

## 6. சிங்கள மன்னர்களின் கூட்டு முயற்சி

இவ்விடத்தில், மாகோனின் படைபலத்தையறிந்த IIம் பராக்கிரமபாகுவின் தந்தை IIIம் விஜயபாகு தனது மகனுக்கு வழங்கிய புத்திமதி பற்றி பூஜாவலிய கூறுவதாகச் சொல்லப் பட்டுள்ளவற்றையும் குறிப்பிடுதல் தகும். அது வருமாறு:

"... தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையாக வாழவேண்டும். தமிழர்கள் மிகவும் பலம் பொருந்தியவர்களாகையால் அவர்களுடன் யுத்தத்தில் இறங்கக்கூடாது. எக்காரணம் கொண்டும் மாகன் ஆட்சி எல்லையில் உள்ள சல்கல்கந்தை மலையைத் தாண்ட முயற்சிக்கக்கூடாது..." இவ்வாறு பூஜாவலிய கூறுவதாக லியனகமகே குறிப்பிட்டுள்ளார்.[15]

எனினும் IIம் பராக்கிரமபாகு மாகோனுக்கு எதிரான யுத்த முஸ்தீபுகளில் மிகவும் தீவிரமாக இறங்கினான். அவன் மேற்கொண்ட போர்த் தந்திரங்கள் பற்றி எவ்வித விவரங்களும் இல்லாதபோதும், அவனது சில முயற்சிகள் பற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளன. அவை வருமாறு :-

(i) முதலில் வன்னித் தலைவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். இதன் மூலம் மாகோனுக்கு அவர்கள் ஆதரவு கிடைப்பது தடைப்படும் என்பது அவன் எண்ணமாகும்.

(ii) மாகோனை அடக்குவதில் பராக்கிரமபாகுவுக்கு அவன் தம்பி புவனேகபாகு பெரிதும் உதவினான். அவனுடைய சாமர்த்தியம் எதிரிகளை அடக்குவதில் உறுதுணையாக அமைந்தது. எதிரிகளைப் பணியவைப்பதன் மூலம் இவ்வெற்றி கிடைக்கவில்லை. அவர்களைத் தமது பக்கம் ஈர்த்தெடுத்ததன் மூலமே இது சித்தித்தது.

(iii) மாகோனுக்கெதிரான போர் நடவடிக்கைகளில், பராக்கிரம பாகு, ஏனைய சிங்களத் தலைவர்களது உதவியையும் ஒத்துழைப்பையும் நாடினான் என அறியமுடிகிறது.

பராக்கிரமபாகுவின் காலத்தில் மாகன் தோற்கடிக்கப்பட்டான் என சிங்கள வரலாற்று நூல்கள் கூறியபோதும், அத்தோல்வி பராக்கிரம பாகுவினால் ஏற்படுத்தப்பட்டதல்ல. பராக்கிரமபாகுவின் 11-வது ஆட்சியாண்டான கி.பி. 1247-ல் (1236+11) இது நடந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மாகோன் ஆட்சி 1255 வரை நீடித்துள்ளது. ஆகவே பராக்கிரமபாகு - (II)வின் போர் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்பது தெளிவாகின்றது. இப்போரில் தோற்கடிக்கப் பட்டவன் மாகோன் அல்ல. சாவகனான சந்திரபானு என்பவன். இதுபற்றிப் பின்னர் ஆராயப்படும்.

பராக்கிரமபாகுவின் போர் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்பதற்கான சில சான்றுகளை நாம் கவனத்திற்கொள்ளவேண்டும். அவை வருமாறு:-

(i) கி.பி. 1247-ல் மாகோன் தோற்கடிக்கப்பட்டிருந்தால் 1255 வரை ஏன் பராக்கிரமபாகு பொலன்னறுவைக்கு வரவில்லை? (1255 வரை மாகோன் ஆட்சி பொலன்னறுவையில் நீடித்துள்ளது). எனவே கி.பி. 1255 வரை பராக்கிரமபாகுவினால் மாகோனை வெளியேற்ற முடியவில்லை.

(ii) பராக்கிரமபாகுவின் காலத்தில் சந்திரபானுவின் படையெடுப்பின் போதும், மாகோன் பொலன்னறுவையிலேயே இருந்திருக்கிறான். முதல் படையெடுப்பில் (1247) சந்திரபானு வெற்றிபெற முடியவில்லை.

(iii) பின்னால் ஏற்பட்ட பாண்டியர் படையெடுப்பின் போதும், மாகோன் பொலன்னறுவையில் இருந்திருக்கிறான். பாண்டியர் மேற்கொண்ட நான்கு படையெடுப்புகளில் முதல் இரண்டு



படையெடுப்புகள் மாகோன் காலத்தில் நடைபெற்றுள்ளன. (முழு விவரம் பின்னால் வரும் அத்தியாயங்களில் இடம்பெறுகின்றன.)

(iv) பராக்கிரமபாகுவினால் மாகோனை வெற்றிகொள்ள முடியாத காரணத்தாலேயே, பாண்டியர் உதவி கோரப் பட்டிருக்க வேண்டும். இதுவும் பின்னால் ஆராயப்படுகின்றது.

(v) பராக்கிரமபாகு பெரும்படையுடன் மாகோனை எதிர்த்தபோது, அவன் படைகள் திக்குத்திசை தெரியாமல் சிதறின என்று பூஜாவலிய கூறுவது நம்பமுடியாத கட்டுக்கதை என டாக்டர் பரணவிதான, அமரதாச லியனகமகே, கெய்கர் முதலிய எல்லாருமே தமது ஆய்வுரைகளில் தெரிவித்துள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. மட்டக்களப்பு மான்மியம், F.X.C. நடராசா பதிப்பு, மட்டக்களப்பு 1952, பக் : 54-57.
2. Ceylon and Malaysia, Dr. S. Paranavithana, Colombo 1966, pp. 91.
3. Nikaya Sangrahaya, Ed. D.M. de. Z. Wickrama Singhe, Colombo 1890, C.M. Fernando, Revised Edition, D.F. Gunawardane, Colombo 1908, pp. 49.
4. மட்டக்களப்பு மான்மியம், F.X.C. நடராசா பதிப்பு. மட். 1952, பக் : 54-57.
5. The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniya, Amaradhasa Liyanagamage, Colombo 1969. Ch. 4 & 5, (99-159).
6. History of Ceylon, Ed. Prof. H.C. Ray, Colombo 1959, Vol. I, Part II, Ch. I, pp. 613-622.
7. Culawamsa, Translation, W. Geiger, Colombo, 1930, Ch,. LXXX, pp. 145, Notes 26, 29, 49. Ch. LXXXII, pp. 132-133, Notes 61-73,
8. Ibid - Ch. LXXX, pp. 132-133, Notes 71-75.
9. Ibid - Ch. LXXX, pp. 132-133, Notes 61-79.
10. The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniya, Amaradasa Liyanagamage, Colombo 1968, pp. 113-116.
11. History of Ceylon, Vol I, Part II, Dambadeni Dynasty, Dr. S. Paranavithana, pp. 613.
12. Ibid - pp. 613.
13. Ibid - pp. 613 - 622.
14. Culawamsa, Translation, Geiger, Colombo 1930. Ch. LXXXII, Notes 3-4.
15. The Decline Polonnaruwa and the Rise of Dambadeniya, pp. 104.

# V ஈழத்தில் மாகோனின் ஆட்சி

### 1. வட இலங்கை

நாம் ஏற்கனவே கூறியதுபோல் பொலன்னறுவையில் நிலைபெற்றிருந்த சிங்கள அரசு அங்கிருந்து இடம் பெயர்ந்து தம்பதேனியாவுக்குச் செல்ல, மாகோன், பொலன்னறுவையைத் தனது இராசதானியாக்கிக் கொண்டு ஆட்சிபுரிந்தான். பொலன்னறுவை தலைநகராக இருந்தாலும், இலங்கையின் ராஜரட்டை, உறுகுனைரட்டை ஆகிய பிரதேசங்கள் அவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

ராஜரட்டை பிரதேசத்தில் பொலன்னறுவை, அனுராதபுரம், திருகோணமலை, சிலாபம் முதலிய முக்கிய நகரங்கள் இருந்தன. ஆனாலும் மாகோனின் ஆட்சி, இராஜரட்டை தொடக்கம் வட இலங்கைவரை பரவி இருந்தது என்பதை பூஜாவலிய, சூளவம்சம் முதலிய நூல்கள் கூறிகின்றன.[1]

யாழ்ப்பாணத்தை ஆண்ட முதலாவது ஆரியச் சக்கரவர்த்தி மாகோன் என்பர். மாகோனாலும் கலிங்க தொடர்பு உள்ளவர்களாலுமே யாழ்ப்பாண ராச்சியம் தோற்றுவிக்கப்பட்டதென கலாநிதி இந்திரபால கருதுகிறார். அவர் மேலும் கூறுவதாவது: "யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி தோன்றுவதற்குமுன் அங்கு மாகோனின் ஆட்சி இருந்தது. சிங்கை நகர் என்பது, கலிங்க நாட்டில் உள்ள சிங்கபுரம் (சிகபுர) என்பதன் திரிபு. இப்பெயர் மாகோனாலேயே சூட்டப்பட்டது" இவ்வாறு இந்திரபாலா கூறுகிறார்.[2]

ஆனால் எப்போதுமே மாறுபட்ட கருத்தைக் கூறும் பரணவிதான அவர்கள், இப்பெயர் மாலாயா தீபகற்பத்திலிருந்து இலங்கைக்கு வந்ததென வாதிடுகிறார்.[3] சிங்கபுரம் என்னும் பெயர் மாகோன் ஆட்சிக்கு முன்பே இருந்தது என்பது அவர் கருத்து ஆகும்.

மாகோனுடைய ஆட்சி வடபகுதியிலும் நிலைத்து இருந்தது என்பதற்கு பூஜாவலிய சான்று பகர்கிறது.[4] வட இலங்கையில் மாகோனின் படைகள், ஊரான்தோட்டை, வலிகாமம் (காங்கேசன் துறை), தமிழ்பட்டினம் (யாழ்ப்பாணம்), குருண்டி (குருந்தன்குளம்), மனாமத்த (மாந்தை), மன்னார (மன்னார்), புளச்சேரி (பூநகரி), இலுப்பைக்கடவை முதலிய இடங்களில் நிலைபெற்றிருந்தது என பூஜாவலிய கூறுகிறது.

## 2. ராஜரட்டை

முழு ராஜரட்டையுமே மாகோனது ஆட்சியில் இருந்தது என சூளவம்சம்[5] மூலமும் ஏனைய சிங்கள வரலாற்று நூல்கள் மூலம் அறிய முடிகிறது. புலத்திநகர் (பொலன்னறுவை) எனப்பட்ட தோப்பாவையை தலைநகராகக் கொண்டு, இலங்கை முழுவதையும் தன்கீழ் மாகோன் வைத்திருந்தான் என அறிகிறோம். இது மிகைப்பட்ட கூற்றாக இருந்தாலும், இலங்கையின் பெரும்பகுதி அவன் ஆட்சியிலிருந்தது என்பதை இக்கூற்று நிரூபிக்கிறது.

### (i) பொலன்னறுவை ஆட்சி :

புலத்திநகர் (பொலன்னறுவை) மாகோனின் தலைநகர் என்பதை சூளவம்சம் மட்டுமல்லாது மட்டக்களப்பு மான்மியமும் குறிப்பிடுகிறது.

புலத்திநகர், புலத்திபுர, தோப்பாவை என்பன பொலன்னறுவையைக் குறிக்கும் பெயர்கள். இந்நகர் ராஜரட்டையின் தலைநகராக நீண்டகாலம் விளங்கியுள்ளது. இந்நகரில் லீலாவதி ஆட்சி செய்தபோது பராக்கிரம பாண்டியன் இந்நகரைக் கைப்பற்றினான். இப்பாண்டியனின் ஆட்சியின் போதே மாகோன் படையெடுப்பு நிகழ்ந்தது[6]. (சூளவம்சம் பக். 132)

### (ii) அனுராதபுரம் :

மாகோன் பொலன்னறுவையைக் கைப்பற்றிய போது அவனால் இழைக்கப்பட்ட அநீதிகளைக் கூறுமிடத்து (சூளவம்சத்தில்) ரத்னாவளி சைத்திய அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பெயர் அனுராதபுர மகாதூபத்தைக் குறிக்கும் என கெய்கர் கூறுகிறார். எனவே அனுராதபுரத்திலும் மாகோனின் ஆட்சிக்கரம் நீடித்திருந்தது என ஊகிக்க முடிகிறது. அங்கு தமிழர்கள் நீண்டகாலமாக வசித்து வருவதும் இதற்கு ஒரு சான்றாகிறது[7].



### (iii) சிலாபம் முல்லைத்தீவு :

சிலாபம், முல்லைத்தீவு முதலிய பகுதிகளில் மாகோனின் ஆட்சி பரவியிருந்தமைக்கு, கோணேசர் கல்வெட்டு நூலின் இடம்பெறும் பின்வரும் பாடல் சான்று பகர்கிறது[8].

வரவுறு வடக்கு வருகரம் பகமாந்
திரமுறு மேற்குச் சிறந்த முனீசுரத்
தரைபுகழ் தெற்குச் சங்கமக்கண்டி
உரமிகு கிழக்கு உகந்த வங்காளம்...

இக்கல்வெட்டுப் பாடல் குளக்கோட்டன் திருப்பணிகளைக் கூறுகிறது. ஆனாலும் குளக்கோட்டன் மாகோனின் உபராஜனாகவே செயற்பட்டான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

### (iv) முனீஸ்வரம் :

முனீஸ்வரத்தில் மாகோன் மேற்கொண்ட திருப்பணி குடிமுறைமை தொடர்பாகவும் சில பாடல்கள் உள்ளன. சோழதேச குலகுருவான, நீலகண்ட சிற்பாசாரியாரையும், விசாலாட்சி அம்மையாரையும், ஏனைய நிர்வாகிகளையும் அழைத்து வந்து, முனீஸ்வரப் பகுதியில் குடியமர்த்தினான் எனக் கூறப்படுகிறது. சிலாபப் பகுதியில் வன்னியர் குடியமர்த்தப்பட்டது மாகன் காலமாகும்.

### (v) மன்னார் :

மாகனது காவற்படைகள் நிலைகொண்டிருந்த இடங்களில் ஒன்றாக மன்னார் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னார, மன்னாரபட்டின என மகாவம்சம், பூஜாவலிய போன்ற சிங்கள வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மாகன் வடக்கே பின் வாங்கிச் சென்றபோது சந்திரபானுவின் இரண்டாவது படை எடுப்பு இருபகுதியின் ஊடாகவே நடைபெற்றுள்ளது எனவும் அறிய முடிகிறது.

### (vi) திருக்கேதீச்சரம் :

மகாதித்த என மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள திருக்கேதீச்சரத்தில் மாகனது காவற்படைகள் நிலைகொண்டிருந்தன. பண்டைக்காலம் முதல் சிறந்த துறைமுகமாக விளங்கிய இவ்விடம் மிகவும் பழமையான வரலாற்றைக் கொண்ட திருப்பதியாகும். வீரசைவ வழிபாடு நிலவிய இத்தலம் மாதோட்டம் என தேவாரத்தில்

குறிப்பிடப்படுகிறது. இப்பகுதி மாகனால் திருப்பணி செய்யப்பட்ட தலங்களில் ஒன்றாகும்.

### 3. திருகோணமலை

திருகோணமலை (Gonaratha), கொட்டியாரம் (Kothsara), கந்தளாய் (Gangtalawa), பதவியா (Padavia), கட்டுக்குளம் (Kokalagama), குருந்தன்குளம் (Kurundi) முதலிய இடங்களில் இவனுடைய காவற்படைகள் நிலைபெற்றிருந்ததை ஏற்கனவே பார்த்தோம்.

திருகோணமலையில் பல இடங்களில் மாகோன் ஆட்சி நிலைத்து இருந்தமைக்கு இவனது முக்கிய உபராஜனான சோழகங்கன் (குளக்கோட்டன்) வரலாறு சான்று பகர்கிறது. இத்தகைய ஒரு அதிகாரப் பரவலாக்கல் மூலம் மாகோனுடைய ஆட்சிமுறைமை வலுப் பெற்றிருந்தது எனலாம்.

திருகோணமலைப் பிரதேசத்தில் கொக்கிளாய் முதல் வெருகல்வரை இவன் மேற்கொண்ட ஆலயத் திருப்பணிகள், நீர்ப்பாசன முறைகள், வன்னிமை வகுத்தல் முதலிய நற்பணிகள் கோணேசர் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது.

கந்தளாய், பதவிய போன்ற இடங்கள் சோழர் காலம் முதல் தமிழ் மக்கள் நிலைபெற்றிருந்த இடங்களாகும். இந்த இரு இடங்களிலும், குளக்கோட்டன் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆலய புனரமைப்பு வேலைகள், அவ்வாலயங்களுக்கு மானியமாகவும் நிவந்தமாகவும் நெல்வயல்கள் வழங்கப்பட்டமை, நெல் விளைச்சலுக்காகக் கந்தளாய்க் குளத்தைக் கட்டியமை போன்ற விவரங்கள் "குளக்கோட்டன் தரிசனம்" என்னும் நூலில் விரிவாக இடம்பெறுகின்றன.[9]

திருகோணமலையில் உள்ள பழம்பெரும் சைவாலயமான கோணேஸ்வரம், குளக்கோட்டனால் புனரமைக்கப்பட்டது. இங்கு மூன்று கோபுரங்களுடைய ஆலயம் இருந்தது என்பது மகாவம்சத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு நடைபெற்ற திருப்பணிகள் போல், மாகோனின் ஆட்சிக்குட்பட்ட ஏனைய ஆலயங்களிலும் திருப்பணிகள் இடம்பெற்றிருக்கலாம். போதிய சான்றுகள் இன்மையால் அவை பிரசித்தம் பெறவில்லை எனலாம்.



### 4. திருகோணமலைக் கிராமங்கள்

திருகோணமலையைச் சேர்ந்த வேறு சில கிராமங்களும் மாகோன் ஆட்சியில் செழிப்புற்றிருந்தன. அவற்றுள் தம்பல காமம், கந்தளாய், கங்குவேலி, வெருகல் என்பன குறிப்பிடத்தக்கவை.[10]

#### (i) தம்பலகாமம் :

மாகோனின் உபராஜனான குளக்கோட்டன், கோணேசர் கோயிலுக்கு என வகுத்த சட்டதிட்டங்கள், தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் இன்றும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. குளக்கோட்டனால் குடியமர்த்தப்பட்ட தொழும்பாளர்கள் இங்கு தொடர்ந்து பணி செய்வதாகக் கூறுவர். குளக்கோட்டனே அல்லைக்குளம், வெண்டரசன்குளம், கந்தளாய்க் குளம் முதலியவற்றைக் கட்டி வயல்களையும் வழங்கினான் என்பர்.

#### (ii) கந்தளாய் :

கந்தளாய்ப் பகுதியில் தமிழர் குடியேற்றம் செறிந்திருந்தது. இதற்குச் சான்றாகப் பல தொல்லியல் சான்றுகள் உள்ளன. கந்தளாய்க் கல்வெட்டு, பழமோட்டை கல்வெட்டு முதலியன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இப்பகுதியில் ஆதியில் பிராமணர்கள் குடியேறியிருந்ததாகக் கூறுவர்.

#### (iii) கங்குவேலி :

இக்கிராமத்தில் உள்ள அகத்தியர் தாபனம் என்னும் கோயிலின் முன்பாகக் காணப்படும் கல்வெட்டு ஒன்றிலே மாகோனால் வகுக்கப்பட்ட வன்னிமை பற்றிய விவரங்கள் மற்றும் குளக்கோட்டனால் வழங்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிய விவரங்கள் ஆகியன காணப்படுகின்றன.

#### (iv) வெருகல் :

சிந்து நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட குடிமக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் தம்பலகாமம் முதல் வெருகல்வரை குடியேற்றப்பட்டனர். தனியுண்ணாப் பூபால வன்னியனின் தலைமையில் இவர்கள் விவசாயம் செய்தனர். கோயில்களுக்கு நெல் வழங்கினர்

**(v) பிற கிராமங்கள் :**

இவை தவிர, நிலாவெளி, பெரிய குளம், ஈச்சிலம்பற்றை, மல்லிகைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு, திருமங்கலாய், இலங்கைத் துறை, கிளிவெட்டி, சம்பூர், மூதூர் போன்ற கிராமங்களிலும் இவர்கள் குடியமர்ந்திருந்தனர்.

## 5. மாயரட்டை

**(i) கொத்மலை :**

மாகோனின் ஆக்கிரமிப்புக்குப் பயந்து விஜயபாகு (III) கொத்மலை பிரதேசத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த புத்த புனித சின்னங்களை அப்புறப்படுத்தி பெலிகலையில் பிரதிஷ்டை செய்தான் என முன்னர் பார்த்தோம். பின்னர் இவன் தொட்டகேமு, தம்பதேனியா, பெலிகலை, வத்தளை, களனி, அத்தனகலை முதலிய இடங்களை மாகோன் பிடியிலிருந்து மீட்டு, அங்கெல்லாம் பௌத்த ஆலயங்களை அமைத்தான் என டாக்டர் பரணவிதான கூறுகிறார்.[11] எனவே இவ்விடங்களிலும் மாகோனின் ஆட்சி பரந்திருந்தது என்பது பெறப்படுகிறது.

**(ii) வத்தளகம் (வத்தளை) களனி :**

விஜயபாகு (III) வத்தளையில் பிக்குமாருக்காக ஒரு விகாரை கட்டினான் என்றும், தமிழ் போர் வீரர்களால் சேதமாக்கப்பட்ட கல்யாணி (களனி) விகாரையைப் புனரமைத்தான் என்றும் சூளவம்சம் கூறுகின்றது.[12]

இத்தகவல்களிலிருந்து, இங்கெல்லாம் மாகோன் ஆட்சி பரவியிருந்தமையை அறிந்துகொள்ளலாம்.

**(iii) அத்தனகல :**

அத்தனகலையை மாகோன் பிடியிலிருந்து விடுவிப்பது விஜயபாகு (III)வுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது என்பதை அறிய முடிகிறது. பின்னர் ஒருவாறு அதைவிடுவித்து அங்கும் ஒரு பௌத்த ஆலயத்தை அவன் அமைத்தான் என பௌத்த வரலாற்று நூல்கள் கூறுகின்றன. எனவே இவ்விடத்திலும் மாகோன் ஆட்சி நிலைத்திருந்தது என்பது பெறப்படுகிறது.



## 6. உறுகுணையில் மாகோன் ஆட்சி

உறுகுணைப் பிரதேசத்தில் மட்டக்களப்பு, வீரமுனை, மல்வத்தை, அம்பாரை, திருக்கோவில், உகந்தை, பாணமை, திசமாறாமை, மண்முனை, போரதீவு முதலிய நகரங்கள் அடங்கியிருந்தன. மட்டக்களப்பில் பல்வேறு கிராமங்களில் மாகனது ஆட்சி பற்றித் தகவல்கள் உள்ளன. மட்டக்களப்பு மான்மியம், கோணேசர் கல்வெட்டு முதலிய நூல்களில் இது பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன.[13] சிங்கள வரலாற்று நூல்களில் இவற்றுக்கான விவரங்கள் இல்லாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை. இதற்கான காரணங்களை முதல் அத்தியாயத்தில் கொடுத்துள்ளோம்.

மாகோன் காலத்தில் மட்டக்களப்பு என்பது வெருகல் முதல் வீரமுனைவரை பரந்திருந்தது. அதன் முக்கிய நகரம் மண்முனை ஆகும். தற்போதைய மட்டக்களப்பு அப்போது பிரபலமாகவில்லை. ஒல்லாந்தர் கோட்டை கட்டியபின்பே அது நகரமாகியது. அதற்குமுன் புளியந்தீவு என்ற சிறிய கிராமமாக அது இருந்தது. எனவே இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு என குறிப்பிடப்படும் இடம் மண்முனைப் பிரதேசம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

இந்த மட்டக்களப்புப் பிரதேசத்தில் (மண்முனையில்) வீரமுனை, பழுகாமம், பெரிய போரதீவு, கொக்கட்டிச் சோலை முதலிய கிராமங்கள் பிரசித்தி பெற்றிருந்தன.

இக்கிராமங்களில் மாகோனின் உபராஜனாகிய குளக்கோட்டன் திருப்பணி செய்தமைக்கும், வன்னிமை வகுத்தமைக்கும் ஆதாரங்கள் உள்ளன. முற்குகர் (முக்குவர்) வன்னிமை கூறும் கல்வெட்டுப் பாடல் பின்வருமாறு கூறுகிறது.[14]

சீர்தங்கு வில்லவரும் பணிக்கனாரும்
சிறந்த சட்டிலான் தனஞ்சயன்றான்
கார்தங்கு மாளவன் சங்கு பயத்தன்
கச்சிலாகுடி முற்குகரின மேழேகாண்
வார்தங்கு குகன் வாளரசகண்டன்
வளர்மாசு கரத்தவன் போர்வீரகண்டன்
பார்தங்கு தண்டவாணமுண்டன் பழமைசெறி
..........................................

## 7. கிழக்கிலங்கையில் மாகோன்

ராஜரட்டை, உறுகுணை என்பன, கிழக்கிலங்கையை உள்ளடக்கிய பிரதேசமாக இருந்தபோதும், கிழக்கிலங்கையில் மாகோன் ஆட்சி பற்றி தனியாகக் கூறவேண்டியுள்ளது. இப்பகுதி தமிழ்ப் பிரதேசமாக இருந்தபடியால் மாகோனின் செயற்பாடுகள் பற்றிய விரிவான குறிப்புகள் சில நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல், இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் மாகோனின் ஆட்சிபற்றியும் அறிந்து கொள்ளமுடியும். அதேவேளை, கிழக்கிலங்கையில் பல்வேறு குடிகளைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையாக வாழும் வகையில் மாகோன் வகுத்த வன்னிமைகள், விவசாய ஏற்பாடுகள், சமூக, பொருளாதார ஏற்பாடுகள், ஆலய நிர்வாக முறைகள் என்பன பற்றியும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.

கிழக்கிலங்கை என்பது வடக்கே ராஜரட்டையில் அடங்கும். திருகோணமலை முதல் தெற்கே உறுகுணையில் அடங்கும். திருக்கோயில்வரை நீண்டு பரந்துள்ள கிழக்குக் கரைப் பிரதேசமாகும்.

திருகோணமலைப் பிரதேசத்தில் திருக்கோணேஸ்வர ஆலயத்தைச் சேர்ந்த பகுதி பிரபலம் பெற்று முக்கிய நகரமாக விளங்கியது போல், மட்டக்களப்புப் பிரதேசத்தில், தான்தோன்றீஸ்வர ஆலயத்தைச் சேர்ந்த மண்முனைப் பகுதி பிரபலம் பெற்று முக்கிய நகரமாக விளங்கியது. இவ்விரு ஆலயங்களிலும் மாகோனின் திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன. வன்னிமைகள் வகுக்கப்பட்டுள்ளன; தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட பல்வேறு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். விவசாய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன; கோயிலுக்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதைப்போலவே, கிழக்கிலங்கையின் தெற்கு எல்லையில் உள்ள திருக்கோயில் ஆலயத்திலும் மாகோனின் திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன. எனவே திருகோணமலை, மண்முனை, திருக்கோயில் ஆகிய மூன்று நகரங்களும் கிழக்கிலங்கையின் கேந்திர ஸ்தானங்களாக மாகோன் காலத்தில் விளங்கின என்பது கண்கூடு.

## 8. மண்முனை

மண்முனை என்பது ஒரு பண்டைய ராசதானி ஆகும். தற்போது மட்டக்களப்புக்குத் தெற்கே, எட்டுக்கல் தொலைவில், 



வாவியின் மேற்குக் கரையில், தான்தோன்றீஸ்வர ஆலயத்தை மையமாகக் கொண்டு, வயல்கள் நிறைந்த ஒரு சிறு கிராமமாக அந்நகர் காட்சியளிக்கிறது. அன்று இது மாகோனால் அமைக்கப்பட்டு சுகதிரனுக்கு வழங்கப்பட்ட இராசதானியாகும். (மட். மான். பக். 54) அதுபற்றிய விவரம் வருமாறு[15].

கலிங்கனான சுகதிரன் என்பவனின் ஆட்சியின் போது, தினசிங்கன் என்பவன் (சோழன்) கலிங்க, வங்க ஆலயங்களை இடித்து அழித்துவந்தான். அதைத் தடுப்பதற்கு வழியறியாத சுகதிரன் கலிங்க மன்னன் மனுவரதனுக்குச் செய்தினுப்பினான். மனுவரதன் அவனுக்கு உதவி செய்ய தனது மூன்றாவது புத்திரனான மாகோனை அனுப்பி வைத்தான். இவ்விவரம் மட்டக்களப்பு மான்மியத்தில் காணப்படுகிறது.[16] (மட். மான். பக். 52).

மட். மான்மியத்தில் பல கர்ணபரம்பரைக் கதைகள் கலந்திருந்தாலும் மாகோனைப் பற்றிய செய்திகள் சில, சூளவம்சம் முதலிய சிங்கள வரலாற்று நூல்கள் தரும் தகவல்களுடன் ஒத்துப்போகின்றன. மேற்படி மட். மான்மியக் குறிப்பில் "கலிங்க, வங்க வம்சத்து ஆலயங்களை இடித்து அழித்த" செய்தி கவனத்திற் கொள்ளத்தக்கது. இலங்கையில் இத்தகைய அநீதி கலிங்க வம்சத்தவர்களுக்கு எதிராக நடந்த காரணத்தினாலேயே, கலிங்க மாகன் இலங்கைமேல் படை எடுத்தான் என ஆரம்ப அத்தியாயத்தில் நாம் குறிப்பிட்டோம்.

இந்த வகையில், மாகோன் செயற்பாடுகள் பற்றி மட். மான்மியம் கூறும் ஒரு சில செய்திகளையும் நாம் ஏற்றுக்கொள்ளலாம். உதாரணமாக, மாகோன் படைவீரர்களுடன் இலங்கைக்கு வந்து தோப்பாவையைக் கைப்பற்றி, அணிகங்கனை வாளுக்கிரையாக்கி, தோப்பாவையை தலைநகராக்கி ஆட்சி செய்தான் என்ற வரலாற்றுத்தகவல், மட். மான்மியத்திலும் இடம்பெறுகிறது. இச்செய்தி பிற வரலாற்று ஆவணங்களாலும் உறுதி செய்யப்படுகிறது.

மட். மான்மியத்தின்படி தோப்பாவையைக் கைப்பற்று முன்பே மாகோன் மணிபுரத்திலிறங்கி அந்நகர் நாகர்குல அரசனைக் கண்டு (சோழ தினசிங்கன்) செய்த அநியாயத்தை அறிந்து, மட்டக்களப்புக்கு வந்து பகைவரை ஒழித்து சுகதிரனுக்குப் பட்டம் சூட்டி புலியமாறன் மந்திரியாக இருந்த ஊரில் ஒரு சிறிய கோட்டை செங்கல்லால் இயற்றி சுகதிரனுக்கு இராசதானியாக்கி அவ்விடத்துக்கு

மண்முனை வடபகுதி என நாமம் சாற்றினான்.[17] (மட். மான். பக். 54) என அறியமுடிகிறது.

### 9. திருக்கோயில்

திருக்கோணேஸ்வரம், மட்டக்களப்பு (மண்முனை) முதலிய இடங்களைப்போலவே திருக்கோயிலும் மாகோன் திருப்பணி செய்து, வன்னிமை வகுத்து, மக்களைக் குடியமர்த்தி, நிவந்தங்கள் வழங்கி நிர்வாக ஒழுங்குமுறைமைகளைச் செய்துள்ளான். திருக்கோயில் பகுதியில் மாகோன் வகுத்த வன்னிமை இன்றும் நிலவுகிறது.[18]

இவ்வாறு மாகோன் அரனூழியம் வகுத்தது பற்றி மட். மான்மியத்தில் இடம்பெறும் "குளிக்கல் வெட்டுமுறை"ப் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகிறது. (மட். மான். பக். 70)

கண்டனொடு சருகு பில்லி கட்டப்பத்தன்
கருதரிய கவுத்தனு மத்தியாயன்
மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தியென்று
கோவசியர் மக்களிலே வருணமாக்கிப்
பண்டுமுறை தவறாமல் ஏழு குடியாய்ப்
பகுத்தீசர் பணிபுரியப் பரவணியாய்
அண்டர்தமைச் சாட்சி வைத்துத் தத்தம்வாங்கி
அரனகத்து ஊழியராய் அமைத்துச்சொல்வார்

மேலும் திருக்கோயில் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்று மாகோனால் பொறிக்கப்பட்டதெனக் கருத முடிகிறது.[19] (குளக். தரி. பக். 57) காலிங்க விஜயபாகு என்னும் பெயருடைய மாகோன் இக்கல்வெட்டைப் பொறித்திருக்கலாம் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. கல்வெட்டு வாசகம் வருமாறு.[20]

பக். (அ) "ஸ்ரீசங்கபோதி பரமரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விஜயபாகு தேவற்கு ஆண்டு பத்தாவதில் தைமாதம் 20ம் திகதி.

பக். (ஆ) சிவனான சங்கரக் கோயிலுக்குக் கொடுத்த வொவில, இந்தத் தர்மத்துக்கு அகிதம் செய்தானாகில், கெங்கைக் கரையில் காராம் பசுவைக்கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவராகவும்". (குளக்கோட்டன் தரிசனம், பக். 44).



### 10. கொக்கொட்டிச் சோலை

கொக்கொட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரத்திலும் மாகோன் வகுத்த வன்னிமையே இன்றும் நிலவுகிறது. இது தொடர்பான கல்வெட்டுப் பாடல், இவ்வாலயத்தில் தொண்டு செய்வதற்காக காளிகட்டம், காரைக்கால், மருங்கூர் போன்ற இடங்களில் இருந்து வன்னியரைக் கொண்டு வந்து குடியமர்த்தியதைக் குறிப்பிடுகிறது.[21]

அரியகலமிடு முதலி மீகான் கோடை
அவுறாளை மேலச்சேனை, பள்ளச்சேனை
பெரியகல்மடு முதலி மூவாங்கல்லு பேர்களேழே
புத்தூரார் மருங்கூரர் வீரச்சோலைபுகழ்
காரைக்காட்டாரும் கொங்கைந்தும்
வித்தகமாய் மேழி தொழில் செய்யுமென்றான்.

இப்பகுதியில் காணப்படும் குடிகளான, உலகிப் போடிகுடி, கலிங்கர்குடி, படையாட்சிகுடி, பணிக்கனாகுடி, தனஞ்சனாகுடி, கச்சிலாகுடி போன்ற குடிமுறைமை, காலிங்கமாகன் வகுத்ததாகும். கலிங்ககுடி என்பது கலிங்கர் ஆட்சியின் பலனாக ஏற்பட்டது. படையாட்சி குடி என்பது படைப்பிரிவிலிருந்து தோன்றியது. முக்குலத்தோர், முத்தரையர் போன்று வன்னியரும் ஒரு வகுப்பினர். தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில் ஒரு கோடிக்கு மேல் உள்ள இவர்கள் படையாட்சிகள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் வீரம் மிக்கவர்கள். தமிழ்நாட்டின் தெற்கே பாண்டிய மண்டலம், கிழக்கே சோழமண்டலம், மேற்கே கொங்கு மண்டலம், வடக்கே தொண்டை மண்டலம் ஆகிய இடங்களில் இவர்கள் இருந்தனர். மாகோன் காலத்தில் இவர்கள் ஈழத்தில் குடியேறினர். இவ்வாறு ஒவ்வொரு குடியைக்கொண்டும், இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மக்கள் எத்தகைய பணியில் ஈடுபட்டனர் என்பதை அறிந்துகொள்ளலாம். அதன் பெறுபேறான சமூகக் கட்டமைப்பையும் இக்குடிமுறையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.[22]

### 11. கோயில் போரதீவு

போர்முனை நாடு என வழங்கப்பட்ட போரதீவு வரலாற்றுச் சிறப்பு பெற்றிருப்பதுடன் மாகோன் காலத்து தொடர்புகளும் கொண்டது. இங்குள்ள சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் பாண்டியர் காலத்துக் கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்டுள்ளது. பாண்டியர்

இலங்கையைக் கைப்பற்றிய காலம் சோழர் ஆட்சி முடிவடைந்த காலகட்டமாகும். மாகோனால் அல்லது குளக்கோட்டனால், இவ்வாலயம் நிர்மாணிக்கப்பட்டதாக அல்லது திருப்பணி செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். இப்பகுதியில் மாகோனின் பின்பு அவன் மகன் வயிற்றுப் பேரனான எதிர்மன்ன சிங்கன் இப்பகுதியை ஆட்சி செய்ததாக மட். மான்மியம் மூலம் அறியக்கிடக்கின்றது.[23] (மட். மான். பக். 56-57).

## 12. மட்டக்களப்பில் மாகன் ஆட்சி நிலவிய மேலும் சில இடங்கள்

மட்டக்களப்புப் பிரதேசத்திலே பெரும்பாலான இடங்கள் மாகன் ஆட்சியின் கீழ் இருந்துள்ளன என்பதை முற்குகர் வன்னிமை கூறும் கல்வெட்டுப் பாடல் மூலம் அறியமுடிகிறது.

அரிய கல்மடு, முதலி மீகான்கோடை, அவுறாளை, மேல்சேனை, பள்ளச்சேனை, பெரிய கல்மடு, முதலி மூவாங்கல்லு, கொங்குகாசி போன்ற இடங்களிலே புத்தூர், மருங்கூர், காரைக்கால் ஆகிய இடங்களிலிருந்து வந்த குடிகளை குடியமர்த்தி கமம் செய்யும்படி மாகன் பணித்தான் என அறியமுடிகிறது.

தோப்பாவை, முத்தகல்லிலே படையாட்சி குலத்தவரையும், தாழங்குடாவிலே செட்டி, கரையார், வண்ணாரக் குடிகளையும், மண்முனை, மகிழடித்தீவு, சவளக்கடை, பாலமுனை, சம்மாந்துறை முதலிய இடங்களில் நாவிதர்களையும் மாகன் குடியேற்றினான்.

மேலும் கரையாரக்குடிகளை கம்பிளியாறு, புன்னாலை, தாண்டகிரி, மண்ணேறுமுனை போன்ற பல இடங்களிலும் குடியமர்த்தினான். இக்குடிகள் மூலம் இங்கெல்லாம் இவனது ஆட்சி பரந்து காணப்பட்டது என்பது தெளிவாகிறது.

இங்கு குறிப்பிடும் இடப்பெயர்கள் பல இன்று பெயர் மாறுபாட்டுடன் காணப்படுகின்றன. உதாரணமாக கொங்கு காசி (கொக்கட்டிச்சோலை), தாண்டகிரி (தாந்தாமலை), மண்ணேறுமுனை (மண்முனை) என மாறியுள்ளன. பெரும்பாலான இடங்கள் ,அதே பெயருடனும் நிலைத்து உள்ளன.



## அடிக்குறிப்புகள்

1. (i) Culavamsa (II), Translation W. Geiger, 1930. Colombo. Ch. LXXX. pp. 133. Notes. 73-74. Ch. LXXXI. Notes. 4-5. Ch. LXXXIII. pp, 149. Notes. 15-19.
   (ii) Pujavaliya Ed. A.V. Suraweera, Colombo 1959. Notes 34.
2. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் - பேராசிரியர் கா. இந்திரபாலா பேராதனை 1972. பக். 51-52.
3. Ceylon & Malaysia Dr. S. Pranavithana. Colombo 1966. pp. 91.
4. Pujavaliya Ed. A.V. Suraweera Colombo 1959. Notes 49-106.
5. (i) Culavamsa (Tr. W. Geiger Col. 1930)
   Ch. LXXX. pp. 133. Notes 73-74.
   Ch. LXXXIII. pp. 149. Notes 15-20.
   (ii) Pujavaliya (Ibid) Notes 116.
   (iii) மட்டக்களப்பு மான்மியம் F.X.C. நடராஜா பதிப்பு (1952) பக். 54.
6. Culavamsa (Ibid) Ch. LXXX. pp. 132. Notes 51-62. Ch. LXXX. pp. 133. Note 68.
7. Ibid.
8. கோணேசர் கல்வெட்டு பதிப்பு பு. பொ. வைத்தியலிங்க தேசிகர். 1931. பக். 12. அத். III. பக். 20-24.
9. Ibid பக். 14-15.
10. கோணேசர் கல்வெட்டு (கவி ராஜவரோதயர்)
    பு. பொ. வைத்தியலிங்கதேசிகர் பதிப்பு திருகோணமலை 1931. பக். 30-31. பாடல் 5.
11. History of Ceylon Vol. (I) part (II) The Dambadeni Dynasty By Dr. S. Paranavithana pp. 615-616.
12. Culavamsa (Ibid) Ch. LXXXI pp. 140 Notes 58-60.
13. (i) மட். மான்மியம் F.X.C. நடராஜா பதிப்பு மட். 1952. பக். 51-54.
    (ii) கோணேசர் கல்வெட்டு (Ibid) பக். 30-31. பாடல் 5.
14. மட். மான்மியம் (Ibid) பக். 95.
15. Ibid பக். 94.
16. Ibid பக். 52.
17. Ibid பக். 54.
18. மட். மான்மியம் (Ibid) பக். 70.
19. குளக்கோட்டன் தரிசனம் (Ibid) பக். 48, 57.
20. (Ibid) பக். 43, 44.
21. மட். மான்மியம் (Ibid) பக். 95.
22. (Ibid) பக். 95-97.
23. (Ibid) பக். 56-57.

# VI மாகோனின் துணைவர்கள்

மாகோனின் ஆட்சிக்காலத்தில் மூன்று முக்கியமான விடயங்கள் வரலாற்றாசிரியர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

அவையாவன:

(i) அவனது நீண்டகால ஆட்சி.

(ii) உபராஜர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கட்டுக்கோப்பான நிர்வாகம்.

(iii) படைத் தலைவர்களின் கட்டுப்பாடு.

இவ்வகையில் மாகனுக்கு உதவியாக இருந்த சிலரது பெயர்கள் வரலாற்று ஆவணங்களில் இடம்பெற்றுள்ளன. இதுபற்றி ஆராய்தல் அவசியம்.

### 1. ஜயபாகு (சோழகங்கதேவன், குளக்கோட்டன்)

மாகோன் இலங்கை மீது படை எடுத்து வந்தபோது, அவனுடன் பல கலிங்க, சோழ இளவரசர்கள் வந்ததாகவும், துணைப்பயிற்சி பெற்றதாகவும் அறிகிறோம். இவர்களுள் முக்கியமானவன் மாகனுக்கு வலதுகரமாக விளங்கிய ஜயபாகு என்பவன். இப்பெயர் சிங்களப் பெயராக இருப்பதால், இவன் எப்படி கலிங்க அல்லது சோழ இளவரசனாக இருக்கமுடியும் என்ற கேள்வி எழுவது இயல்பே. மாகோனின் ஆட்சியின்போது மாகோனின் பெயர் விஜயபாகு எனவும், குளக்கோட்டன் பெயர் ஜயபாகு எனவும் வரலாற்று ஆவணங்களில் இடம்பெறுகின்றன. விஜயபாகு, ஜயபாகு ஆகியோரின் இணைந்த செயற்பாடுகள் பற்றி சூளவம்சம், பூஜாவலிய முதலிய நூல்கள் கூறுகின்றன. (இதுபற்றி பூரண விளக்கம் எனது "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் இடம்பெறுகிறது)[1]



இவ்விருவரது இணைந்த செயற்பாடுகள் பற்றி சூளவம்சத்தில் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றன[2]. (சூள. பக்:145; குறிப்பு 26, 29, 49. பக்:149; குறிப்பு 15). இவ்வாறே 'பூஜாவலிய'விலும் பல குறிப்புகள் உள[3]. (பூஜா. பக்:116). இவை தவிர மேலும் பல சிங்கள வரலாற்று ஆவணங்களிலும் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'எழுஅத்தன களுவம்ச' என்னும் ஆவணத்தில், பொலன்னறுவையில் இருந்த இவர்களுடைய படைகள்பற்றிக் கூறும்போது, நூற்று ஆயிரக்கணக்கான சோழ, பாண்டிய போர் வீரர்களைக் கொண்டிருந்த இப்படைகளுக்கு உபராஜர்களும் இருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது[4]. ஒரு உபராஜன் ஜயபாகு எனவும், அரசன் விஜயபாகு (மாகன்) எனவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு இவர்கள் தமது பெயர்களை விஜயபாகு, ஜயபாகு என வைத்துக்கொண்டது சிங்கள மக்களைக் கவர்வதற்காக இருக்கலாம் எனச் சில வரலாற்றாசிரியர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்[5] (Dr. எஸ். பரணவிதான, இலங்கைச் சரித்திரம் 1ம் அத். பக்: 615).

ஜயபாகு மாகோனுடன் நீண்டகாலம் இணைந்து செயற்பட்டபோதும், மாகோனின் இலங்கைப் படையெடுப்பின் போது அவனுடைய பெயர் எதிலும் குறிப்பிடப்படவில்லை. இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த லியனகமகே, "இவன் ஏற்கனவே இலங்கையிலிருந்து ஆட்சி செய்திருக்க வேண்டும். அல்லது மாகோன் படையெடுப்புக்குப் பின் இலங்கைக்கு வந்திருக்கவேண்டும்" என்கிறார். இக்கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. படையெடுப்பின் போது படைத்தளபதியான மானாபரணன் என்பவன் முக்கியத்துவம் பெற்றிருந்தான். பின்னால் அவன் பெயர் மறைந்துபோக மாகோன் ஆட்சியில் ஜயபாகு முக்கியத்துவம் பெறுகிறான் என்றே கொள்ளவேண்டும். இதுபற்றி மேலும் விபரங்களைப் பார்ப்போம்.

சூளவம்சம், பூஜாவலிய ஆகிய இரு ஆவணங்களும் பின்வருமாறு குறிப்பிடுகின்றன[6].

"... படைத்தளபதியான மானாபரணனைத் தவிர, ஜயபாகு என்னும் தமிழ் அரசன் ஒருவன் ராஜரட்டையில் மாகோனுடன் இணைந்து ஆட்சி செய்துள்ளான்" (சூளவம்சம் LXXX : 75, பூஜாவலிய: 113-114) அது மட்டுமல்ல; விகாரை முதலியவற்றை அழித்ததாகக் கூறுமிடத்து மாகோன், ஜயபாகு ஆகிய இருவரையுமே, சூளவம்சம்,

பூஜாவலிய ஆகியவை குறிப்பிடுகின்றன; (பூஜாவலிய:113-114, சூளவம்சம்: LXXXII: 26-27).

மேலும் நாட்டின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்ட படைமுகாம்கள் பற்றிக் குறிப்பிடும்போதும் இவ்விருவரும் இணைந்தே அவற்றை அமைத்ததாக, மேற்குறித்த இரு ஆவணங்களும் கூறுகின்றன. பூஜாவலிய குறிப்பின்படி மாகனுக்கு 44,000 படைவீரர்களும் ஜயபாகுவுக்கு 40,000 படை வீரர்களும் இருந்தனர். (பூஜாவலிய: பக். 116)

இவற்றை நோக்கும்போது ஜயபாகு மாகோனின் படையெடுப்பின் போதும் அவனுடன் இணைந்தே செயற்பட்டிருக்கிறான் என்பது பெறப்படுகிறது.

## 2. ஜயபாகுவின் தனித்துவம்

ஜயபாகுவைப் பற்றி H.W. கொட்றிங்கரன் பின்வருமாறு கூறுகிறார்: "இந்த ஜயபாகு என்பவன் யார்? இவன் மாகனின் உபராஜனாக இருந்து அவனுக்குப் பின் அரசுக் கட்டில் ஏறியவனா? அல்லது அவனும் ஒரு சுதந்திர அரசனாக மாகனுடன் இணைந்து செயற்பட்டவனா? இவன் சம்பந்தப்பட்ட மலையாள, திராவிட போர்கள் இவன் தனித்துவமான ஒருவன் என்பதைக் காட்டுகின்றன[7]." (CALR, X:47)

C.W. நிக்கலஸ் என்பவர், "இந்த ஜயபாகு என்பவன், திருக்கோணமலை சமஸ்கிருதக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் சோடகங்கனாக இருக்கலாம்" எனக் கூறுகின்றார். சோடகங்கன் என்பவன், தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவன் என்பது வெளிப்படை. தாக்குதல் நடத்தியகாலம் இக்கல்வெட்டு காலப் பகுதியுடன் பொருந்தி வருகிறது. ஆனால் கிடைத்துள்ள கல்வெட்டுத் துண்டில் 'ஜயபாகு' என்னும் பெயர் காணப்படவில்லை[8].

இவர்கள் இவ்வாறு கூறியபோதும், பிற சான்றுகள் மூலம் இந்த ஜயபாகு என்பவன் மாகனின் உபராஜர்களில் ஒருவன் என்பதும் இவனே திருக்கோணமலை சமஸ்கிருதக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் சோடகங்கன் என்பதும் நிரூபணமாகியுள்ளன. (குளக்கோட்டன் தரிசனம் பக். 87)

இவ்விடத்தில் வாசகர்களுக்கு ஒரு சந்தேகம் எழலாம். அதாவது சூளவம்சம், பூஜாவலிய முதலிய வரலாற்று ஆவணங்கள்,



மாகனை, மாகன் என்றும், விஜயபாகு என்றும் குறிப்பிடுகின்றன. ஆனால் சோடகங்கனாகிய ஜயபாகுவை, ஆரம்பத்திலிருந்தே, "ஜயபாகு" என்றுதான் குறிப்பிடுகின்றன. சோடகங்கனாகிய இவன் பின்னால் தனது பெயரை "ஜயபாகு" என மாற்றிக்கொண்டவன் என்றால், ஆரம்பத்திலிருந்தே வரலாற்று ஆவணங்கள் அவனை "ஜயபாகு" எனக் குறிப்பிட்டது ஏன்? இது ஒரு நியாயமான சந்தேகமே.

ஆனால் ஒன்றை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மேற்படி வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்று பல வருடங்களுக்குப் பின்பே வரலாற்று ஆவணங்கள் எழுதப்பட்டன. எனவே அந்த நேரம் வழக்கிலிருந்த ஜயபாகு என்னும் பெயர் இந்த ஆவணங்களில் இடம் பெறுகின்றன. பின்னர் ஜயபாகு திருக்கோணமலைப் பகுதிக்குச் சென்று விட்டபடியால், அவனது முழு விவரங்கள் பௌத்த வரலாற்று ஆசிரியர்களுக்குக் கிடைத்திருக்காது.

## 3. ஜயபாகு என்னும் பெயர்கொண்ட மூன்று மன்னர்கள்

இலங்கை வரலாற்றில் "ஜயபாகு" என்னும் பெயர் கொண்ட மூன்று மன்னர்கள் இடம் பெறுகின்றனர்:

(i) ஜயபாகு I (1114-1116)
(ii) ஜயபாகு II (1272-1281)
(iii) ஜயபாகு III (1467-1469)

இவர்களைத் தவிர மற்றொரு ஜயபாகுவின் பெயர் சிங்கள அரச பரம்பரையில் சேராமல், சூளவம்சம், ராஜவலிய, பூஜாவலிய முதலிய பாலி, வரலாற்று ஆவணங்களில் இடம்பெறுகிறது. மேலும் 'ஜயபாகு' என்னும் பெயருடன் தொடர்புறும் ஆறு கல்வெட்டுகள் இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை (அ) புதுமுட்டாவை (ஆ) மொறவாகல (இ) பொல்லனறுவை (ரங்கொத் விகாரை) கிரிண்டிகம (ஈ) மாங்கனை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டுகள், பல்வேறு நன்கொடைகளைக் குறிப்பனவாக அமைகின்றன. ஆனால் பொலன்னறுவை ரங்கொத் விகாரைக் கல்வெட்டு வேறு விதத்தில் அமைந்துள்ளது[9]. அது சேதரையன் என்னும் வேளைக்காரப் படைத்தலைவன் ஒரு நாட்டைப் பிடிப்பதற்கு, ஜயபாகு தேவருக்கு உதவியமையைக் குறிக்கிறது. (இக்கல்வெட்டு அனுபந்தத்தில் இடம்பெறுகிறது.) இந்த ஜயபாகு

மேற்குறித்த முதலாம், இரண்டாம் மூன்றாம் ஜயபாகு அல்ல என்பதைப் பின்வரும் விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

### ஜயபாகு I (1114–1116)

இவன் விஜயபாகு (I)வின் இளைய சகோதரன், விஜயபாகு இறக்கும்போது, தனது தம்பியான இந்த ஜயபாகுவை உபராஜனாகவும், கலிங்க அரசியின் மூலம் பிறந்த விக்கிரமபாகுவை அடுத்ததாகவும் நியமித்து மரணமடைந்தான்[10]. ஆனால் பாண்டிய இளவரசனை மணம் செய்த விஜயபாகு (I)வின் சகோதரியான 'மித்தை' என்பவள் இந்த ஜயபாகுவை அரசனாகவும் தனது மகன் மானாபரணனை உபராஜனாகவும் ஆக்கினாள். ஜயபாகுவை கைப் பொம்மையாக வைத்துக் கொண்டு, மித்தையின் புதல்வர்களான மானாபரணன், கீர்த்தி ஸ்ரீமேவன், ஸ்ரீவல்லபன் ஆகிய மூவரும் ஆட்சி செலுத்தினர்.

இரு வருடங்களின் பின்னர், (1114-1116) விஜயபாகு (I)வின் மகன் விக்கிரமபாகு ஆட்சியைக் கைப்பற்றினான். எனவே இரு வருடங்கள் மட்டும் பொம்மையாக இருந்த இந்த ஜயபாகு, படை நடாத்தி நாடுபிடித்து, மகாமண்டல நாயகன் சேவிக்கும் அளவு புகழ் பெற்றவனாக இருக்க முடியாது.

### ஜயபாகு II (1272–1281)

இவன் பராக்கிரமபாகு (II)வின் மகனாகும், பராக்கிரம பாகு (II)வுக்கு, விஜயபாகு (IV), புவனேகபாகு ஜயபாகு, திகுபுவனமல்ல. பராக்கிரமபாகு ஆகிய ஐந்து ஆற்றல் வாய்ந்த புதல்வர்கள் இருந்தனர். (சூளவம்சம்: பக். 178) இவர்களுள் இடம்பெறுபவனே இந்த ஜயபாகு, இந்த ஐவருடன், பராக்கிரமபாகு (II)வின் சகோதரியின் மகனான வீரபாகுவும் சேர்ந்து, பல வழிகளிலும் பராக்கிரமபாகு (II)வின் வெற்றிக்கு உதவியுள்ளனர். சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பை (1247) முறியடித்ததும், மாகனுக்கெதிராகப் போரிட்டதும் (1256) இவர்களே[11].

ஆனால் இந்த ஜயபாகு, முடிசூடி ஆட்சி செலுத்தவில்லை. எனவே இவன் கல்வெட்டுகளைப் பொறித்திருக்க முடியாது.

### ஜயபாகு III (1467–1469)

இவனுக்கு ஜயவீர பராக்கிரமபாகு எனவும் ஒரு பெயர் உண்டு. இவன் கோட்டை ராசதானியில் ஆட்சி செய்தவன்[12]. இவனுடைய



காலம் 15-ம் நூற்றாண்டு ஆகும். மேற்படி கல்வெட்டு, 12ம், 13ம் நூற்றாண்டுக்குரிய எழுத்துக்களைக் கொண்டவை. மேலும், "மகாமண்டல நாயகன்", "வேளைக்காரன்", "ஜெயபாகு தேவர்" என்பன தமிழ் மரபுக்கமைந்த சொற்கள். அத்துடனமையாது எழுநூறு காததூரம் வென்று, மகாமண்டல நாயகன் பணியும் அளவு இவன் புகழ்பெற்றவனும் அல்லன். எனவே இவனும் இக்கல்வெட்டைப் பொறித்திருக்க முடியாது.

ஆகவே இக்கல்வெட்டைப் பொறித்தவன் இந்த மூவரைத் தவிர வேறொரு ஜயபாகுவாக இருக்கவேண்டும். அது பற்றிப் பார்ப்போம்.

### 4. ரங்கொத்விகாரைக் கல்வெட்டு தரும் சான்று

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் ஜயபாகு தேவரின் கீழ் சித்தரையன் என்னும் வேளைக்காரன் பணிபுரிந்திருக்கிறான். போரில் ஜயபாகுதேவர் 700 காதம் வென்றபோது இவ்வேளைக்காரன் அவருக்கு உதவியிருக்கிறான். வேளைக்காரன் என்பவன் படைகளுக்கு அதிபதியாகிய மகாமண்டலநாயகன். இதிலிருந்து ஜயபாகு என்பவன் இவ்வாறான மகாமண்டல நாயகர்களுக்குத் தலைவன் என்றும் அவன் பெரும் படைபலம் படைத்தவன் என்றும் தெரிகிறது.

மாகோனுக்கு உபராஜனாக வந்த ஜயபாகு, 4000 படை வீரர்களைக் கொண்டிருந்தான் என்று சூளவம்சம் கூறுகிறது. மேலும் இக்கல்வெட்டு வாசகம், சேதரையன் என்னும் வேளைக்காரன் மகாமண்டல நாயகன், ஒரு நாட்டைப் பிடிப்பதற்கு ஜயபாகு தேவருக்கு உதவியமையைக் குறிக்கிறது. இவற்றைத் தொகுத்து நோக்கும்போது -

(அ) கல்வெட்டின் தமிழ் மரவு வார்த்தைப் பிரயோகம்.

(ஆ) கல்வெட்டின் 12-ம், 13-ம் நூற்றாண்டுக்குரிய எழுத்துக்கள்.

(இ) மன்னனுக்குச் சமமான 'ஜயபாகுதேவர்' என்ற வார்த்தை.

(ஈ) 700 காதம் வெல்வதற்கு மகாமண்டல நாயகன் உதவியமை. இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன?

சந்தேகமில்லாமல், மாகோனுக்கு உதவியாக, உபராஜனாக வந்து, ஈழத்தைக் கைப்பற்றுவதில் மாகோனுடன் இணைந்து

செயற்பட்டு, மாகோன் சார்பில் ஆட்சிப் பொறுப்பும் ஏற்ற ஜயபாகுவையே குறிக்கிறது.

இவன் திருக்கோணேஸ்வரத்தில் பொறித்த சமஸ்கிருதக் கல்வெட்டில் "சோழகங்க தேவ" என்ற பெயர் இடம்பெறுகிறது. சிங்களப் பிரதேசமாகிய பொலன்னறுவை ரங்கொத் விகாரையில் பொறித்த கல்வெட்டில் சிங்களப் பெயரான ஜயபாகு தேவர் என்ற பெயர் இடம் பெறுகிறது.

## 5. சோழகங்க தேவன் பற்றி ஒரு குறிப்பு

ஜயபாகுவின் மற்றொரு பெயர் சோழகங்கதேவன் என்பதை முன்னர் பார்த்தோம். இவனே குளக்கோட்டன் என்பதற்கான விளக்கம், எனது "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் கொடுக்கப் பட்டுள்ளது (பக்: 82-84). சோழகங்க வம்சம் தொடர்பான சில குறிப்புகளை இப்போது பார்ப்போம்.

சோழகங்க வம்சம் பாண்டி நாட்டில் அருப்புக்கோட்டை என்னும் இடத்தில் பிரசித்தி பெற்றிருந்தது. அருப்புக்கோட்டை, பாண்டியர் இலங்கை மீது படை எடுப்பதற்கான கேந்திர நிலையமாகப் பயன்பட்டது. சோழகங்கர் இதில் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

"வேளக்காரப்படையினர்" எவ்வாறு சோழமன்னர்களின் ஆபத்துதவிகளாக இருந்தனரோ, அவ்வாறே சோழகங்கர் பாண்டிய மன்னர்களின் ஆபத்துதவிகளாக இருந்தனர். இந்தப் பின்னணியில் சோழகங்க வம்சம் உருவானவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

(i) கலிங்கர்களுக்கும், கங்கர்களுக்கும் இருந்த நெருக்கமான உறவுபோல, கங்கர்களுக்கும், சோழர்களுக்கும் நெருக்கமான உறவு இருந்தது.

(ii) இன்றைய கர்நாடகா, பங்களூர் பகுதி முன்பு "கங்கபாடி" என அழைக்கப்பட்டது. இக்கங்கபாடியை மேற்குக் கங்கர்கள் ஆண்டனர். பின்னர் இவர்களது வம்சாவளியினர் சோழர்களின் அடிமைகளாகி சோழகங்கர் என அழைக்கப்பட்டனர்..

(iii) வேங்கி நாட்டில், பெஜவாடா, கோதாவரி பிரதேசங்களில் சோழகங்கர் இருந்தனர். முதலாம் குலோத்துங்கன் (1070-1122) அடிமையாக இருந்த ஒரு சோழகங்கனை சுவீகாரம் எடுத்து



அவனுக்கு குலோத்துங்க ராஜேந்திர சோழகங்கன் எனப் பெயரிட்டான்.

(iv) ஒரிசா (கலிங்கம்) மாநிலம் கீழைக்கங்கர்களுடைய நாடாக இருந்த காலத்தில், இவர்கள் சோழர்களைப் போலவே சூரிய வம்சத்தினராக வாழ்ந்தனர். அவர்கள் கல்வெட்டுகளில் இது பிரதிபலிக்கின்றது.

(v) இவ்வாறே, தொண்டை மண்டலத்திலும், சோழர்களின் கீழ் சோடகங்கர்கள் இருந்தனர். இவர்கள் மேலைக் கங்கர்களின் பரம்பரையினர். தமிழ் மொழி பேசியவர்கள்.

## 6. மூன்று முக்கிய சோழகங்க தேவர்கள்

எனது "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் சோழகங்க தேவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். இவர்களைத் தவிர கி.பி. 12ம், 13ம் நூற்றாண்டுகளில் சோழகங்க தேவன் என்ற பெயர் கொண்ட மூவர் வரலாற்றில் இடம்பெறுகின்றனர். (இவர்கள் எனது "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் இடம் பெறாதவர்கள்). இவர்கள் விவரம் வருமாறு.

### (i) திருவாலவாய் உடையான் சோழகங்கன் (கி.பி. 1205) அருப்புக்கோட்டை

இவன் விக்கிரம பாண்டியன் (1181-1190) காலத்தில் வாழ்ந்தவன். அவன் மேல் கொண்ட மதிப்பினால் தனது பெயரை அழகிய பெருமாள் விக்கிரம பாண்டியன் என வைத்துக் கொண்டவன். மூன்றாம் குலோத்துங்க சோழன் (1178-1218), இலங்கை மீது 1188, 1192, 1203 ஆகிய ஆண்டுகளில் (மும்முறை) படை எடுத்தபோது, மேற்படி சோழகங்கன் இப்படை எடுப்புகளில் உதவி புரிந்துள்ளான். பின்னர் பாண்டியர் காலத்தில், இவன் விக்கிரம பாண்டியனின் மகன் முதலாம் சடையவர்மன் குலசேகரப் பாண்டியனிடம் (1190-1218) சாமந்தனாக இருந்தவன்.

### (ii) இணக்கு நல்ல பெருமான் சோழகங்க தேவன் (1247) அருப்புக்கோட்டை

இவன் திருவாலவாய் உடையான் சோழகங்க தேவனின் மகன் ஆவான். இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1238-1255) காலத்தில் ஓர் அதிகாரியாக இருந்தவன். அப்படி இருந்தும்,

தன்னிச்சையாக நடந்துள்ளான். 1247-ல் தானாகவே ஓலை இட்டுள்ளான். அவ்வகையில் ஓரளவு தலைமைத்துவம் உள்ளவனாக இவன் வாழ்ந்துள்ளான்.

### (iii) அருளாளன் அழகன் சோழகங்க தேவன் (1285) அருப்புக்கோட்டை

இவன் மேற்குறித்த இணக்கு நல்லபெருமான் சோழகங்க தேவனின் மகன் ஆவான். ஈழத்திலிருந்து புத்தரின் புனித சின்னங்களைக் கவர்ந்துகொண்ட முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1318) காலத்தவன். பின்னர் மேற்படி புனிதப் பொருட்களை பேச்சு வார்த்தை மூலம் மீட்டு வந்த மூன்றாம் பராக்கிரம பாகு 1287-ல் தமிழ் நாட்டு அதிகாரிகளான சோழகங்கனையும், கலிங்கர்களையும் துரத்தியதாக சூளவம்சத்தில் ஒரு குறிப்பு இடம் பெறுகிறது.

மாகனுடன் உபராஜனாக இலங்கைக்கு வந்து பின்னர் 1223ல் திருகோணமலை சென்று குளக்கோட்டன் எனப் புகழ் பெற்ற சோழகங்கன் இவர்களில் ஒருவனாக இருக்கலாம். அப்படியானால் அவன் யார்?

மேற்குறித்த விவரங்களையும், இம்மூவருடைய காலப் பகுதியையும் நோக்கும்போது, இரண்டாவதாகக் குறிப்பிடப்படும் சோழகங்கதேவனே, குளக்கோட்டனாக மாகோனுடன் இணைந்து செயற்பட்ட ஜயபாகு எனக்கொள்ளலாம்.

### 7. மானாபரணன்

மாகன் வடபகுதியில் தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டதும் பொலன்னறுவையை நோக்கி நகர்ந்தான். அவன் பொலன்னறுவையைக் கைப்பற்றியதும், மாகனின் படைத்தளபதியான மானாபரணன் என்பவன் மாகனுக்கு முடிசூட்டுவிழா நடத்தியதாக ஏற்கனவே குறிப்பிட்டோம்[13]. இந்த மானாபரணன், அதன் பின்பு மாகோனுடன் தொடர்புபடுத்திக் கூறப்படவில்லை என்றும் சொன்னோம்.

இந்த மானாபரணன் என்பவன் யார்? மாகோனுக்கு இவன் ஏன் உதவினான்? மாகோனின் முடிசூட்டு விழாவுக்குப் பின் இவன் என்ன ஆனான்? இவனது வம்சாவழி என்ன? என்பதைப் போன்ற



கேள்விகள் ஆய்வுக்குரியவை. இதுபற்றிப் பின்வரும் ஊகங்கள் தெரிவிக்கின்றன.

(i) இந்த மானாபரணன் சிங்களத் தலைமைப் போராட்டத்தில் பிளவுபட்ட ஒரு படைத்தலைவனாக இருக்கவேண்டும். அக்காலகட்டத்தில் உள்நாட்டுத் தலைவர்கள் படை எடுத்து வருவோருடன் இணைந்து கொண்டு தமது தலைமத்துவத்தைக் காப்பாற்றிக் கொள்வது வழக்கமாக இருந்தது. அல்லது;

(ii) இவன் மாகனுடன் வந்த ஒரு கேரளப்படைத் தலைவனாக இருக்கவேண்டும். முதலாம் ராஜேந்திரனின் மகனாகிய ராஜாதிராஜனின் கல்வெட்டு ஒன்றிலே மூன்று பாண்டிய மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை : (அ) மானாபரணன் (ஆ) வீரகேரள பாண்டியன் (இ) சுந்தர பாண்டியன் என்பன (Annual Report on South Indian Epigraphy Calcutta - 1892. p. 5. South Indian Incriptions III pp. 56)

(iii) இவ்வாறே ஜடர்வர்மன் வீரபாண்டியனது கல்வெட்டு ஒன்றிலும் மானாபரணபட்டா என்ற ஒரு பெயர் இடம் பெறுகிறது. (A.R.E. 1916 - No. 339) இந்த மானாபரணனும் பாண்டியர் வழிவந்தவனே ஆகும்[14].

இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் மானாபரணனே மாகோனுடன் இணைந்தவன் - மாகோனுக்கு பொலன்னறுவை மன்னனாக முடிசூட்டிய தளபதி என்பதை நிறுவுவதற்கு மேலும் சான்றுகள் தேவை.

### இலங்கையைச் சேர்ந்த மானாபரணன்

இலங்கையிலும் மானாபரணன் என்ற பெயர் கொண்ட இளவரசர்கள் இருந்துள்ளனர். விஜயபாகு (I)வின் தங்கை மித்தையின் கணவன் ஒரு பாண்டிய இளவரசன். இவர்களது புத்திரர்கள் தான் மானாபரணன், ஸ்ரீவல்லபன், கீர்த்தி ஸ்ரீமேவன் என்போராகும். இந்த மானாபரணனின் காலம் கி.பி. 1110-1120 ஆகும். இவனது மகனே பராக்கிரம பாகு (I) (1140) மன்னன்[15]. எனவே இந்த மானாபரணன் மாகோனுடன் இணைந்தவனாக இருக்கமுடியாது.

மாகோனுடன் வந்தவர்களில் வேறு பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றாலும், 44,000 படைவீரர்களைக் கொண்ட

சைனியத்தில் பல்வேறு படைத்தலைவர்கள் இருந்தமையும், அவர்களின் தலைவனாக, (தளபதியாக) மானாபரணன் இருந்தமையும் குறிப்பிடப்பட்டுள்ளன. பொலன்னறுவையைக் கைப்பற்றியபின், மாகோனுக்கு முடிசூட்டும் அளவு இவன் முக்கியத்துவம் பெற்றிருந்தான் என்பதும் கவனத்துக்குரியது.

ஆனால் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றவன், மேற்படி முடிசூட்டு விழாவுக்குப் பின் என்ன ஆனான் என்பது மர்மமாக உள்ளது. மாகோனின் 40 வருட ஆட்சிக்காலத்தில், இவனைப் பற்றிய எவ்வித குறிப்பும் இலங்கை வரலாற்று ஆவணங்களில் இடம் பெறாதது ஆச்சரியமே.

ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட ஊகங்களின் அடிப்படையில், இப்போதைக்கு இந்த மானாபரணன் மாகோனுடன் இணைந்து வந்த ஒரு தென்னிந்திய இளவரசன் என்றும், பொலன்னறுவையைக் கைப்பற்றி மாகோனின் முடிசூட்டுவிழா முடிவுற்ற பின் அவன் மாகோனைவிட்டுப் பிரிந்துவிட்டதாகவும் கொள்ளலாம். வேறு புதிய சான்றுகள் கிடைக்கும் பட்சத்தில், இம்முடிபு மாற்றப்பட வேண்டியதாகும்.

### 8. மகிந்தாவும், ஜயபாகுவும்

மாகனதும் ஜயபாகுவினதும் இணைந்த செயற்பாடுகள் போல, மகிந்தா - ஜயபாகு செயற்பாடுகள் பற்றியும் சூளவம்சத்தில் குறிப்புகள் உள்ளன. பராக்கிரமபாகு II மாகனுக்கெதிரான போராட்டத்தைத் தொடங்கியதும் மாகோனது கோட்டைகள் பலப்படுத்தப்பட்டன. புலத்திநகர கொத்சார, கந்தலாவ (கந்தளாய்) கக்கலாய் படி, குருண்டி, மானாமத்த, மகாதிந்த, மன்னார, புலச்சேரி, வெலிக்காம, கோண, மடுபாதித்த, சூகரதிந்த ஆகிய இடங்களில் மகிந்தாவும் ஜயபாகுவும் கோட்டைகளைப் பலப்படுத்தினர். ஆயிரக்கணக்கான தமிழ், கேரள போர் வீரர்கள் கொண்ட படைகள் இங்கு காணப்பட்டன. (சூளவம்சம் - பக். 149-150)

"தமிழ் அரசர்களான மகிந்தாவும் ஜயபாகுவும் கோட்டைகளை பலப்படுத்தினர்[16]" எனச் சூளவம்சம் குறிப்பிடுவதிலிருந்து இவர்கள் இருவரும், அரசர்கள் எனக் கணிக்கப்பட்டனர் என்பதும் மகிந்த என்பவனும் ஜயபாகுவைப் போலவே முக்கியத்துவம் பெற்றவன்



என்பதும் பெறப்படுகிறது. ஆனாலும் இந்த மகிந்தாவைப் பற்றி வேறு இடங்களில் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

"மகிந்தன்" என்பது காலிங்கவம்சப் பெயர். எனவே இந்த மகிந்தன் கலிங்க மாகோனுக்கு மிகவும் வேண்டியவனாகவும், ஜயபாகுவைப் போலவே ஒரு உபராஜனாகவும் மாகோனின் பிரதிநிதியாக ஆட்சிபுரிந்தவனாகவும் இருக்கவேண்டும். ஜயபாகு மாகோனுக்கு வலது கரம் போன்றவன் என ஏற்கனவே பார்த்தோம். அவனோடு இணைந்து, ஈழத்தின் பல பாகங்களிலும் உள்ள கோட்டைகளைப் பலப்படுத்தும் பணி இவர்களிடம் ஒப்படைக்கப் பட்டத்திலிருந்து இவர்கள் இருவரது முக்கியத்துவத்தையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

### 9. வன்னிமைகள்

இலங்கையில் வன்னிமைகள் என்ற வகுப்பினர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நிலை பெற்றிருந்த போதும், மாகோன் காலத்தில் அவர்கள் அதிக அளவில் இலங்கைக்கு வந்துள்ளனர் என்பது கவனத்துக்குரியது. இதுபற்றி கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், வன்னி உபட்ட, மட்டக்களப்பு மான்மியம் போன்ற நூல்கள் பல தகவல்களைத் தருகின்றன.

மாகோனுக்குப் பல உபராஜர்கள் இருந்தபோதிலும், கிராமப் புறங்களில் ஆட்சியைச் செவ்வனே நடத்துவதற்கு இந்த வன்னிமைகள் பெரும் துணையாக இருந்தனர். எனவே மாகோன் பல வன்னிமைகளை தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்தான். இவர்கள் சிற்றரசர்களுக்குரிய அதிகாரங்களுடன் செயல்பட்டனர். மாகோன் காலத்துக்கு முந்திய சில வன்னிமைகளின் விவரம் வருமாறு[17]:

(i) ஸீகள வன்னி - மாகன் ராஜரட்டையை ஆட்சி செய்த காலத்தில் விஜயபாகு (III) மாயரட்டையில் உள்ள ஸீகள வன்னிமைகளை அடக்கி ஆண்டான் எனப் "பூஜாவலிய" கூறும் (பூஜாவலிய சுரவீர பதிப்பு-1921). விஜயபாகு (IV) வன்னிராசன் என்ற நிலையை அடைந்து மாயரட்டையில் அதிகாரம் செலுத்தினான் என சூளவம்சம் கூறும். (சூளவம்சம் LXXXI - குறிப்பு ii).

இவனது மகனான பராக்கிரமபாகு II ராஜரட்டையிலும், ரோகணையிலுமுள்ள வன்னி மன்னர்கள் மேல், தனது ஆதிக்கத்தைச் செலுத்தினான். (சூளவம்சம் (LXXXIII - குறிப்பு 10)

ராஜரட்டை, மாயரட்டை, ரோகணை ஆகிய மூன்று பிரதேசங்களிலும் வன்னிமைகள் இருந்தனர் என கலாநிதி சி. பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார்.[18] (The Kingdom of Jaffna. pp. 163).

மாகோன் காலத்து வன்னிமைகள்பற்றி, மட். மான்மியம் கூறுகிறது[19]. (மட். மான்மியம், பக் : 54, 95, 104). அவற்றின் விவரம் வருமாறு -

(ii) பொலன்னறுவை வன்னிமைகள் : பொலன்னறுவையில் நீண்ட காலம் ஆட்சி செய்த மாகன், மட்டக்களப்பு, திருகோணமலை போலவே பொலன்னறுவையிலும் வன்னிமைகளை நியமித்திருந்தான். அவர்கள் பின்பு, பராக்கிரமபாகு II போன்ற மன்னர்களின் தீவிரத்தால், அங்கு நிலைபெற்றிருக்க முடியவில்லை.

(iii) புத்தளத்து வன்னிமைகள் : யாழ்ப்பாணத்து வன்னிமைகள் சிலாபம் வரை பரவியிருந்தனர் எனக் குவேராஸ் அடிகள் குறிப்பிடுகிறார்[20]. (The Temp, Spirt, Conquest of Ceylon. Translated by Fr. S.G. Perera 1930 pp. 47). எனவே மாகோன் நியமித்த வன்னிமைகள் இப்பகுதியிலும் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்களைப் பற்றிய முழு விவரங்களும் கிடைக்கவில்லை.

(iv) குளக்கோட்டன் காலத்து வன்னிமைகள் பற்றி "யாழ்ப்பாண வைபவமாலை" கூறும்.[21] (யா.வை.பக்.11) இவனால் குடியேற்றப்பட்ட வன்னிமைகள் தொடர்ந்து தமது அதிகாரத்தை நிலைநிறுத்தினர். அவன் வன்னியரைக் குடியேற்றிய ஏழு நாடுகளிலும், ஏழு விவசாயக் குடிகளிருந்தன. இவ்வேழு குடிகளின் வருமானமும் கோணேசர் கோயிலுக்கே சென்றன. பின்பு பாண்டி நாட்டிலிருந்து வந்த 59 வன்னியரும் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர் என யாழ்ப்பாண வைபவமாலை கூறும்.

பிற்காலத்தில் பனங்காமம், முள்ளியவளை, கருநாவல் பற்று, தென்னமரவாடி, மேல்பற்று, கரிக்கட்டு மூலை, செட்டி குளம் முதலிய பிரதேசங்களில் இருந்த வன்னிமைகள் மிகுந்த ஆதிக்கம் செலுத்தினர். இவர்களில் சிலர் அந்நியரின் அதிகாரத்துக்கு அடிபணியாது



அவர்களை எதிர்த்து நின்ற செய்திகளும் உள. இவ்வகையில் அடங்காப்பற்று, கைகலை வன்னியர் போன்றோரது வீர வரலாறுகள் குறிப்பிடத்தக்கவை.

## 10. ஆட்சிக் கட்டமைப்பு

மாகோனின் ஆட்சி நீண்ட காலம் நிலைபெற்றிருந்தமைக்கு மாகோனின் துணைவர்களாகிய ஜயபாகு (குளக்கோட்டன்) மானாபரணன் (தளபதி) போன்ற பெருந்தலைவர்களும், வன்னிமைகள் போன்ற சிற்றரசர்களும் உறுதுணையாக இருந்தனர் என்பதை மேலே பார்த்தோம். இவர்களை நிர்வாக ரீதியில் கூட்டிணைத்து அதிகாரப் பரவலாக்கல் செய்து, கட்டி ஆண்ட மாகோனின் தலைமைத்துவ ஆளுமை இங்கு நினைவு கூரத்தக்கது.

சாதாரணமாகவே, உட்பூசல்களும், குத்துவெட்டுகளும் ஆட்சிக் கவிழ்ப்புகளும், சூழ்ச்சி வலைகளும் நிறைந்த சிங்கள வரலாற்றில், ஒரு தமிழ் மன்னனாகிய மாகோனின் ஆட்சி அவ்வாறு சிதைந்து போகாமல் கட்டுக்கோப்புடன் நீண்ட காலம் நிலைபெற்றிருந்தது என்னும் உண்மை வரலாற்று ரீதியாகவும், ஆய்வு ரீதியாகவும் போற்றுதற்குரியது. சிங்கள, பாலி வரலாற்று நூல்கள் மாகோனைப்பற்றிப் பலபட இழிவாகக் கூறியபோதும், மேற்கண்ட உண்மை அவனது ஆட்சிச் சிறப்புக்குச் சிறந்த அகச்சான்றாக அமைவதையும் இங்கு நாம் மனங்கொள்ள வேண்டும்.



## அடிக்குறிப்புகள்

1. Culavamsa - translated by wilhelm Gaiger. 1930 Colombo -
   pp. 149 Ch. LXXXIII notes 15-19.
   pp. 145 Ch. LXXXIII notes 26, 29, 49.
   Pujavaliya - Edited A.V. Suravera - 1959 notes 116. குளக்கோட்டன் தரிசனம் - க. தங்கேஸ்வரி மட்டக்களப்பு 1993-பக். 61-64.
2. Culavamsa - translated by wilhelm Geiger 1930. Colombo -
   pp. 145 Ch. LXXXII notes 26, 29, 49.
   pp. 149 Ch. LXXXII I notes 15, 19, 20, 22.
3. Pujaveliya - Edited A.V. Suravera 1959 notes 116.
4. Elu. Attanagaluvamsa - Ed. Rev. Tennakone. Colombo - 1948 pp. 45.
5. History of Ceylon - Vol. I. Part II. The Damabadeni Dynasty - pp. 615.
6. Culavamsa - Ch. LXXX notes 72-75, pp. 133.
7. C.A.L.R. - Vol. X: 47.
8. History of Ceylon vol. I Part II pp. 619. Culavamsa Gaiger Ch. LXXXVIII pp. 183-184.
9. Ceylon Tamil Incriptions - Part I pp. 24-26.
10. Culavamsa ch. I LIX pp. 209 Noes 1, 2.
11. Ibid Ch. LXXXVII pp. 179 Notes 16, 17.
12. Ibid Ch. VCII pp. 219 Notes 1, 2.
13. Culavamsa Ch. LXXX pp. 132-133 Notes 61-70, 74-79.
14. A.R.E. - 1982 pp. 5
    South Indian Incriptions III pp. 56.
    A.R.E. - 1916 notes 339.
15. Culavamsa - I Ch. LXI - pp. 225 Notes 5, 6, 7.
16. Ibid Ch. LXXXIII pp. 149 Notes 15-22.
17. Ibid Ch. LXXVI pp. 135 Notes 2-6.
    Ch. LXXXIII pp. 149 Notes 10.
18. The Kingdom of Jaffna - Dr. S. Pathamanathan. 1978 Ceylon pp. 163.
19. மட்டக்களப்பு மான்மியம் - பக். 54, 95, 104.
20. The Temporal and Spritual Conquest of Ceylon by Fernao de Queyroz - translated by Fr. S.G. Perera, Colombo - 1930 pp. 47.
21. யாழ்ப்பாண வைபவமாலை - பதிப்பாசிரியர். குல. சபாநாதன் பக். 11-12.



# VII மாகோன் வகுத்த வன்னிமை

### 1. கட்டுக்கோப்பான ஆட்சிமுறை

மாகோன் வருகைக்குமுன் இலங்கையின் ஆட்சியாளருக்குள் இருந்த உட்பகை, குத்துவெட்டு, ஆட்சிக்கவிழ்ப்பு பற்றி சூளவம்சத்தில் விரிவான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. நிசங்கமல்லன் (1187 - 1196) மறைவுக்கும் மாகோன் (1215) வருகைக்கும் இடைப்பட்ட 20 வருட காலத்துள் 11 ஆட்சியாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

முந்திய அத்தியாயம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளதுபோல் 1187 முதல் 1215 வரை, நிசங்கமல்லன் (1187-96), அவனது மகன் வீரபாகு - II (1196), அவனது சகோதரன், விக்கிரமபாகு - II (1196), மருமகன் சோடகங்கன் (1196-97), கீர்த்தி (கிட்டி 1197-1200), மற்றொரு சகோதரனான சாகசமல்லன் (1200-1202), மனைவி கல்யாணவதி (1202-1208), தர்மாசோக (1208), அணிகங்கன் (1209-17 நாட்கள்) லோகேஸ்வரன் (1210-11-9 மாதங்கள்), லீலாவதி (7 மாதங்கள் 3 முறை) மாகோன் (1215) முதலியோர் ஆட்சி செய்துள்ளனர்.

இவர்களுள் நிசங்கமல்லனின் மகனான வீரபாகு என்பவன் ஆட்சிபீடம் ஏறிய இரண்டாம் நாளே அவனது தளபதியால் கொலை செய்யப்பட்டான். விக்கிரமபாகு 3 மாத ஆட்சியின் பின் நிசங்கமல்லனின் மருமகனான சோடகங்கனால் கொல்லப்பட்டான். சோடகங்கன் 9 மாத ஆட்சி முடிவதற்குள் அவனது தளபதியால் கொல்லப்பட்டான்.

இது, மாகோன் வருகைக்கு முன் இலங்கையின் ஆட்சியாளர்களின் நிலை.

இந்தப் பின்னணியில் மாகோனது 40 வருடகால ஆட்சி நெடிதுயர்ந்து நிற்கிறது. இதுபற்றிச் சிந்திக்கும்போது அவனது ஆட்சிமுறை பற்றி ஆராய வேண்டியது அவசியமாகிறது.

துரதிர்ஷ்டவசமாக அத்தகைய விரிவான தகவல்கள் எதையும் பெறமுடியாதுள்ளது. ஆனால் மாகோன் வகுத்த வன்னிமை பற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளன. வன்னிமைகள் மூலம் கிராமங்களில் தனது ஆட்சி முறைமையை நிலைநிறுத்தியதுடன், கோயில்களின் நிர்வாகத்துக்காக சில சட்டதிட்டங்களையும் மாகோன் வகுத்துள்ளான். சில கல்வெட்டுப் பாடல்கள் மூலம் இவற்றை அறியமுடிகிறது. இதனை மாகோன் வகுத்த வன்னிமை எனக் குறிப்பிடலாம்.

## 2. இலங்கை – இந்தியத் தொடர்புகள்

ஆலயக்கடமைகள் செவ்வனே நிறைவேற வேண்டும் என்பதற்காக இந்தியாவிலிருந்து தொழும்பாளர்களை (ஆலயத் தொண்டு செய்வோரை) வரவழைத்தும் அவர்களுக்கு நிலையான குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும், கோயில்களுக்கு நிவந்தங்களை வழங்கியும், இவன் இக்கடமைகளை நிறைவேற்றினான். இச்சட்ட திட்டங்கள் இன்றுவரை கிழக்கிலங்கைக் கோயில்களில் கடைப்பிடிக்கப்படுவது, இவ்வற்றின் உறுதிப்பாட்டுக்கும் ஒரு சான்றாகிறது. இவ்விடத்தில் இந்திய - ஈழத் தொடர்புகள் பற்றியும் நோக்குதல் தகும்.

வரலாற்றுக்காலம் முதல் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே இருந்த தொடர்புகள் பற்றி, ஏராளமான சான்றாதாரங்கள் உள்ளன. இவற்றுள் பல படை எடுப்புக்கள் பற்றியும் படை உதவிகள் பற்றியும் வரலாற்றில் நாம் பார்க்கிறோம். முதன்முதலாக சோழப்பேரரசின் எழுச்சிக்காலத்தில் (கி.பி. 985) ஈழம் சோழர்களது நேரடி நிர்வாகத்தின் கீழ் ஒரு மாகாணமாக அமைந்தது. ராஜாராஜ சோழன் (985) காலம் முதல் சோழ அரசின் பிரதானிகள் அவர்களது பிரதிநிதிகளாக ஈழத்தில் ஆட்சி செய்தனர். இதனால் திராவிட கலாசாரமும், சைவ சமய, சமூக அனுஷ்டானங்களும் ஈழத்தில் வேரூன்றி நிலைபெற்றன.

பொலன்னறுவையில் காணப்படும் சில தேவாலயங்களும் மற்றும் சைவ சமயச் சின்னங்களும், சோழர் காலத்தைச் சேர்ந்தவை என்பது யாவரும் அறிந்த உண்மை. மாகோன் காலத்திலும் வீரசைவ வணக்கம் இலங்கையில் வேரூன்றி நிலைத்தது. மாகோன் திருப்பணி செய்ததாகக் கூறப்படும் பல சிவாலயங்கள் பற்றியும், அவற்றின் நிர்வாகமுறை பற்றியும் கல்வெட்டுப் பாடல்கள் கூறுகின்றன. அவற்றைப் பின்னால் விரிவாகப் பார்க்கலாம்



## 3. வன்னிமை ஆட்சியும் நிர்வாகமும்

மாகோன் காலத்துக்கு முன்பிருந்தே இலங்கையில், வன்னியர்கள் ஆட்சி நிலைபெற்றிருந்தது என்பதையும் வன்னியர்கள் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதையும் ஏற்கனவே பார்த்தோம். மாகோன் காலத்தில் வன்னியர்களின் குடியேற்றம் அதிகமாகியதுடன், அவர்களுக்குள்ள அதிகாரங்களும் அதிகரித்தன. பிற்காலத்தில் நிலையான பல வன்னியரசுகள் இலங்கையில் ஏற்படுவதற்கு இது வழிவகுத்தது எனலாம். போத்துக்கேயர் ஆக்கிரமிப்பின்போது அவர்களை எதிர்க்கும் அளவுக்குச் சில வன்னியரசுகள் ஆற்றல் பெற்றிருந்தன என்பதையும் வரலாறு கூறுகின்றது.

மாகோன் காலத்தில் இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும், பல வன்னிமைகள் நிலைபெற்றிருந்தன. மாகோன் காலத்துக்கு முந்தியவர்களும், மாகோன் காலத்தில் குடியேற்றப்பட்டவர்களும் இதில் அடங்குவர். மாகோன் வருகை (1215) ஈழ வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அவன் வருகையோடு பொலன்னறுவை ராசதானி வீழ்ச்சியடைந்து பொலன்னறுவை, அனுராதபுர ராசதானிகள் அடர்ந்த காட்டுப் பிரதேசமாக மாறின. சிங்கள அரசின் ராசதானிகள் தெற்கு நோக்கி நகர்ந்தன. தம்பதேனியா, யாப்பகுவ, குருநாகல் என ஒதுங்கின. எனவே வடக்கே ஒரு சுதந்திர தமிழ் ராச்சியம் உருவாக வழிபிறந்தது.

அவ்வாறே கிழக்கிலும், சிங்கள ஆட்சிப்பிடிப்புகள் தளர்ந்து போக அங்கும் மாகோனின் தலைமையில் ஒரு சுதந்திர தமிழ் ஆட்சி முறை செயற்பட்டது.

ஒரு காலகட்டத்தில் முழு இலங்கையுமே மாகோனின் ஆட்சியின் கீழிருந்தது என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இவ்வாறு மாகோன் இலங்கையை ஆட்சி செய்த போது நிர்வாக ஒருங்கிணைப்புக்காகப் பல வன்னிமைகள் வகுக்கப்பட்டன. சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆலய நிர்வாகத்துக்காக வகுக்கப்பட்ட வன்னிமைகளும் அவற்றின் சட்ட திட்டங்களும் இன்றும் சில ஆலயங்களில் பின்பற்றப்படுகின்றன.

மாகோன் வகுத்த வன்னிமைகள் அவனது உபராஜர்களாலும் நிறைவேற்றப்பட்டன. அவ்வகையில் அவனது வலது கரமாக

விளங்கிய குளக்கோட்டன் வரலாற்றில் நிலைத்த புகழைப் பெறுகிறான்.

கிழக்கிலங்கையில் திருகோணமலைப் பிரதேசத்திலும், கொட்டியாரம், சிலாபம் போன்ற இடங்களிலும், இவனது ஆலயத் தொண்டுகள் சிறப்புப் பெற்றன. கோணேசர் கல்வெட்டுப் பாடல்கள் மூலமும் வேறு ஏட்டுப் பிரதிகள் மூலமும் இவ்விவரங்கள் தெரிய வருகின்றன.

மட்டக்களப்புப் பகுதியிலே மாகோன் வகுத்த வன்னிமைகள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. மட்டக்களப்பிலே திருக்கோயில் முதல் வெருகல் வரை, பெரிய போரதீவு, கொக்கட்டிச் சோலை உட்பட, மாகோன் வகுத்த வன்னிமை சட்ட திட்டங்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன.

இச்சட்டதிட்டங்கள் தொடர்பான கல்வெட்டுப் பாடல்கள் சில "மட்டக்களப்பு மான்மியம்" என்னும் ஏட்டுப் பிரதியில் இடம் பெறுகின்றன. (இவ்வேட்டுப்பிரதி மகாவித்துவான் F.X.C. நடராசா அவர்களால் நூலாகத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது) இதுபோன்று வேறு சில ஏட்டுப் பிரதிகளும் மட்டக்களப்பில் உலவுகின்றன. ஆனால் இவற்றில் சொல்லப்படுகின்ற பல விஷயங்கள் கேள்வி ஞானத்தில் எழுதப்பட்டவைபோல் தோன்றுகின்றன.

திருகோணமலை வன்னிமை தொடர்பாகக் கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசல புராணம் முதலிய பாடல்களில் இடம்பெறும் தகவல்கள் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கவை. இவற்றைப்போலவே மட்டக்களப்பு மான்மியம் பாடல்களும் தகவல்களைக் கொண்டிருக்கின்றன; இரண்டுக்கும் உள்ள ஒப்புமைகளும், மாகோனுடைய ஆட்சித் தொடர்புகளுக்கு ஆதாரமாகின்றன.

மாகோன் வகுத்த வன்னிமை தொடர்பாக "மட்டக்களப்பு மான்மிய"த்தில் இடம்பெறும் சில பாடல்களை இங்கு தருகிறோம்.

### 4. சாதியியல், ஆலயவியல் (குளிக் கல்வெட்டு முறை)

குளிக் கல்வெட்டு என்பது சாதிப்பகுப்பு, ஆலயக் கடமைகள் பற்றிக் கூறும் கல்வெட்டு ஆகும். மாகோன் அரனூழியம் வகுத்த முறை என்றும் இதைக் குறிப்பிடுவர்.



இக்கல்வெட்டில் 5 பாடல்கள் உள. அவற்றுள் முக்கியமான 3 பாடல்களைக் கீழே தருகிறோம்.

(i) கண்டனொடு சருகுபில்லி கட்டப்பத்தன்
கருதரிய கவுத்தனு மத்தியாயன்
மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தியென்று
கோவசியர் மக்களிலே வருணமாக்கிப்
பண்டுமுறை தவறாமல் எழுகுடியாய்ப்
பகுத்தீசர் பணிபுரியப் பரவணியாய்
அண்டர்தமைச் சாட்சிவைத்துத் தத்தம்வாங்கி
அரனகத்து ஊழியராய் அமைத்துச் சொல்வார்.

(ii) சொல்லரிய விளக்கேற்றல் பூவெடுத்தல்
தூசகற்றல், சாணமிடல் அணிவிளக்கல்
நல்ல மலர்மாலைக் கட்டல் மேளமீட்டல்
நற்சந்தன மரைத்திடுதல் நெல்லுக்குத்தல்
துல்லியமாய் வளர்சிவிகை ஏந்திச்செல்லல்
தானிகட்டல் அமுதுவைத்தல் முதன்மைப்பார்ப்பான்
வல்லபதம் நீர்வார்த்தல் அகத்தில்தொண்டு
புரியுமென்று மாகோனும் வகுத்துப்பின்னும்.

(iii) பின்னாக வருமாகனிதனை மாற்றப்
பிடித்தடித்துத் துலங்கிட்டு வருத்தினாலும்
உன்னாணை உங்களெழு வகுப்போர்க்கிட்ட
உத்தரவுமாற்றி லெழுநரகில் வீழ்ந்து
என்னாணை உங்கள் பிறசந்ததிகள்
எண்ணூழி காலமட்டும் வறுமையுற்று
தன்னாணை சதாசிவனார் பாத்தாணை
சங்கரனார் உள்ளியாய்த் தரிப்பீரென்றார்.

இப்பாடல்களின் அடியில் "இது நிகழ்ந்தது கலிபிறந்து நாலாயிரத்து இருநூற்று ஐம்பதாம் வருஷம்" என்ற குறிப்பு காணப்படுகிறது. (அதாவது 4250 - 3102 = கி.பி. 1148 என்பது). ஆனால் இவ்வாண்டு மாகோன் காலத்தோடு (1215-1255) பொருந்தி வரவில்லை.

மேற்படி கல்வெட்டுப் பாடல்கள் பிற்காலத்தில் எழுதப்பட்டவை என்பதும், அவற்றை எழுதிய புலவர்கள் ஆய்வறிவு

உள்ளவர்கள் அல்ல என்பதும் நாம் ஊகிக்கக்கூடியவை. எனவே ஆண்டுக்கணக்கில் தவறுகள் ஏற்பட இடமுண்டு. ஆனாலும் பாடல்களில் சொல்லப்படும் செய்திகள் தற்போதுள்ள நடைமுறையுடன் ஒத்துப்போவதால் அவற்றில் தவறுகள் இல்லை எனக் கொள்ளலாம்.

இப்பாடல்களில் மாகோன் வகுத்த ஏழு குடிகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. அவையாவன:-

(i) கண்டன்குடி (ii) சருகுபில்லிகுடி
(iii) கட்டப்பத்தன்குடி (iv) கவுத்தன்குடி
(v) அத்தியாயன்குடி (vi) பொன்னாச்சிகுடி
(vii) வுயித்திகுடி

இந்த ஏழு குடிகளும் இன்றும் திருக்கோவிலில் உள்ள குடிகளாகும். இவை தற்காலத்தில் பின்வருமாறு அழைக்கப்படுகின்றன.

(i) கண்டங்குடி (ii) சருவிலிகுடி
(iii) கட்டப்பத்தங்குடி (அல்லது சங்கரப்பத்தாங்குடி)
(iv) கவுத்தங்குடி (v) அத்தியாகுடி
(vi) பொன்னாச்சிகுடி (vii) வச்சினாகுடி

இவற்றுள் முதல் மூன்று குடிகளாகிய கண்டங்குடி, சருவிலிகுடி, கட்டபந்தங்குடி ஆகிய மூன்று குடிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தற்போது கோயில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவுள்ளனர்[2] எனத் தெரியவருகிறது. (மட். சைவக் கோயில்கள் பக். 50)

இந்த ஏழு குடியினரும் செய்யவேண்டிய கோயிற் பணிகள் ("ஈசர் பணி") என்னவென்பதும் இக்கல்வெட்டுப் பாடல்களிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

## 5. கொக்கட்டிச்சோலையில் மாகோன் வகுத்த வன்னிமை

கொக்கட்டிச் சோலை என்பது மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே மண்முனைப் பகுதியில் உள்ள ஒரு பழம்பெரும் கிராமமாகும். போத்துக்கேயர் வருகைக்கு முன்பு இப்பகுதி பிரபல்யமான மட்டக்களப்புப் பகுதியாக இருந்தது. இங்குள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் மாகோன் வகுத்த வன்னிமை பின்பற்றப்படுகிறது.



"மட்டக்களப்பு மான்மிய"த்தில் இடம்பெறும் கல்வெட்டுப் பாடல்களில் மண்முனைப்பற்று என வழங்கப்பட்டன. கொக்கட்டிச் சோலைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.[3] "பங்குகூறும் கல்வெட்டு", "சாதித் தெய்வக் கல்வெட்டு", "தாதன் கல்வெட்டு", "போடி கல்வெட்டு", "முக்குகர் வன்னிமை" முதலியன கொக்கட்டிச் சோலையோடு தொடர்புறும் கல்வெட்டுக்களாகும். இவற்றுள் "பங்குகூறும் கல்வெட்டு", "பங்கு தடுக்கும்முறை கல்வெட்டு" என்பன மாகோன் வகுத்த விதிமுறைகளைக் கூறுகின்றன.[4] "பங்கு கூறும் கல்வெட்டு" பாடல்களிலிருந்து சில வரிகள் வருமாறு:

"குருவளர் கலிங்கன் செகதலம் புகழ
மருமலர் தேவ தொண்டரை வகுத்து
ஆலய மியற்றி அணிமணி அமைத்துச்
சீலமோ டானுரு செய்தாங் கிருத்தி
மறையோன் றன்னை வாவென வழைத்து
முறையாய்ப் பூசை மூன்றிரு நேரம்
உறுமன் குலத்தாய் மேவி ஆலயத்தில்
அறகொடு தற்பை, ஆவின் பால்கனி
நற்நெய் பொங்கல் நல்லின நீரொடு
சிறுதேன் சருக்கரை தேங்காய் கரும்பு
மற்பொரு மாங்கனி வருக்கன் தேங்காய்,
அற்புத முடனே, அநேக வர்க்கமும்
சேர்த்து நீபடைத்துச் சிவனார்க் கூட்டச்
சூத்திரர்சாதி தொழுது உன்னூழியம் புரிய
வகுப்பொடு வகுப்பாய் வாழமைகளறிந்து
செகத்தோர் துதிக்கத் திருவேட்டை சென்று
ஆடிப் பாடி ஆறி அங்கிருந்து
................................................"

மேற்குறித்த கல்வெட்டுகளில் கோயில் கடமைகள் குறிப்பிடப்படுகின்றன. இக்கல்வெட்டின் பின்பகுதியில் பங்குகூறுதல் இடம்பெறுகிறது. அதாவது ஆலய விழாக்களின் போது "வரிசை" வாங்குவோர் யார் யார் என்பது முன்னுரிமை அடிப்படையில் கூறப்படுகிறது.[5]

..........................................................

ஆரார்க்கு முன்பின் அளிப்பது என்ன
திறலோன் கலிங்கன் செப்பினன்
பெரிய திருப்பதி வாசல்
அறமுயர் வேதம் நம்பியரி திருப்பாட்டுச்
சரிகை சன்னாசம் தார்வளர்
தேசம், வன்னிமை, வரிசையா யுலகுறு வருகுருநாதா
பூபாலன் கோத்திரம், பூவசியன்
பாவலர் புகழும் பகுதி புன்னாலை
மண்முனை மட்ட வாழ்வுறு களப்பு
பெண்பெறு நாடு பேர்பெறு நகரம்
கண்டி, கதிரை, கந்தளை, மாவலி
பண்டுமுன் னயோத்தி பங்குகள் முதலாய்
கூறெனக் கொற்றவன் கூறிய உழவர்
ஆறியபின்பு அரசனை வணங்கி

..........................................................

இதன் விளக்கம் பின்வருமாறு, மட்டக்களப்பு மான்மியத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பெரிய திருவாசல் என்பது கைலையங்கிரி; வேதம் என்பது பிரம்மன்; நம்பி என்பது விஷ்ணு; திருப்பாட்டென்பது சிவன்; சரிகைச்சன்னாசம் என்பது படையாட்சி, உலக குருநாதரென்பது குரு; ஆதி பூபால கோத்திரமென்பது கலிங்க வெள்ளாளர்; பூவசியன் என்பது வணிகன்; புன்னாலை என்பது பணிக்கன் வன்னிச்சி; மண்முனை என்பது உலகிப் போடி குலம்; மட்டக்களப்பென்பது தனஞ்செனான்; நாடு என்பது இராமநாட்டு வேடன்; நகரம் என்பது வவுனிய வெள்ளாளர்; கண்டி என்பது நிலைமை (நிலாமை?); கதிரை என்பது வேடப்பெண்; கந்தளை என்பது மலையாள முக்குவர்; மாவலி என்பது இடையர்; அயோத்தி என்பது மறவர். இது தகுதியுடையவர்களே வாங்கும்படி எங்கள் முதன்மையாகிய மகாவம்சக் கலிங்கராசன் இட்ட முறைமையென்று, வன்னிபங்கள் விமலதருமனிடம் கூறி முகமனும் பெற்றனர். இது நிகழ்ந்தது கலி 4738 (கி.பி. 1636). ("மட்டக்களப்பு மான்மியம்" பக். 101-102).



### 6. முற்குகர் வன்னிமை

இக்கல்வெட்டுப் பாடல்களில், கொக்கட்டிச் சோலைப் பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட சாதிமுறை விளக்கப்படுகிறது. முற்குகரின் ஏழு குடிகளும் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன[6]:

சீர்தங்கு வில்லவரும், பணிக்கனாரும்
சிறந்த சட்டிலான் தனஞ்சயன்றன்
கார்தங்கு மாளவன், சங்குபயத்தன்,
கச்சிலாகுடி முற்குகரின மேழேகாண்
வார்தங்கு குகன் வாளரசகண்டன்
வளர் மாசுகரத்தவன் போர்வீரகண்டன்
பார்தங்கு தண்டவாணமுண்டன் பழமைசெறி
..........................................................

ஆகவே முற்குகரின் ஏழு குடிகளும், வில்லவன்குடி, பணிக்கன் குடி, சட்டிலான்குடி, தனஞ்சயன்குடி, மாளவன்குடி, சங்குபயத்தன்குடி, கச்சிலாகுடி எனச் சொல்லப்படுகிறது.

இவை தவிர சாதி அடிப்படையில் சில குடிகள் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு சாதிக்கும் ஏழு ஏழு குடியினர் நிர்ணயிக்கப்பட்டுள்ளனர். அக்குடிகள் பற்றி மட்.மான்மியம் தரும் விவரம் வருமாறு:-[7]

**(i) சிங்களக்குடி :**

"... அரியகலமிடுமுதலி, மீகான் கோடை, அவுறாளை மேலச்சேனை, பள்ளச்சேனை, பெரிய கல்மடுமுதலி மூவாங்கல்லு பேர்கள் ஏழே..."

**(ii) வெள்ளாளக்குடி :**

இக்குடிக்கான ஏழு குடிகள் விவரம் கொடுக்கப்படவில்லை; பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது;

விறல்கலிங்கன், படையாட்சி இருவருந்தான், முத்தகல்லில்
இருத்திவைத்து, மாகோன்தானும், முதன்மைதரும்
படையாட்சி வன்னியைச் சேர்ந்துபெறும்
தோப்பாவையைக் கைவசப்படுத்திப் படையாட்சி
குலத்தார்க்குப் பகுத்து ஈந்தான்

**(iii) செட்டிகுடி**

மங்குச்செட்டி, மாணிக்கன், சங்குச்செட்டி
சதாசிவன், சிங்கச்செட்டி, சின்னவன், பங்குச்செட்டி
பகுத்த தேழே....

**(iv) நாவிதர்**

சாரியுறு மண்முனையதில் அறவுதங்கும், மகிழடித்தீவு
சவளக்கடை, ஏரியுறு பாலமுனை, வழலவாயிலங்கு
சம்மான் துறை யென்னு மேழாய்...

**(v) கரையார்**

கரையூரர், கம்பளியார், ஆறுகாட்டி, கருது முதலித்தேவன் வயித்திவேலன், தறைசெறி வங்காளம் வீரமாணிக்கன்தான் கரையார்குடி ஏழாய்த் தரித்தான் பாரில்.

**(vi) சீர்பாதர்**

துரையோர் வீரகண்டன், சீர்பாதம் துடர் சித்தாத்திரன் காலதேவன், காங்கேயன், நரையாவி, வேளாலி, முடவனென்னும், நாடதனில் பொட்டைப்பறைச்சி குடியேழே.

**(vii) பண்டாரப்பிள்ளைகள்**

ஏழு குடிகள் விவரம் இல்லை. இவர்கள் செய்யவேண்டிய கடமைகள் பற்றிய விவரம் மட்டும் உண்டு.

**(viii) தட்டார்**

களுவத்த பணிக்கன், வேலன், கறுத்தக்கண்ணி, பத்திச்சி கொளுங்க, குப்பட்டி, குசவன், பாலன்தட்டி வகைகள தாக்கி.

**(ix) கம்மாளன்**

சூரிய அடப்பன், சும்மாடு, கட்டாடிப் பதஞ்சலியார் வீரிய வேளானாருள மொத்திக் காலமுறு, வேலன் ஆரிய ஆட்டுவள்ளி, யானந்தி யாசாமி யேழுகுடிகளாக...

**(x) பறையர்**

வள்ளுவம், தொட்டி, தோட்டி, வாஞ்சொலி, சக்கிலியன், துள்ளும் வெட்டி யானந்த னேழாய்...



## 7. ஏட்டுப்பிரதித் தகவல்கள்

ஏக (xii)

இச்சாதிப் பகுப்புமுறை பிறிதொரு ஏட்டில் பின்வருமாறு காணப்படுகிறது: ஒவ்வொரு பகுப்பிலும் ஏழு குடிகள் அடங்குகின்றன.[8]

**(i) முற்குகர் :** வில்லவராசன் குடி, பணிக்கனாகுடி, படையாண்டகுடி, காலிங்காகுடி, உலகிப் போடிகுடி, தனஞ்சனாகுடி, மாளவரசன் குடி.

**(ii) வெள்ளாளர் :** கண்டங்குடி, சரிவிலிகுடி, கட்டைப்பத்தன் குடி, அத்தியாகுடி, கவுத்தன்குடி, வயித்தினாகுடி, பொன்னாச்சிகுடி.

**(iii) செட்டிகள் :** மங்குச்செட்டி, மாணிக்கன்செட்டி, சங்குச் செட்டி, சாம்பச்செட்டி, சங்கு சக்கரச் செட்டி, சதாசிவச் செட்டி, சின்னவன் செட்டி.

**(iv) சிங்களர் :** மீகாங்கொட முதலி, கல்மடு முதலி, அவுறாளை முதலி, மேல்சேனை முதலி, பள்ளச் சேனை முதலி, மூவாங்கல்லு முதலி, கொட்டாஞ்சேனை முதலி.

**(v) மறவர் :** சங்குப்பத்தன்குடி, கோப்பிகுடி, கச்சிலாகுடி, சட்டிகுடி, மாளவன்குடி, முண்டன் குடி, முறண்டன் குடி.

**(vi) கரையார் :** வைத்திவேலன் குடி, கம்பிளியார்குடி, ஆறுகாட்டியாகுடி, போற்றிகுடி, வீரமாணிக்கன் குடி, முதலித்தேவன் குடி, விசிறிப் பத்தினாச்சிக் குடி.

**(vii) சீர்பாதர் :** சிந்தாத்திரன்குடி, காலதேவன் குடி, காங்கேயன்குடி, நரையாவிகுடி, வெள்ளாவி குடி, முடவன்குடி, பொட்டைப்பறச்சிகுடி.

**(viii) பண்டாரப்பிள்ளை :** தேசத்துப் பண்டாரப்பிள்ளை, கல்லை தூக்கி, பறைதூக்கி, வேட்டிபிடி, கொடிதூக்கி, குருத்துக்கட்டி, வீதியலங்காரம்.

**(ix) கம்மாளர்குடி :** சூரியவடப்பன், சும்மாடுகுடி, ஆனந்தி குடி, தட்டாகுடி, குருட்டுமுத்தன்குடி, ஆட்டுவள்ளிகுடி, பதஞ்சலிகுடி.

**(x) நாவிதர் :** வலையிறவு நாவிதர், மண்முனை நாவிதர், மகிழடித்தீவு நாவிதர், சவளக்கடை நாவிதர், பாலமுனை நாவிதர், வலைவாய் நாவிதர், சம்மாந்துறை நாவிதர்.

**(xi) சாண்டார் :** களுவத்தைப் பணிக்கன், வேலாப்பணிக்கன், கறுத்தக்கண்ணி, பத்தினாச்சிகுடி, கருப்பட்டி காச்சி, குயக்குடி, பாலைப்பணிக்கன் குடி.

**(xii) பறையர் :** வள்ளுவப் பறையன்குடி, தோட்டிப் பறையன்குடி, தோட்டாயப் பறையன்குடி, சக்கிலிப் பறையன்குடி, வெட்டியான்குடி, சிங்களப் பறையர்குடி, வண்ணார்ப் பறையன்குடி

**(xiii) அடியார் :** மூலவேலனூட்டடியார், மொத்திக்காலனூட்டடியார், ஆனந்தக் கணக்கனூட்டடியார், வம்மிமோட்டடியார், போடியார் ஊட்டடியார், கதாப்போடி ஊட்டடியார், மடத்தடியார்.

**(xiv) வண்ணார் :** முதலைக்குடா வண்ணார், தாழங்குடா வண்ணார், ஒழுங்கு வண்ணார், கரையார வண்ணார், பாவாடை வண்ணார், கல்வயல் வண்ணார், மியாங்கொடை வண்ணார்.

## 8. சில வன்னிமைகள் பற்றிய விவரம்[9] (ஏட்டுப் பிரதியின்படி)

### i. முற்குக வன்னிமைகள் :

(அ) வாளரசு கண்ட வன்னியன்.
(ஆ) போர்வீர வெண்ட வன்னியன்.
(இ) தண்டவால் முண்ட வன்னியன்.
(ஈ) முறண்ட வன்னியன்.
(உ) முண்ட வன்னியன்.
(ஊ) அரசிலை காத்த வன்னியன்.
(எ) கிளை காத்த வன்னியன்.



### ii. வேளாள வன்னிமைகள் :

(அ) கொங்குவேளாளர்
(ஆ) வடுகவேளாளர்
(இ) மேழிவேளாளர்
(ஈ) காரைக்காட்டு வேளாளர்
(உ) மருங்கூர் வேளாளர்
(ஊ) புத்தூர் வேளாளர்
(எ) வீரச்சோலை வேளாளர்

### iii. வன்னிமை இருந்த ஊர்கள் சில :

(அ) கற்பகப்பண்டார வன்னிமை - கோரைக்களப்பு
(ஆ) செல்லப்பண்டார வன்னிமை - சிங்காரத்தோப்பு
(இ) அருணாசலப்பண்டார வன்னிமை - மலுக்கம்புட்டி
(ஈ) ஆனந்தப்பண்டார வன்னிமை - சம்மாந்துறை
(உ) அம்பக்கப்பண்டார வன்னிமை - நாதனை
(ஊ) அழகரெட்ணப்பண்டார வன்னிமை - மண்டபத்தடி
(எ) கனகரெட்ணப்பண்டார வன்னிமை - விளாவெட்டுவான்

## 9. குடிமுறை நிர்வாகம்

இக்குடிமுறைகளை ஆராயும்போது பின்வரும் வரலாற்றுத் தகவல்களைப் பெறமுடிகிறது:

(i) அக்காலத்தில், பல்வேறு குழுக்கள் தொட்டம் தொட்டமாக வாழ்ந்துள்ளன. ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவன் இருந்திருக்கிறான். இக்குடிகளின் வழித் தோன்றல்கள் அத்தலைவன் பெயரினாலேயே அழைக்கப்பட்டன.

(ii) இக்குடிமுறைமை அவர்கள் மேற்கொண்ட தொழில் ரீதியாகவே அமைந்துள்ளன. இந்த அடிப்படையிலேயே பண்டாரப்பிள்ளை, பறையர், நாவிதர், கம்மாளர் முதலியோர் அமைந்துள்ளனர்.

(iii) சிங்களவர்களும் இப்பகுதியில் கலந்து வாழ்ந்துள்ளனர். காலக்கிரமத்தில் அவர்கள் மத்தியிலும், குழுத்தலைவர்கள் தோன்றியுள்ளனர். ஆனால் அவர்கள் ஒதுக்கி வைக்கப்படவில்லை.

(iv) சகல குழுக்களின் பிரதிநிதிகளும் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பை மாகோன் ஏற்படுத்திக் கொடுத்தான். சிங்கள முதலிகளும் இதில் இடம்பெறுகின்றனர்.

(v) இக்குடிகளின் கடமைகளும், உரிமைகளும் மிக இறுக்கமாகப் பின்பற்றப்பட்டுள்ளன. பிறழ்வுகள் மிகப் பாரதூரமானதாகக் கணிக்கப்பட்டன.

(vi) விமலதர்மன் (1594-1604) காலத்தில், மாகோன் வகுத்த இவ்வழிமுறைகளை மக்கள் எடுத்தியம்ப, அவ்வாறே ஒழுக வேண்டுமென விமலதர்மன் பணித்துள்ளான்.

(vii) இக்குடிமுறைகள் இன்றுவரை தொடர்வதாலும் இறுக்கமாகப் பின்பற்றப்படுவதாலும், இவை மக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவர்கள்மேல் திணிக்கப்படவில்லை என்று கொள்ளவேண்டும்.

### 10. தற்கால நடைமுறை

இக்குடிமுறைகள் பற்றி இப்போது நோக்கும்போது, அவை அவ்வளவு முக்கியமற்றவைபோல் தோன்றினாலும் கிழக்கிலங்கையில் அவை இன்றும் மிக முக்கியமான விதிகளாகப் பின்பற்றப்படுவது கவனத்துக்குரியது.

மட்டக்களப்புப் பகுதியில் எழும் ஆலய நிர்வாகப் பிரச்சினைகள் இக்குடிமுறையிலேயே எழுகின்றன. இன்றைய இளம் தலைமுறையினர் இவற்றை மீறமுனைந்தால் ஊர்ப் பெரியவர்கள் ஆவேசம் கொண்டு மிக மூர்த்தண்யமாக இவ்வுரிமைகளை நிலைநாட்ட முயல்கின்றனர்.

மட். கச்சேரி நிர்வாகத்தின்கீழ், சில ஆலய நிர்வாகம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டபோது மேற்கண்ட உண்மைகளை நிதர்சனமாகக் காணமுடிந்தது. எனவேதான் இந்நூலிலும் இக்குடிமுறைகள் பற்றி விரிவாக ஆராயவேண்டி ஏற்பட்டது.

இக்குடிமுறைகள் மாகோன் வகுத்த வன்னிமையின் அடிப்படையில் அமைந்தவை என்பதை எண்ணும்போது அவனுடைய சட்டதிட்டங்கள் எழுத்தில் இல்லாவிட்டாலும் மக்கள் மத்தியில் மிக ஆழமாக வேரூன்றியுள்ளன என்பதைக் கருத்தில் கொள்ள முடிகிறது.



### 11. முன்னேஸ்வர வன்னிமை

கிழக்கில், திருக்கோயில், கொக்கட்டிச்சோலை, கோயிற்போர தீவு முதலிய ஆலயங்களில் மாகோன் வகுத்த வன்னிமை இடம்பெற்றது போலவே வடக்கில், முனீஸ்வரம், கோணேஸ்வரம் போன்ற ஆலயங்களில் குளக்கோட்டன் வன்னிமை இடம்பெற்றிருந்தது. இது, வடக்கே குளக்கோட்டனின் ஆட்சி இருந்தமைக்கு ஒரு சான்றாகவும் அமைகிறது.

இருவரது வன்னிமையின் ஒற்றுமையைக் காட்டும் வகையில், எமக்குக் கிடைத்த ஏட்டுப்பிரதி ஒன்றில் சில தகவல்கள் இடம் பெற்றிருக்கின்றன.[10] அதன் விவரங்களைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

முன்னீஸ்வரத்திலே, வாலசிங்க மகாராசா எனப்படும் குளக்கோட்டு மன்னன், திருப்பணி செய்து நிவந்தங்கள் வழங்கினான். சிந்தா அமிர்ததீர்த்தம், பசிவதீர்த்தம், கூபம் குளம் என்பவற்றை அமைத்தான். இந்தியாவிலிருந்து சோழகுல குருவாகிய நீலகண்ட சிற்பாசாரியாரையும், அவரது பத்தினி விசாலாட்சி அம்மாளையும், அவர்களது புத்திரர்களையும், மற்றும் பிராமணர்களையும், தொழும்பாளர்களையும் அழைத்து வந்து குடியமர்த்தினான்.

மதுரை, தொண்டை மண்டலம், திருச்சிராப்பள்ளி, கூடலூர் மருங்கூர் முதலிய இடங்களிலிருந்து பிராமணர், சைவர், செட்டிகள், வேளாளர், சங்கமர் முதலாம் 33 சாதியினரைக் கொண்டுவந்து குடியமர்த்தினான்.

அவர்களுக்கான பணிகள் பின்வருமாறு விதிக்கப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| **(i) சுத்த வேளாளர்** | : | கபடா, கோயில் வருமானங்களை அறவிடல், கோயில் உற்சவ காலங்களில் நெல், மரம், குருத்து, பழவகை கொடுத்தல். |
| **(ii) அகம்படி வேளாளர்** | : | பூவகை, மாவிலை, தென்னம்பூ, நெல் குற்றல், திருவிளக்கிடுதல், சந்தனம் வழங்குதல், சுவாமி எழுந்தருளப் பண்ணல். |
| **(iii) ஓரட்டிப் பண்டாரங்கள்** | : | தூபமேற்றல், புஷ்பமெடுத்தல் |

(iv) சிற்பாசாரியார் : கோயிற் பழுதுகளைச் சீர் செய்தல்.

(v) கொல்லர் : தீவத்தி, கத்தி, கோடரி செய்து கொடுத்தல்.

(vi) தச்சர் : தேர், வாகனம், மரவேலை செய்து கொடுத்தல்.

(vii) கன்னார் : பாத்திரங்கள் செய்தல், பழு பார்த்தல்.

(viii) மேளகாரர் : நடனமிடல், ஆரத்தி எடுத்தல்.

(ix) கண்ண வணிகர் : கோயில் செப்பனிடும் திருப்பணி.

(x) கோடரிக்காரர் : புன்னை, இலுப்பை, எண்ணெ ஊற்றுதல்.

(xi) கைக்கோளர் : திருவிளக்கு, கொடிச் சீலை, உத்தரீயம் கும்பவஸ்திரம் செய்தல்.

(xii) திமிலர் : தேர்வடம் இழுத்தல்.

(xiii) சாணார் : தீவத்தி, ஆலவட்டம், தோரணம் கட்டல், கிடுகு, கயிறு கொடுத்தல்.

(xiv) கருப்பட்டிக்காரர் : கருப்பட்டி, கடகம், பெட்டி கொடுத்தல்.

(xv) சங்கூதி : கோயில் நித்திய கருமங்களில் சங்கூதல்.

(xvi) மாலைகட்டி : கோயிற் கருமங்களுக்கு மாலைகட்டிக் கொடுத்தல்.

(xvii) வண்ணார் : கோயிலுக்குப் பரிவட்டம் போடல், பாவாடை விரித்தல், வெள்ளை கட்டல்.

(xviii) பறையர் : உற்சவ காலங்களில், மேளம் சேவித்தல்.

இவர்களை வழிநடத்த, தனியுண்ணாப் பூபால வன்னியனாகிய சுகுணதுங்க மகாராசனை நிர்வாகத் தலைவனாக்கினான்.



இவர்களைக் குடியமர்த்திய இடங்களாக முறையே பின்வரும் இடங்கள் குறிப்பிடப்படுகின்றன:

(i) முன்னேஸ்வரம், பம்பாய், பகலப் பிராமணத்தழுவை, கொக்குவில், தம்பகா, சுகுவெல, பள்ளமை, சுகம்பை, மண்டலாழை, மின்னிக்குளம், உகம்பிட்டி.

(ii) எலிவெட்டி, காக்காப்பள்ளி, மானாவரி, கராவெட்டி, கனங்கட்டி, இவிறால், பிராமணத் தழுவை, மூங்கில் வெட்டுவான், விலத்தவை, மண்டலாளை, வீரக்கொம்பத்தளுவை, பிரப்பங்கழி, ஒல்லித்தழுவை, மருதங்குளம், தித்திக்கடை.

(iii) பண்டரியாமூலை.

(iv) முன்னேஸ்வர தட்சணாபதி.

(v) கரவெட்டி, வங்காதனை.

(vi) வங்காதனை.

(vii) பலாக்குளம்.

(viii) தேவதாசி.

(ix) மரவொளி.

(x) சலாபம், பொன்னாங்காணி.

(xi) சலாபம், முன்னேஸ்வரம்.

(xii) திமிலை, மாயவனாறு.

(xiii) மணக்குளம்.

(xiv) கினிகொட.

(xv) காக்காப்பள்ளி, இனுப்பதனி, சியம்பளாகன்வெளி

(xvi) முன்னேஸ்வரம், திமிலை.

(xvii) முங்கதமுனை.

(xviii) வீரபாண்டியன்.

இவ்விவரங்கள், கன்னங்குடா திரு. மா. வேலாப்போடி அவர்களிடமுள்ள ஏட்டுப்பிரதியில் காணப்படுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. மட்டக்களப்பு மான்மியம், பதிப்பாசிரியர் F.X.C. நடராசா, 1952 - மட்டக்களப்பு. பக் : 70.
2. மட்டக்களப்பு சைவக் கோயில்கள், பாகம் I, பண்டிதர் V.C. கந்தையா, 1983, பக் : 50.
3. மட்டக்களப்பு மான்மியம், பக்:77.
4. மட்டக்களப்பு மான்மியம், பக்:77.
5. மட்டக்களப்பு மான்மியம், பக்:78-79.
6. மட்டக்களப்பு மான்மியம், பக்:95.
7. மட்டக்களப்பு மான்மியம், பக்:95-97.
8. கன்னன்குடா திரு. மா. வேலாப்போடி என்பவரிடம் கிடைக்கப்பெற்ற ஏட்டுப் பிரதி.
9. மேற்படி ஏட்டுப்பிரதி.
10. மேற்படி ஏட்டுப்பிரதி.



# VIII பண்பாட்டுக் கோலங்கள்

### 1. சமயம்

இலங்கை, கடல்கொண்ட குமரிக் கண்டத்தின் ஒரு துணிக்கை என்பதும், இலங்கையின் பூர்வீகக் குடிகளான இயக்கர், நாகர் என்போர் குமரிக்கண்ட மக்களின் வழித்தோன்றல்கள் என்பதும் ஏற்கனவே பல்வேறு சான்றுகளால் நிறுவப்பட்டுள்ளன[1]. இதுபற்றி எனது "குளக்கோட்டன் தரிசனம்" என்ற நூலிலும் குறிப்பிட்டுள்ளேன். தனியான கட்டுரையிலும் விளக்கியுள்ளேன்.

இம்மக்கள் லிங்க வழிபாடு, நாக வழிபாடு (குண்டலினி) முதலியவற்றைக் கொண்டிருந்தனர். இயற்கை வழிபாடும் இவர்களிடம் இருந்தது. பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன இறைவனின் அம்சங்கள். இறைவனின் இயற்கை வெளிப்பாடுகள். இந்த ஐந்துமே உலகில் உருவான அனைத்துப் பொருட்களுக்கும் ஆதாரம் என்பதை இக்கால விஞ்ஞானம் நிரூபித்துள்ளது.

இந்த விஞ்ஞான விளக்கம் கிடைப்பதற்கு முன்பே, ஆத்மீக சக்தி கொண்ட இம்மக்கள் தமது உள்ளுணர்வால், இயற்கையில் பிரதிபலித்த இறைவனின் தோற்றத்தைக் கண்டனர் எனலாம். இயற்கை வழிபாடு காலக்கிரமத்தில் லிங்க வழிபாடாகவும், நாக வழிபாடாகவும் மாறியிருந்தன.

தேவநம்பியதீசன் காலத்தில் (கி.மு. 250) பௌத்தமதம் இலங்கைக்கு வந்தது. அதற்குமுன் இலங்கையில் மேற்கண்ட வழிபாட்டு முறைகளே இருந்தன. லிங்க வழிபாடு இலங்கையின் ஆதிகுடிகளிடம் மட்டுமல்லாது சிங்கள மக்களிடமும் இருந்தது[2].

சோழர்களின் இலங்கை வருகைக்குப் பின் (985) சிவ வணக்கமும், திராவிடக் கலாச்சார முறைகளும் இலங்கையில் பரவின,

பாண்டியர் காலத்தில் இவை மேலும் விரிவடைந்தன. கலிங்கமாகன் வருகைக்குப் பின் இவை இன்னும் தீவிரமடைந்தன. கலிங்கமாகன் வீரசைவன். பௌத்தர்களால் கலிங்க வம்சத்தவர்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களும், மதமாற்றங்களும் அவன் படையெடுப்புக்கு ஒரு காரணமாக இருந்தது. கிழக்கிலே இந்துமதக் கோயில்களும் பாதிப்புக்குள்ளாகின என்பதை மட். மான்மியம் கூறுகிறது[3]. எனவே இவன் பொலன்னறுவையில் தனது ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொண்டபின் கிழக்கிலங்கையில் சமய மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டான். ஆலயத் திருப்பணிகள், ஆலய நிர்வாகம், நிவந்தங்கள் முதலிய ஏற்பாடுகள் மூலம் மக்களின் சமய வழிபாட்டு நடைமுறைகளை நிறுவினான். சமய அனுஷ்டானங்களை ஊக்குவித்தான்.

## 2. ஆலயங்கள்

கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், கோயில் போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோயில், திருக்கோயில் சுப்பிரமணியர் ஆலயம், வெருகல் முருகன் ஆலயம் ஆகியன ஒரே மாதிரியான கட்டிட அமைப்பைக் கொண்டிருக்கின்றன. இவ்வாலயங்களில் காணப்படும் கட்டிடக்கலை அம்சங்கள், சிற்பங்கள் முதலியன கி.பி. 12-ம் நூற்றாண்டு சோழ, பாண்டியக் கட்டடக்கலை அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன. இவ்வாலயங்களில் சோழகங்கனான குளக்கோட்டன் திருப்பணிகள் செய்தான்[4]. ("குளக்கோட்டன் தரிசனம்"). இவன் மாகனின் வலதுகரமாக விளங்கியவன். இருவரது இணைந்த செயற்பாடுகளே மேற்படி திருப்பணிகளுக்கும், நிர்வாக முறைகளுக்கும் ஆதாரமானவை. திருக்கோயில் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டுக்கள் மாகனின் கல்வெட்டுகள் என அறியமுடிகிறது.

'மாகோன் வகுத்த வன்னிமை' என்ற அத்தியாயத்தில் மேற்படி ஆலய நிர்வாக முறைகளில் மாகோன் வகுத்த சட்டதிட்டங்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாலயங்கள் பற்றிய சிறு குறிப்புகளைக் கீழே தருகிறோம்.

### (i) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் :

கலிங்க இளவரசி உலகநாச்சியால் அமைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இவ்வாலயத்தில் சுயம்புலிங்கம் உள்ளதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே இவ்வாலயம் "தான்தோன்றீஸ்வரர் ஆலயம்" என அழைக்கப்படுகிறது என்பர்[5]. இக்கோயில் பற்றிய மேலதிக விவரங்களை வி.சீ. கந்தையா அவர்களின் "சைவக் கோயில்கள்-2" நூலில் காணலாம்[6]. இங்குள்ள இரு தேர்கள் மிகப் புராதனமானவை. இத்தேர்களில் காணப்படும் மரச் சிற்ப வேலைப்பாடுகள் அபூர்வமானவை. இவை பாண்டியர்கால சிற்ப அமைப்பைப் பிரதிபலிக்கின்றன. எனவே இவை மாகோன் காலத்தில் உருவாக்கப்பட்ட தேர்களாக இருக்கலாம். மட். மாவட்டத்தின் தேசத்துக் கோயில்களில் இதுவுமொன்றாகும். இங்கு மாகோனால் வகுக்கப்பட்ட நிர்வாக முறையே நடைமுறையிலுள்ளது.



> தேரோடு கோபுரம் தீர்த்தக் குளமும்
> .................. ................................
> படிக்கெதிர் வாவி பத்ததி முறையால்
> வையகம் புகழ் மட்டக் களப்பில்
> செய்தனன் மூன்று திருச் சந்நிதிதான்....
>
> *(மட். மான்மியம் பக்:79)*

என கலிங்க மாகோனின் பணி குறிப்பிடப்படுவது நோக்கத்திற்பாலது.

### (ii) கோயில்போரதீவு சித்திரவேலாயுதசுவாமி கோயில் :

இக்கோயிலின் அமைப்பும் சிற்ப வேலைப்பாடுகளும் திருக்கோவில் ஆலயத்தை ஒத்திருக்கின்றன. மாகோன் - குளக்கோட்டன் திருப்பணிகள் இக்கோயில்களில் இடம்பெற்றன. மாகோன் வகுத்த பூபாலகோத்திரக் குடிகள் இக்கோயிலை நிர்வகித்தனர். இவ்வாலயம் பற்றிய சர்ச்சைகளின்போது, குடிமுறைகள் (மாகோன் ஏற்பாடு) அடிப்படையில் நிர்வாகப் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டது.[7] இதுவும் மிகப் புராதனமான ஒரு ஆலயம் சுட்ட செங்கல்லால் அமைக்கப்பட்டது.

### (iii) திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயில் :

இக்கோயிலும் மிகப் புராதனமானது. இதன் தொன்மை காரணமாக, இராவணன் தரிசித்த கோயில் என்ற கர்ண பரம்பரைக் கதை உருவானது.[8] ஆலயக் கட்டிட அமைப்பு, மாகோன் காலத்துத் திருப்பணியை எடுத்துக்காட்டுகிறது. இங்கு மாகோன் வகுத்த பூபாலகேந்திரக் குடிகள் ஆலய நிர்வாகத்தை மேற்கொள்கின்றனர். இதுவும் சுட்ட செங்கல்லால் அமைக்கப்பட்ட ஆலயமாகும்.

**(iv) தாந்தாமலை :**

கதிர்காம உற்சவத்துடன் தொடர்புறும் தாந்தாமலைத் தலம் கொக்கட்டிச் சோலையிலிருந்து சுமார் 10 மைல் தொலைவில் மேற்கே அமைந்துள்ளது. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வர ஆலய வைப்புப்பணம் இங்கு வைக்கப்பட்டதால் இது "பொக்கிஷமலை" எனப் பெயர் பெற்றது என்றும், தான்தோன்றீஸ்வரர் தாண்டவமாடிய இடமாகையினால் "தாண்டவமலை" என்றும் பெயர்பெற்று, பின்பு "தாந்தாமலை" ஆயிற்று என்றும் கூறுவர். பருத்த மூன்று குன்றுகளை உடைய இவ்வாலயம் ஒவ்வொரு குன்றிலும் ஒவ்வொரு கோயிலைக் கொண்டது. கிழக்கிலங்கையில் குளக்கோட்டு மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட அல்லது திருப்பணி செய்யப்பட்ட ஏழு ஆலயங்களில் முக்கியமானது கொக்கட்டிச் சோலை ஆலயமாகும். கொக்கட்டிச் சோலை ஆலயமும் தாந்தாமலை ஆலயமும் நெருங்கிய தொடர்பு உடையன. குளக்கோட்டன் - ஆடக சவுந்தரி திருமணம் நடைபெற்ற பின் அவர்கள் இப்பகுதியிலேயே அரண்மனை இயற்றி வாழ்ந்தனர் என்பது ஐதீகம். அரண்மனைக்குரிய இடிபாடுகளும் இங்கு காணப்படுகின்றன. தாந்தாமலையில் தங்கியிருந்த இம்மன்னன் தான்தோன்றீஸ்வர ஆலயத்திற்கு 678 கழஞ்சுப் பொன்னை வைப்புப் பணமாகக் கொடுத்தான் எனக் கோணேசர் கல்வெட்டு கூறுவதாக "மட்டக்களப்பு சைவக் கோவில்கள்" ஆசிரியர் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள் குறிப்பிடுகிறார். (மட்டக்களப்பு சைவக் கோவில்கள் பக் : 38) குளக்கோட்டன் திருப்பணி செய்ததாகக் கூறப்படும் இவ்வாலயத்தில் மாகோன் வகுத்த வன்னிமை இன்றும் நிலைத்து நிற்பது நோக்கற்பாலது.

**(v) சங்கமன் கண்டி :**

திருக்கோயிலுக்குத் தெற்கே சுமார் நான்கு மைல் தொலைவில் அமைந்துள்ளது சங்கமக்கண்டிப் பிள்ளையார் கோயில். கதிர்காம யாத்திரிகர்களுக்கு இது ஒரு முக்கிய தரிப்பிடமாகும். இக்கோயிலில் இருந்து சுமார் ஒரு மைல் மேற்கே சங்கமக்கண்டி மலை அமைந்துள்ளது. இங்கு ஒரு பீடத்தில், ஆவுடையார் இல்லாத லிங்கம் போன்ற மூன்று உருவங்கள் இருந்தன. இது மாகன் காலத்தில் சிறப்புற்றிருந்த ஒரு வீரசைவக் கோயிலாக இருக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுகிறது.



மாகனது உபராஜனாகிய குளக்கோட்டன் என்னும் ஜயபாகு காலத்திலே, திருக்கோணேஸ்வரப் பெருமானுக்குரிய பூமியாக மேற்கே முனீஸ்வரம், தெற்கே சங்கமக்கண்டி, கிழக்கே வங்காளக்கடல், வடக்கே கரம்பகம் என நான்கு திசைகளில் சூலம் நாட்டப்பட்டிருந்ததாகக் கோணேஸ்வரக் கல்வெட்டுப் பாடல் ஒன்று கூறுகிறது. அப்பாடல் வருமாறு:-

வரவுறு வடக்கு வரு கரம்பகமாந்
திரமுறு மேற்குச் சிறந்தமுனீ சுரந்
தரைபுகழ் தெற்குச் சங்கமக் கண்டி
உரமிகு கிழக்கு உகந்த வங்காளம்
ஏற்றுகைக் கோணை யிறைவனுக்கா மென
நாற்றிசைச் சூலமு நாலுக நாட்டி...

இதிலிருந்து இப்பகுதி எல்லாம் மாகனது ஆட்சி பரவியிருந்தமையை அறியமுடிகிறது.

**(vi) வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில் :**

இதுவும் மிகப் புராதனமான ஒரு கோயில். மாகோன் - குளக்கோட்டன் திருப்பணிக்குட்பட்டது. கோயில் நிர்வாக முறைகள் மாகோன் வகுத்த வன்னிமைக்குட்பட்டன. இக்கோயில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை - மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ளது. இவ்வாலயத்தின் தொண்டுகளுக்காக குளக்கோட்டன் இந்தியாவிலிருந்து தருவித்த தொழும்பாளர்கள் குடியமர்த்தப்பட்டனர்[9]. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து தேசக் கோயில்களில் இதுவுமொன்றாகும். கைலாய வன்னியன் இங்கு மதில் அமைத்தான் எனக் கூறப்படுகிறது[10].

**(vii) திருகோணமலை :**

திருகோணமலை, தம்பலகாமம், கந்தளாய், கங்கேசன் முதலிய இடங்களில் உள்ள ஆலயங்களில் குளக்கோட்டன், திருப்பணி செய்த விவரங்கள் எனது "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. மாகோன் இவற்றுக்குப் பின்னணியில் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுலபமாக ஊகிக்கலாம். மாகோனால் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட கலிங்கரின் வழித்தோன்றல்கள் திருகோணமலையிலிருந்து 20 மைல் தொலைவில்

உள்ள இலங்கைத் துறையில் இன்றும் வசித்து வருகின்றனர். இவர்கள் தம்மை கலிங்கர் என்றே அழைக்கப்படுகின்றனர். இவர்களுடைய பேச்சுமொழி தமிழும் கன்னடமும் கலந்த ஒருவகைக் கலப்பு மொழியாகக் காணப்படுகிறது. இதன் திரிபுப்பெயர் கலிங்க ஈழ என்பதாம்[11]. (The Tamils in Ceylon - C. Sivaratnam, Colombo 1968, pp.27)

### (viii) பிற இடங்கள் :

மேலும் மாகோனுடைய காவற்படைகள் மாதோட்டம், முனீஸ்வரம் போன்ற இடங்களில் நிலைபெற்றிருந்தன. எனவே இங்குள்ள ஆலயங்களிலும் மாகோன் திருப்பணிகள் இடம் பெற்றிருக்கலாம். ஆனால் அவை பற்றிக் குறிப்பான செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.

### 3. வீரசைவம்

கலிங்க நாட்டில் வீரசைவம் நிலைபெற்றிருந்தது. கலிங்கமாகனும் ஒரு வீரசைவனே. கலிங்க மாகனின் வருகைக்குப் பின் கிழக்கிலங்கையில் வீரசைவம் பரவியது. வீரசைவத்தில் லிங்க வழிபாடு இடம்பெறுகிறது. கிழக்கிலங்கையில் பல ஆலயங்களில் இவ்வழிபாட்டுமுறை இன்றும் இருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாகப் பண்டைக்காலத்தில் இலங்கையின் புகழ்பெற்ற ஐந்து ஈச்சுரங்களிலும் சிவலிங்கமே கோயிலின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. அவை திருக்கேதீஸ்வரம் (மாதோட்டம்), திருக்கோணேஸ்வரம் (திருகோணமலை), முனீஸ்வரம் (சிலாபம்), நகுலேஸ்வரம் (கீரிமலை), தண்டேச்சுரம் (மாதோட்டம்).[12]

வீரசைவக் கோயில்களில் பூசை செய்வோர் சங்கமர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் லிங்கதாரிகள். மாலைப் பதக்கத்தில் லிங்கத்தைக் கொண்டவர்கள். மாகோன் சங்கமர்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வந்தான்[13]. இவர்களே இன்றும் திருக்கோயில், கொக்கட்டிச்சோலை கோயில் போரதீவு முதலிய ஆலயங்களில் பூசை செய்கின்றனர்.

மாகோன் - குளக்கோட்டன் திருப்பணி செய்ததும், சிவ லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதுமான சில கோயில்கள் வருமாறு:- திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முனீஸ்வரம், தான்தோன்றீஸ்வரம், மாமாங்கேஸ்வரம், கோவில்குளம் (இவ்வாலயம்



கி.பி. 1627-ல் போத்துக்கேயரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது). திருக்கோவில் (கல்வெட்டின்படி சிவலிங்கக் கோயில்).

கிழக்கிலங்கையில் அநேகமான கோயில்களில் சங்கமர்களே பூசை செய்கின்றனர். இவர்களைக் குருக்கள் என அழைப்பர். இது மாகோன் ஏற்படுத்திய வழக்கம் எனக் கொள்ளலாம். பிற்காலத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைக்கப்பட்ட பிராமணர்களும் அவர்களது சந்ததியினரும் கோயில்களில் பூசை செய்யும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

### 4. வீரசைவம் பற்றிய தவறான கருத்துகளும் விளக்கமும்

வீரசைவக் குருக்கள்மாரை பண்டாரம் என அழைப்பதாகச் சிலர் தவறாக எழுதியுள்ளனர்[14]. (சிவசம்பு தட்சணாமூர்த்தி, காரைதீவு - கட்டுரை) "பண்டாரம்" என்பது மட். மான்மியத்தில் இடம்பெறும் "பண்டாரப் பிள்ளைகள்" என்பதன் சுருக்கமாகும். மட். மான்மியத்தில் (பக் : 93-97) பண்டாரப்பிள்ளை என்ற வகுப்பாரின் கடமைகள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:

(i) பண்டாரம் : சந்தனம், தாம்பூலம் பகிர்தல்.

(ii) பண்டாரப்பிள்ளை : வீடு, வீதி கூட்டிச் சாணம் போடுதல், கலமினுக்குதல், தண்ணீரள்ளுதல், எச்சிக்கலை எடுத்தெறிதல், கொடிகட்டல், வள்ளுவருக்கு இராசமேளம் (பறை) எடுத்துக் கொடுத்தல், வீதி அதிகாரம் செய்தல் என்பன[15].

இவர்கள் ஊழியம் செய்யும் 17 சிறைகளுள் (தொழும்பாளர்) ஒருவராகவே மட். மான்மியம் குறிப்பிடுகிறது[16]. இவ்வாறே "பண்டாரம்" என்ற பெயர் சிங்கள மூலத்தையுடையது (உ+ம் வீதியபண்டார) என்பதும் தவறானது. பண்டாரத்துக்கும் இப்பெயருக்கும் சம்பந்தமில்லை. கோயில்களில் பூசை செய்து பெருமை பெறும் வீரசைவக் குருக்கள்மாரை, கேவலம் மேற்படி 17 சிறைகளுள் ஒன்றான தொண்டூழியம் செய்யும் பண்டாரம் எனக் குறிப்பிடுவது எவ்வளவு அபத்தமானது.

வீரசைவம் பற்றிய பின்வரும் விளக்கத்தை, சேலம் கலைக் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியரான திரு. இர. ஆலாலசுந்தரம் தனது "இந்திய வரலாறு" என்னும் நூலில் தருகிறார். (பக்:309)[17] "இருபத்தெட்டு சைவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு

கர்நாடகத்திலும், தெலுங்கு நாட்டின் சில பகுதிகளிலும் தோன்றியது வீரசைவம். இலிங்காயதம் என்றும் இது வழங்கப்படுகிறது. கி.பி. 12ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கல்யாணியில் ஆண்ட கலச்சூரி அரசரான பஜ்ஜலர் (Bajjala) என்பவரின் அமைச்சராக இருந்த பசவர் (Basava) என்பவரே வீரசைவத்தை நிலைநிறுத்தியவர். ஆயினும் இவருக்கு முன்னரேயே வீரசைவம் இருந்து வந்தது என்று தெரிகிறது. உயர்வு தாழ்வு கருதாமல், தாங்கள் அனைவரும் சமம் என்று வீரசைவர் கருதினர். ஏகோராமர், பண்டிதாராத்தியர், இரேவணர், மருளர், விஸ்வராத்தியர் ஆகிய ஐவரே வீரசைவத்தை ஆரம்பித்தவர்கள் என்று கருதப்படுகிறது. இவர்கள் லிங்கத்தைக் கழுத்தில் அணிந்து கொள்வர். தமிழகத்தில் தோன்றிய அறுபத்து மூன்று நாயன்மார்களையும், மாணிக்கவாசகரையும், வீரசைவர்கள் தொழுகின்றனர்." இவ்வாறு இர. ஆலாலசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

## 5. நிவந்தங்கள்

ஆலயக் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்குப் பல்வேறு குடிகளை நியமித்ததுபோல், ஆலயத்துக்குத் தேவையான வருவாயைத் தேடிக்கொள்வதற்கு 'நிவந்தங்'களை அளிப்பது பண்டைக்கால ஆட்சி மரபாகும். பொதுவாக வயல்கள், தோட்டங்கள், காணிகள் முதலியன நிவந்தமாக அளிக்கப்படும். இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் ஆலய நிர்வாகத்துக்காகப் பயன்படுத்தப்படும். இக்காலத்தில் "Endowment" வழங்குவதுபோல இதைக் கொள்ளலாம். இவ்வகையில் மாகோனும் குளக்கோட்டனும் தாம் திருப்பணி செய்த ஆலயங்களுக்குப் பல நெல்வயல்களையும் காணிகளையும் நிவந்தமாக அளித்தனர்[18].

இந்நெல்வயல்களில் சீரான விளைச்சல் இருக்கவேண்டும் என்பதற்காக, பல குளங்களையும் இவர்கள் அமைத்துக் கொடுத்தனர். அவ்வகையில் சிறப்பாகச் சொல்ல வேண்டியது கந்தளாய்க்குளம் ஆகும். கந்தளாய்க்குளத்தைக் கட்டியவன் குளக்கோட்டன் எனப் புகழ்பெற்ற சோழகங்கதேவ (இவனது மறுபெயர் ஜயபாகு) என்பது வரலாறு. இதுபற்றி எனது "குளக்கோட்டன் தரிசனம்" விரிவாகக் கூறுகிறது.

ஒரு முக்கிய குறிப்பு: கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் மகாசேனன் என்ற தகவல் "மகாவம்சத்"தில் இடம்பெற்றுள்ளதால் அதையே பல வரலாற்றாசிரியர்கள் திரும்பத் திரும்பக்



கூறிவந்துள்ளனர். மட். மான்மியத்திலும் இவ்வாறே தவறாகக் கூறப்பட்டுள்ளது. இது ஒரு தவறான செய்தி. "மகாவம்சம்" குறிப்பிடும் சிங்கள மன்னனான மகாசேனன் காலம் கி.மு. 3-ம் நூற்றாண்டு ஆகும் (274-301). இவன் சிவாலயங்களை இடித்து அழித்தவன். பிராமணர்களைத் துன்புறுத்தியவன், சைவத்துக்கு எதிராகச் செயற்பட்டவன், திருக்கோணேஸ்வர ஆலயத்தை இடித்து கோகர்ண விகாரையைக் கட்டியவன். எரவில், ரோஹன ஆலயங்களை இடித்து பௌத்த விகாரைகளைக் கட்டியவன் என்பது மகாவம்சத்திலும், அதன் விவரண நூலான "வம்சத் தீபிகாசினி"யிலும் குறிப்பிடப்பட்டுள்ளது[19].

எனவே இவன் திருகோணமலைப் பகுதி கோயில் திருப்பணிகளுக்காகக் கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் என்பது அபத்தம். உண்மையில் குளக்கோட்டு மன்னனே கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன்; இதுபற்றி எனது "குளக்கோட்டன் தரிசனம்" நூலிலும் கூறியுள்ளேன்.

## 6. கோயில் குளம்

இது மட்டக்களப்பில் ஆரையம்பதிக் கிராமத்தை அண்மிய ஒரு சிறு கிராமமாகும். இதன் தெற்கே தாளங்குடாவும், வடக்கே ஆரையம்பதியும் அமைந்துள்ளன. இங்கு இராஜ கோபுரத்துடன் அமைந்த பெரிய கோயில் ஒன்று இருந்தது எனவும், அதனால் இவ்விடம் "சிகரம்" என அழைக்கப்பட்டதெனவும் தெரியவருகிறது[20].

போத்துக்கேயரால் இவ்வாலயம் அழிக்கப்பட்டபின் (கி.பி. 1627ல்) இடிபாடுகளில் புதைந்துகிடந்த கருங்கற்படிகளும், கருங்கல் நிலைகளும் ஆரையம்பதி முருகன் கோயிலிலும் வைத்துக் கட்டப்பட்டன என்று இங்குள்ள முதியவர்கள் கூறுகின்றனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்கள் மட்டக்களப்புக் கச்சேரியில் கொடுக்கப்பட்டனவென்றும் இவர்கள் தெரிவித்தனர்.

சில வருடங்களுக்குமுன் (1980 அளவில்) ஒருவர் இங்கு தென்னம்பிள்ளை நடுவதற்காகக் குழி வெட்டியபோது, சிறிய அளவிலான படிகலிங்கம் (6") ஐந்து தலை நாகக்குடையின்கீழ் அமர்ந்த உருவம் (புடைப்புச் சிற்பம்), (முஜலிங்கநாகா) 4"x4" மற்றும் கந்து விளக்கில் உடைந்த பாகங்கள் முதலியன கண்டெடுக்கப்பட்டன.

இப்படிகலிங்கம் மிக அபூர்வமானது. சிதம்பரத்தில் "சிதம்பர ரகசியம்" என ஒரு பேழையில் வைத்துப் பூசிக்கப்படும் படிகலிங்கத்தின் அளவு உள்ளது. இவ்வாறான படிகலிங்கத்தை காசிலிங்கம் என அழைப்பர்.

மட். மான்மியம் (பக். 42) இதுபற்றிக் கூறும் கதை கவனத்துக்குரியது:[21] குணசிங்கன், கலியாண்டு 3500ம் வருடம் ஆட்சி செய்தபோது கலிங்க ஒரிசா தேசத்தை அரசு புரிந்த குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதமபுத்தரின் தசனத்தைத் தனது நெடுங்கூந்தலுள் மறைத்துக் கொண்டு, கைலயங்கிரியில் குகவம்சத்தார் முன்காலத்தில் எடுத்து வைத்திருந்த, சிவலிங்கத்தையும் எடுத்துக்கொண்டு தனது சகோதரன் உலக நாதனுடன் இலங்கைவந்து, இலங்கை அரசன் மேகவர்ணனிடம் (கி.பி. 301-382) புத்த தசனத்தைக் கொடுத்து அதற்குப் பரிசாக மட்டக்களப்பு மண்முனைப் பகுதியைப் பெற்றாள். இவளே கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தையும் அமைத்தவள். இவ்வாலயத்தில் கொக்குநெட்டி மரத்தில் தோன்றிய சுயம்புலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் உலகநாச்சி கொண்டு வந்த காசிலிங்கம் கோவில்குளத்தில் அமைக்கப்பட்ட ஆலயத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பதை ஊகிக்கலாம்.

இவ்விரு கோயில்களும் உலகநாச்சியால் அமைக்கப் பட்டமையால், நீண்டகாலமாக இரு கோயில்களுக்கும் தொடர்பு இருந்தது. கோயில்குளம் ஆலயக் கடமைகள் அருகில் உள்ள ஆரையம்பதி முருகன் கோயிலுக்கு வந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. இன்றும்கூட கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு ஆரையம்பதி முருகன் கோயிலிலிருந்து தேர் இழுப்பதற்கான வடக்கயிறு எடுத்துச் செல்லப்படுகிறது.

உலகநாச்சி, கலிங்கத்திலிருந்து குகன் குடும்பம் 106, சிறைக் குடும்பம் 30 எடுப்பித்து குகக் குடும்பங்களைத் தன் அருகாயிருத்தி அந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கிவந்தாள் (மட். மான்மியம், பக்:43) எனும் கூற்றும் கோயில்குளத்தில் அமைக்கப்பட்ட சிவலிங்கக் கோயிலுக்கு ஆதாரமாக அமைகிறது.

இது ஒரு முக்கியமான சிவலிங்கக் கோயிலாகையால், மாகோன் காலத்தில் ராஜகோபுரமும் அமைக்கப்பட்டிருக்க



வேண்டும். போத்துக்கேயர் காலத்தில், இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. அச்சமயம் அசவிடோ என்னும் போத்துக்கேயத் தளபதியினால் கி.பி. 1627ல் கோயில்குளம் ஆலயம் அழிக்கப்பட்டதெனக் கூறப்படுகிறது. (ஆனால் கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நிகழ்ந்த ஒரு தெய்வீக அற்புதத்தினால் அக்கோயில் அழிவிலிருந்து தப்பியது என ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு).

## 7. இலுப்படிச்சேனை

கி.பி. 12ம் நூற்றாண்டில் மண்முனைப் பகுதியே பெரிய நகரமாக விளங்கியது. பண்டைய குடியேற்றங்கள் யாவும் மட்டக்களப்பு வாவிக்கு மேற்கேயுள்ள படுவான்கரை என்னும் பகுதியிலேயே பெரும்பாலும் காணப்பட்டன. கொத்தனார் துறை (ஆலயம் அமைப்போர் இறங்கிய துறை) என அழைக்கப்பட்ட தற்போதைய கொத்தியாபுலை அக்காலத்தில் ஒரு துறைமுகமாகவும், கொத்தனார்கள் தங்கியிருந்த இடமாகவும், சிற்பவேலைகள் செய்யும் இடமாகவும் அமைந்தது. சிற்பவேலைகள் கொண்ட ஆலயம் ஒன்று இங்கிருந்து பின்னால் போத்துக்கேயர் காலத்தில் அழிவுற்றது என்பர். மண்முனைப் பகுதியில் அடங்கும் இக்கிராம ஆலயம் உலக நாச்சியின் காலத்தில் புகழ்பெற்று மாகோன் காலத்தில் திருப்பணி செய்யப்பெற்றது எனக்கொள்ளலாம்.

கோயில்குளம் ஆலயத்துக்குத் தேவையான கருங்கற்றூண்கள் இங்கிருந்துதான் பொழிந்து எடுத்துச் செல்லப்பட்டன என்பர். (தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் கட்டுரை). இப்போதும் (1995) இவ்வூரில் கருங்கற்சிற்பங்கள் கண்டெடுக்கப்படுகின்றன[22].

## 8. வெட்டயச்சேனை

இதுவும் இலுப்படிச்சேனை போன்று குடியேற்றங்களுடன் அக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த ஒரு கிராமமாகும். இதனோடு இணைந்த மண்டபத்தடி என்னும் கிராமத்தில், மாகோன் காலத்து வன்னிமை ஒருவர் இருந்திருக்கிறார்[23]. இதுபற்றி மாகோன் வகுத்த வன்னிமை என்னும் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டைய ஆலயம் ஒன்றின் இடிபாடுகள் அண்மைக்காலத்தில் துப்புரவாக்கப்பட்டு, புதிதாக ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. உலகநாச்சி காலம் முதல் மாகன் காலம் வரை சிறப்புப்

பெற்றிருந்த இவ்வாலயம் போத்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

### 9. புளியடிமடு

இக்கிராமத்தில் புராதனமான ஒரு காளிகோயில் அமைந்திருந்தது. இக்கிராமம் முதல் விளாவெட்டுவான் வரை மாகோன் காலத்து வன்னிமை ஒருவர் இருந்திருக்கிறார். மாகோன் காலத்தில் சிறப்படைந்திருந்த இக்கிராமம் பிற்காலத்தில் அழிவுற்றது. இப்பகுதியில் ஏற்பட்ட 'கோதாரி' என்னும் கொள்ளை நோயால் பல குடும்பங்கள் அழிவுற்றன என்பர்.

### 10. கலிங்கநகர்

கலிங்கர் குடும்பங்கள் குடியேறியிருந்ததால் இக்கிராமம் கலிங்க நகர் என அழைக்கப்பட்டது போலும். தற்போது இக்கிராமம் எங்குள்ளது என அறியமுடியவில்லை. ஆனால், கலிங்கர் அதிக அளவில் வந்து குடியேறிய இடமான மண்முனைப் பகுதியிலேயே அக்கிராமம் இருந்திருக்க வேண்டும். தற்போது காரை தீவுப் பகுதியில் உள்ள 'சிங்காரத்தோப்பு' என்னும் கிராமம் போல இதுவும் மறைந்து போன ஒரு பண்டைய கிராமமாக இருக்கலாம்.

திருகோணமலையில் லிங்க நகர் என ஒரு கிராமம் உள்ளது. லிங்க வணக்கம் உள்ள ஆலயம் ஒன்று இங்கு இருந்திருக்கலாம். இதுவும் கலிங்கர் வாழ்ந்த இடம் என அனுமானிக்க இடமுண்டு.



## அடிக்குறிப்புகள்

1. (i) Lost Lemuria - By Scott Eliot Page 18.
   (ii) குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு - அப்பாத்துரை
   (iii) Lemuria the Lost Continent of Pacific by N.C. Cave pp. 16.
   (iv) வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த் தினவிழா மலர் 1995. கட்டுரை "கடல்கொண்ட தென்னாட்டின் துணிக்கையே இலங்கை" - க. தங்கேஸ்வரி.
2. J.R.A.S. New Series Vol. XX 1976. pp. 31-41.
3. மட்டக்களப்பு மான்மியம் F.X.C. நடராசா, பதிப்பாசிரியர் 1952 மட்டக்களப்பு பக். 51-54.
4. குளக்கோட்டன் தரிசனம் - க. தங்கேஸ்வரி 1993 மட்டக்களப்பு பக். 64.
5. மட்டக்களப்பு மான்மியம் - பக். 43.
6. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் I - வி.சீ. கந்தையா, கொழும்பு 1883 - பக். 20-37.
7. மட்டக்களப்புத் தமிழகம் - வி.சீ. கந்தையா, பக். 435.
8. மட்டக்களப்பு மான்மியம் - பக். 4, 5.
9. கோணேசர் கல்வெட்டு - கவிராஜவரோதயர் தொகுப்பு வைத்திலிங்க தேசிகர் - 1951, p. 26-32.
10. Ceylon Tamil Inscriptions - Dr. K. Velupillai - Peradeniya - pp. 9.
11. The Tamils in Ceylon - C. Sivaratnam - Colombo 1968 - pp. 27.
12. (i) Nagadipa and Buddhist Remains in Jaffna (J.R.A.S.) Ch. XXVI - p. No. 70. P.E. Pieri's 1917, பக். 17-18.
    (ii) யாழ்ப்பாண வைபவமாலை - குல. சபாநாதன் பதிப்பு - பக். 6.
13. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பாசிரியர் F.X.C. நடராசா - 1952. மட்டக்களப்பு "முக்குவ வன்னிமை" - பக். 95.
14. வீரசைவம் - கட்டுரை சிவசம்பு தட்சணாமூர்த்தி - இந்து சமய கலாசாரத் திணைக்களம்.
15. மட்டக்களப்பு மான்மியம் - பதினேழு சிறைகள் செய்யும் ஊழியம் - பக். 92.
16. மட்டக்களப்பு மான்மியம் - பக். 92.
17. தென் இந்திய வரலாறு I - பேராசிரியர் இர. ஆலாலசுந்தரம் - பக். 300.
18. கோணேசர் கல்வெட்டு - பக். 42. ஐந்து பாடல்கள்.
19. Vamsathipikasini - Commentary on the Mahavamsa II Edited G.P. Malalasekara London 1935. p. 685.
20. கட்டுரை - கோயில்குளம், சிவ. விவேகானந்த முதலியார்.
21. மட்டக்களப்பு மான்மியம் - பக். 43.
22. கட்டுரை - கோயில் குளம் - சிவ. விவேகானந்த முதலியார்.
23. ஏட்டுப்பிரதி - கன்னன்குடா வேலாப்பேட்டி.

# IX மாகோன் காலத்தில் ஈழத்தில் இடம்பெற்ற பாண்டியர் படையெடுப்புகள்

## 1. மாகோனின் இறுதிக்காலம்

கடந்த அத்தியாயங்களில், மாகோனின் ஈழத்து ஆட்சி செவ்வனே நடைபெற்று வந்தமையையும், அவனைத் தோற்கடிக்க முடியாத நிலையில் சிங்கள மன்னர்கள் தத்தளித்தமையையும் பார்த்தோம்.

எப்படியாவது மாகோனை ஒழித்துக் கட்டவேண்டும் என்பதில், தம்பதேனியாவில் இருந்து ஆட்சி செய்த மன்னர்கள் காலத்துக்குக் காலம் முயற்சி செய்தனர். ஆனால், அம்முயற்சிகளெல்லாம் தோல்வியிலேயே முடிந்தன.

மாகோனின் இறுதிக்காலத்தில் ஒரு பாரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் பராக்கிரமபாகு II, அவனது சகோதரன் புவனேகபாகு, மருமகன் வீரபாகு (சகோதரியின் மகன்), மகன் விஜயபாகு IV ஆகியோர் ஒன்று சேர்ந்து வியூகம் அமைத்தனர்.

இதுதான் மாகோனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதலாவது பாரிய கூட்டுமுயற்சி. ஆனால் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மேற்கொண்ட இந்த முயற்சிகூட வெற்றியளிக்கவில்லை. ஈற்றில் பராக்கிரமபாகு - II தனது அமைச்சரான தேவபதிராஜா என்பவரை பாண்டியரிடம் தூது அனுப்பினார். பாண்டியரின் படை உதவியைக் கோரினார்.

அச்சமயம், பாண்டி நாட்டில் மூன்று பலமுள்ள சகோதரர் ஆட்சி செய்தனர். அவர்கள் :

(i) முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1250-1284)

(ii) முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1253-1283.



(iii) இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1254-1265).

இவர்கள் ஒன்று சேர்ந்து மேற்கொண்ட படையெடுப்பில் 1256-ல் மாகன் நிலை தளர்ந்தது. மாகோன் வடக்கு நோக்கி இடம் பெயர்ந்தான்.

இம்முக்கிய நிகழ்வுக்குப் பின்னணியாக அமைந்த சம்பவங்களைச் சற்று விவரமாகப் பார்க்கவேண்டியது அவசியமாகும்.

## 2. ஆறு கல்வெட்டுகள் – நான்கு படையெடுப்புகள்

ஈழத்தில் மாகோன் காலத்தில் நான்கு பாண்டிய படையெடுப்புகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் அவை ஆறு மன்னர்களின் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன. அதனால் சில வரலாற்றாசிரியர்கள், இவை ஒவ்வொன்றையும் தனித்தனிப் படையெடுப்புகளாகக் கணித்து எழுதியுள்ளனர். இது தவறானதாகும். உண்மை என்னவென்றால், கி.பி. 1256-ல் ஈழத்தின் மேல் சகோதரர்களான மூன்று பாண்டிய மன்னர்கள் சேர்ந்து படையெடுத்து வெற்றி கொண்டனர். இந்த ஈழ வெற்றியை ஒவ்வொருவரும் வெவ்வேறு ஆண்டுகளில் தத்தமது மெய்க்கீர்த்திகளில் பொறித்துள்ளனர். எனவே கல்வெட்டுகள் ஆறு இருந்தாலும் படையெடுப்புகள் நான்கு மட்டுமே மாகோன் காலத்தில் இடம்பெறுகின்றன. (இணைத்துள்ள பட்டியலில் இவ்விவரங்களைக் காணலாம்).

மாகோன் காலத்தில் ஈழத்தில் இடம்பெற்ற இந்த நான்கு படையெடுப்புகளில், 1256-ல் இடம்பெற்ற இறுதிப் போரிலேயே மாகோன் நிலை தளர்ந்து வடக்கு நோக்கிச் செல்ல நேரிட்டது. இப்படையெடுப்பு சாவகனான சந்திரபானுவின் படையெடுப்பை முறியடிப்பதற்கென்று மேற்கொள்ளப்பட்ட போதும், மாகோனைத் துரத்துவதும் இதன் மறைமுக நோக்கமாக இருந்தது.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டதுபோல பாண்டிய மன்னர் மூவரும், சிங்கள மன்னர் மூவரும், அவர்களது உதவியாளர்களும் ஒன்று சேர்ந்து வியூகம் அமைத்துச் செயற்பட்டதனால், இந்நிலை ஏற்பட்டது. பாண்டிய மன்னர்கள் சாவகனை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட, சிங்கள மன்னர்கள் மாகோனைத் தாக்குவதில் ஈடுபட்டிருக்கலாம்.

**மாகோன் காலத்தில் பாண்டியரின் படையெடுப்புகள்**

| பாண்டிய மன்னன் பெயரும் ஆட்சியாண்டும் | ஈழப் படையெடுப்பு ஆண்டு | மெய்க்கீர்த்திக் கல்வெட்டுப் பொறித்த ஆண்டும் இடமும் | மெய்க்கீர்த்தி ஆரம்ப வரிகள் |
|---|---|---|---|
| 1. 1ம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216-1244) | 1223 | 1237 | பூமருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் |
| 2. 2ம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1238-1255) | 1251 | 1251 திருநெல்வேலி | பூமலர் திருவும் பொரு ஜெய மடந்தையும் |
| 3. 2ம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (1250-1276) | 1252 | 27-10-54 குற்றாலம் | திருமலர் மாது பெருவரை மார்பு |
| 4. 1ம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1250-1284) | 1256 | 17-9-1256 திருப்பூந்துருத்தி | பூமலர் வளர் திகழ் திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப |
| 5. 1ம் சடையவர்மன் வீரபாண்டியன் (1253-1282) | 1256 | 1263 கம்பம் | கொங்கு ஈழம் கொண்டு கொடுவடுகு கோடு அழித்து |
| 6. 2ம் சடையவர்மன் வீரபாண்டியன் (1254-1265) | 1256 | 9-11-56 1256-குற்றாலம் 1265-குடுமியான்மலை | திருமகள் வளர்முலை திருமார்பு தடைபட |

**முக்கிய குறிப்பு :** மேற்படி படையெடுப்புகளுக்குப் பின்னரும் பாண்டியரின் ஈழப் படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் அவை மாகோனின் ஈழ ஆட்சிக்குப் பிற்பட்டவை என்பதால், அவை இங்கு கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.



*(இவ்விவரங்கள் ஆய்வறிஞர் என். சேதுராமன் அவர்களின் "பாண்டியர் வரலாறு கி.பி. 550-1371" என்ற நூலிலிருந்து பெறப்பட்டன.[1])*

இவை ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக அறிந்து கொள்ளுதல் மாகோன் பாதிப்படைந்த இறுதிப்போரின் பின்னணி சூழ்நிலை பற்றித் தெரிந்துகொள்ளப் பெரிதும் உதவும்.

### 3. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216–1244)

விக்கிரமபாண்டியன் பரம்பரையில் வந்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், தனது அண்ணனான குலசேகர பாண்டியனுக்குப் பின் கி.பி. 1216-ல் முடிசூடினான் (பாண்டியர் வரலாறு, என். சேதுராமன் - பக்:95).. இவனுடைய மெய்க்கீர்த்திகளில் ஒன்று "பூ மருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப" என ஆரம்பிக்கிறது. 24 வரிகள் கொண்ட இக்கல்வெட்டில் பின்வரும் வரிகள் இடம்பெறுகின்றன[2].

..........................................................................

எழுவகைப் பாடலும் இயலுடன் பரவ
எண்டிசையளவுஞ் சக்கரஞ்
செல்லக் கொங்கணர் கலிங்கர்
கோசலர் மாளுவர் சிங்களர்
தெலுங்கர், சீனர் குச்சரர், வில்லவர்
மாதகர் விக்கலர் செம்பியர்
பல்லவர் முதலிய பார்த்திவ ரெல்லாம்
உறைவிட மருளென
ஒருவர்முன் ஒருவர் முறைமுறை
கடவதந் திறைகொணர்ந் திறைஞ்ச.

இம்மெய்க்கீர்த்தியிலிருந்து பாண்டியனுக்குத் திறை செலுத்திய நாடுகளுள் "சிங்களம்" என அழைக்கப்பட்ட இலங்கையும் ஒன்றெனத் தெரிகிறது[3].

இம்மெய்க்கீர்த்தி சுந்தரபாண்டியனது ஏழாவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது (கி.பி. 1223). எனவே இவன் காலத்தில் இலங்கை மீது கி.பி. 1223-ல் படை எடுப்பு நடந்து, இலங்கை பாண்டியனுக்குத் திறை செலுத்தும் நிலை ஏற்பட்டிருக்க வேண்டும்.

இப்பாண்டியன் பல போர்களைத் தொடுத்து வெற்றி ஈட்டியவன் என்பது இவனது வரலாற்றில் இருந்து தெரிய வருகிறது. சோழர் மீது இவன் பல படை எடுப்புகளை மேற்கொண்டான். அதனால் 'சோணாடு கொண்டருளிய தேவர்' என்ற பட்டப்பெயர் பெற்றான். இவன் அடைந்த வெற்றிகளும் சாதனைகளும் இவனது மெய்க்கீர்த்தியில் சொல்லப்பட்டுள்ளன (பாண்டியர் வரலாறு - என். சேதுராமன் பக் : 95-102).

## 4. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1238–1255)

இப்பாண்டியன் 1238-ல் முடிசூடினான். இவனுடைய காலத்தில்தான் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இவனது மெய்க்கீர்த்திகளில் ஒன்று "பூமலர் திருவும் பொருஜெய மடந்தையும் தாமரைக் குவிமுலை, ஜெயப்புயத்திருப்ப..." என்று ஆரம்பிக்கிறது. இம்மெய்க்கீர்த்தியில் பின்வரும் வரிகள் இடம்பெறுகின்றன[4].

தெண்டிசை யானை யெருத்தமேறி
கண்டநாடு எமதனக் கயல்களிகூர
கோசலம் துளுவம் குதிரம் குச்சரம் போசல
மகதம், பொப்பளம் புண்டரிங்கம்
ஈழம் கடாரம், கவுடம், தெலிங்கம்,
சோனகம், சீனம் முதலா
விதிமுறை திகழ வெவ்வேறு வகுத்த
முதுநிலைக் கிழமையில் முடிபுனைவேந்தற்கு
..........................................................

இம்மெய்க்கீர்த்தியின்படி 'ஈழம்' என அழைக்கப்பட்ட இலங்கையும் இவன் அதிகாரத்துக்குட்பட்டிருந்தது எனத் தெரிகிறது[5]. ஈழம் இவன் ஆட்சிக்குட்பட்டது இவனது 13-வது ஆட்சியாண்டு எனக் கூறப்படுகிறது. எனவே 1251-ல் இப்படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும். இது மாகனுடைய ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதியாகும். ஆனால் மாகோனின் ஆட்சி 1255க்குப் பின்னும் நீடித்துள்ளதால், மாகோன் இப்படையெடுப்பில் தோல்வி அடைந்ததாகக் கொள்ளமுடியாது.



## 5. இரண்டாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (1250–1276)

இரண்டாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் 1250-ல் முடிசூடினான். இவனே "சமஸ்தபுவனேக வீரன்" என்று அழைக்கப்பட்டவன்[6]. சிலர் இப்பெயருக்குத் தவறாகப் பொருள் கொண்டு "இலங்கைப் போரில் புவனேகபாகுவைக் கொன்றதால் இப்பெயர் பெற்றான்" எனக்கூறுவர். இது தவறாகும். இப்பெயர் இவனது சமஸ்கிருத மெய்க்கீர்த்தி ஒன்றின் ஆரம்பவரியாக உள்ளது. இதன் அர்த்தம் "எல்லா புவனங்களுக்கும் ஒரே வீரன்" என்பதாகும்.

இவனது தமிழ் மெய்க்கீர்த்தி ஒன்று "திருமலர் மாது பெருவரை மார்புறப் பொருப்பவர் மடந்தை திருப்புயம்புணர" என ஆரம்பிக்கிறது. இம்மெய்க்கீர்த்தியில் பின்வரும் வரிகள் இடம்பெறுகின்றன:-

... கச்சியும் கலிங்கமும், காங்கமும், வங்கமும்
குச்சியும் குதிரமும், கொல்லமும்,
வல்லமும், இரட்டமும் ஈழமும் முதலா
முரட்டடி வேந்தர், முறைமுறை புகுந்துக்
கோடுயர் மானக்கோபுர முகப்பில்
ஆடகக் குலையும், ஆனையும் காட்டிப்
பதிவை செல்லப் பாதம்சிறிது அருளென்(று)

இவ்வரிகளிலிருந்து ஈழமும் இவனுக்குக் கட்டுப் பட்டிருந்ததெனத் தெரிகிறது[7].

இவனுடைய "சமஸ்த புவனேகவீர..." என ஆரம்பிக்கும் சமஸ்கிருத மெய்க்கீர்த்தியில் "லங்காதிபதி காலகூட கதனகால கண்ட...." என ஒருவரி வருகிறது. இதன் பொருள் "இலங்கை மன்னனாகிய விஷத்தை, தொண்டையில் வைத்திருக்கும் காலகண்டன் (சிவபெருமான்)" என்பதாகும். இதுவும், இவன் இலங்கை மன்னனை வெற்றி கொண்டிருந்தான் என்பதைக் குறிக்கிறது.[8] இம்மெய்க்கீர்த்தியில் இவன் பெற்ற வேறு சில வெற்றிகள் பற்றியும் குறிப்பிடப்படுகிறது. அவற்றுள் "மதுரைக்கு மகேந்திரன்" "கேரளத்திற்குச் சூரியன்" "சோழ வம்சத்துக்குக் கடற்தீ போன்றவன்" "கர்நாடக யானைக்குச் சிம்மம் போன்றவன்", "காடவகுலத்துக்குத் தீ போன்றன்" என்றெல்லால் சிலேடை மொழிகள் இடம்பெறுகின்றன.

## 6. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1250–1284)

இப்பாண்டியன் 1250-ல் முடிசூடினான். இவனது மெய்க்கீர்த்திகள் இவன் போரில் பெற்ற பல வெற்றிகள் பற்றிக் கூறுகின்றன. "இவன் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டியன்" என அழைக்கப்பட்டான். இவனது மெய்க்கீர்த்தி கொண்ட திருப்பூந்துருத்திக் கல்வெட்டின் காலம் 1256 எனச் சொல்லப்படுகிறது[9].

"பூமலர் வளர் திகழ்திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப..." எனத் தொடங்கும் இம்மெய்க்கீர்த்தியில் பின்வரும் வரிகள் இடம்பெறுகின்றன.

துலங்கொளி மணியுஞ் சூழி வேழமு
மிலங்கைக் காவலனை யிறை கொண்டருளி
வருதிறை மறுத்தங் கவனைப் பிடித்துக்
கருமுகில் நிகளங் காலிற் கோத்து
வேந்தர் கண்டறியா விறற்றிண் புரிசைச்
சேந்த மங்கலச் செழும்பதி முற்றி....

இவ்வரிகளிலிருந்து இப்பாண்டியன் ஈழத்தை வெற்றி கொண்ட செய்தி தெரிய வருகிறது. இதை இவனது மற்றொரு மெய்க்கீர்த்தியும் உறுதிப்படுத்துகிறது[10].

இவனது 7-ம் ஆண்டு நரசமங்கலம் கல்வெட்டில் இடம் பெறும் வடமொழி மெய்க்கீர்த்தி "ஸமஸ்த ஜகத் ஆதார சோமகுலதிலக" என ஆரம்பிக்கிறது. 15 வரிகளைக் கொண்ட இம்மெய்க்கீர்த்தியில் "லங்காத்வீப லுந்தன த்விதீயராம..." என்னும் வரிகள் இடம்பெற்றுள்ளன. இதன் பொருள் "இலங்கையை அழித்த இரண்டாவது ராமன்" என்பதாகும். எனவே இப்பாண்டியன் இலங்கை மேல் படையெடுத்துப் பெற்ற வெற்றியை இம்மெய்க்கீர்த்தி உறுதி செய்கிறது[11]. இவன் ஈழத்தை வென்றமையினால், "கோதண்ட ராமன்" என்ற விருதைப் பெற்றான் என ஆய்வறிஞர் கிருஷ்ணசாமி ஐயங்கார் குறிப்பிடுகின்றார். (ஆனால் இது பின்னால் வந்த வேறு ஒரு சுந்தர பாண்டியனுக்குரியது என நீலகண்ட சாஸ்திரி தவறாகக் குறிப்பிட்டுள்ளார்).



## 7. முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1253 – 1283)

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (1250-1284) சகோதரனான, முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1253-1283) 1253ல் முடிசூடினான். இவனது பத்தாவது ஆட்சியாண்டில், அதாவது 1263-ல் இவனது மெய்க்கீர்த்தியில் ஈழ வெற்றி இடம்பெறுகிறது[12]. இது கி.பி. 1256-ல் தனது சகோதரன் 2ம் வீரபாண்டியனுடன் சேர்ந்து பெற்ற ஈழவெற்றி என்பதை ஏற்கனவே பார்த்தோம். ஈழம் வெற்றி கொள்ளப்பட்ட செய்தி இக்கல்வெட்டின் முதல் வரியிலேயே இடம்பெறுகிறது.

கொங்கு ஈழம் கொண்டு கொடுவடுகு கோடு அழித்து
கங்கை இரு கரையும் காவிரியும் கைக்கொண்டு
வல்லாளனை வென்று, காடவனைத் திறைகொண்டு
தில்லைமாநகரில் வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும்
செய்தருளிய கோச்சடை பன்மரான திருபுவனச்
சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டியத் தேவர்....

இது ஒரு முக்கியமான ஈழ வெற்றி எனக் கருதப்பட்டது போலும். 1262-ல் கொங்குநாட்டு வேந்தனான வீரசோமேஸ்வரன் இறந்த பிறகு கொங்கு மண்டலம் பாண்டியர் வசமாகியது. அதன் பின்பே, 1263-ல் இவனது மெய்க்கீர்த்தி எழுதப்படுகிறது. மேற்படி மெய்க்கீர்த்தியில் இவ்வெற்றிகள் இரண்டும் முதன்மை பெறுகின்றன.

"கொங்கு ஈழம் கொண்டு" என ஆரம்பிக்கும் இவனது மெய்க்கீர்த்திகள் கொண்ட கல்வெட்டுகள் 12 இதுவரை கிடைத்துள்ளதாக ஆய்வறிஞர் என். சேதுராமன் குறிப்பிடுகிறார்[13]. (பாண்டியர் வரலாறு - என். சேதுராமன் பக்: 132) கொங்குநாட்டைப் பிடித்த வெற்றியைக் கொண்டாட வீர பாண்டியன் சிதம்பரத்தில் 1263-ல், வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் செய்துகொண்டான். தனது வெற்றிகளை அழகிய தமிழ்ப் பாடல்களாக சிதம்பரம் கோயிலில் பொறித்தான்.

## 8. இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1254–1265)

1254-ல் முடிசூடியவன் இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன். 1256-ல் பொறிக்கப்பட்ட இவனுடைய மெய்க்கீர்த்தி ஒன்று "திருமகள் வளர்முலை திருமார்பு தளைபட பொருமகள் வளர்முலை புயம்புணர்ந்து களிப்ப..." என ஆரம்பிக்கிறது.

இக்கல்வெட்டில் ஈழம் தொடர்பான பின்வரும் வரிகள் இடம்பெறுகின்றன[14].

(i) பல அரைசியல் வழக்கம் நெறிப்பட நாட்டும் குறிப்பினுர...
ட்டிசைத் திருப்பாதஞ்... செ
திருந்த மந்திரி சரணமதிகழந்.... தினிதுநோக்கி
முரண்முகு சிறப்பில் ஈழமன்னர் இலகுவரி
லொருவனை வீழ்ழப் பொருது விண்மிசை ஏற்றி
உரிமைச் சுற்றமும் உயகுலம்புக்கு
தருமையாண்மையும் பலப்பை புரவியும்
கண்மணித்தேரும் சீனவடவரும் நாகத்தோடும்
நவமணிக்குவையும், ஆடகத்திரிபும், அரியாசனமும்
முடியும் கட்கமும் முழுமணி ஆரமும்
கொடியும் குடையும், குளிர் வெண்கவரியும்
முரசும் சங்கமும் தனமுமுதவி அரைசுகெழுதாய

மடையவாரி காணா மன்னவர் கண்டு கண்டேங்க
கோணமலையிலும் திரிகூட கிரியிலும் உருகெழு
கொடிமிசை இருகயல் எழுதி ஏனைவேந்தனை
ஆனை திறைகொண்டு பண்டேவல் செய்யா
திகல் செய்திருந்த சாவன் மைந்தன் நலமிருந்திறைஞ்ச
வீரக் கழல்லிர வரைச் சூட்டி
திருக்கோளம் அலைவாப்படன் கழித்து வழங்கிட
அருளி முழுங்குகளிற் ஏறி பார் முழுதறிய
ஊர்வலம் செய்வித்து தந்தை மரபென் நினைப்பிட்டரைசிட மகிந்து
ஆனுாா்புரிச்சு விரையச்செல்
கென விடைகுடுத்தருளி, ஆகமடந்தை அன்புடன்சாத்தி வாகைசூட
மதுகணாங்கவா்ந்த
..........................................

இவ்வரிகள், இப்பாண்டியன் ஈழ மன்னரை வெற்றி கொண்ட செய்தியைத் தெரிவிக்கிறது. இவன் இலங்கை மன்னன் ஒருவனைக் கொன்றான். அவனது அரச சின்னங்களைக் கைக்கொண்டான். திரிகோணமலையிலும், திரிகூடமலையிலும் பாண்டியர் சின்னமான இரு கயல் (இரு மீன்) சின்னத்தைப்



பொறித்தான் என்பதையும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இதுபற்றிப் பின்னர் ஆராய்வோம்.

1-ம் சடையவர்மன் சுந்தரபாண்டியனது கல்வெட்டும் மேலே குறிப்பிட்ட 2-ம் சடையவர்மனது கல்வெட்டும் கி.பி. 1256-ல் நிகழ்ந்த ஈழப் படையெடுப்பைக் குறிப்பதால், இவையிரண்டும் ஒரே ஈழப் படையெடுப்பையே குறிக்கின்றன.

இதுவரை கூறிய ஆறு கல்வெட்டுக் குறிப்புகளையும் பின்வருமாறு தொகுக்கலாம்.

| | மன்னன் பெயர் | ஆட்சிக்காலம் | ஈழப்படையெடுப்பு ஆண்டு |
|---|---|---|---|
| i. | முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் | 1216-1244 | 1223 |
| ii. | இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் | 1238-1255 | 1251 |
| iii. | 2ம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் | 1250-1276 | 1252 |
| iv. | முதலாம் சடையவர்மன் சுந்தரப்பாண்டியன் | 1250-1284 | 1256 |
| v. | முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் | 1253-1283 | 1256 |
| vi. | 2-ம் சடையவர்மன் வீரபாண்டியன் | 1254-1265 | 1256 |

இப்பட்டியலைப் பார்க்கும்போது, பிற்கூறிய நால்வரும் ஒரே காலத்தவர் என்பது புரியும். அத்துடன் "சடையவர்மன் வீரபாண்டியன்" என்ற பெயரில் இருமன்னர்கள் இருப்பதும் புரியும்[15]. இதனால் வரலாற்றாசிரியர்கள் ஏற்படுத்திய குழப்பத்தைத் தெளிவுபடுத்துவோம்.

## 9. சில வரலாற்றுக் குழப்பங்கள்

(i) வரலாற்றாசிரியர்கள் சிலர் முதலாம் சடையவர்மன் வீரபாண்டியனையும் (1253-1283), இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியனையும் (1254-1265) ஒருவர் எனக்கருதி ஒருவர் பொறித்த கல்வெட்டை மற்றவர் பொறித்ததாக விளங்கிக்கொண்டு குறிப்புகள் எழுதியுள்ளனர். உதாரணம்,

2ம் வீரபாண்டியன் பொறித்த "திருமகள் வளர்முலை" குடுமியான்மலைக் கல்வெட்டு 1-ம் வீரபாண்டியன் பொறித்தது என்று தவறாகச் சிலர் எழுதியுள்ளனர்.

(ii) முதலாம் வீரபாண்டியன் 1253-ல் ஆட்சி பீடமேறினாலும் 10 வருடங்கள் கழித்தே - அதாவது 1263-ல் அவனது கல்வெட்டுகள் பொறிக்கப்படுகின்றன[16]. உ+ம் : "கொங்கு ஈழம் கொண்டு கொடுவடுகு கோடு அழித்து" என்னும் கல்வெட்டு. கி.பி. 1263-ல் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில் ஈழ வெற்றி இடம்பெறுவதால் சில வரலாற்றாசிரியர்கள் கி.பி. 1263-ல் மாகோன் துரத்தப்பட்டான் என்ற கருத்துப்பட எழுதுகின்றனர். மாகோன் கி.பி. 1256க்குப் பின் பொலன்னறுவையில் இல்லை என்பதை மறந்து இவ்வாறு குறிப்பிடுகின்றனர். இது தவறாகும்.

(iii) சிலர் "கொங்கு ஈழம் கொண்டு..." என ஆரம்பிக்கும் முதலாம் வீரபாண்டியனுடைய கல்வெட்டைக் குடுமியான்மலைக் கல்வெட்டு எனத் தவறாகக் குறிப்பிடுகின்றனர். உண்மையில் 2-ம் வீரபாண்டியனுடைய "திருமகள் வளர்முலை..." என ஆரம்பிக்கும் கல்வெட்டே குடுமியான்மலைக் கல்வெட்டு என்பது நாம் அறிந்ததே[17].

(iv) "மெய்க்கீர்த்திகள்" என்னும் கல்வெட்டுகள் தொடர் கல்வெட்டுகள் ஆகும். ஒரே மாதிரி ஆரம்பித்து காலத்துக்குக் காலம், சாதனைகளைச் சேர்த்து எழுதுவது மரபு. உ+ம் : 1ம் வீரபாண்டியனுடைய "கொங்கு ஈழம் கொண்டு" என ஆரம்பிக்கும் கல்வெட்டுகள் 12 இதுவரை கிடைத்துள்ளன. 2ம் வீரபாண்டியனின் "திருமகள் வளர்முலை...." என ஆரம்பிக்கும் கல்வெட்டுகள் 6 கிடைத்துள்ளன.

(v) இவ்வாறு ஒரே மாதிரி ஆரம்பிக்கும் கல்வெட்டுகள் வெவ்வேறு ஆண்டுகளில், வெவ்வேறு இடங்களில் பொறிக்கப்படுகின்றன. சில வரலாற்றாசிரியர்கள் இந்த ஆண்டுகளையே சாதனை நிகழ்ந்த ஆண்டுகளாகத் தவறாக எடுத்துக் கொள்கின்றனர். பின்வரும் உதாரணம் இதை விளக்கும்:

2ம் வீரபாண்டியனுடைய "திருமகள் வளர்முலை..." என ஆரம்பிக்கும் கல்வெட்டு, பின்வருமாறு வெவ்வேறு ஆண்டுகளில் வெவ்வேறு இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளது[18].



| இடம் | ஆண்டு | கல்வெட்டு இல |
|---|---|---|
| குற்றாலம் | 9.11.1256 | 432/1917 |
| தளபதி சமுத்திரம் | 1258 | 8/1929 |
| தளபதி சமுத்திரம் | 1258 | 9/1929 |
| தாருகாபுரம் | 1261 | 584/1915 |
| சேந்தமங்கலம் | 1262 | 480/1930 |
| குடுமியான்மலை | 1265 | Pd/366 |

(ஆதாரம் என் சேதுராமன் - "பாண்டியர் வரலாறு")

இப்பட்டியலின்படி "திருமகள் வளர்முலை..." என ஆரம்பிக்கும் குடுமியான்மலைக் கல்வெட்டு 1265-ல் பொறிக்கப்பட்டது. ஆகவே ஈழவெற்றி 1265-ல் கிடைத்தது என்றும், மாகோன் துரத்தப்பட்ட ஆண்டு 1265-ல் என்றும் கூறமுடியுமா? (சிலர் அவ்வாறு தவறாகக் கூறியுள்ளனர்.) உண்மையில் இதே கல்வெட்டு முதன்முதல் குற்றாலம் என்ற இடத்தில் 9-11-1256-ல் பொறிக்கப்படும்போது ஈழ வெற்றி குறிப்பிடப்படுகிறது. எனவே 1256-ல் இவ்வெற்றி கிடைத்தது என்பது வெளிப்படை. இது பிற சான்றுகளாலும் நிரூபிக்கப்பட்டது.

இவ்வாறு பல குளறுபடிகள், ஈழ வெற்றி தொடர்பாகவும் மாகோன் தோல்வி தொடர்பாகவும், சில பிரபல வரலாற்றாசிரியர்களால் கூட ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே அக்கூற்றுகளைத் தகுந்த அகச்சான்றுகள், புறச்சான்றுகளைக் கொண்டே நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

## 10. மாகோன் நிலைமை

பாண்டியர் படையெடுப்புகளால் மாகோனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக ஆராய்வோம். அதற்குமுன் ஏற்கனவே நாம் குறிப்பிட்ட பாண்டியர் கல்வெட்டுகள் - அவற்றில் இடம் பெறும் ஈழப்படையெடுப்புகள், அதில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றி ஒரு தெளிவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவை வருமாறு:

(i) ஆறு பாண்டிய கல்வெட்டுகளில் மாகோன் காலத்து ஈழப் படையெடுப்புகள் குறிப்பிடப்பட்டபோதும் உண்மையில் நான்கு படையெடுப்புகளே இடம்பெற்றன. மூவர் ஒன்றாகச் சேர்ந்து மேற்கொண்ட ஈழப்படையெடுப்பில் 1256-ல் பெற்ற

வெற்றியைத் தனித்தனியாகத் தத்தமது கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளார்.

(ii) 1256-ல் இடம்பெற்ற ஈழப்படையெடுப்பில், முதன்மை வகித்தவன் இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1254-1265). அவனுடன் துணை நின்றவர்கள் அவனது சகோதரர்களான முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1253-1283) முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1250-1284) ஆகியோர், இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியனின் குற்றாலம் கல்வெட்டு முதல் குடுமியான்மலைக் கல்வெட்டு வரை இந்த ஈழ வெற்றி சொல்லப்படுகிறது.

(iii) இந்த ஈழ வெற்றியில் சாவகன் (சந்திரபானு) கொல்லப்பட்டான். அவன் மகன் முடிசூட்டப்பட்டான். இலங்கை வேந்தன் (2ம் பராக்கிரமபாகு) திறை செலுத்தினான். ஆனால் மாகோன் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும் இப்போருக்குப் பின் மாகோன் பொலன்னறுவையில் இல்லாததால், அவன் பொலன்னறுவையை விட்டு நீங்கினான் என ஊகிக்கலாம்.

இவை பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாகப் பார்ப்போம்.



## அடிக்குறிப்புகள்

1. பாண்டியர் வரலாறு (கி.பி. 550-1371)
   N. சேதுராமன் - கும்பகோணம் 1989.
   Medival Pandiyas (Ad 1000-1200)
   N. Sethruman - Kumbakonam 1980.
   Three Jatavarman Sundara Pandiyas of Accession
   1250, 1277 and 1278 by N. Sethuraman - Kumbakonam
2. பாண்டியர் வரலாறு - N. சேதுராமன் - கும்பகோணம் 1989
   பக். 95-102.
3. Ibid பாண்டியர் வரலாறு, பக். 95
4. Ibid பாண்டியர் வரலாறு, பக். 109-110.
5. Ibid பாண்டியர் வரலாறு, பக். 109
6. Ibid பாண்டியர் வரலாறு, பக். 119
7. Ibid பாண்டியர் வரலாறு, பக். 119
8. Ibid பாண்டியர் வரலாறு, பக். 119
9. Ibid பாண்டியர் வரலாறு, பக். 127-129.
10. Ibid பாண்டியர் வரலாறு, பக். 128
11. Ibid பாண்டியர் வரலாறு, பக். 129
12. Ibid பாண்டியர் வரலாறு, பக். 132
13. Ibid பாண்டியர் வரலாறு, பக். 132
14. Ibid பாண்டியர் வரலாறு, பக். 137-138.
15. Ibid பாண்டியர் வரலாறு, பக். 131.
    Medival Pandyas N. Sethuraman - பக். 184-200
16. பாண்டியர் வரலாறு - N. சேதுராமன், 131-132.
17. Ibid பாண்டியர் வரலாறு - N. சேதுராமன், 137
18. Ibid பாண்டியர் வரலாறு - N. சேதுராமன், 135-136.

# X மாகோனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

## 1. கேள்விகள் பல

முந்திய அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி, மாகோன் காலத்தில் ஏற்பட்ட பாண்டியர் படையெடுப்புகள் பற்றி நோக்கும்போது பின்வரும் கேள்விகள் எழுகின்றன.

(அ) ஈழத்தை வெற்றிகொண்ட பல பாண்டியர் படையெடுப்புகளில் மாகோன் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 2ம் வீரபாண்டியனின் படையெடுப்பிலேயே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஏன்?

(ஆ) மாகோன் பொலன்னறுவையை விட்டு நீங்குவதற்குக் காரணமாக இருந்தது பாண்டியர் படை எடுப்பா அல்லது சாவக மன்னன் சந்திரபானுவின் படையெடுப்பா?

(இ) கி.பி. 1256-ல் 2ம் சடையவர்மன் வீரபாண்டியன், 1ம் சடையவர்மன் வீரபாண்டியன் 1ம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர் மேற்கொண்ட படையெடுப்பில் மாகோன் பாதிக்கப்பட்டானா? எவ்வாறு பாதிக்கப்பட்டான்?

(ஈ) மாகோன் இப்படையெடுப்பில் பாதிக்கப்படவில்லை என்றால் அவன் பொலன்னறுவையை விட்டு நீங்குவதற்கான காரணம் என்ன?

(உ) கலிங்க வம்சத்தவனான மாகோனுக்கும், பாண்டியருக்கு மிடையே பகைமை இருந்ததில்லை அவ்வாறாயின் பாண்டியர் மாகோனுக்கு எதிராகச் சிங்கள மன்னனுக்குப் படை உதவி செய்ததேன்?

(ஊ) கி.பி. 1256-ல், சிங்கள அமைச்சர், 2ம் சடையவர்மன் வீரபாண்டியனிடம் படை உதவி கோரியது சிங்கள மன்னர்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்கைத் தீர்ப்பதற்கா அல்லது சாவக மன்னனான சந்திரபானுவின் படையெடுப்பை முறியடிப்பதற்கா? அல்லது மாகோனைத் துரத்துவதற்கா?

(எ) வீரபாண்டியன் இப்போரில் "ஈழ மன்னர் இலகுவரில் ஒருவனை வீழ்ழப் பொருது விண்மிசை ஏற்றி..." "ஏனை வேந்தனை ஆனை திறைகொண்டு..." நாடு திரும்பினான் என்கிறது குடுமியான்மலைக் கல்வெட்டு. இவர்கள் யார் யார்?

இவை பற்றி ஆராய வேண்டியது அவசியம்.



## 2. பாண்டியர் கல்வெட்டுக்களின் பயன்பாடு

இவ்வாறான பல கேள்விகளுக்குச் சிங்கள வரலாற்று ஆவணங்களில் விளக்கம் கிடைக்காது. காரணம் அவை சிங்கள மன்னர்களின் புகழ்பாடுவதையே பிரதான நோக்காகக் கொண்டுள்ளன. அவர்களுக்குப் பாதகமான சங்கதிகள் இடம்பெறும் போது, அவற்றைக் 'கண்டுக்காமல்' விட்டுவிட்டன.

இத்தகைய போக்கை, 'சூளவம்சத்'தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த W. கெய்கர் பின்வருமாறு நகைச்சுவையுடன் குறிப்பிட்டுள்ளார்: "Not what is said but what is left unsaid is the besetting difficulty of Sinhalese History". (அதாவது சொல்லப்பட்ட விடயங்களைவிட, சொல்லாமல் விடப்புட்ட விடயங்களே சிங்கள வரலாற்றில் பெரும் கஷ்டத்தை ஏற்படுத்துகின்றன.)

நல்லவேளையாக, பாண்டியர் மெயக்கீர்த்திகளில் சொல்லப்பட்ட சில விடயங்கள் நமக்கு உதவுகின்றன. சிங்கள வரலாற்று ஆவணங்களில் ஏற்படும் இடைவெளிகளை இவற்றின் துணைகொண்டு நிரவல் செய்யலாம்; விளக்கங்களைத் தெளிவாக்கலாம்.

அவ்வகையில் 2ம் வீரபாண்டியனது 1256 குற்றாலம் கல்வெட்டு (அதாவது 1265 குடுமியான்மலைக் கல்வெட்டு) என்னும் மெயக்கீர்த்தி பல விடயங்களை நமக்குச் சொல்கின்றது[1]. ஏற்கனவே இம் மெய்க்கீர்த்திபற்றிய விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் பின்வரும் விடயங்கள் இடம்பெறுகின்றன. இவை 2ம் வீரபாண்டியனின் ஈழப் மடையெடுப்பைப் பற்றியவை.

(அ) பல அரைசியல் வழக்கம் நெறிப்பட நாட்டும் குறிப்பினுர.

(ஆ) மந்திரி சரணமதிகழ்ந்து இனிது நோக்கி.

(இ) ஈழமன்னர் இலகுவரி லொருவனை வீழ்ழப்பொருது.

(ஈ) ஏனைவேந்தனை ஆனை திறைகொண்டு.

(உ) பண்டேவல் செய்யாதிகல் செய்திருந்த சாவன் மைந்தன் நலமிருந்திறைஞ்ச வீரக்கழல் லிரவரைச் சூட்டி.

(ஊ) ஆனூர் புரிச்சு விரையச்செல்கென விடை குடுத்தருளி.

குடுமியான்மலைக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் இச்செய்திகள் பற்றிப் பார்ப்போம்.

## 3. குடுமியான்மலைக் கல்வெட்டு

குடிமியான்மலைக் கல்வெட்டில் குறிப்பிட்ட ஆறு வாசகங்களும் பின்வரும் செய்திகளைத் தருகின்றன.

ஈழத்து அமைச்சர் ஒருவர் 2ம் வீரபாண்டியனை அணுகி, ஈழத்து மன்னர் சார்பில் உதவி கேட்க, அதை ஏற்றுக்கொண்ட வீரபாண்டியன்

(i) ஈழத்தின் மேல் படையெடுத்து, ஈழத்து மன்னர் இருவரில் ஒருவனைக் கொன்று, அவனுடைய குடை, கொடி, ஆலவட்டம், முடி, சிம்மாசனம் முதலிய அரச சின்னங்களையும், அவனது செல்வங்களையும் எடுத்துக்கொண்டு,

(ii) இன்னொரு மன்னனிடம் ஆனைகளைத் திறையாகப் பெற்றுக்கொண்டு,

(iii) சாவகன் மைந்தன் சரணடைந்து கெஞ்ச, அவனுடைய கால்களில் வீரக்கழலைப் பூட்டி.

(iv) அவனுடைய தந்தையின் ஆட்சிபீடத்தில் அமர்த்தினான்.

இந்த விளக்கத்தைப் பார்க்கும்போது, இதில் குறிப்பிடப்படும் இரு மன்னர்கள் யார்? மாகோன் இதில் சம்பந்தப்பட்டுள்ளானா? சாவகனான சந்திரபானு இதில் எவ்வாறு சம்பந்தப்படுகிறான்? என்பன போன்ற விபரங்களை அறிய வேண்டியுள்ளது. இதுபற்றி ஆய்வாளர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, டாக்டர் எஸ். பரணவிதான போன்றவர்கள் சில விளக்கங்களைக் கொடுத்துள்ளனர்[2]. இவற்றை ஆய்வு செய்த



அமரதாச லியனகமகே என்பவரும் சில கருத்துக்களைக் கூறியுள்ளார்[3]. இவற்றை ஒப்பிட்டு நோக்கி நாம் சில முடிவுகளை எடுக்கலாம்.

2ம் வீரபாண்டியனின் ஈழப் படையெடுப்பு (1256) ஏற்பட்ட காலத்தில் ஈழத்தின் மன்னனாக இருந்தவன் 2ம் பராக்கிரமபாகு. எனவே வீரபாண்டியனிடம் படை உதவி கேட்டவன் இம்மன்னனே என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனர். படை உதவி கேட்டதற்கான காரணம் அரசியல் நெருக்கடி என்பதையும், அவனது பதவிக்கு ஏற்படவிருந்த ஆபத்து என்பதையும் ஏற்றுக் கொள்கின்றனர். இதிலும் கருத்து வேறுபாடு இல்லை.

## 4. "வீழ்ழப்பொருத" இரு மன்னர்கள்

நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், மாகோன் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த காலத்தில் சிங்கள மன்னர் இடம்பெயர்ந்து தம்பதேனியாவைத் தலைநகராக்கி, அதை அரண் செய்துகொண்டு வாழ்ந்தனர்.

இவர்களில் குறிப்பிடத்தக்கவன் 2-ம் பராக்கிரமபாகு. இவனது மருமகன் வீரபாகு. இவனது மக்கள் முறையே 4ம் விஜயபாகு, 2ம் புவனேகபாகு, ஜயபாகு, திலோகமல்ல (திகுபுவனமல்ல) என்போர். இவர்களுள் வீரபாகுவும், விஜயபாகுவும் இணைந்து பல போர்களில் பராக்கிரமபாகுவின் சார்பாகச் செயற்பட்டுள்ளனர். பல வெற்றிகளையும் கண்டுள்ளனர்.

கி.பி. 1247-ல் சந்திரபானு என்னும் சாவக மன்னன் ஈழத்தின் மேல் படையெடுத்து வந்தான்.

அவனது படையெடுப்புக்கான காரணம் புனித சின்னங்களான புத்தரின் தந்தத்தையும், பிட்சாபாத்திரத்தையும் கவர்ந்து கொள்வதே ஆகும். ஆனால் வீரபாகுவும், விஜயபாகுவும் இணைந்தது இவனது படையெடுப்பை முறியடித்தனர். சந்திரபானு இப்படையெடுப்பில் தோல்வி கண்டான்[4].

ஆனால் அவன் தனது நாட்டுக்குத் திரும்பிச் சென்றுவிடவில்லை. வட இலங்கைக்குச் சென்று அங்கு தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டு மீண்டும் இலங்கை மீது படையெடுப்பதற்கான ஆயத்தங்களை ரகசியமாக மேற்கொண்டான். இவன் தங்கியிருந்த இடங்களில் ஒன்று இன்றுள்ள சாவகச்சேரி (சாவக+சேரி). எனவே

பாண்டியர் நோக்கில் இவன் ஈழத்தின் மற்றொரு மன்னனாகவே கருதப்பட்டான்.

இவன் இங்கிருந்துகொண்டே மாகோன் படைகள் இருந்த சில இடங்களையும் கைப்பற்றிக்கொண்டான். இவன் பௌத்தன் ஆகையால், சிங்களப் படைவீரர்கள் சிலரும் இவனுடன் சேர்ந்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. 1247-ல் ஏற்பட்ட தோல்விக்குப் பழிவாங்கும் நோக்கத்துடன் இவன் தன் படைபலத்தை அதிகரித்துக்கொண்டு இரண்டாவது முறையாகவும் படையெடுத்தான்[5].

## 5. "சரணமதிகழ்ந்தினிது நோக்கிய" மந்திரி

இதை எப்படியோ அறிந்துகொண்ட பராக்கிரமபாகு (II) தனது அமைச்சர் ஒருவனைப் பாண்டியரிடம் தூது அனுப்பினான்[6] ஒரே கல்லில் இரு மாங்காய் பறிக்கும் நோக்குடன். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ராஜரட்டையை ஆட்சி செய்த மாகோனைத் துரத்தியடிப்பதும் அவனது உள்நோக்கமாக இருந்தது (University of Ceylon History of Ceylon Edited By H.C. Ray and S. Paranavithana Part II page 627).

இவ்வாறு பாண்டியரின் உதவி கோரிச்சென்ற அமைச்சர் பராக்கிரமபாகுவின் ஆட்சியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த தேவபதிராஜா (அல்லது பதிராஜதேவா)வாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவர் 2-ம் பராக்கிரமபாகு மன்னரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்றும், பௌத்த சமய நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை காட்டி உழைத்தவர் என்றும் சூளவம்சம் கூறுகிறது[7]. (சூளவம்சம் LXXXVI பக். 3) எனவே பாண்டியனிடம் தூது சென்றவர் இவரே என்பதில் தவறில்லை. இவ்வாறு பாண்டியரிடம் உதவி கோரியதற்குப் பல காரணங்கள் இருந்தன.

(அ) இக்காலம், தென்னிந்தியாவில் சோழர் ஆட்சி தளர்ந்து பாண்டியர் கை ஓங்கியிருந்தது. ஈழத்தில் ஏற்படும் போர்களின்போது சிங்கள மன்னர்கள் பாண்டியர் உதவிபெற்று அப்போர்களை அடக்குவது வழக்கம்.

(ஆ) ராஜராஜ சோழன் (985-1015) காலம் முதல் ஈழத்தில் நிலைபெற்றுவிட்ட சோழர் ஆட்சியினால், அவர்கள் மேல் வெறுப்புக்கொண்ட சிங்கள மன்னர்கள் இக்காலகட்டத்தில் பாண்டியர் பக்கம் சார்ந்திருந்தனர். பாண்டியர்களுக்கும் இவர்கள் மேல் அனுதாபமிருந்தது.



(இ) திருமண உறவினாலும், பாண்டிய - சிங்கள உறவு நெருக்கமடைந்திருந்தது.

(ஈ) கடந்த காலங்களில், சோழருக்கெதிரான பாண்டியப் போர்களில், சிங்கள மன்னர்கள் பாண்டியருக்கு உதவி செய்திருந்தனர். உ+ம்: 3-ம் ராஜராஜ சோழனுக்கெதிராக, காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கன் மேற்கொண்ட போரில் ஈழத்தின் பராக்கிரமபாகு என்ற பெயர்கொண்ட ஒரு மன்னன், உதவிக்குச் சென்று உயிர் துறந்தான்.

(உ) இலங்கை வணிகர் சிலர், பாண்டிய நாட்டில் நிலை கொண்டிருந்தனர். இவர்கள் "வளஞ்சியர்" என அழைக்கப்பட்டனர். இவர்கள் அங்குள்ள கோயில் தலங்களுக்கு நிறைய அன்பளிப்புகள் வழங்கினர். இக்காரணங்களினால் பராக்கிரமபாகு (II) தனது மதியூக மந்திரியான தேவபதிராஜாவை பாண்டியரிடம் படை உதவி கேட்டுத் தூது அனுப்பினான்.

## 6. பாண்டியர் படை எடுப்புக்கான காரணங்கள்

2-ம் பராக்கிரமபாகுவின் வேண்டுகோளின் பேரில் 2ம் வீரபாண்டியன் படையெடுப்பு நிகழ்ந்தாலும், இப்படையெடுப்புக்கான காரணங்கள் பல்வேறு விதமாகக் கூறப்படுகின்றன.

(அ) **கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுவது :** சிங்கள மன்னர்கள் தமக்குள் ஏற்பட்ட பிணக்கைத் தீர்ப்பதற்காக (To Settle a dispute) பாண்டியர் படை உதவி கோரினர்[8].

(ஆ) **பேராசிரியர் பரணவிதான கூறுவது :** இலங்கையில் நீண்ட காலம் நிலை பெற்றிருந்த மாகோனைத் துரத்துவதற்காகவே பாண்டியரிடம் படை உதவி கோரப்பட்டது[9].

(இ) **குடுமியான் மலைக் கல்வெட்டு கூறுவது :** அரசுரிமைக்கு உரியவரிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்காக, பாண்டியர் (2வது வீரபாண்டியன்) இலங்கை மேல் படை எடுத்தனர்[10]. (கல்வெட்டு வாசகம் : அரைசியல் வழக்கம் நெறிப்பட நாட்டும் குறிப்பில்.)

மேற்படி காரணங்கள் கூறப்பட்டபோதும், நடந்தேறிய சம்பவங்கள் வேறுவிதமாக இருப்பதைப் பார்க்கிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் சாவகனான சந்திரபானுவின் படையெடுப்பு நிகழ்கிறது. இதை ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்று கூறமுடியாது. சந்திரபானுவின் படையெடுப்பு (2வது படையெடுப்பு) பற்றி முன்கூட்டியே பராக்கிரமபாகு அறிந்திருக்கிறான். முந்திய படையெடுப்பு (1247) அவனுடைய தளபதிகளால் முறியடிக்கப்பட்டாலும், இந்த இரண்டாவது படையெடுப்பு பன்மடங்கு வலிமையுள்ளதாக இருக்கும் என்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருந்தன. அவை -

(i) சந்திரபானு தான் பௌத்தன் என்பதைக் காட்டிச் சில சிங்களப் படை வீரர்களையும் தன் பக்கம் சேர்த்திருந்தான்.

(ii) அவ்வாறே, குருந்தி, மாந்தை, படி முதலிய இடங்களில் இருந்த கலிங்கமாகனின் படை வீரர்களையும் தன்பக்கம் சேர்த்திருந்தான். (இதனால் மாகோன் படைபலம் குன்றியிருந்தது).

இவை பற்றி பராக்கிரமபாகு அறிந்திருந்தபடியால், அவனை முறியடிப்பதை முதல் நோக்கமாக வைத்தே, பாண்டியர் படை உதவியைக் கோரியிருக்கிறான். அதேநேரம் மாகோனைத் துரத்துவதும் அவனது உள் நோக்கமாகும்.

### 7. "ஏனைவேந்தனை ஆனைதிறைகொண்டு... சாவன்மைந்தன் வீரக்கழல்லிரவரைச்சூட்டி"

பாண்டியரிடம் படை உதவி கோரியபோது, அதற்குப் பிரதியாக, பராக்கிரமபாகு என்ன செய்யவேண்டும் என்பது வெளிப்படையாகத் தெரிவிக்கப்படாதபோதும், "ஏனை வேந்தனை ஆனைதிறைகொண்டு" என வரும் குடுமியான்மலைக் கல்வெட்டு வரிகளில் அது வெளிப்படுகிறது. எனவே பாண்டியர் படை உதவிக்குப் பிரதியாக பராக்கிரமபாகு மன்னன் பாண்டியருக்கு ஆனைதிறை செலுத்துகிறான்.

இப்படையெடுப்பின்போது, பாண்டியர் மாகோனுடன் போரிட்டதாக எவ்விதத் தகவலும் இல்லை. வீரபாண்டியனது கல்வெட்டுகளிலும் எவ்வித குறிப்புகளும் இல்லை. ஆனால், இப்படையெடுப்பின் பின், மாகோன் பொலன்னறுவையில் இல்லை. எனவே, இப்படையெடுப்பின்போது மாகன் துரத்தப்பட்டிருக்கிறான் என்பதை ஊகிக்கலாம். அதற்குக் காரணம் பராக்கிரமபாகுவின் படைகள்தான் என சூளவம்சம் கூறுகிறது.



இப்படையெடுப்பின்போது சாவகனான சந்திரபானு வீரபாண்டியனால் கொல்லப்படுகிறான். சந்திரபானுவின் மகன் சரணடைகிறான். அவனுக்கு வீரக்கழல் சூட்டி, அவனது தந்தையின் ஆட்சிப்பீடத்தில் அவனை அமர்த்துகிறான் வீரபாண்டியன். வீரக்கழல் சூட்டியதும், ஆனை மேல் ஏற்றி ஊர்வலம் நடாத்தி அனுரதபுரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக வீரபாண்டியனின் குடுமியான்மலைக் கல்வெட்டு கூறுகிறது ("திருக்கோளம், அலைவாப்படன் கழித்து வழங்கிட அருளி, முழுங்குகளிற்றேறி பார்முழுதறிய, ஊர்வலம் செய்வித்து, தந்தை மரபென், நினைப்பிட்டரைசிடமகிந்து ஆனூர் புரிச்சு, விரையச் செல்கென விடை குடுத்தருளி..." என்பது கல்வெட்டு வாசகம்.)

### 8. சந்திரபானு ஈழத்து மன்னனா?

சந்திரபானு இரண்டாவது முறை (1256) பெரும் படையுடன் வந்தான். அவனே பராக்கிரமபாகுவின் ஆட்சிக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தான். அதுமட்டுமல்ல, புத்தரின் புனித சின்னங்களைக் கவர்ந்துகொள்வதே அவன் நோக்கமாக இருந்தது. இதைச் சிங்கள மன்னர் எவருமே சகித்துக் கொள்ளமாட்டார்கள். அதைத் தடுப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்வார்கள்.

ஆனால், சந்திரபானு அப்போது இலங்கை மன்னனாக இருக்கவில்லை. அப்படியானால் "ஈழமன்னர் இருவரில் ஒருவரை" என்பது பொருந்துமா? இதுபற்றி மேலும் சிறிது ஆராயவேண்டும்.

(i) ஏற்கனவே 1247-ல் அவன் இலங்கை மேல் படையெடுத்துத் தோல்வி கண்டபோது, தனது சாவக நாட்டுக்குத் திரும்பவில்லை. இலங்கையின் வடபகுதிக்குச் சென்றான் என ஏற்கனவே பார்த்தோம்.

(ii) இப்போது இரண்டாம் முறை அவன் படையெடுத்தபோது தென்னிந்தியாவின் சோழ, பாண்டிய படைவீரர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டிருக்கிறான். அவ்வாறே இலங்கையிலும், சிங்கள கலிங்க படைவீரர்களைத் தன்னுடன்

சேர்த்துக்கொண்டிருக்கிறான். இதற்குச் சிறிது கால அவகாசம் வேண்டும்.

(iii) மகாதித்தாவில் (மாந்தையில்) சந்திரபானு தண்டு இறங்கிய பின்னரே மேற்படி படைவீரர்களைச் சேர்த்துக்கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். அதன் காரணமாகவே பராக்கிரமபாகு அவனது தாக்குதல் முஸ்தீபுகளை அறிந்து பாண்டியரிடம் படை உதவி கோரியிருக்கிறான்.

(iv) போரில் சந்திரபானு கொல்லப்பட்டபின் அவனது மகனுக்கு வீரக்கழல் சூட்டி, அவனைத் தந்தையின் ஆட்சிக்கு வாரிசாக முடிசூட்டிய வீரபாண்டியன் அனுரதபுரிக்கு அவனை அனுப்பி வைக்கிறான். எனவே அங்கு அல்லது அனுரதபுரியைத் தாண்டி அப்பால் ஒரு வடப்பகுதிப் பிரதேசத்தில் சந்திரபானுவின் ஆட்சிபீடம் இருந்திருக்கவேண்டும்.

மேற்படி காரணங்களால் சந்திரபானு, ஈழமன்னர்களில் ஒருவனாகக் கருதப்பட்டு அவ்வாறே 2-ம் வீரபாண்டியனின் குடுமியான்மலைக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான். ஆகவே 2-ம் வீரபாண்டியனின் குடுமியான்மலைக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் இரு ஈழ மன்னர்களில், (அ) கொல்லப்பட்ட மன்னன் சந்திரபானு என்றும் (ஆ) ஆனைதிறை செலுத்திய மன்னன் 2ம் பராக்கிரமபாகு என்றும் அறியலாம்.

இவ்விடயம் தொடர்பாக, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, பேராசிரியர் பரணவிதான ஆகியோர் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இதுபற்றி முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.

இவ்விடயத்தில், விரிவான ஆராய்ச்சி மேற்கொண்ட அமரதாச லியனகமகே தமது முடிவுகளை "The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniya" என்ற நூலில் வெளியிட்டுள்ளார்[11]. ஆனால் இவர் குடுமியான்மலைக் கல்வெட்டு தொடர்பாக ஒரு தவறான குறிப்பை வெளியிட்டுவிட்டார். அதைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம்.

இவர் "குடுமியான்மலைக் கல்வெட்டு" முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1253-1283) பொறித்தது எனவும், அதில்



குறிப்பிடப்படும் ஈழப் படையெடுப்பு 1263-ல் இடம் பெற்றது எனவும் கூறுகிறார்[12]. இது தவறாகும். மேலும் "கொங்கு ஈழம் கொண்டு...."[13] என ஆரம்பிக்கும் கல்வெட்டு குடுமியான்மலைக் கல்வெட்டு அல்ல என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

உண்மை நிலை வருமாறு:

குடுமியான்மலைக் கல்வெட்டு "திருமகள் வளர்முலை திருமார்பு தளைபட" என ஆரம்பமாகிறது. இதைப் பொறித்தவன் 2ம் சடையவர்மன் வீரபாண்டியன் (1254-1265). இக்கல்வெட்டின்படி ஈழப்படையெடுப்பு 1256-ல் நிகழ்ந்தது. இவனுடன் சென்ற இவனது சகோதரன் முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் இந்த ஈழ வெற்றியைத் தனது 1263-ம் ஆண்டுக் கல்வெட்டில் பொறித்துள்ளான். எனவேதான் இக்குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி முந்திய அத்தியாயத்தில் விளக்கியுள்ளோம்.

ஆனாலும் பின்பு ஒரு கட்டத்தில், லியனகமகே, "ஈழப்போரில் பிரதான மன்னன் இரண்டாம் வீரபாண்டியனாகவே இருக்கவேண்டும்" எனக் குறிப்பது திருப்தி தருகிறது[14]. (Decine of Polonnaruwa and the Rise of Dambadeniya-Pp. 143-144).

## 9. மாகோனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

இதில் முக்கியமான ஒரு விடயம் கவனிக்கத்தக்கது. மேற்கூறிய படைபெயடுப்பு, சம்பவங்கள் எதிலுமே மாகோன் சம்பந்தப்பட்டதாகக் குறிப்புகள் இல்லை.

ஆனால் மாகோன் இப்பாண்டியப் படையெடுப்புக்குப் பின் பொலன்னறுவையை விட்டு இடம் பெயர்ந்துள்ளான். எனவே இப்போரின்போது, மாகோனுக்குப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். மாகோன் பராக்கிரமபாகுவினால் தோற்கடிக்கப்பட்டு பொலன்னறுவையை விட்டுத் துரத்தப்பட்டான் என சூளவம்சம் குறிப்பிடுகிறது[15]. இது எவ்வாறு நிகழ்ந்திருக்கக்கூடும். அதை ஒருவாறு நாம் ஊகித்தறியலாம்.

பாண்டியர் படை சந்திரபானுவை எதிர்த்துப் போரிட்டபோது பராக்கிரமபாகுவின் படைகள், பொலன்னறுவையில் உள்ள மாகோனைத் தாக்கியிருக்கவேண்டும். இக்காலகட்டத்தில் மாகோன் பின்வரும் காரணங்களால் ஓரளவு தளர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

(i) மாகோனின் வடபகுதியில் உள்ள சில படைவீரர்கள் சந்திரபானுவுடன் சேர்ந்துகொண்டது.

(ii) சந்திரபானுவுக்கு எதிராகப் பாண்டியர் திரட்டி வந்த பெரும்படை பராக்கிரமபாகுவுக்கு ஆதரவாக இருந்தது.

(iii) கால ஓட்டத்தில் ஏற்பட்ட தளர்வு, வயதினால் ஏற்பட்ட தளர்ச்சி, நாட்டில் அப்போதிருந்த குழப்ப நிலை.

மேற்கூறிய காரணங்களால் மாகோன் தோற்கடிக்கப்பட்டு பொலன்னறுவையை விட்டு நீங்கியிருக்கலாம். இச்சம்பவத்தை சூளவம்சம் பின்வருமாறு வர்ணிக்கிறது[16].

"பராக்கிரமபாகுவின் தாக்குதலுக்கு முகம் கொடுக்கமுடியாமல் மாகோனின் படைகள் திக்குத்திசை தெரியாமல் சிதறி ஓடின. கிழக்கு வாசல் எனத் தவறாக எண்ணி மேற்கு வாசல் வழிநோக்கி ஓடின. காலவேவாவை அடைந்து சிங்களப் படைகளிடம் மாட்டிக்கொண்டன. தாங்கள் கொண்டு வந்த செல்வங்களையெல்லாம், சிங்களப் போர் வீரர்களிடம் பறிகொடுத்தன (சூளவம்சம் : LXXXIII பக்.29-34).

இச்சம்பவத்தைப் பூஜாவலிய பின்வருமாறு வர்ணிக்கிறது[17]. பராக்கிரமபாகு மன்னன் மகா சக்தி வாய்ந்தவன். வெளிநாட்டரசர்களும் அவன் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டிருந்தனர். நாங்கள் (மாகோனின் படைவீரர்கள்) பராக்கிரமபாகுவாகிய சூரியனுக்குமுன் மின்மினியாகிவிட்டோம் (பூஜாவலிய பக். 116-117).

ஆனால் இவ்வர்ணனைகள் எல்லாம் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களே என பரணவிதான, லியனகமகே முதலியோர் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், இப்பாண்டியர் படையெடுப்புடன் மாகோன் பொலன்னறுவையை விட்டு நீங்கினான் என்பது உறுதியாகிறது. ஆனால் இதற்கான ஆண்டு வெவ்வேறு வகையில் கொடுக்கப்படுகிறது:

(அ) பேராசிரியர் பரணவிதான குறிப்பிடும் ஆண்டு கி.பி. 1255

(ஆ) திரு. லியனகமகே குறிப்பிடும் ஆண்டு கி.பி. 1263

(இ) திரு. என். சேதுராமன் குறிப்பிடும் ஆண்டு கி.பி. 1256.



இவற்றுள் திரு. என். சேதுராமன், பாண்டியர் படையெடுப்பு ஆண்டு, குடுமியான்மலைக் கல்வெட்டு ஆண்டு முதலியவற்றைப் பல்வேறு ஆதாரங்களுடன் சரியாகக் கணக்கிட்டுக் கூறுவதால் கி.பி. 1256 ஆண்டையே சரியான ஆண்டாகக் கொள்ளவேண்டும்.

மாகோன், 1256-ல் இடம் பெயர்ந்தாலும், பராக்கிரமபாகு (1236-1272) 1262-ல்தான் பொலன்னறுவைக்கு வந்து முடிசூடிக் கொள்கிறாள். இடைப்பட்ட 6 ஆண்டுகள் தாமதத்துக்கான காரணம் என்ன? பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

(அ) 1256-ல் மாகோன் இடம் பெயர்ந்தாலும் 1262 வரை பராக்கிரமபாகு பொலன்னறுவைக்கு வரக்கூடிய பாதுகாப்பான சூழ்நிலை இருக்கவில்லை. (மாகோன் மீண்டும் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக இருக்கலாம்).

(ஆ) பொலன்னறுவையில் போரினால் ஏற்பட்ட அழிவுகளைச் சரிசெய்து, பல புனருத்தாரண வேலைகள் செய்ய வேண்டியிருந்தது.

(இ) பராக்கிரமபாகு 1258 முதல் தீர்க்கமுடியாத ஒருவித நோயினால் பீடிக்கப்பட்டிருந்தான்.

இடம் பெயர்ந்த மாகோன் எங்கு சென்றான், என்ன ஆனான் என்பது பற்றித் திட்டவட்டமான அல்லது ஊகித்து அனுமானிக்கக்கூடிய சான்றாதாரங்கள் இல்லை. ஆனாலும் அவன் இலங்கையின் வடபகுதிக்குச் சென்று அங்கு தன் ஆட்சியை நிறுவினான் எனச் சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். வடக்கில் மாகோனுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை. எனவே இது சாத்தியமானதே. ஆனால் மாகோன் அங்கு செல்லுமுன்னரே அங்கு ஒரு அரச பரம்பரை உருவாகிவிட்டது. எனவே இதுபற்றி விரிவாக ஆராயவேண்டும்.

## அடிக்குறிப்புகள்


1. பாண்டியர் வரலாறு - N. சேதுராமன் - கும்பகோணம் 1989 பக். 137.
2. தென் இந்திய வரலாறு - கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி பக். 338.
3. The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniya - by Amaradasa Liyanagamage Colombo 1968 - pp. 133-134.
4. Culavamsa - translated by wilhelm Geiger - Colombo 1939 - Ch. LXXXIII Notes 41-49 pp. 151-152.
5. Ibid - Ch. LXXXVIII - Notes 69-76 - pp. 187-188. University of Ceylon.
6. History of Ceylon - Edited by H.C. Ray and S. Paranavitana - Part II - pp. 627.
7. Culavamsa - Ch. LXXXVI - Notes 18-52 - pp. 173-175.
8. தென் இந்திய வரலாறு - கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி - மட்ராஸ் 1979 - பக். 338.
9. History of Ceylon - pp. 621.
10. பாண்டியர் by N. சேதுராமன் - பக். 138 - கல்வெட்டு வரி 17.
11. The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniya - pp. 130.
12. Ibid " " " pp. 144.
13. பாண்டியர் - N. சேதுராமன் - பக். 132.
14. The Decline of Polonnaruwa and the Rise of Dambadeniay - pp. 143-144.
15. Culavamsa - Ch. LXXXIII - Notes 22-35 - pp. 149.
16. Ibid - Ch. LXXXIII - Notes 29-34 - pp. 149.
17. Pujavilvya - Edited by A.V. Suravera - 116 - 117.




# XI மாகோனும் வட இலங்கையும்

### 1. வட இலங்கை ஆதரவு

வட இலங்கைக் கரையோரப் பிரதேசங்களில், மாகோனுடைய படைகள் நிலைகொண்டிருந்தன என்பதை ஏற்கனவே பார்த்தோம். ஆனால் சந்திரபானு படையெடுத்து வந்தபோது சில இடங்களில் இருந்த மாகோன் படைவீரர்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டான் என்பதையும் பார்த்தோம். இவ்விடங்களில் மாகோன் படைகள் தளர்ந்திருந்தாலும் மாகோனின் அதிகாரம் அங்கெல்லாம் பரவியிருந்தது என்பதை மறுக்கமுடியாது. மேலும் சந்திரபானுவின் தோல்விக்குப் பின் அவனுடைய அதிகாரம் தானாகவே மறைந்திருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

அதேசமயம், யாழ்ப்பாணத்தில் ஆட்சியிலிருந்தவர்கள் மாகோனுக்கு ஆதரவானவர்கள் என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும். மாகோன் கி.பி. 1215-ல் இலங்கைக்கு வந்தபோது யாழ்ப்பாண மன்னனைச் சந்தித்து ஆலோசனை பெற்றான் என்ற குறிப்பு மட். மான்மியத்தில் இடம்பெற்றிருப்பதைப் பார்த்தோம்[1]. யாழ்ப்பாண மன்னர்கள் தமிழர்கள் என்பதால் மாகோனுக்கு ஆதரவு அளித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மேலும், மாகோனின் வலதுகரமாக விளங்கிய சோழ கங்கதேவன் (குளக்கோட்டன்) திருகோணமலைத் திருப்பணிகள் முடிந்ததும் யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து மாகோனின் பிரதிநிதியாக ஆட்சி செய்தான் என்றும் கூறப்படுகிறது. இதுவும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

வட இலங்கையில் மாகோன் ஆட்சி அமைத்த இடம் எது? யாழ்ப்பாணமா அல்லது வட இலங்கையில் மாகோனின் படைகள் நிலை கொண்டிருந்த இடங்களில் ஒன்றான புளச்சேரியியா? (புளச்சேரி

என்பது தற்போதைய பூநகரி என்பது ஆய்வாளர் கருத்து) அல்லது புளச்சேரியில் இருந்து தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டு யாழ்ப்பாணம் சென்று ஆட்சி அமைத்தானா? வரலாற்றாசிரியர்களின் கூற்றுக்கள் இவ்வாறெல்லாம் சிந்திக்கவைக்கின்றன.

மாகோன், விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் யாழ்ப்பாண அரசை உருவாக்கினான். அவனே ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரையின் முதல் மன்னன் என்பது பொதுவான நம்பிக்கை.

ஆனால் பின்னால் வந்த ஆய்வாளர்கள் சிலர் இக்கருத்தை ஏற்கத் தயக்கம் காட்டியுள்ளனர். கலாநிதி சி.க. சிற்றம்பலம்[2] (யாழ்ப்பாண ராச்சியம் 1992, பக்: XXXIII) ப. புஷ்பரத்தினம்[3] (பூநகரி தொல்பொருள் ஆய்வு) முதலியோர் இவ்வாறான தயக்கத்தைத் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர்கள், தங்கள் கூற்றை நிறுவுவதற்கான சான்றுகளையோ அல்லது முந்திய கருத்தை நிராகரிப்பதற்கான சான்றுகளையோ முன்வைக்கவில்லை. கலாநிதி சி.க. சிற்றம்பலம் பின்வருமாறு கூறுகிறார்:[4]

(i) "... ஆரியச் சக்கரவர்த்திகளின் வம்சாவளிப் பட்டியலில் குறிப்பிடப்படும் விஜயகூழங்கைச் சக்கரவர்த்தியே மாகனின் (1215 - 1255) விருதுப்பெயரான விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியின் திரிபு என்று வாதிட்டுள்ளமை இன்று ஏற்கப்படவில்லை..."

(ii) "மாகோனின் ஆட்சி வடக்கே அமைந்திருந்தாலும்கூட அவனை ஆரியச் சக்கரவர்த்திகளின் முதல் மன்னன் எனக்கொள்வது தவறு என்பதை அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது..."

இரண்டாவது கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியதே. விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என்று பெயர்கொண்ட மாகோன் யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆரியச்சக்கரவர்த்தி அல்ல எனலாம். ஆனால் அவனே முதல் சக்கரவர்த்தி என்பது நிராகரிக்கப்படவில்லை; இதுபற்றி ஆராய்வோம்.

## 2. விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி

யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களின் பட்டியல், கி.பி. 13ம் நூற்றாண்டில் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியுடன் ஆரம்பமாகிறது.



இதற்கு முந்திய மன்னர்கள் பரம்பரை உக்கிரசிங்கன் (யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுவது) என்ற பெயருடன் ஆரம்பமாகிறது. ஆனால் இதற்கு வரலாற்று ஆதாரங்கள் இல்லை.

விஜயகாலிங்க என்ற பெயரைத் தொடர்ந்து வரும் மன்னர்கள் சிங்கையாரியன் என்ற விருதுப் பெயரைக் கொண்டிருக்கின்றனர். இவர்களது பட்டப்பெயர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் என மாறிமாறி வருகிறது. விபரம் வருமாறு:[5]

| மன்னர் பெயர் | பட்டப்பெயர் | ஆட்சியாண்டு (யா.வை. (கலாநிதி மாலை பத்மநாதன் கூறுவது) கூறுவது) | |
|---|---|---|---|
| 1. விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி (விஜயகூளங்கை சக்கரவர்த்தி) | செகராசசேகரன் - I | 1232 | 1240 |
| 2. குலசேகர சிங்கையாரியன் | பரராசசேகரன் - I | 1240 | 1256 |
| 3. குலோத்துங்க சிங்கையாரியன் | செகராசேகரன் - II | 1256 | 1279 |
| 4. விக்கிரமசிங்கை ஆரியன் | பரராசசேகரன் - II | 1279 | 1302 |
| 5. வரோதய சிங்கையாரியன் | செகராசசேகரன் - III | 1302 | 1325 |
| 6. மார்த்தாண்ட சிங்கையாரியன் | பரராசசேகரன் - III | 1325 | 1348 |
| 7. குணபூஷன் சிங்கையாரியன் | செகராசசேகரன் - IV | 1348 | 1371 |
| 8. வரோதய சிங்கையாரியன் | பரராசசேகரன் - IV | 1371 | 1380 |
| 9. செயவீர சிங்கையாரியன் | செகராசசேகரன் - V | 1380 | 1410 |

| | | | |
|---|---|---|---|
| 10. குணவீர சிங்கையாரியன் | பரராசசேகரன்- V | 1410 | 1446 |
| 11. கனகசூரிய சிங்கையாரியன் | செகராசசேகரன்-VI (இருமுறை) | 1450<br>1467 | 1467<br>1478 |
| 12. கனசூரிய சிங்கையாரியன் | பரராசசேகரன் - VI | 1478 | 1519 |
| 13. சங்கிலி-I | செகராசசேகரன் - VII | 1519 | 1564 |
| 14. புவிராசபண்டாரம் | பரராசசேகரன் - VII | 1561 | 1565 |
| 15. காசிநயினார் | - | 1565 | 1570 |
| 16. பெரியபிள்ளை பண்டாரம் | செகராசசேகரன் - VIII | 1570 | 1582 |
| 17. புவிராச பண்டாரம்-II | | 1582 | 1591 |
| 18. எதிர்மன்ன சிங்கன் | பரராசசேகரன் - VIII | 1591 | 1615 |
| 19. சங்கிலிகுமாரய / சங்கிலி II | - | 1615 | 1618 |

குறிப்பு : இந்த ஆண்டுக்கணக்கு உத்தேசமானது. சரியான ஆண்டுக் கணக்கை நிர்ணயிப்பதற்குரிய ஆதாரங்கள் இல்லாமை ஒரு பெருங்குறையே.

இப்பட்டியலைப் பார்க்கும்போது, "விஜயகாலிங்க" என்ற பெயர் ஆரிய வம்சத்துக்குரிய பெயரல்ல என்பது தெரியவரும். மாகன் கலிங்க வம்சத்தவன். பொலன்னறுவையில் ஆட்சி செய்தபோது விஜயபாகு என்ற பெயருடன் ஆட்சி செய்தவன். இவனது பெயரை "காலிங்க விஜயபாகு" எனப் பாலி வரலாற்று நூல்கள் கூறும். எனவே "விஜயகாலிங்க" என்ற பெயர் மாகோனுக்குரியதாகக் கொள்ளலாம். இதே பெயர் "யாழ்ப்பாண சரித்திரத்தில்", "காலிங்க விஜயபாகு", "காலிங்க மாகன்", "விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி" என இடம்பெறுகிறது.

ஆரிய மன்னர்களைப் பொறுத்தவரை அவர்களது வம்சப் பெயர் பெயரின் இறுதியில் வருவதை அவதானிக்கலாம். (உ+ம்)



குலசேகரசிங்கை ஆரியன். இவ்வாறே மாகோனின் "கலிங்க விஜயபாகு" என்னும் பெயர் "விஜயகாலிங்க" என அமைந்திருக்கலாம்.

இதுபற்றிக் கலாநிதி இந்திரபாலா பின்வருமாறு கூறுகிறார்:-[6]

காலிங்கத் தொடர்பினாலேயே யாழ்ப்பாண ராச்சியம் தோற்றுவிக்கப்பட்டது. ஆரியச் சக்கரவர்த்திகளின் வருகைக்கு முன், கலிங்கர் ஆட்சியும், மாகோன் ஆட்சியும் அங்கு இடம் பெற்றிருக்க வேண்டும். யாழ்ப்பாணத்துத் தலைநகரான சிங்கை நகர் என்பது கலிங்கத்தின் தலைநகரான சிங்கபுர (சிகபுர) என்பதன் மறுபெயரே எனவும் இப்பெயர் மாகோனால் சூட்டப்பட்டது எனவும் மேற்படி குறிப்பில் கலாநிதி இந்திரபாலா கூறுகிறார்: (The origin of the Vanni - Dr. K. Indrapala, பக்: 50).

"யாழ்ப்பாண வைபவ விமர்சனம்" என்னும் நூலில் சுவாமி ஞானப்பிரகாசர் பின்வருமாறு கூறுகிறார்:-[7] "காலிங்க ஆரியச் சக்கரவர்த்தி எனக்கூறும் இவன் (மாகன்) புலத்தி நகரை (பொலன்னறுவையை) விட்டு யாழ்ப்பாணம் சென்று ஜயபாகு (குளக்கோட்டன்) இறந்துவிட்டமையினால் யாழ்ப்பாண அரசை நிலைநாட்டினான் என்பது உண்மை" (யாழ்ப்பாண வைபவ விமர்சனம் 1968, பக் : 64-69.)

### 3. கூழங்கை அல்ல காலிங்கை

யாழ்ப்பாணத்தின் முதலாவது சக்கரவர்த்தி, "கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தி" என ஒரு கருத்து உருவாகி, அதனால் அவன் போரில் கை இழந்து மூளிக்கை கொண்டவன் என்ற ஒரு கதையும் சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால் இதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. "காலிங்க" என்ற பெயரை மயில்வாகனப் புலவரோ (யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியர்) அன்றிப் பின்வந்தவர்களோ, எக்காரணத்தாலோ "கூழங்கை" என மாற்றிவிட்டார்கள் என "யாழ்ப்பாணச் சரித்திரம்" எழுதிய முதலியார் இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார்[8]. (யாழ்ப்பாணச் சரித்திரம் 1933, பக்: 49-50).

இதன் விரிவான விளக்கம் "குளக்கோட்டன் தரிசனம்" பக்: 64-66ல் காணலாம்[9].

உண்மையில் "காலிங்க ஆரியச் சக்கரவர்த்தி" என்ற பெயரே காலப்போக்கில், "கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தி" என மருவி

இருக்கலாம் என சுவாமி ஞானப்பிரகாசரும், கலாநிதி இந்திரபாலாவும் கூறுகின்றனர்[10]. (Origin of Vanni Dr. K. Indrapala பக்: 50)

மேலும் "மட்டக்களப்பு மான்மியத்"தில் "கலிங்க மாகன்" என்றும், யாழ்ப்பாணச் சரித்திரத்தில் "காலிங்க விஜயபாகு", "கலிங்கமாகன்", "விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி" என்றும் மாகோன் குறிப்பிடப்படுகிறான். "மட்டமான்மியத்"தில் சில இடங்களில் "காலிங்க ஆரியன்" என்றும் அவன் பெயர் குறிப்பிடப்படுகிறது[11].

"யாழ்ப்பாணச் சரித்திரம்" எழுதிய முதலியார் ராசநாயகம் பின்வருமாறு கூறுகிறார்[12].

"மகாவம்சத்"தில் கலிங்க மாகனை, "கலிங்க விஜயபாகு" என மறுநாமம் கொடுத்து வழங்கியிருப்பதால், "யாழ்ப்பாண வைபவமாலை"யில் விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி எனச் சொல்லப்பட்டவன் அக்கலிங்க மாகனே. ஒரு தேசம் முழுவதையும் தன் கீழ் அடிப்படுத்தி ஆளும் திறமை பூண்டாலொழிய, சக்கரவர்த்தி என்னும் புகழ்ப்பட்டம் அரசர் அடையமாட்டார். "இவ்வாறு முதலியார் ராசநாயகம் குறிப்பிட்டுள்ளார்."

கலாநிதி இந்திரபாலா கூறுவது[13]:

"யாழ்ப்பாண வைபவமாலை"யில் 'கூழங்கை ஆரியன்' எனக் கூறப்பட்டவன் "மட்டக்களப்பு மான்மிய"த்தில் 'காலிங்க ஆரியன்' எனக் குறிப்பிடப்படுவதால், "விஜயகாலிங்க" என்ற பெயருடைய மாகோன், யாழ்ப்பாணத்தை ஆண்ட முதலாவது ஆரியச்சக்கரவர்த்தி எனக் கருதப்பட்டான். யாழ்ப்பாண் இராச்சியம் கலிங்கத் தொடர்பு உள்ளவர்களால் கி.பி. 1262க்கு முன்பு நிறுவப்பட்டிருக்க வேண்டும்." இவ்வாறு கலாநிதி இந்திரபாலா கூறுகிறார்.

இந்தக் காலிங்கத்தொடர்பு, மாகோனாலும் அவனது சகாக்களாலுமே ஏற்பட்டது. மாகோனின் சகாக்களில் முக்கியமானவனான சோழகங்கதேவன் (குளக்கோட்டன்) யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்தான் என்ற கருத்தும் இக்கூற்றை ஊர்ஜிதம் செய்கிறது. (ஆனால் குளக்கோட்டனின் யாழ்ப்பாண ஆட்சி பற்றிய விபரமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.)

காலிங்க விஜயபாகுவே யாழ்ப்பாணத்தின் முதல் சக்கரவர்த்தி என்று கொள்வதில், யாழ்ப்பாண வைபவமாலையும், கலாநிதி



பத்மநாதனும் தரும் யாழ்ப்பாண அரசர்களின் ஆட்சியாண்டுகள் சிறிது குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. நாம் ஏற்கனவே கூறியபடி விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி (செகராசசேகரன் I) ஆட்சியாண்டு கி.பி. 1210 என கலாநிதி பத்மநாதன் குறிப்பும், கி.பி. 1242 என யாழ்ப்பாண வைபவமாலையும் குறிப்பிடுகின்றன. இந்த ஆண்டுக் கணிப்புகள் போதிய சான்றாதாரங்களைக் கொண்டிராதபடியால், இவை தவறான கணிப்பு என்றே கொள்ளவேண்டும். ஏனெனில் காலிங்க விஜயபாகுவாகிய மாகோன் கி.பி. 1256க்குப் பின்பே யாழ்ப்பாணம் சென்றிருக்க முடியும் (பாண்டியர் படையெடுப்பால் மாகோன் பாதிக்கப்பட்ட ஆண்டு கி.பி. 1256 என்பது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது). கி.பி. 1263 என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது தவறு என்பதும் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது.

## 4. மாகோனின் வடபகுதி ஆட்சி

நாம் ஏற்கனவே கூறிய விடயங்களில், கி.பி. 13ம் நூற்றாண்டில் தோன்றிய யாழ்ப்பாண அரச பரம்பரையில் முதல் மன்னன் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட மாகோனே என்பதை அறிந்துகொள்ளலாம்.

ஆனால் ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரை வேறு மூலத்தைக் கொண்டிருப்பதால், மாகோனை முதல் ஆரியச் சக்கரவர்த்தியாகக் கொள்ளமுடியாது என சில வரலாற்றாசிரியர்கள் வாதிடுவர். ஆனால் இக்காரணத்தால் மாகோன் முதல் சக்கரவர்த்தி என்பதை நிராகரிக்க முடியாது. இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள அரச பட்டியலில் இருந்து மாகோனின் "விஜயகாலிங்க சக்கரவர்த்தி" என்ற பெயர் ஆரியச் சக்கரவர்த்திகள் பெயரோடு சேரவில்லை என்பது தெளிவு.

அதுமட்டுமல்ல, அக்காரணத்தினாலேயே, மாகோன், ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவன் அல்லன் என்பதும் பெறப்படும். உண்மையில் மாகோன், யாழ்ப்பாணத்தில் சக்கரவர்த்தி என்ற பெயர் பூண்ட முதல் மன்னன் ஆனாலும், அவனது பரம்பரையினர், ஆட்சியைத் தொடரவில்லை. மாறாக, ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பரம்பரையினரே அவனுக்குப் பின் ஆட்சியைத் தொடர்கின்றனர்.

இந்த ஆரியச் சக்கரவர்த்திகள் இராமேஸ்வரத்தின் பிராமண வம்சத்தவர் என்றும், பாண்டிய மன்னனான முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1318) காலத்தில், அவர்களது,

தளபதிகளாகவும், அமைச்சர்களாகவும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தவர்கள் என்றும் அறிவோம். இவர்கள் தமது செல்வாக்கினால், முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் ஈழப் படையெடுப்புக்குப்பின் (1284) யாழ்ப்பாணத்தில் ஆட்சிபீடமேறியவர்கள். இதுபற்றிப் பின்னால் விரிவாக ஆராய்வோம்.

### 5. ஆதாரச் சான்றுகள்

மாகோன் யாழ்ப்பாணத்தின் முதல் சக்கரவர்த்தி என்பதற்கு ஆதாரமான மேலும் சில வரலாற்றாசிரியர்களின் கூற்றுகளைப் பார்ப்போம்.

(i) **கலாநிதி சி.க. சிற்றம்பலம் கூற்று**[14]:

"…. இத்தகைய சான்றுகள், மாகோன் வேறு, யாழ்ப்பாண அரசை ஸ்தாபித்த ஆரியச் சக்கரவர்த்திகள் வேறு என்பதை எடுத்துக்காட்டினாலும்கூட, மாகனின் ஆட்சி ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்திற்கு முன்னர் இங்கு (யாழ்ப்பாணத்தில்) நிலை கொண்டிருந்ததை மறுப்பதற்கில்லை (யாழ்: தொன்மை வரலாறு 1993, பக். 365). இந்நூலில் கலாநிதி சி.க. சிற்றம்பலம் குறிப்பிடும் கலாநிதி இந்திரபாலாவின் கூற்றுக்கள்:-

(ii) "மாகன் பொலன்னறுவையிலிருந்து வெளியேறி பதவியாவில் தனது தலைமைப்பீடத்தை அமைத்துக்கொண்டபோது, வெளியிட்டதாகக் கருதப்படும் வெண்கல முத்திரையிற் காணப்படும் நந்தியின் உருவத்தையும், அதனுடன் இணைந்து காணப்படும் பிற சின்னங்களையும் சான்றாகக் கொள்ளலாம் (யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், கா. இந்திரபாலா 1972, பக். 49-51)[15]

(iii) "யாழ்ப்பாண அரசரின் நாணயங்களை அலங்கரிக்கும் நந்தி, குத்துவிளக்கு ஆகியன, கலிங்கப் பிரதேசத்தில் அரசாண்ட கங்க வம்சத்தவர்களின் பட்டயங்களில் காணப்படுவதால், வடபகுதியில் கலிங்க மாகனின் ஆட்சி நிலை பெற்றிருந்தபோது, இவை இங்கு அறிமுகமாகின என்றும் பின்னர் வந்த ஆரியச் சக்கரவர்த்திகள் இவற்றைக் கைக்கொண்டனர் என்றும் கொள்ளலாம். (கா. இந்திரபாலா, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் 1972 பக். 49-51)



**(நூலாசிரியர் குறிப்பு :** கலாநிதி சி.க. சிற்றம்பலம், ப. புஷ்பரத்தினம் முதலியோர் இதை ஒரு வலுவான சான்றாகக் கொள்ளாத போதும், இதை நிராகரிப்பதற்கான சான்றுகளை முன்வைக்கவில்லை.)

(iv) **கலாநிதி சி.க. சிற்றம்பலம் கூற்று :**[16]

"ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி வடபகுதியில் ஏற்படும் முன்னர் இங்கு மாகன் ஆட்சி நடைபெற்றதென்பதை ஏற்கும் இந்திரபாலா, பத்மநாதன் ஆகியோர், "சிங்கைநகர்" என்பது இந்தியாவில் உள்ள கலிங்க நாட்டின் "சிகபுர" என்பதன் திரிபே எனக்கூறி, இப்பெயரும், தலைநகரும் மாகனால் உருவாக்கப்பட்டன எனக் கூறியுள்ளனர். (யாழ்: தொன்மை வரலாறு, 1993 பக். XXXIX)

(நூலாசிரியர் குறிப்பு : (அ) சிங்கைநகர் என்ற பெயர் மாகோன் வருகைக்கு முன்பே யாழ்ப்பாணத்தில் இருந்தது. (ஆ) பொலன்னறுவையில் நீண்டகாலம் ஆட்சி செய்த மாகோன் அங்கு அப்பெயரில் ஒரு நகரை அமைத்ததாகத் தெரியவில்லை.)

(v) **கலாநிதி பரணவிதான கூற்று :**

(யாழ். தொன்மை வரலாறு நூலில் கலாநிதி சி.க. சிற்றம்பலம் எடுத்துக்காட்டுவது) "வடக்கே, மாகன் ஆட்சி செய்ததை, கொட்றிங்கரன், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோர் அங்கீகரிக்கின்றனர். ஆனால் இவனை (மாகோனை) உக்கிரசிங்கனாக இனம் கண்டுள்ளமை, ஈழ வரலாற்றுப் போக்குக்கு முரண்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. (கலாநிதி எஸ். பரணவிதான கட்டுரை - (The arya Kingdom of north Ceylon)"

(நூலாசிரியர் குறிப்பு : உக்கிரசிங்கன் காலம் கிறிஸ்துவுக்கு முற்பட்டது. மாகோன் காலம் கி.பி. 13-ம் நூற்றாண்டு. எனவே மாகோனை உக்கிரசிங்கனாக இனம்காணுதல் பொருத்தமற்றது).

(vi) **S. நடேசன் கூற்று**

(யாழ். தொன்மை வரலாறு நூலில் கலாநிதி சி.க. சிற்றம்பலம் எடுத்துக்காட்டுவது)[17]

"ஜெயபாகுவே மாகனாட்சிக்கு முன்னர் யாழ்ப்பாணத்தை ஆண்டவன். இவன் மாகனின் இனத்தவன் (S. நடேசனின் கட்டுரை - "Glimpses of the Early History of Jaffna" Mahajana College Golden Jubilee Volume Pag 38-41")

(நூலாசிரியர் குறிப்பு : ஜெயபாகு என்பவன் குளக்கோட்டனாகிய சோடகங்கதேவன். இவன் மாகோனின் இனத்தவன் அல்ல; மாகோனின் உபராஜன். இவன் யாழ்ப்பாணத்தில் மாகோனின் பிரதிநிதியாக ஆட்சி செய்திருக்க வேண்டும்.

## 6. யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள்

யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற வரிசையில் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி (மாகோன்) முதலாவதாக இடம்பெற்றாலும், அவன் ஆரியச் சக்கரவர்த்தி அல்லன் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் வரலாற்றைத் துருவி ஆராய்வதன் மூலம், மாகோனுக்குப் பின்பே அவர்கள் ஆட்சி தோன்ற முடிந்தது என்ற கூற்றையும் வலுவுடையதாக்கலாம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் என்போர் யார்? இவர்கள் எங்கிருந்து வந்தனர்? இவர்கள் பூர்வீகம் என்ன? சில தகவல்களைப் பார்ப்போம்.

கங்கவம்சத்தினர், பாண்டிய மன்னர்களின் சாமந்தர்களாக (மெய்ப் பாதுகாவலர்) பணியாற்றியவர்கள். சோழ வம்சத்தினருக்கு வேளைக்காரப் படையினர் எப்படி மெய்க்காப்பாளர்களாக அமைந்தனரோ அவ்வாறே பாண்டிய மன்னர்களுக்கு கங்கவம்சத்தினர் மெய்க்காப்பாளர்களாக இருந்தனர்.[18]

இதனால் கங்கர்கள் பாண்டிய மன்னர்களின் விசுவாசிகளாக (Confidants) இருந்தனர். இவர்கள் இராமேஸ்வரத்தில் உள்ள பிராமணர்களுடன் திருமண உறவினால் கலந்து ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற ஒரு வம்சத்தை உருவாக்கினர். இவர்கள் "ஆரியச் சக்கரவர்த்திகள் என்று தம்மை அழைத்துக் கொண்டாலும், எந்த நாட்டுக்கும் சக்கரவர்த்திகளாக இருக்கவில்லை. மாறாக, பாண்டிய மன்னர்களின் மெய்க்காப்பாளர்களாக - விசுவாசிகளாக விளங்கினர். இவர்களே பாண்டிய மன்னர்களின் தளபதிகளாகவும், சேனாதிபதியாகவும் பதவி வகித்தனர்.



இதுபற்றிக் கலாநிதி பரணவிதான பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்[19] : இராமேஸ்வரப் பகுதிப் பிராமண வம்சத்துடன் செய்து கொண்ட திருமணத் தொடர்பால், இவ்வாறு ஆரியச் சக்கரவர்த்திகள் எனப் பெயர் பெற்றனர் (Dr. S. Paranavithana "Glimpses of the Early History of Jaffna" Mahajana College Golden Jubilee Souvenir 1968).

இதே கருத்தை குவேராஸ் பாதிரியாரும் தெரிவித்துள்ளார்[20]. (The Temporal & Spiritual Conquest of Ceylon...)

"தமிழகச் சான்றுகள் ஆரியச் சக்கரவர்த்திகளைப் பாண்டிய அரசன் படைத்தளபதியாகவும் கி.பி. 13-ம் நூற்றாண்டில் அங்கு பணியாற்றியவர்களாகவும் குறிப்பிடுகின்றன. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இவர்களே இலங்கை மீதான பாண்டியப் படையெடுப்புக்களை வழிநடாத்தினர்"[21] (சி.க. சிற்றம்பலம், யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு 1993, பக்: 368)

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி இலங்கைமேல் கி.பி. 1256-ல் படை நடாத்தி வெற்றிகண்ட 2-வது சடையவர்மன் வீரபாண்டியனுக்குப் பின் (குடுமியான்மலைக் கல்வெட்டைப் பொறித்தவன்) அவனது சகோதரனான முதலாம் மாறவர்மன் குலசேகரன் (1268-1318) ஆட்சிப் பீடமேறினான்.

இவனது காலத்திலும் ஒரு ஈழப் படையெடுப்பு நிகழ்ந்தது[22]. இதை இவனது "தேர்போ லல்குற் றிருமகள் புணரவும்..." என ஆரம்பிக்கும் மெய்க்கீர்த்திக் கல்வெட்டில்

சிங்கணம் கலிங்கத் தெலிங்கஞ் சேதிபம்
கொங்கணாங், குதிரம், போசளம், குச்சரம்
முறைமை யினாளு முதுநல வேந்தர்
திருமுறை காட்டிச் சேவடி வணங்கு

என வரும் வரிகளால் அறியலாம்.

## 7. குலசேகர சிங்கையாரியன்

குலசேகர பாண்டியன் காலத்தில் (1284ல்) ஈழத்தில் மேற்கொண்ட படையெடுப்புப் பற்றிச் சூளவம்சத்தில் ஒரு குறிப்பு காணப்படுகிறது[23]. சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச் சக்கரவர்த்தி ஒருவனின் தலைமையில் படை நடாத்தினர். இவன்

இலங்கையின் பல பாகங்களையும் அழித்து சுபகிரி என அழைக்கப்படும் யாப்பகுவாவில் நுழைந்து புத்தரின் புனித தந்த தாதுகளை அபகரித்துச் சென்று குலசேகர பாண்டிய மன்னனிடம் ஒப்படைத்தான் என்று அக்குறிப்புக் கூறுகிறது.

சூளவம்சம் குறிப்பிடும் மேற்படி ஐந்து மன்னர்கள் யார் என்பது பற்றியும் படைநடாத்திய தளபதியான ஆரியச் சக்கரவர்த்தி யார் என்பது பற்றியும் இலங்கை வரலாற்று நூல்களில் எவ்வித குறிப்புமில்லை. ஆனால் இவை பற்றி, பாண்டிய வரலாற்று நூல்களில் சில குறிப்புகள் கிடைக்கின்றன. அவ்விபரம் வருமாறு[24].

குடுமியான்மலைக் கல்வெட்டைப் பொறித்த 2-வது சடையவர்மன் வீரபாண்டியன் (1254-1264) 1265-ல் மதுரையை விட்டு நீங்கி 1266-ல் இராஜகேசரி வீரபாண்டியன் (1266-1288) என்ற பெயரில் கொங்கு நாட்டில் முடிசூடுகிறான். கொங்கு நாட்டு மரபுப்படி அவன் "வீரபாண்டியன் இராஜகேசரி" என்ற பட்டம் புனைந்தான். ஒரு மன்னன் - இரு பெயர்கள் - இரு ஆட்சி.

நாம் முன்பு குறிப்பிட்ட முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1318) மேற்படி 2ம் வீரபாண்டியன் உட்பட ஐந்து சகோதரர்களைக் கொண்டவன். அவர்கள் விபரம் வருமாறு[25]:

(i) இரண்டாம் சடையவர்மன் குலசேகரன் (1237).
(ii) இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1238).
(iii) இரண்டாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (1250).
(iv) முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1250).
(v) இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1254).

என். சேதுராமன், "பாண்டியர் வரலாறு", 1989. பக். 143).

ஐந்து சகோதரர்களைக் கொண்ட முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன், பல வெற்றிகளைப் பெற்றவன். இவனது 11-ம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில், "மலைநாடும் சோணாடும் இருகொங்கும், ஈழமும் தொண்டை மண்டலமும் கொண்டருளியவன்" என்று குறிப்பிடப்படுகிறது. 50 ஆண்டுகள் (1268-1318) ஆட்சி நடத்தியவன். பின்னர் 3ம் பராக்கிரம பாகு மன்னன், இதே குலசேகரனை அணுகி, ஏற்கனவே தளபதியான ஆரியச் சக்கரவர்த்தியினால் கவர்ந்து செல்லப்பட்ட புனித தாதுக்களை மீளப் பெற்றுவந்து பொலன்னறுவையில் பிரதிஷ்டை செய்து ஆட்சி



செய்தான் என சூளவம்சம் கூறும்[26]. (சூள. அத். XC. பக். 205, குறிப்பு 50-59)

இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், பௌத்த மன்னர்கள் தவிர வேறெவரையுமே அலங்கார வார்த்தைகளால் குறிப்பிடாத சூளவம்சம் பௌத்தர்களின் அதி உன்னதமான புனித தந்த தாதுக்களை ஆரியச் சக்கரவர்த்தி கவர்ந்து சென்று மேற்படி குலசேகர பாண்டியனிடம் ஒப்படைத்த செய்தியை "தாமரை மலர்கள் போன்ற பாண்டிய மன்னர்களுக்குச் சூரியன் போன்ற குலசேகர மன்னனிடம், புனித தாதுக்களையும், விலைமதிப்பற்ற செல்வங்களையும் ஆரியச் சக்கரவர்த்தி ஒப்படைத்தான்" என்று வர்ணிக்கிறது.

இத்தகைய பெருவெற்றியை ஈட்டித்தந்த தளபதியான ஆரியச் சக்கரவர்த்திக்குத் தகுந்த வெகுமதியாக, யாழ்ப்பாண ராச்சியத்தைக் குலசேகரன் அளித்தான் எனலாம். விஜயகாலிங்கச் சக்கரவர்த்திக்குப்பின், பாண்டியர் தயவால் ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண ராச்சியத்தை ஆட்சி செய்தனர்.

யாழ்ப்பாண ராச்சியத்தின் முதலாவது ஆரியச் சக்கரவர்த்தியான மேற்படி தளபதி, குலசேகர பாண்டியன் தனக்களித்த பெரும் கௌரவத்தைக் கனம் பண்ணும் வகையில் தனது பெயரை "குலசேகர சிங்கையாரியன்" என வைத்துக்கொண்டான் என்று கொள்ளலாம் அல்லவா?

இம்மரபு அக்காலத்தில் வழக்கிலிருந்தது. அருப்புக்கோட்டையில் முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் (1190) படைத்தளபதியாக இருந்த "திருவாலவாய் உடையான் சோழகங்கதேவன்" என்பவன் குலசேகரனின் தந்தையான விக்கிரம பாண்டியனைக் கனம் பண்ணும் வகையில் தனது பெயரை "அழகிய பெருமாள் விக்கிரம பாண்டியன்" என்று வைத்துக்கொண்டது இங்கு நினைக்கத்தக்கது[27]. (ARE 403, பக். 1915, வரி 5, 6, 7)

எனவே, விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியாகிய மாகோன் யாழ்ப்பாணத்தின் முதலாவது சக்கரவர்த்தி என்றும், குலசேகர சிங்கையாரியன், ஆரியச் சக்கரவர்த்திகளின் முன்னோடியான முதல் ஆரியச் சக்கரவர்த்தி என்றும் கொள்வதே பொருத்தமானது:

**8. குலசேகர சிங்கையாரியன் சூட்டிய பெயர் நல்லூர்:**

மதுரையிலிருந்து பாண்டி மழவனால் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டவன் குலசேகர சிங்கை ஆரியன் என்பதைப் பார்த்தோம். இவர்கள் தொடர்பான ஒரு வரலாற்றுக் குறிப்பை அறிந்திருத்தல் அவசியம்.

மழவர் என்போர், முன்பு சோழர் ஆட்சிக்காலத்திலும் பின்பு பாண்டியர் ஆட்சிக்காலத்திலும், குறுநில மன்னர்களாகவும் சிற்றரசர்களாகவும் வாழ்ந்தவர்கள். எனவே பாண்டி மழவன் என்பவன் பாண்டியரின் கீழ் ஆட்சி செய்து பாண்டிய மன்னனின் ஆதரவைப்பெற்ற ஒரு முக்கிய பிரதானி எனக்கொள்ளலாம்.

பாண்டி மழவனால் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட குலசேகர சிங்கை ஆரியன், ஈழத்தில் ஈட்டிய மகத்தான வெற்றிக்காகக் குலசேகர பாண்டியனால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டவன் என்பதை ஏற்கனவே பார்த்தோம். குறிப்பிட்ட ஈழப்போரில் ஐந்து ஆரியச் சக்கரவர்த்திகள் (தளபதிகள்) படை நடத்தினர். அவர்களுக்குத் தலைமை வகித்தவனே குலசேகர சிங்கையாரியன். எனவேதான் இவனுக்கு யாழ்ப்பாணம் பரிசாகக் கிடைத்தது எனலாம்.

யார் இந்த குலசேகர சிங்கையாரியன்?

இவனது பெயர் "மதிதுங்கன்" என அறியப்படுகிறது. இவன் ஈழத்தில் பெற்ற வெற்றி காரணமாக "தனித்து நின்று வென்ற பெருமாளாகிய ஆரியச் சக்கரவர்த்தி" எனப் பாண்டியக் கல்வெட்டுகள் இவனைக் குறிப்பிடுகின்றன. (ARE. 1928/26 No. 21) இவன் மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்கு அமைச்சனாகவும் தளபதியாகவும் விளங்கியவன் என அறிகிறோம். இவன் பாண்டிநாட்டின் தென்கோடியிலுள்ள "செவ்விருக்கை நாட்டுச் சக்கரவர்த்தி நல்லூரை"ச் சேர்ந்தவன் என மேற்படி கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இதில் வரும் 'நல்லூர்' 'சக்கரவர்த்தி' என்னும் பதங்கள் கவனத்திற்கொள்ளத்தக்கன. இவன் ஆரியச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்டமைக்கான காரணம் இதில் அடங்கியுள்ளது.

இவன் வருகைக்குமுன் யாழ்ப்பாணத்தின் தலைநகர் "சிங்கபுர" அல்லது "சிங்கை நகர்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவனது வருகைக்குப் பின் அது "நல்லூர்" எனப் பெயர் பெறுகிறது. எனவே,



இவன் முதலாவது ஆரியச் சக்கரவர்த்தியாக யாழ்ப்பாணத்தில் முடிசூடியதும், அதன் தலைநகரை, தனது சொந்த ஊரான "செவ்விருக்கை நாட்டுச் சக்கரவர்த்தி நல்லூர்" என்பதன் நினைவாக, "நல்லூர்" என மாற்றியிருக்கலாம். இது ஒரு தர்க்கரீதியான ஊகம் (Logical Inference) என்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

இவனது பெயரில் உள்ள "சிங்கை" என்பது, யாழ்ப்பாணத்தின் தலைநகராக, உக்கிரசிங்கன் காலம் முதல் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியாகிய மாகோன் காலம் வரை அமைந்த, சிங்கை நகர் அல்லது சிங்கபுர என்பதன் நினைவாக ஏற்பட்டது என்பதை நாம் அறிவோம்.

எனவேதான், குலசேகர பாண்டிய மன்னன் பணிப்பின் பேரில் யாழ்ப்பாணம் வந்து முடிசூடிக்கொண்ட இவனது பெயர் "குலசேகர-சிங்கை-ஆரியச்-சக்கரவர்த்தி" என்றும் தலைநகரின் பெயர் "நல்லூர்" என்றும் அமைகிறது.

**9. சில தெளிவுகள் :**

மாகோனின் வட இலங்கை ஆட்சிபற்றி அவ்வப்போது சில தவறான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. இவை வாசகர் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே இதுபற்றிய தெளிவு மிகமிக அவசியம். சில குறிப்புகளை இங்கு நினைவூட்டிக் கொள்வோம்.

**(i) அமரதாச லியனகமகே மற்றும் சில வரலாற்றாசிரியர்கள் கூற்று :**

2-வது வீரபாண்டியனின் ஈழப் படையெடுப்பும், மாகோன் வெளியேற்றமும் கி.பி. 1263 என இவர்கள் குறிப்பிடுகின்றனர். இது தவறாகும். உண்மையில் இது நடைபெற்றது கி.பி. 1256 என்பது, குடுமியா மலைக் கல்வெட்டின் மூலம் நிரூபணமாகிறது. மேற்படி சம்பவத்தை முதலாம் வீரபாண்டியன் 1263லும் 2ம் வீர பாண்டியன் 1256லும், மெய்க்கீர்த்திகளில் பொறித்துள்ளனர். (இதன் விளக்கம் Xம் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.)[28]

**(ii) சி.க. சிற்றம்பலம் கூற்று :**

"வட இலங்கை ஆட்சியில் முதலில் மாகனும், பின்னர் சாவகனும், பின்னர் அவனின் மைந்தனும், இறுதியில் பாண்டியரும் இக்காலத்தில் (கி.பி. 1215-1284) இப்பகுதியினை ஆட்சி செய்தனர்" என கலாநிதி சி.க. சிற்றம்பலம் கூறுகிறார்[25]. (யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, பக்: 352.) இது தவறானது.

கி.பி. 1247-ல் சாவகன் (சந்திரபானு) 2ம் பராக்கிரமபாகுவிடம் தோல்வியடைந்து வட இலங்கை சென்றான். கி.பி. 1256-ல் 2ம் வீரபாண்டியன் படையெடுப்பில் இவன் (யாப்பஹூவவில்) கொல்லப்பட்டான். அவனது மகனுக்கு 2வது வீரபாண்டியன் அரசுபட்டம் கட்டி, அனுராதபுரிக்கு அனுப்பி வைத்தான். இதே போரில் (1256) மாகோன் பொலன்னறுவையை விட்டு நீங்கி வட இலங்கை சென்றான். விளக்கம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

**(iii) ப. புஷ்பரத்தினம் கூற்று :**

2ம் வீரபாண்டியன் கி.பி. 1256-ல் ஈழப் படையெடுப்பில் பெற்ற வெற்றியைக் குடுமியான்மலைக் கல்வெட்டில் குறித்துள்ளான். இக்கல்வெட்டில் "... கோணமலையிலும் திரிகூடகிரியிலும், உருகெழு கொடிமிசை இருகயல் எழுதி..." என வருகிறது. இவ்விரு இடங்களும் வட இலங்கையில் இருந்திருக்கவேண்டும் எனப் ப. புஷ்பரெத்தினம் ஊகிக்கிறார்[29]. ("பூநகரி தொல்பொருள் ஆய்வு" - பக். 119-120) இது தவறானது. கோணமலை என்பது திருகோணமலையையும், திரிகூடம் என்பது மூன்று சிகரங்கள் கொண்ட திருக்கோணேஸ்வரத்தையும் குறிப்பிடும். விளக்கம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

**(iv) ப. புஷ்பரெத்தினம் கூற்று :**

கலிங்க மாகனது அரசு வட இலங்கையிலிருந்தபோது, சந்திரபானு என்னும் சாவக இளவரசன் தம்பதேனியா அரசு மீது படையெடுத்து 2ம் பராக்கிரமபாகு மன்னனிடம் தோல்வியிடைந்ததாகத் தெரிகிறது.[30] (பூநகரி தொல்பொருள் ஆய்வு, பக்: 119) இதுவும் தவறானது. சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பு கி.பி. 1247-ல் நிகழ்ந்தபோது, மாகோனின் ராசதானி, ராஜரட்டைப் பகுதியில், பொலன்னறுவையில் இருந்தது. விளக்கம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

**(v) ப. புஷ்பரெத்தினம் கூற்று :**

"ஆயினும் இவன் (சந்திரபானு) கலிங்க மாகனிடம் அடைக்கலம் பெற்றோ அல்லது ஆதரவைப் பெற்றோ, கலிங்க மாகனின்பின் வட இலங்கையை ஆட்சி செய்ததாகத் தெரிகிறது"[30]. (பூநகரி தொல்பொருள் ஆய்வு பக்: 119) இதுவும் தவறானது. சந்திரபானு மாகோனுக்கு எதிராகச் செயற்பட்டவன். கலிங்க மாகனுக்குப் பின் வட இலங்கையை ஆட்சி செய்யவில்லை. தனது 2-வது படையெடுப்பில் (கி.பி. 1256) 2வது வீரபாண்டியனால் கொல்லப்பட்டான். விளக்கம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.



**(vi) கலாநிதி சி.க. சிற்றம்பலம் கூற்று :**

"மாகன் இரண்டாவது பராக்கிரமபாகுவால் பொலன்னறுவையிலே தோற்கடிக்கப்பட்டாலும்கூட 1255லே அவன் இறந்தான். இக்காலத்திலேதான் வடபகுதியில் இவனின் மேலாணை பரந்திருந்தது"[31] (யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, 1993, பக்: 363) இது தவறான கூற்று. 1256-ல் மாகோன் பொலன்னறுவையை விட்டு நீங்கினான். அவன் கொல்லப்பட்டதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. "மாகோன் படைகள் திக்குத்திசை தெரியாமல் சிதறி ஓடின" என்ற மிகைப்படுத்தப்பட்ட கூற்று மட்டுமே சூளவம்சத்தில் உள்ளது. விளக்கம் முன்பே கூறப்பட்டுள்ளது.

**(vii) கலாநிதி சி.க. சிற்றம்பலம் கூற்று :**

"மாகன் வடபகுதியில் நிலைகொண்ட நேரத்திலேதான், (1247ல்) சாவகனான சந்திரபானு சிங்கள அரசின் மீது (தம்பதேனியாமீது) படையெடுத்துத் தோல்வி கண்டான். இதன் பின்னர் இவன் வடபகுதியிற் தஞ்சம் புகுந்து மறுபடியும் 1262ல் சிங்கள அரசின் மீது படை எடுத்துத் தோல்வி கண்டதோடு, அப்போரில் இறந்தான் எனவும் கூறப்படுகிறது"[31] இதுவும் தவறு. சந்திரபானு 1247-ல் படையெடுத்து வந்தபோது மாகோன் ராஜரட்டையில் (பொலன்னறுவையில் இருந்தான்) அவனது இரண்டாவது படையெடுப்பு 1262 அல்ல, 1256-ல் நிகழ்ந்தது. இப்படையெடுப்பில் அவன் பாண்டியரால் கொல்லப்பட்டான். இதன் விளக்கம் 2-வது வீரபாண்டியனின் குடுமியாமலைக் கல்வெட்டில் உள்ளது. இதுபற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

## 10. மாகோனே யாழ்ப்பாணத்தின் முதலாவது சக்கரவர்த்தி :

இதுவரை கூறியவற்றிலிருந்து, மாகோனே யாழ்ப்பாணத்தில் முதலாவது சக்கரவர்த்தி என்பதற்குப் பின்வரும் ஆதாரங்களைக் கொள்ளலாம்.

(i) கி.பி. 1256-ல் 2-வது வீரபாண்டியன் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்பில், மாகோன் கொல்லப்படவில்லை. அவன் பொலன்னறுவையைவிட்டு வெளியேறுகிறான்.

(ii) அவ்வாறு வெளியேறிய மாகோன் தஞ்சம் பெறுவதற்குரிய ஒரே இடம் வட இலங்கை தவிர வேறு இல்லை.

(iii) வட இலங்கை செல்லும் பாதைகளில் மாகோனின் படைகள் இருந்தன. யாழ்ப்பாணத்தில் மாகோனுக்கு என்றும் ஆதரவு இருந்தது. யாழ்ப்பாணத்தில் அவனுடைய வலதுகரமாக விளங்கிய ஜயபாகு என்னும் குளக்கோட்டன் ஆட்சியிலிருந்தான் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

(iv) யாழ்ப்பாண வரலாறு கூறும் பல நூல்களிலும் வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புகளிலும் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியே யாழ்ப்பாணத்தின் முதல் அரசன் எனத் தெரிவிக்கப்படுகிறது. விஜயபாகு என்ற பெயர் கொண்ட மாகோனே இவ்வரசன் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(v) கி.பி. 13ம் நூற்றாண்டு அரசபட்டியலைப் பார்க்கும்போது முதலாவது பெயர் தவிர்ந்த ஏனைய யாவும் சிங்கை ஆரியன் என வருகிறது. முதலாவது பெயர் மட்டும் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என வருகிறது. இது மாகோனின் மறுபெயர்களில் ஒன்று.

(vi) மாகோனுக்குமுன் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்தவர்கள் மன்னர் அல்லது சக்கரவர்த்தி என்று பெயர்பெறும் அளவுக்கு இறைமை (Sovereignity) பெற்றிருக்கவில்லை. சோழகங்கன் (குளக்கோட்டன்) கூட மாகோனின் ராஜப் பிரதிநிதியாகவே ஆட்சி செய்திருக்கவேண்டும்.

(vii) முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (1268-1318) ஈழப் படையெடுப்பில் கலந்துகொண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரை, மாகோனுக்குப் பின்பே தோற்றுகிறது.

(viii) அப்பரம்பரையின் முன்னோடியான குலசேகர சிங்கையாரியன், மாகோனாகிய விஜயகாலிங்கச் சக்கரவர்த்திக்குப் பின்பே யாழ்ப்பாண ராச்சியத்தின் ஆரியச் சக்கரவர்த்தியாகத் தோற்றுகிறான்.



## அடிக்குறிப்புகள்

1. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பாசிரியர் F.X.C. நடராசா, 1952 மட்டக்களப்பு, பக்: 51-54.
2. யாழ்ப்பாண இராச்சியம் - பதிப்பாசிரியர் சி.க. சிற்றம்பலம், 1992 திருநெல்வேலி, பக்: xxxiii.
3. பூநகரி தொல்லியல் ஆய்வு - ப. புஷ்பரெத்தினம் 1993, பக்: 118-119.
4. யாழ்ப்பாண இராச்சியம் - பதிப்பாசிரியர் சி.க. சிற்றம்பலம் 1992, பக் : xxxiii.
5. (i) யாழ்ப்பாண வைபவமாலை - பதிப்பாசிரியர் குல. சபாநாதன்.
   (ii) The Kingdom of Jaffna - S. Pathmanathan.
6. The Origin of the Vanni by Dr. K. Indrapala, Peradeniya. pp. 50.
7. யாழ்ப்பாண வைபவ விமரிசனம் - சுவாமி ஞானப்பிரகாசர் 1968, பக்: 64-69.
8. யாழ்ப்பாணச் சரித்திரம் - முதலியார் இராசநாயகம், 1933, பக் : 49-50.
9. குளக்கோட்டன் தரிசனம்- க. தங்கேஸ்வரி, மட்டக்களப்பு 1993, பக்: 64-66.
10. (i) The Origin of the Vanni - Dr. K. Indrapala, pp. 50.
    (ii) யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - சுவாமி ஞானப்பிரகாசர்
11. மட்டக்களப்பு மான்மியம் - பக்:36.
12. யாழ்ப்பாணச் சரித்திரம் - முதலியார் இராசநாயகம், பக்:49-50.
13. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - சி.க. சிற்றம்பலம், திருநெல்வேலி 1993, பக்: 365.
14. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பக்: 365.
15. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் - பக்: 49-51, பேராதனை 1991.
16. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - பக்: xxxix.
17. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - பக்: xxxix.
18. அருப்புக்கோட்டை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் கல்வெட்டு - No. 414, of 1914.
19. Dr. S. Paranavithana Glimpses of the Early History of Jaffna - Mahajana College Golden Jubilee Souvenir - 1960.
20. The Temporal Spiritual Conquest of Ceylon.

21. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - சி.க. சிற்றம்பலம், பக்: 144-148.
22. பாண்டியர் வரலாறு - N. சேதுராமன், பக்: 144-148.
23. Culavamsa - Wilhelm Gaiger, Ch. XC, Notes 43-47, pp. 204.
24. பாண்டியர் வரலாறு - N. சேதுராமன், பக்: 143.
25. பாண்டியர் வரலாறு - N. சேதுராமன், பக்: 143.
26. Culavamsa - Ch. XL, Notes 50-58, pp. 205.
27. ARE - 410, பக்: 194, வரி 5, 6, 7.
28. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - சி.க. சிற்றம்பலம், பக்: 352.
29. பூநகரி தொல்லியல் ஆய்வு - ப. புஷ்பரெத்தினம், பக் : 119-120.
30. Ibid - பக்: 119-120.
31. Ibid - பக்: 119-120.
32. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - சி.க. சிற்றம்பலம், பக்: 365.



# XII முற்றுப்பெறாத காவியம்

## 1. நிறைவு பெறாத நிறைவு

ஈழத்து வரலாற்றில், எந்த ஒரு மன்னனும் பெறாத அளவு வரலாற்றுப் புகழ் பெற்ற மாகோன், 40 வருடங்களுக்கு மேல் இலங்கையில் ஆட்சி செய்தவன். மாகோன் வருகையுடன் சிங்கள மன்னர்கள் பொலன்னறுவையை விட்டுத் தம்பதேனியாவுக்கு ஓடியதுடன், அதன்பின் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டும் மாகோனை நெருங்க முடியவில்லை. பொலன்னறுவையை விட்டுத் துரத்த முடியவில்லை. பராக்கிரமபாகு II மன்னன் காலத்தில் பாண்டிய மன்னர்கள் மூவர் சேர்ந்து மேற்கொண்ட ஈழப் படையெடுப்பிலேயே மாகோன் பொலன்னறுவையை விட்டு நீங்கியதாகக் கொள்ள முடிகிறது.

இடையில் ஒரு இடைவெளி.

மீண்டும், யாழ்ப்பாணத்தில் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியாக மாகோன், வரலாற்றில் தோன்றுகிறான். ஆனால் யாழ்ப்பாணத்தில் அவன் நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் இல்லை! விஜயகாலிங்கச் சக்கரவர்த்திக்குப் பின், ஆரியச் சக்கரவர்த்தியான குலசேகர சிங்கையாரியன் யாழ்ப்பாணத்தின் சக்கரவர்த்தியாகத் தோன்றுகிறான். ஆனால் மாகோன் என்ன ஆனான் என்பது தெரியவில்லை.

மீண்டும் ஒரு இடைவெளி.

அதன்பின் மாகோன் வரலாற்றிலிருந்து மறைந்து போகிறான். புகழ்பெற்ற ஒரு மன்னனின் இத்தகைய அநாமதேய மறைவு (unceremonial exit) வரலாற்றில் ஒரு மர்மம்! அவனது வரலாற்றுச் சுவடுகள் தெரியாமல் போனது ஒரு விசித்திரம்! அவனது நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக அறிந்துகொள்வதற்கான வரலாற்றுத் தடயங்கள் கிடைக்காமல் போனதும் மிகப்பெரிய மூடுமந்திரம்!

இவ்வாறு பல இடைவெளிகள் (gaps) கொண்ட மாகோனின் வரலாற்றில், நிரவல் செய்யப்படவேண்டிய பல ஓட்டைகள் இருக்கின்றன. தெளிவு பெறவேண்டிய பல கட்டங்கள் இருக்கின்றன. தீர்க்கப்படவேண்டிய பல சந்தேகங்கள் இருக்கின்றன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(i) இத்தகைய நீண்ட ஆட்சி கொண்ட ஒரு மன்னனின் வரலாற்றில், கல்வெட்டுகள், நாணயங்கள், வரலாற்றுக் குறிப்புகள் இல்லாமல் போனது ஏன்?

(ii) மாகோன் பொலன்னறுவையை விட்டு எவ்வாறு வெளியேறினான்? பாண்டியர் படையெடுப்பில் அவன் நேரடியாகப் பாதிக்கப்பட்டதாக எவ்வித குறிப்பும் இல்லை. அப்படியிருக்க அவன் பொலன்னறுவையை விட்டு வெளியேற நேர்ந்தது ஏன்?

(iii) யாழ்ப்பாணத்தில் மாகோன் ஆட்சியமைத்தது எவ்வாறு? அங்கு அவனது செல்வாக்கு பலவகையிலும் பரந்திருந்தது. அப்படியிருக்க, அங்கும் அவனது வரலாற்றுத் தடயங்கள் கிடைக்காமல் போனது ஏன்?

(iv) மாகோனின் இறுதிக்காலம் எத்தகையது? குலசேகர சிங்கையாரியன், அவனை அடுத்து ஆட்சிப்பொறுப்பு ஏற்றது எப்படி? மாகோனின் யாழ்ப்பாண ஆட்சி முடிவுக்கும், குலசேகர சிங்கையாரியனின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் என்ன நடந்தது?

(v) மாகோனின் வலதுகரமாக விளங்கிய சோழகங்கதேவன் (குளக்கோட்டன்) திருகோணமலையை விட்டு யாழ்ப்பாணம் செல்ல நேர்ந்தது ஏன்? அங்கு அவனது நடவடிக்கைகள் பற்றிய தடயங்கள் கிடைக்காமல் போனது ஏன்?

(vi) மாகோன் இறுதியில் என்ன ஆனான்? எப்படி மறைந்தான்? இவனது வாரிசுகள் யார்? அவர்கள் என்ன ஆனார்கள்? இவனது பட்டத்துராணி யார்? அவள் என்ன ஆனாள்?

(vii) இவனுடைய பூர்வீகம் என்ன? தாய் தந்தையர் யார்? க்ஷத்திரிய பரம்பரை எனச் சொல்லப்படும் இவன் கலிங்க வம்சத்தில் எந்த மன்னனின் பரம்பரையில் வந்தவன்?



## 2. பாரபட்சமற்ற தொல்லியல் ஆய்வு தேவை

மேற்குறித்த கேள்விகளுக்கு விடை காண்பதாயின், பாரபட்சமற்ற நேர்மையான - திரிபுபடுத்தாத தொல்லியல் ஆய்வு தேவை. கிழக்கிலங்கையில், குறிப்பாக பொலன்னறுவை, மட்டக்களப்பு, கந்தளாய், திருகோணமலை போன்ற இடங்களிலும், வட இலங்கையில், மாந்தை, பதவியா மற்றும் மாகோனின் படைகள் நிலை கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் குருண்டி, மன்னார், புலச்சேரி, வெலிக்காமம், மடுப்பதி, ஊர்காவற்றுறை போன்ற இடங்களிலும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அகழ்வாய்வுகளின் பெறுபேறுகள், பாரபட்சமற்ற முறையில் அணுகப்படவேண்டும். நடுநிலை நின்று இவற்றை ஆராயவேண்டும். இது சாத்தியமாகுமா?

இவற்றைவிட, கர்ணபரம்பரைக் கதைகளை, வரலாற்று மூலங்களாகக் கொள்ளும் மயக்கம், நுனிப்புல் ஆய்வு மேற்கொள்வோரிடமிருந்து நீங்கவேண்டும். இது ஒரு சங்கடமான நிலை. தொல்லியல் அணுகுமுறை பற்றி அறியாதவர்கள் ஆர்வமிகுதியால் இக்கதைகளை வேதவாக்காகக் கொண்டு தமது கற்பனைத் தேரில் ஏறிச் சிறகடித்துப் பறக்கின்றனர். இதனால் வரலாற்று ரீதியான செய்திகள் திரிபுபடுகின்றன.

யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, கோணேசர் கல்வெட்டு, தக்ஷிணகைலாசபுராணம், மட்டக்களப்பு மான்மியம் முதலிய நூல்கள் போத்துக்கேயர் காலத்துக்குப் பின் வாழ்ந்த புலவர்களால் பாடப்பட்டவை. இவர்கள் ஆய்வறிஞர்கள் அல்ல. தாம் செவிவழியாகக் கேள்விப்பட்ட செய்திகளைக் கொண்டே, கற்பனை கலந்த பாடல்களை இயற்றினர். இப்பாடல்களில், கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலச் சம்பவங்களும், கலியாப்தம், சகவருடம் முதலிய ஆண்டுக் கணக்குகளும், மன்னர்களின் பெயர்க் குழப்பங்களும், பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சம்பவங்களும் கலந்துள்ளன. உதாரணமாக, யாழ்ப்பாணத்து உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதை; மட்டக்களப்பில், குளக்கோட்டன் - ஆடகசௌந்தரி கதை, கடலில் பேழையில் மிதந்துவரும் குழந்தை கண்டெடுக்கப்பட்டு, இளவரசன் அல்லது இளவரசியாதல் போன்ற இன்னோரன்ன பிற கதைகள், கற்பனை கலந்தவை என்பது வெளிப்படை. இவற்றை அப்படியே வரலாற்றுச் சம்பவங்களாக ஏற்றுக்கொள்வது எத்தனை மடமை!

புராணக் கதைகளையும், கர்ணபரம்பரைக் கதைகளையும் நிராகரிக்க வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல. எத்தனையோ வரலாற்றுச் சம்பவங்களின் இழைகள் இவற்றுள் ஊடுருவி நிற்கின்றன. அவற்றை ஏனைய வரலாற்று உண்மைகளுடன் பொருத்திப்பார்த்து உண்மையானவற்றை மட்டும் வரலாறாகக் கொண்டு, ஏனையவற்றைக் கற்பனைகளாகக் கொள்ளும் மனப்பக்குவம் நமக்குத் தேவை.

இவ்வாறே விதண்டாவாதமாக, சில ஆய்வுகளை நிராகரிப்பதையும் தவிர்க்க வேண்டும். ஏற்கனவே நிறுவப்பட்ட ஒரு ஆய்வுக்கருத்தை நிராகரிப்பதானால் அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். வெறும் ஊகங்களை மட்டும் தெரிவித்தல் பொருத்தமற்றது. இவ்வாறான போக்கு, நம் மத்தியில் உள்ள சிரேஷ்ட ஆய்வாளர்களிடம் காணப்படுவது துரதிர்ஷ்டமே.

இவ்வகையில் சர்வகலாசாலைப் பெரியார்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் இவர்கள் கூறும் கருத்துக்களை - எவ்வித சிந்தனையுமின்றி அப்படியே வேதவாக்காக ஏற்றுக்கொள்ளும் போக்கு, நம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. தவறான கருத்துக்களை அவர்கள் மனத்தில் விதைத்தால், அவர்கள் சிந்தனைப்போக்கு தவறான வழியில் திசைதிருப்பப்படும் ஆபத்து இருக்கிறது அல்லவா?

### 3. பாண்டிய மழவன் மதுரையில் இருந்து கொண்டுவந்த ஆரியச்சக்கரவர்த்தி :

நாம் முன்னர் குறிப்பிட்டபடி கர்ண பரம்பரைக் கதை ஒன்றின் இழை வரலாற்று உண்மையோடு ஒத்துப்போவதை, பின்வரும் உதாரணத்தால் விளக்கலாம்.

யாழ்ப்பாணத்து முதல் ஆரியச் சக்கரவர்த்தி என்பவன், பாண்டி மழவனால், மதுரையில் இருந்து கொண்டுவரப்பட்டு, நல்லூரில் முடிசூட்டப்பட்டவன் என யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை முதலிய கர்ணபரம்பரைக் கதை கொண்ட நூல்கள் கூறும். இவை வரலாற்று உண்மையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள் இல்லை. ஆனால் இரண்டு உண்மைப் 'பொறிகள்' இக்கதையை வரலாற்றுச் சம்பவத்துடன் பொருத்திப் பார்க்க உதவுகின்றன. அவையாவன:

i. பேராசிரியர் பத்மநாதனின் ஒரு கூற்று[1]. அதாவது "யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டமையே மாறவர்மன் குலசேகரன் காலத்துப் பாண்டியப் படையெடுப்பின் பிரதான விளைவாகும். சூளவம்சம் குறிப்பிடும் படைத்தலைவனாகிய ஆரியச் சக்கரவர்த்தியோ அவனுடைய மரபிலுள்ள வேறொருவனோ காலப்போக்கில் அரசனாக யாழ்ப்பாணத்தில் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்" (யாழ்ப்பாண ராச்சியம் 1992, பக்:33).



ii. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் படைத்தளபதியாக இலங்கைக்குச் சென்று பெரு வெற்றியீட்டி, புத்தரின் புனித தந்த தாதுக்களையும், அளவற்ற செல்வங்களையும் அள்ளிக்கொண்டு வந்து குலசேகர பாண்டியனின் காலடியில் கொட்டியவன் ஒரு ஆரியச்சக்கரவர்த்தி[2] (சூளவம்சம் XC பக்: 204. குறிப்பு: 47). பின்னால் பாண்டிய அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் முடிசூடிக்கொண்ட முதல் ஆரியச் சக்கரவர்த்தி "குலசேகர சிங்கையாரியன்."

இந்த இரண்டு வரலாற்றுச் செய்திகளுடன் மேற்படி பாண்டி மழவன் மதுரையிலிருந்து ஆரியச்சக்கரவர்த்தியைக் கொண்டு வந்த கதையைப் பொருத்திப் பார்த்து, அந்த உண்மையை ஏற்றுக்கொண்டோம். (அத். XI பார்க்க).

இவ்வாறே வலுவான ஊகங்களும், அனுமானங்களும் மாகோனின் யாழ்ப்பாண ஆட்சி பற்றி உறுதி செய்ய உதவுகின்றன. உதாரணமாக (i) மாகோன் பொலன்னறுவையை விட்டு நீங்கினால் அவன் தஞ்சம் பெறுவதற்கு ஏற்ற இடம் வட இலங்கையைத் தவிர வேறில்லை. (ii) 1256-ல் பாண்டியர் படையெடுப்புக்குப் பின்பே அவன் வட இலங்கை சென்றிருக்க வேண்டும். அதற்கு முன் அவன் சென்றிருந்தால் (அ) பராக்கிரமபாகு II பொலன்னறுவைக்கு வந்திருப்பான். (ஆ) பராக்கிரமபாகுவின் தாக்குதலுக்கு எதிர்நிற்க முடியாமல் மாகோனின் படைகள் திக்குத் திசை தெரியாமல் சிதறியோடின" என்ற சூளவம்சக் குறிப்பும் இடம்பெற்றிருக்காது.

எனவே இந்த அனுமானத்தின் அடிப்படையில் மாகோன் ஆட்சி வட இலங்கையில் கி.பி. 1256க்குப் பின்பே ஏற்பட்டது என்பதையும், விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என்ற பெயர் அவனுக்குரியது என்பதையும் முந்திய அத்தியாயத்தில் நிறுவினோம் (அவன் ஆரியச்சக்கரவர்த்தி அல்ல - யாழ்ப்பாணத்தின் முதலாவது சக்கரவர்த்தி என்பதையும் சுட்டிக்காட்டினோம்).

இவ்வாறே, கலாநிதி சிற்றம்பலம், ப. புஷ்பரெத்தினம், கலாநிதி பரணவிதான, அமரதாஸ லியனகமகே முதலியோர், பாண்டியர் படையெடுப்பு, அதனால் மாகோனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றித் தெரிவித்திருந்த சில தவறான கருத்துக்களை, புதிதாகக் கிடைத்த ஆய்வுத் தகவல்களின் துணை கொண்டு, நிராகரித்து உண்மை நிலையினைத் தெளிவுபடுத்தினோம்.

வரலாற்று ஆய்வில் இது சகஜம். (ஆய்வு என்பது ஒரு அஞ்சல் ஓட்டப் போட்டி போன்றது. ஒருவர் விட்ட இடத்தில் இருந்து மற்றவர் தொடர்வது). முன்பு எழுதியவர்களுக்குக் கிடைக்காத சில புதிய தகவல்கள், ஆய்வறிஞர் என். சேதுராமன் அவர்களின் பிற்கால ஆய்வுகளில் இருந்து கிடைத்தமையால் மேற்படி மறுதலிப்பைச் செய்ய முடிந்தது.

### 4. ஆய்வறிஞர் சேதுராமன் கூற்று :

இந்நூலின் ஒரு அத்தியாயத்தில் பல வரலாற்று ஆய்வாளர்கள் முதலாம் சடையவர்மன் வீரபாண்டியனையும், இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியனையும் ஒருவர் எனக் கருதி எழுதிய தவறான குறிப்புக்களையும், இவர்களது கல்வெட்டுக்களை மாற்றிக் குறிப்பிட்டமையையும் சுட்டிக்காட்டியிருந்தோம். இதுபற்றி என். சேதுராமன் அவர்களே ஒரு விளக்கம் கொடுத்திருந்தார். அது வருமாறு:[3]

“எனது ‘பாண்டியச் சக்கரவர்த்திகள் - காலக்கணிப்பு’ (“Imperial Pandiyas - Mathematics Reconstructs the Chronology) என்ற நூலில், கொங்கு நாடு கொண்ட முதலாம் ஜடாவர்மன் வீரபாண்டியன் 1253-ல் முடிசூடினான் என்றும், அவனே “திருமகள் வளர்முலை” (அல்லது திருவளர்முலை...) என்ற கல்வெட்டைப் பொறித்தவன் என்றும் அனுமானித்திருந்தேன். ஆனால் மேலும் நான் ஆய்வு செய்தபோது, ‘ஜடாவர்மன் வீரபாண்டியன் என்ற பெயரில் இரு மன்னர்கள் இருந்ததைக் கண்டுபிடித்தேன். மூத்தவனாக முதலாம் ஜடாவர்மன் வீரபாண்டியன். கொங்குநாடு கொண்டவன் 1253-ல் முடிசூடியவன். இளையவனான 2ம் ஜடாவர்மன் வீரபாண்டியன் 1254-ல் முடிசூடினான். “திருவளர்முலை... அல்லது திருமகள் வளர்முலை” என்ற மெய்க்கீர்த்தி இளையவனான வீரபாண்டியனுக்கே உரியது. இவ்வீரபாண்டியனுக்கு “சோணாடும் ஈழமும் சாவகன் முடியும், முடித்தலையும் கொண்டருளியவன்” என்ற அடைமொழியும் உண்டு..” (N. Sethuraman, Medieval Pandyas, 1980. பக்: 172.)



இவ்வாறு என். சேதுராமன் கூறுகிறார். இதுபற்றி விபரமாக முன் அத்தியாயங்களில் எழுதியுள்ளோம்.

இதிலிருந்து, பெயர்க்குழப்பமாக சில ஆய்வாளர்கள் எழுதியதன் காரணம் தெளிவாகிறது அல்லவா?

இவ்விடத்தில் சேதுராமன் அவர்களில் ஆய்வு முறை பற்றியும் அறிந்துகொள்ளவேண்டும்.

பாண்டியர் வரலாறுபற்றி, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, டாக்டர் கே.வி. இராமன் (சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல்துறைப் பேராசிரியர்) மற்றும் தென்னிந்திய வரலாறு எழுதிய பல ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர். ஆனால், இவர்களைவிட சேதுராமன் அவர்களின் ஆய்வுகள் வித்தியாசமானவை. இவர் தென்னிந்தியக் கல்வெட்டுகள் பலவற்றைத் துருவி ஆராய்ந்து, அவை பொறிக்கப்பட்ட காலத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறியவர். பாண்டிய மன்னர்கள் முடிசூடிய நாளின், நாள், நட்சத்திரம் முதலியவற்றைக் கொண்டு, சரியான தேதியைக் கணக்கிட்டுக் கூறியவர்[4]. (பார்க்க (i) The Imperial Pandyas Mathematics Reconstructs the Chronology, (ii) Medieval Pandyas 1988, (iii) பாண்டியர் வரலாறு, 1989).

இவை தவிர இவர் ஆய்வு மகாநாடுகளில் படித்த பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் பல முக்கியமான தகவல்களைத் தருகின்றன. இவற்றைக்கொண்டு, மாகோன் வரலாற்றுடன் தொடர்புபடும் பாண்டியர்கள் பற்றிச் சரியான தகவல்களை அறிந்துகொள்ள முடிகிறது. இதற்குமுன் வரலாற்றாசிரியர்கள் மழுப்பலாக அல்லது குழப்பமாக எழுதிய விடயங்களைத் தெளிவு செய்யமுடிகிறது.

தென்னிந்தியக் கல்வெட்டுக்களின் ஆய்வில், கீல்ஹொர்ன் (1903 ஆய்வு), சுவாமிக்கண்ணுப்பிள்ளை (1913 ஆய்வு), ரொபர்ட் சீபல் (1915 ஆய்வு) முதலியவற்றை நன்கு பரிசீலித்து அவர்களது காலக்கணிப்பில் உள்ள தவறுகளைப் புரிந்துகொண்டு, இவர் தானே வானசாஸ்திர அடிப்படையில் தனியாகக் கணிப்பீடு செய்து, சரியான தேதி, மாதம், ஆண்டு முதலியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி அவர் கூறுவது:[5] “இதிலிருந்து ஒன்றை அறியலாம். வானசாஸ்திரமும், வரலாற்று வடிவமும் இணைந்து செல்லவேண்டும் என்பதுதான்” (Astronomy & Histriocity) (பாண்டியர் வரலாறு 1989, பக்: 135)

## 5. மாகோன் பற்றி மேலும் சில தகவல்கள் :

(i) மாகோனின் பெயர்கள் :- சூளவம்சம் முதலிய பாலி வரலாற்று நூல்கள் மாகோனை, கலிங்கராஜ, திராவிடராஜ, தெமிளராஜ, காலிங்க விஜயபாகு, விஜயகாலிங்க எனக் குறிப்பிடுகின்றன. இதைவிட விஜயபாகு என்ற பெயரில் ஆட்சி செய்த ஆறு சிங்கள மன்னர்கள்பற்றியும் சூளவம்சம் குறிப்பிடுகிறது. இவர்கள் பற்றிய விபரங்கள் "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் (பக்: 55) கொடுக்கப்பட்டுள்ளன. அப்பெயர்கள் வருமாறு:[6]

| | | | |
|---|---|---|---|
| (அ) | விஜயபாகு | I | (கி.பி. 1055-1110) |
| (ஆ) | விஜயபாகு | II | (கி.பி. 1186-1187) |
| (இ) | விஜயபாகு | III | (கி.பி. 1232-1236) |
| (ஈ) | விஜயபாகு | IV | (கி.பி. 1271-1273) |
| (உ) | விஜயபாகு | V | (கி.பி. 1335-1347) |
| (ஊ) | விஜயபாகு | VI | (கி.பி. 1397-1409) |

(ii) திருக்கோவில் கல்வெட்டுப் பொறித்தவன் மாகோன் என்ற விஜயபாகு என்பது "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது (பக்: 53-54). இதில் "திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விஜயபாகு தேவர்" என அவன் குறிப்பிடப்படுகிறான். இக்கல்வெட்டில் வரும் வாசகம் இந்து தர்மப்படி ".... இந்த தர்மத்துக்கு அகிதம் செய்தானாகில் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக்கடவராகவும்" என வருவதால் விஜயபாகு என்ற பெயர்கொண்ட சிங்கள மன்னர்கள் இக்கல்வெட்டைப் பொறித்திருக்க முடியாது என்பது விளக்கப்பட்டுள்ளது. மேலும், காராம்பசு, கங்கைக்கரை என்பவற்றைப் புனிதமாகக் கொண்டவர்கள் வீரசைவர்கள். இம்மரபு சங்க, கலிங்க வம்சத்தில் காணப்பட்டது.

(iii) மாகோன் என்பது இயற்பெயர் அல்ல. மாகோனின் புகழ்குறித்து, மா-கோன் (பெரிய அரசன்) என அழைக்கப்பட்டிருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் மாகோன் இலங்கைக்குப் படையெடுத்து வந்தபோதே கலிங்க மாக்ன் என்று சூளவம்சம் குறிப்பிடுகிறது. எனவே மேற்படி கூற்று பொருத்தமற்றது. இவ்வாறே 'மாகோ' (புகையிரதச் சந்தி) என்பது மாகோன் பெயரால் வந்திருக்கலாம் என்ற கூற்றும் ஆதாரமற்றது.



(iv) மாகோனின் படைபலம்: மாகோன் படையெடுத்து வந்தபோது மாகோனிடம் 24,000 படைவீரர்கள் இருந்தனரென்றும், அவன் பொலன்னறுவையை விட்டு நீங்கியபோது 40,000 படைவீரர்கள் இருந்தனர் என்றும் சூளவம்சம் கூறும் (இக்கணிப்புக்கு ஆதாரங்கள் இல்லையெனினும், வரும்போதிருந்ததைவிடச் செல்லும்போது அதிக படைவீரர்கள் இருந்தனர் எனக்கொள்ளலாம்). இது மாகோனுடைய அதிகாரத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

(v) மாகோனின் படைகள் இலங்கையின் வடபகுதியில் பல இடங்களில் நிலைகொண்டிருந்தன. எனவே அவன் பொலன்னறுவையில் இருந்து ஆட்சி செய்தாலும் அவன் அதிகாரம் வடபகுதியிலும், யாழ்ப்பாணத்திலும் பரவியிருந்தது என்பது வெளிப்படை. கி.பி. 1256-ல் மாகோன் பொலன்னறுவையை விட்டு நீங்கியபின் யாழ்ப்பாணம் சென்று ஆட்சி அமைத்தான்.

(vi) மாகோனின் பூர்வீகம் பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைக்காமையை ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம். இவன் கலிங்க நாட்டிலிருந்து வந்தவன் என்பதைத் தவிர எந்த மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதோ, தாய் தந்தை யார் என்பதோ ஆதாரபூர்வமாகத் தெரியவில்லை.

(vii) சோழர்களைவிடப் பாண்டியர்களுடன் சிங்கள மன்னர்கள் நெருக்கமான உறவு வைத்துக் கொண்டிருப்பதைப் பல சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. 2-ம் பராக்கிரமபாகு சடையவர்மன் வீரபாண்டியனிடம் படை உதவி கோரிப் பெற்றதும், 3ம் பராக்கிரமபாகு, மாறவர்மன் குலசேகர பாண்டியனிடமிருந்து பறிபோன புத்த புனித சின்னங்களை மீளப்பெற்றதும், இன்னும் இவை போன்ற பிற சம்பவங்களும் நிறைய உள்ளன. பாண்டியர் படை 2ம் பராக்கிரமபாகுவுக்கு உதவியாக வந்திருக்காவிட்டால், மாகோன் பொலன்னறுவையை விட்டு வெளியேறியிருக்க முடியாது என்பது வெளிப்படை.

## 6. மாகோனுக்கு பின் பொலன்னறுவை :

மாகோன் கலிங்கத்திலிருந்து இலங்கைமேல் படையெடுத்து வந்தபோது (கி.பி. 1215) பொலன்னறுவை ஆட்சி குழப்பு

நிலையிலிருந்தது. நிசங்கமல்லனது சகோதரனான சாகசமல்லன் (1200-1202) ஆட்சி இரண்டு வருடங்களுடன் முடிவுற்றது. தொடர்ந்து பல சதிமுயற்சிகளும், அதிகாரப் போட்டிகளும் ஏற்பட்டன. கல்யாணவதி, அணிகங்கன், லீலாவதி, யோகேஸ்வரன் ஆகியோரிடம் ஆட்சி கைமாறிக் கொண்டிருந்தது. மீண்டும் லீலாவதி ஆட்சிக்கு வந்தபோது பராக்கிரம பாண்டியன் என்பவன் படை எடுத்து வந்து லீலாவதியைத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். இந்தக் கட்டத்தில்தான் கலிங்கமாகனது படையெடுப்பு நிகழ்ந்தது[7]. மாகோன் பராக்கிரமபாண்டியனை விரட்டியடித்து ஆட்சியைக் கைப்பற்றினான்.

இவ்வாறே மாகோன் பொலன்னறுவையைவிட்டு வெளியேறியபோதும் ஒரு குழப்பநிலை ஏற்பட்டது. இதுபற்றி சூளவம்சக் குறிப்புகள் கூறுகின்றன[8]. (சூள. அத். XC. பக். 202. குறிப்பு 12).

அப்போது ஆட்சியிலிருந்த 2ம் பராக்கிரமபாகு (1236 - 1272) தளர்ந்த நிலையிலும், நோய்வாய்ப்பட்டும் இருந்தான். இவனுக்குப் பின்வரும் நான்கு புதல்வர்கள் இருந்தனர்[9].

| | | |
|---|---|---|
| (i) | 4-ம் விஜயபாகு | இவர்களுடன் |
| (ii) | 2ம் புவனேகபாகு | மருமகனான |
| (iii) | 1ம் ஜயபாகு | 2ம் வீரபாகுவும் |
| (iv) | திருபுவனமல்ல | சேர்ந்திருந்தான். |

இந்த ஐவருமே பராக்கிரமபாகுவின் சார்பில், பல காரியங்களையும் கவனித்து வந்தனர்.

1262ல் பராக்கிரமபாகு நோயுற்றான். 1271ல் அவன் இறந்தபோது அவனது மூத்த புதல்வனான 4ம் விஜயபாகு ஆட்சிப் பொறுப்பேற்றான். இவன் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு வருடங்களில் மித்த என்னும் தளபதியால் கொல்லப்பட்டான்.

இந்தக் கலவரத்தில் அவனது தம்பி 1-ம் புவனேகபாகு யாப்பஹுவாவுக்குத் தப்பி ஓடினான்.

இச்சமயத்தில்தான் மாறவர்மன் குலசேகரபாண்டியனின் (1268-1318) படையெடுப்பு நிகழ்ந்தது. (1279) படை நடத்தியவன் பாண்டியனின் தளபதியாகிய ஒரு ஆரியச்சக்கரவர்த்தி. (இதன் விபரம்



"ஆரியச்சக்கரவர்த்திகள்" என்ற தலைப்பில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இப்படையெடுப்பில் யாப்பஹுவாவில் இருந்த செல்வங்களையும், புத்தரின் புனித சின்னங்களையும் தளபதி ஆரியச்சக்கரவர்த்தி கவர்ந்து சென்று குலசேகரபாண்டியனிடம் ஒப்படைத்தான்.

இப்படையெடுப்பால், யாப்பஹுவ பெரும் பாதிப்புக்குள்ளாகியது. இக்கட்டத்தில் முதலாம் புவனேகபாகுவின் மகனான 2ம் புவனேகபாகுவும், 4ம் விஜயபாகுவின் மகனாகிய 3ம் பராக்கிரமபாகுவும் ஆட்சியுரிமை குறித்துச் சண்டை செய்தார்கள். இதனால் சிங்கள ராச்சியம் பிளவுபட்டது. இதன்பின்பு ஆரியச் சக்கரவர்த்திகளின் உதவியுடன் 2ம் புவனேகபாகு தம்பதேனியாவில் (குருநாகல்) தனது ஆட்சியை நிறுவினான். அதன் பின்பு யாப்பஹுவ (சுபகிரி) சென்றான் என சூளவம்சம் கூறுகிறது[10]. (சூள. அத்: XC. பக்கம் 202, குறிப்பு 12).

1284-ல் புவனேகபாகு இறந்தான். அவனுக்குப் பின் அவனது மகன் 3ம் பராக்கிரமபாகு பொலன்னறுவையில் முடிசூடினான் இவன் தன் ஆட்சிக்காலத்தில் மதுரை சென்று முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனுடன் பல நாட்கள் பேச்சுவார்த்தை நடாத்தி ஏற்கனவே ஆரியச்சக்கரவர்த்திகளால் அபகரிக்கப்பட்டு அவனிடம் ஒப்படைக்கப்பட்ட புத்தரின் புனித சின்னங்களை மீட்டுவந்து, பொலன்னறுவையில் பிரதிஷ்டை செய்து அங்கிருந்து மதிப்புடன் தன் ஆட்சியைத் தொடர்ந்தான். இவன் பரமசாது. எனவே பாண்டிய மன்னனுக்குத் திறை செலுத்தி வாழ்ந்தான் என்றும் சொல்லப்படுகிறது. அதனால் இவனுக்குப் பிரதானிகளின் எதிர்ப்பு இருந்தது. எனவே இவன் இறந்தபின் 1-ம் புவனேகபாகுவின் மகனாகிய 2-ம் புவனேகபாகு முடிசூடினான்.

மாகோனுக்கு முன்னும் பின்னும் உள்ள வரலாற்றுத் தெளிவு அவசியம் என்பதனால் மாகோனுக்குப் பின் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களைச் சுருக்கமாக மேலே குறிப்பிட்டுள்ளோம்.

## 7. நிறைவு

இதுவரை கூறிய மாகோன் வரலாற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

(i) கலிங்கமாகன் (1215-1255) கி.பி. 1215 இலங்கைமேல் படையெடுத்து வந்தான். பொலன்னறுவையில் தன் ஆட்சியை நிறுவினான். அவன் படையெடுப்பின்போது பல அழிவுகள் இடம்பெற்றன. எனவே பௌத்த வரலாற்று ஆவணங்கள் இவனை ஒரு கொடுங்கோலனாகச் சித்தரிக்கின்றன.

(ii) இவன் தன் ஆட்சிக்காலத்தில், வட இலங்கை, கிழக்கிலங்கை மட்டுமல்லாது, அதற்கு அப்பாலும் தன் அதிகாரத்தைச் செலுத்தினான். கரையோர நகரங்களில் தன் படைகளை நிறுவி, மிகுந்த கட்டுக்கோப்புடன் தன் ஆட்சியை நடாத்தினான்.

(iii) இவனுக்குப் பல உபராஜாக்களும், பிரதானிகளும் இருந்தனர். இவர்கள் மூலம் தன் அதிகாரம் தளராதபடி நீண்ட காலம் ஆட்சி செலுத்தினான். 40 வருடங்களுக்கு மேல் இவன் ஆட்சி செலுத்தியதாக சூளவம்சக் குறிப்பு கூறுகிறது.

(iv) மாகோனும் அவனது வலதுகரமாக விளங்கிய குளக்கோட்டனும் இணைந்து பல செயற்பாடுகளை மேற்கொண்டனர். குறிப்பாக ஆலயங்களின் நிர்வாகத்துக்காக மாகோன் வகுத்த "வன்னிமை" இன்னும் கிழக்கிலங்கைக் கோயில்களில் பின்பற்றப்படுகிறது.

(v) மாகோனும், சோழகங்கனாகிய குளக்கோட்டனும், முறையே விஜயபாகு, ஜயபாகு என்ற சிங்களப் பெயர்களையும் கொண்டிருந்தனர். திருக்கோவில் ஆலயத்தில் உள்ள இரு கல்வெட்டுக்கள் விஜயபாகு என்ற பெயரில் மாகோன் பொறித்ததாகக் கொள்ள முடிகிறது.

(vi) கலிங்கத்துக்கும் ஈழத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததால், கலிங்க வம்சத்தவர்களான பல மன்னர்கள் ஈழத்தில் ஆட்சி செய்துள்ளனர். மாகோன் வருகையால், பொலன்னறுவையில் ஆட்சி செய்த மன்னர்கள் தமது ராசதானியைத் தம்பதேனியாவுக்கு மாற்றி, அங்கிருந்து மாகோனைத் துரத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனாலும் இவர்கள் முயற்சி பலிக்கவில்லை.

(vii) 2-ம் பராக்கிரமபாகு (1236-1271) காலத்தில் மாகோனைத் துரத்தும் முயற்சி தீவிரமடைந்தது. அவனது மகனான 4ம் விஜயபாகுவும், மருமகனான 2ம் வீரபாகுவும் இதில் முனைப்பாக நின்றனர்.



இவர்கள் சாவகனான சந்திரபானுவின் படையெடுப்பை (1247) முறியடித்தனர்.

(viii) மாகோன் காலத்தில் ஈழத்தில் நான்கு பாண்டியப் படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன. இப்படையெடுப்புகள் பற்றி ஆறு பாண்டிய மன்னர்கள் தமது மெய்க்கீர்த்திகளில் குறிப்பிட்டுள்ளனர். இவற்றுள் 2ம் சடையவர்மன் வீரபாண்டியனின் குடுமியான்மலைக் கல்வெட்டு (1256) முக்கியமானது.

(ix) குடுமியான்மலைக் கல்வெட்டு, மூன்று பாண்டிய மன்னர்கள் - அதாவது முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், 1-ம் சடையவர்மன் வீரபாண்டியன், உ-ம். சடையவர்மன் வீரபாண்டியன் - ஆகியோர் சேர்ந்து 1256-ல் ஈழத்தின்மேல் மேற்கொண்ட படையெடுப்பைப்பற்றிக் கூறுகிறது.

(x) இப்படையெடுப்பு - அப்போது ஆட்சியிலிருந்த சிங்கள மன்னன் 2ம் பராக்கிரமபாகுவின் வேண்டுகோளின்பேரில் மேற்கொள்ளப்பட்டது. இது இலங்கைமீது 2-வது தடவையாகப் போர்தொடுத்த சாவகமன்னன் சந்திரபானுவைத் துரத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

(xi) 1256-ல் நிகழ்ந்த இப்படையெடுப்பில் சாவகனான சந்திரபானு கொல்லப்பட்டான். அவனது மகனுக்குப் பட்டம் சூட்டப்பட்டது. பராக்கிரமபாகு (2) பாண்டியருக்கு ஆனை திறை செலுத்தினான். மாகோன் பொலன்னறுவையைவிட்டு வெளியேறி வட இலங்கை சென்றான். அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்றான்.

(xii) யாழ்ப்பாணத்தில் மாகோன் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் யாழ்ப்பாணத்தின் முதல் சக்கரவர்த்தியாகினான். அவனுக்குப் பின் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் தளபதியாகப் பல வெற்றிகளை ஈட்டித்தந்த குலசேகர சிங்கையாரியன் முதல் ஆரியச் சக்கரவர்த்தி ஆகி, ஆரியச் சக்கரவர்த்திகளின் வம்சத்தைத் தோற்றுவிக்கிறான். மாகோன் இறுதிக்காலத்தில் என்ன ஆனான் என்பது தெரியவில்லை. வரலாற்றிலிருந்து மறைந்துபோகிறான்.

## அடிக்குறிப்புகள்

1. யாழ்ப்பாண இராச்சியம் - தொகுப்பு : சி.க. சிற்றம்பலம், 1992 - பக்: 33.
2. Chulavamsa - Ch. XC - Notes 47 - pp. 204.
3. Medieval Pandyas - 1980 - N. Sethuraman - Kumbakonam - pp. 172.
4. Medieval Pandyas - 1980 - N. Sethuraman. பாண்டியர் வரலாறு - 1980 - என். சேதுராமன். The Imperial Pandyas Mathematics Reconstructs the chronology.
5. பாண்டியர் வரலாறு - என். சேதுராமன் - பக்: 135.
6. குளக்கோட்டன் தரிசனம் - பக்: 55.
7. Chulavamsa - Ch. LXXX - Notes 45-60 - pp. 132.
8. Ibid - Ch. XC - Notes 12 - pp. 202.
   Ch. LXXXIII - Notes 20-34 - பக்: 50.
9. Ibid - Ch. LXXXVII - Notes 16-17 - pp. 178.
10. Ibid - Ch. XC - Notes 12 - pp. 202.



## அனுபந்தம் I

### மாகனது ஆட்சியில் சில முக்கிய ஆண்டுகள்

கி.பி.

1215 - மாகோன் பொலன்னறுவையைக் கைப்பற்றல்.

1223 - சோழகங்கதேவன் திருகோணமலை சென்றது (சமஸ்கிருத சாசனம்)

1223 - முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216-1244) ஈழப் படை எடுப்பு.

1232-1236 - விஜயபாகு III தம்பதேனியாவில் ஆட்சி. இவனுக்கு வன்னிராசா (காட்டுக்கு அதிபதி) என்ற பட்டப்பெயரும் உண்டு.

1236 - பராக்கிரமபாகு II முடிசூடல் (தம்பதேனியா). மாகோனை எதிர்த்தவன். இவன் விஜயபாகு IIIவின் மகன்.

1236-1271 - பராக்கிரமபாகு II ஆட்சி. இவனது ஐந்து புதல்வர்கள்; விஜயபாகு IV, திருபுவனமல்லன், புவனேகவாகு I, பராக்கிரமவாகு, ஜயபாகு II - மாகோனுக்கு எதிராக வியூகம் வகுத்தவர்கள்.

1247 - சாவகமன்னன் சந்திரபானுவின் முதலாவது படை எடுப்பு. பராக்கிரமபாகுவின் மருமகன் வீரபாகு, மகன் ஜயபாகு ஆகியோர் சந்திரபானுவைத் தோற்கடித்தனர்.

1251 - இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1238-1255) ஈழப் படை எடுப்பு.

1252 - இரண்டாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (1250-1276) ஈழப் படை எடுப்பு.

1255 - மாகனது ஆட்சியின் தளர்வு.

1256 - பாண்டிய படை எடுப்பு, ஜடாவர்மன் வீரபாண்டியன் I, ஜடாவர்மன் வீரபாண்டியன் II, ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் I ஆகியோர் ஈழப் படை எடுப்பு.

சந்திரபானுவின் இரண்டாவது படை எடுப்பு. சந்திரபானு போரில் மடிதல். மாகன் பொலன்னறுவையை விட்டு இடம்பெயர்தல்.

1258 - பராக்கிரமவாகு II சுகவீனமடைதல்.

1259 - மாகனது ஆட்சி முடிவு. (அமரதாச லியனகமகே கூறுவது).

1262 - பராக்கிரமவாகு நோயினால் கடுமையாகப் பீடிக்கப்படல்.

1264 - பொலன்னறுவை புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்.

1270 - பராக்கிரமவாகு IIவின் ஆட்சி முடிவு. மகன் விஜயபாகு IV ஆட்சிப் பொறுப்பேற்றல்.

1272 - விஜயபாகு IV மித்த என்னும் தளபதியால் கொல்லப்படல். தம்பி புவனேபாகு I யாப்பகூவுக்கு ஓடுதல்.

1273 - புவனேகபாகு I ஆரியச் சக்கரவர்த்தி என்னும் இளவரசன் உதவியுடன் தம்பதேனிய வந்து முடிசூடல்.

1273-1284 - புவனேகபாகு தம்பதேனியாவின் ஆட்சி செய்தல்.

1284 - புவனேகபாகு I இறப்பு. மதிதுங்கன் என்னும் ஆரியச் சக்கரவர்த்தி தலைமையில் பாண்டியர் படை எடுப்பு. பாண்டியப் படைகள் புத்தரின் புனித சின்னங்களைக் கவர்ந்து இந்தியாவுக்கு எடுத்துச் செல்லுதல்.

1287 - பராக்கிரமவாகு III பாண்டி நாட்டுக்குச் சென்று புனித சின்னங்களைச் சமாதான முறையில் மீட்டு வந்து புலத்தி நகரில் ஆட்சிப் பொறுப்பேற்றல். இவன் பின்னர் கலிங்கராயன், சோடகங்கதேவ ஆகிய கலிங்கர்களைத் துரத்தியதாக மகாவம்சம் கூறும்.




## அனுபந்தம் II

### விஜயபாகு I முதல் பராக்கிரமபாகு III வரை இலங்கை மன்னர் பரம்பரை (கி.பி. 1059-1291)

| | |
|---|---|
| விஜயபாகு I | 1059-1114 |
| ஜயபாகு I | 1114-1116 |
| விக்கிரமவாகு I | 1116-1137 |
| கஜபாகு II | 1137-1153 |
| பராக்கிரமபாகு I | 1153-1186 |
| விஜயபாகு II (பண்டித விஜயபாகு) | 1186-1187 |
| மகிந்தா IV | 1187 - - |
| நிசங்கமல்ல | 1187-1196 |
| வீரபாகு | 1196 - - |
| விக்கிரமபாகு II | 1196 - - |
| சோடகங்க | 1196-1197 |
| லீலாவதி | 1197-1200 |
| சாகசமல்ல | 1200-1202 |
| கல்யாணவதி | 1202-1208 |
| தர்மாசோக (3 மாதக் குழந்தை) | 1208 - - |
| அணிகங்கன் | 1209 - - |
| லீலாவதி (மீண்டும்) | 1209-1210 |
| லோகிசார II | 1210-1211 |
| லீலாவதி (மீண்டும்) | 1211-1212 |
| பராக்கிரம பாண்டியன் | 1211-1215 |
| காலிங்க மாகன் | 1215-1255 |
| விஜயபாகு III | 1232-1256 |
| பராக்கிரமவாகு II (பண்டித பராக்கிரமபாகு) | 1236-1272 |
| விஜயபாகு IV (போசத் விஜயபாகு) | 1271-1273 |
| புவனேகபாகு II (வட்ஹிமி புவனேகபாகு) | 1273-1284 |
| பராக்கிரமவாகு III | 1284-1296 |

## அனுபந்தம் III

### பொலன்னறுவை அரசவம்சம்
### (மாகோன் காலம் வரை)




| | | |
|---|---|---|
| மகிந்தன் IV | - | சுதேச சிங்கள பிரதானி. |
| நிசங்கமல்லன் | - | கலிங்க மன்னன் (1187-1196) |


### நிசங்கமல்லனுக்குப்பின் பொலன்னறுவை அரசர்கள்

| | | |
|---|---|---|
| வீரபாகு | - | நிசங்கமல்லனின் மகன் 1196. |
| விக்கிரமபாகு II | - | நிசங்கமல்லனின் சகோதரன் 1196 (3 மாதம்) |
| சோழகங்கன் | | நிசங்கமல்லனின் மருமகன் (1196-1197) (9 மாதம்) |
| லீலாவதி | - | பராக்கிரமபாகுவின் பட்டத்தரசி (பாண்டிய இளவரசி) (1197-1200) |
| சாகசமல்லன் | - | (நிசங்கமல்லனின் சகோதரன்) 1200-1202. |
| கல்யாணவதி | - | நிசங்கமல்லனின் பட்டத்தரசி 1202-1208. |
| தர்ம அசோகன் | - | (3 மாதக் குழந்தை) 1208 (12 மாதம்) |
| அணிகங்கன் | - | (தளபதி) 17 நாட்கள் (1209). |
| லீலாவதி | - | இரண்டாம் முறை 1209-1210. |
| லோகேஸ்வரன் | - | (லோகிசார) 1210-1211 (9 மாதம்) |
| லீலாவதி | - | (மூன்றாம் முறை) 1211-1212 (7 மாதம்) |
| பராக்கிரம பாண்டியன் | - | (பாண்டிய மன்னன்) 3 வருடம் - 1211-1215. |
| கலிங்கமாகன் | - | 1215-1255 (40 வருடங்கள்) |



## அனுபந்தம் IV

### தம்பதேனிய அரசவம்சம்



## அனுபந்தம் V

### யாழ்ப்பாண இராச்சிய மன்னர் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி (காலிங்க மாகன்) | செகராசசேகரன் - I | 1255 |
| 2. | குலசேகர சிங்கையாரியன் | பரராசசேகரன் - I | 1256 |
| 3. | குலோத்துங்க சிங்கையாரியன் | செகராசசேகரன் - II | 1256-1279 |
| 4. | விக்கிரமசிங்கையாரியன் | பரராசசேகரன் - II | 1279-1302 |
| 5. | வரோதய சிங்கையாரியன் | செகராசசேகரன் - III | 1302-1325 |
| 6. | மார்த்தாண்ட சிங்கையாரியன் | பரராசசேகரன் - III | 1325-1348 |
| 7. | குணபூஷண சிங்கையாரியன் | செகராசசேகரன் - IV | 1348-1371 |
| 8. | வரோதய சிங்கையாரியன் | பரராசசேகரன் - IV | 1371-1380 |
| 9. | செயவீர சிங்கையாரியன் | செகராசசேகரன் - V | 1380-1410 |
| 10. | குணவீர சிங்கையாரியன் | பரராசசேகரன் - V | 11410-1446 |
| 11. | கனகசூரிய சிங்கையாரியன் | செகராசசேகரன் - VI (இருமுறை) | 1450-1467<br>1467-1478 |
| 12. | கனகசூரிய சிங்கையாரியன் | பரராசசேகரன் - VI | 1478-1519 |
| 13. | சங்கிலி-I | செகராசசேகரன் - VII | 1519-1564 |
| 14. | புவிராஜ பண்டாரம் (சங்கிலியின் மகன்) | பரராசசேகரன் - VII | 1561-1565 |
| 15. | காசிநயினார் | - | 1565-1570 |
| 16. | பெரியபிள்ளை பண்டாரம் | செகராசசேகரன் - VIII | 1570-1582 |
| 17. | புவிராஜ பண்டாரம் - II | - | 1582-1591 |
| 18. | எதிர்மன்ன சிங்கன் | பரராசசேகரன் - VIII | 1591-1615 |
| 19. | சங்கிலிகுமாரய / (சங்கிலி - II) | - | 1615-1618 |

குறிப்பு: யாழ்ப்பாண இராச்சியத்தைத் தோற்றுவித்தது ஆரியச் சக்கரவர்த்தி அல்ல. ஏற்கனவே ஒரு யாழ்ப்பாண அரசு உக்கிரசிங்கன் காலம் முதல் புகழ் பெற்று இடைக்காலப் பகுதியில் மங்கி - பின் மீண்டும் மாகோனாகிய விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியுடன் எழுச்சி பெறுகிறது. அவனுக்குப் பின் வந்த குலசேகர சிங்கையாரியன் முதலானோர் தம்மை ஆரியச் சக்கரவர்த்தி என்று கூற முதலாவது மன்னன் பெயர் மட்டும் விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என்று இருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.



## அனுபந்தம் VI

### இலங்கை நகரங்களின் பழைய பெயர்களும் தற்போதைய பெயர்களும்

| | |
|---|---|
| கொத்சார | - கொட்டியாரம் |
| குருண்டி | - குருந்தன்குளம் |
| மானாமத்த | - மாந்தை (மாதோட்டம்) |
| புலச்சேரி | - பூநகரி |
| கோணரட்ட | - திருகோணமலை |
| கோண | - திருகோணமலை |
| கோகர்ண | - திருகோணமலை |
| திரிகூடகிரி | - திருகோணமலை |
| கக்கலாய கம | - கட்டுக்குளம் |
| மன்னார, மன்னாரப்பட்டின | - மன்னார் |
| ஊராந்தோட்டை, சூகரதித்த | - ஊர்காவற்றுறை |
| மண்டலினி | - மண்டலிகம |
| வலிகம | - வலிகாமம் |
| மடுபாதித்த | - இலுப்பைக்கடவை |
